# உன் வானம் நான்...

கலைவாணி சொக்கலிங்கம்



# உன் வானம் நான்

கலைவாணி சொக்கலிங்கம்

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in

# உன் வானம் நான்

## 1

கடல் தண்ணீர் அடிக்கிற அலையில
கரையே மூழ்கிடுமோ - உன்
கண்ணீர் அடிக்கிற அலையில
கடலே மூழ்கிடுமோ!

மூக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி. மூன்று கடல்களும் கலக்கும் இடத்தில் இருந்த வளைவு வளைவாய் அமைந்திருந்த கட்டடத்தின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளின் ஆக்ரோஷமான ஆர்ப்பரிப்பை ஒரு வெறித்த பார்வையோடு பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள் வசந்தநிலா.

இன்று பௌர்ணமி. மாலை நான்கு மணிக்கே அலைகளின் சீற்றம் மிரட்டியது. கிட்டத்தட்ட இரண்டு மணிநேரமாய் நின்ற கொண்டுதான் இருக்கிறாள். வந்து நின்ற நேரத்தைவிட இப்போது பெரிது பெரிதான அலைகள் வந்து கட்டிடத்தின் தூண்கள் மீது மோதி சிதறின.

தூரத்தில் தெரிந்து கொண்டிருந்த வானளாவிய திருவள்ளுவர் சிலை மினுக் மினுக்கென ஒற்றை சிவப்புப் புள்ளியோடு மின்னியது. கம்பீரமாய்க் கடலின் நடுவே வீற்றிருந்த விவேகானந்தர் பாறையில் வரிசையாய் கருப்புத் தலைகள் மட்டுமே தெரிந்தன.

விவேகானந்தர் பாறைக்கும் திருவள்ளுவர் சிலைக்குமாக விசைப்படகு தொடர்ந்து நீரைக் கிழித்துக் கொண்டு சென்றவண்ணமாக இருந்தது. மாலைச் சூரியன் தனது உக்கிரத்தை சற்று குறைத்துக் கொண்டு தன் இருப்பிடத்தை நோக்கி தாழ இறங்கி வந்தான். ஆரஞ்சு நிற பெரிய அளவு ஜெல்லி பால் போன்று அற்புத அழகு. அந்த அரிய காட்சியைப் படம் பிடித்துக் கொண்டிருந்த போட்டோவும் வீடியோவும் போட்டி போட்டுக் கொண்டு தங்களுக்குள் பதிவு செய்து கொண்டன.

“அக்கா! பாசி மணி வேணுமா?” இளம்பிஞ்சுக் குரலில் கலைந்தாள் வசந்தநிலா. கலங்கியிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டே குரல் வந்த திசையை நோக்கினாள்.

வறண்டு போன தலையோடு அழுக்கேறிய பாவாடை சட்டையோடு நின்றிருந்தாள் ஒரு பத்து வயது சிறுமி. அவள் கைகளில் கலர்கலராய் நீளமாய் கோர்க்கப்பட்டிருந்த பாசிமணி மாலைகள்.



“அக்கா! ஒரு பாசிமணி பத்து ரூபாய்தான். வாங்கிக்குங்க...” என்றாள் மீண்டும்.

“வேண்டாம்மா! நான் இதெல்லாம் போடுறதில்ல!” என்றவாறு மீண்டும் கடல்புறமாய் தன் பார்வையத் திருப்பிக் கொள்ள, அந்தச் சிறுமி அசையாமல் நின்றாள்.

“அக்கா! தம்பி பாப்பா ரொம்ப நேரம் பசியில அழுவுது. ரெண்டே ரெண்டு பாசி வாங்கிக்கக்கா. தம்பிக்கு பால் வாங்கணும்” என்ற பரிதாபக் குரலில் உடல் ஒருமுறை அதிரத் திரும்பினாள் வசந்தநிலா.

“என்ன? என்னம்மா சொன்னே?”

“தம்பி காலையில சாப்பிட்டதோட சரி. இன்னிக்கு வியாபாரமே இல்லியா? அதனால இன்னும் சாப்பிடலை.” மழலை மாறாத அந்தக் குழந்தையைப் பார்க்கையில் கண்களில் கண்ணீர் சுரந்தது.

“நீ... நீ... சாப்பிட்டியா?”

“இன்னும் இல்லக்கா...”

“கடவுளே! ஆமா உன் அம்மா, அப்பா எங்கே?”

“அம்மா அதோ கடற்கரைப் பக்கத்தில உட்கார்ந்து மணி கோர்த்துட்டு இருக்கு. அப்பா சிப்பி பொறுக்கப் போயிருக்கு...” பிஞ்சு விரலை நீட்டிக் காட்டினாள்.

“உன் தம்பி?”

“அம்மா மடியில இருக்கான். அவன் இன்னும் நடக்கல்ல.”

'அப்படின்னா சின்னஞ்சிறு குழந்தையாக இருக்குமோ?

கடவுளே! இத்தனை பச்சிளம் உயிர்களைப் பசியோடு வதைக்கிறாய். சேரக்கூடாத இடத்தில் பணத்தைச் சேர்த்து விடுகிறாய். அவர்கள் போடுகிற ஆட்டம் எத்தனை பேரை ஆட்டிப் படைக்கிறது!'

சட்டென தன் கையிலிருந்த பர்சைத் திறந்தாள். உள்ளே கொஞ்சம் சில்லரையும் இரண்டு பத்து ரூபாய் தாள்களும் மட்டுமே இருந்தது. இறுதிப் பயணம்தானே! அதற்கு என்ன பணம் என்ற எண்ணத்தோடு பஸ் செலவிற்கு மட்டும் ஐம்பது ரூபாய் எடுத்து வந்திருந்தாள். அந்தப் பர்ஸை அந்தச் சிறுமியிடம் நீட்டினாள் வசந்தநிலா.

"இந்தாம்மா இதுல ஒரு முப்பது ரூபா இருக்கும். வெச்சிக்க. அம்மாகிட்ட போய்க் கொடு. நீயும் தம்பியும் சாப்பிடுங்க!" என்றாள்.

"மூணு மணி தரட்டுமா?"

"இல்லை... வேண்டாம்மா... நீ போ!"

"மணி விக்காமக் காசு வாங்கினா அம்மா வையும்!"

"ஓ... அப்படியா?" என்றவாறு அவள் கையில் தொங்கிய மணிச்சரங்களைப் பார்த்தாள்.

வெள்ளை, கறுப்பு, சிவப்பு நிற எல்லா நிறங் களிலும் மணிகள் இருந்தது. இடையிடையே பால்நிற சங்கு மணிமாலை. குட்டி குட்டியான சங்கு மணிகள் நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருந்தது.

"இது நல்லா இருக்கே.. இதுவும் பத்து ரூபாதானா?"



"இல்லங்க அக்கா... இது மட்டும் இருபத்து அஞ்சு ரூவா."

"ஓ.கே. இதுல ஒண்ணுகொடு போதும்."

அந்தச் சிறுமி உற்சாகமாய் ஒரு மணியை எடுத்து அவளிடம் கொடுக்க, அதை வாங்கி அந்தச் சிறுமியின் கழுத்தில் போட்டுவிட்டாள்.

"ம்... அழகா இருக்கு. இது என்னோட அன்பளிப்பா உன் கழுத்தில கிடக்கட்டும். இந்தா காசு!" என பர்சை நீட்டினாள் வசந்தநிலா.

"பர்சும் எனக்கா? உங்களுக்கு வேணாமா?"

"ம்ஹூம்! எனக்கு இது தேவைப்படாது. நீயே வெச்சிக்க...!"

"நீங்க நல்ல அக்கா!" என அவளது கையைப் பற்றி முத்தமிட்டாள் சிறுமி.

சிலிர்த்தது. பரிவாய் சிறுமியின் தலையை வருடிவிட்டு, "போம்மா... போய் சாப்பிடு!" என்றாள் கனிவாய்.

"ம்... சரிக்கா!" என்றவாறு வளைவில் திரும்பி ஓடினாள் அவள்.

ஒரு பெருமூச்சுடன் கடலை நோக்கித் திரும்பினாள் வசந்தநிலா. அருகில் யாரும் இல்லை. பேசாமல் குதித்து விடலாம் என்ற முடிவோடு சுற்றுச் சுவர் மீது ஏற எத்தனிக்கையில், அந்த உற்சாகமான பேச்சுக் குரல்கள் கேட்டன. சட்டெனத் திரும்பி கீழே எட்டிப் பார்த்தாள்.

ஏழெட்டுப் பேர் அடங்கிய கும்பல் ஒன்று உரக்கப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் மேலே ஏறி வந்து கொண்டிருந்தனர். அனைவருமே இளைஞர்கள். ம்... இவர்கள் போகும் வரை நின்றுதான் செயல்பட வேண்டும் – எனச் சலிப்பாய் மீண்டும் கடல்புறமாய் திரும்பி நின்று கொண்டாள்.

காற்று அவளது உடையை விலக்கியே தீருவேன் எனப் பலங்கொண்ட மட்டும் வீசியது. காற்றில் படபடத்த புடவைத் தலைப்பை இழுத்துச் செருகினாள். கைகளைக் கட்டிக் கொண்டு இயற்கையை ரசிக்கும் பாவனையில் நின்று கொண்டாள்.

இளம்பச்சை நிறப் புடவை. புடவையைப் பார்த்தவுடன் மனம் தாயை எண்ணித் தவித்தது. அம்மா ஆசையாக எடுத்துத் தந்த புடவை. இதைக்கூட கட்டக்கூடாது என்றானே அந்த ராட்சஸன்.

"என்ன புடவை இது? பிச்சைக்காரி மாதிரி இருக்கும். நூறு ரூபா இருக்குமா? இனிமே இதையெல்லாம் கட்டி என்னை அசிங்கப்படுத்தாதே. இந்த குணா கட்டிக்கப் போற பொண்ணு ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து புடவை கட்டலாமா? பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?"

"ம்... பத்து வருஷத்துக்கு முன்னால தெருத் தெருவா பழைய பேப்பர், இரும்புத் தகரம்னு சுத்தினியே... அப்போ என்ன நினைச்சாங்களோ... அதே மாதிரிதான் இப்பவும் நினைப்பாங்க...!" வெடுக்கெனக் கூறினாள் வசந்தநிலா.

முகம் சுணங்கிப் போனான் குணசீலன். உடனே பாஸ்கரனை துணைக்கழைத்து விடுவான். "பாஸ்கர்! உன்



தங்கை பேசுவதைக் கேட்டாயா? எப்போதும் இப்படி எதையாவது பேசி என் மூடைக் கெடுத்துவிடுகிறாள். பழையதெல்லாம் பேச வேண்டாம்னு சொல்லி வை."

"எப்பவுமே பழசை மறக்கக்கூடாது!" என்பவளை அண்ணன் அதட்டுவான்.

"வசந்தி! அவன் சொல்வதைக் கேட்டு நடப்பதுதான் நல்லது."

"யாருக்கு?" உஷ்ணமாய்க் கேட்ட தங்கையை நேராய்ப் பார்க்க முடியாமல் தாயைப் பார்த்துக் கூறுவான்.

"நம்ம எல்லோருக்கும்தான். குணா இல்லேன்னா நாம இப்படி வசதியா வாழ முடியுமா? சொல்லேம்மா...!"

அமராவதி வாயே திறக்கமாட்டாள். கண்கள் மட்டுமே கலங்கி மகளிடம் கெஞ்சும். பெருமூச்சு விட்டாள் வசந்த நிலா. அம்மாவின் கண்ணீரைக் கண்டு எத்தனை நாள் சகிப்பது? இதே கண்ணீரைக் காட்டி அவனுக்குக் கழுத்தை நீட்ட வைத்துவிடுவார்கள்.

அவனுடன் வாழ்வதைவிட இதோ இந்தக் கடலில் விழுந்து மடிவது எவ்வளவோ மேல் என்ற முடிவுடன் கோயிலுக்குப் போகிறேன் என்று கூறிவிட்டு புறப்பட்டு வந்துவிட்டாள்.

வந்து இரண்டு மணிநேரம் தாண்டிவிட்டது. இந்த நேரம் வீட்டில் சலசலப்பு தொடங்கியிருக்கும். அதற்குள் விழுந்துவிடலாம் என்றால் ஏதாவது ஒரு தடை வந்து கொண்டே இருக்கிறதே... ஆள் இல்லாத இடம் என்றுதான் அவள் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது.

ஆனால் இன்று ஒருவர் மாற்றி ஒருவர் வந்துகொண்டே இருக்கிறார்களே! சாகும்போது நிம்மதியாய் சாக முடியாதா? முகத்தில் வெறுப்பு மூள, திரும்பியும் பாராமல் நின்றவளை அந்தக் கூட்டம் நெருங்கியது.

"டேய்! இதோ பாருடா... இங்கே ஒரு சிலை நிக்குது. இதை எப்போடா வெச்சாங்க...!" என்றவாறு ஒருவன் நெருங்கினான்.

"இது சிலை இல்லைடா! சிலை எந்த ஊர்ல கைகட்டி நிக்குமாம்!" - இன்னொருவன்.

"இல்லடா! இது ஏதோ கடல் கன்னி போலிருக்கு...!"

"நான் இதுவரைக்கும் கடல் கன்னியைப் பார்த்ததே இல்ல..."

ஒருவர் ஒருவராய் அவளைச் சுற்றி கமெண்ட் அடிக்க வசந்தநிலா சற்றும் அசையாமல் நின்றாள். குணசீலனைப் பார்க்கும்போது எப்படி அவளது மனமும் உடலும் கொதிக்குமோ அதே நிலையில் நின்றிருந்தாள். அவளது முகத்திற்கு முன் ஒருவன் வந்தான்.

"வாவ்! வாட் எ ஐஸ். டேய் யாரும் கடலைப் பார்க்காதீங்க...!"

"பின்னே!"

"இந்தச் சிலையோட கண்ணைப் பாருங்கடா... இதைவிட அழகு வேற என்ன இருக்கு? நீ பாரேன் கர்ணா!"

வசந்தநிலாவின் முகம் கோபத்தால் சிவந்தது.



"டேய் பார்ரா! இந்த சூரியகாந்தி முகம் செம்பருத்திப் பூவா மாறுது. கேமிராவைக் கொண்டா. அற்புதமான காட்சி!" - என அவன் குரல் கொடுக்க ரௌத்ரமானாள் அவள். அவனை நேராய்ப் பார்த்தாள்.

"உன் வயசு என்ன?" வசந்தநிலாவின் கேள்வியில் திணறினாள்.

"ஏன்... ஏன் கேட்கிறீங்க?"

"சும்மா சொல்லு... உன் வயசு என்ன?"

அவன் தன் நண்பர்களைத் தயக்கமாய் பார்த்துவிட்டு, "இருபத்திரெண்டு" என்றான்.

"இந்த வயசில பார்க்கிற பொண்ணு எல்லாம் உனக்கு அற்புதக் காட்சியாத்தான் தெரியும். போ! போய் பொழைக்கிற வேலையைப் பாரு!"

"என்னங்க! மரியாதை இல்லாமப் பேசறீங்க?" ரோஷமாய்க் கேட்டான்.

"நீ என்ன பெரிய கலெக்டரா? இல்லே சி.எம்மா...? யாருடா நீ. வேலை வெட்டி இல்லாம பொண்ணு பின்னாடி அலையுற லோஃபர்தானே! உனக்கென்ன மரியாதை. பேசாம கிளம்பு."

இன்னொருவன் குறுக்கிட்டான். "ஹலோ! இது ஒண்ணும் உங்க சொந்த பில்டிங் இல்லை. நாங்க கிளம்புறதும் கிளம்பாததும் எங்க இஷ்டம்!"

"அடடா! அப்படியா? ஏதோ சின்னப் பசங்க... உங்களைப் பார்த்தா என் தம்பி மாதிரித் தெரியுதேன்னு

அக்கறையிலே சொன்னேன். நல்லது சொன்னாத்தான் யாரும் ஏத்துக்க மாட்டீங்களே?" என்றாள் விரக்தியான சிரிப்போடு.

"எக்கோவ்! என்ன நல்லதுன்னு கொஞ்சம் தெளிவாச் சொன்னா வசதியா இருக்கும்!" என்றான் ஒருவன் நக்கலாய்.

"சொல்றேன் தம்பி! கேட்டுட்டு கிளம்புங்க. இப்போ நான் இங்க இருந்து குதிக்கப் போறேன். நீங்க கிளம்பாம இங்கேயே இருந்தா நீங்கதான் என்னைப் பிடிச்சுத் தள்ளிட்டீங்கன்னு தற்கொலை கேஸ், கொலை கேஸாகிடும். என்ன சொல்றீங்க?" - வெகு அலட்சியமாய் வசந்தநிலா கேட்க, அனைவரும் வாயடைத்துப் போனார்கள்.

அதிர்ச்சியாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஒருவன் மட்டும் வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் கேட்டான்.

"என்ன? மிரட்டிப் பார்க்கிறீங்களா?"

"இல்லைப்பா! நான் சொன்னது சத்தியமான உண்மை. நேரமும் ஆகிட்டே இருக்கு. நான் குதிக்கணும். உங்களுக்கு அஞ்சு நிமிஷம் டைம் தர்றேன். அதுக்குள்ள போயிடுங்க. இல்லேன்னா உங்க மேல பழி விழுந்தா அதுக்கு நான் பொறுப்பில்ல!" என்றாள் தோளைக் குலுக்கியவாறே.

"டேய்! டூர் வந்த இடத்தில எதுக்குடா வம்பு? வாங்க போலாம்!"

"ஏய்! அது நம்மளைப் பயமுறுத்திப் பார்க்குதுடா. இதுக்கெல்லாம் பயந்தா எப்படி?"



"வேண்டாம் ஷ்யாம்! ஏற்கெனவே நாம கும்பலா வந்திருக்கோம். டிக்கெட் எடுக்கிற இடத்தில நம்மைத் தெரிஞ்சிருக்கும். இப்போ இந்தப் பொண்ணு ஏடாகூடமா எதையாவது செய்தா நாம மொத்தமா மாட்டிப்போம். வாங்க போயிடலாம்!" என்றான் ஒருவன் பதட்டமாய்.

"எங்களைப் பார்த்தால் கேணப்பய மாதிரி தெரியுதா?" என்றான் ஒருவன் சற்று கோபமாய்.

வசந்தநிலா லேசாய் சிரித்தாள். "ஓ.கே. அப்புறம் உங்க இஷ்டம்!" என்றவாறு அருகே இருந்த தூணைப் பற்றிக் கொண்டு அந்தக் குட்டைச் சுவர்மீது ஏறினாள். அனைவரும் மிரண்டு போயினர்.

"சிஸ்டர்! அவசரப்படாதீங்க சிஸ்டர். தற்கொலை செய்யுறது கோழைத்தனமாச்சே. அதை நீங்க செய்ய லாமா?" என்றான் ஒருவன்.

"கோழைத்தனம்தான். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என்னைக் கோழையாக்கி விட்டதே!"

"என்ன சிஸ்டர்? ஒன்பது பேர் இருக்கோம் நாங்க... எங்களையே வந்து பார் என மிரட்டுகிறீர்கள்... நீங்களா கோழை?" என்றான் விடாமல்.

"இப்படி எதையாவது பேசி என் மனதை மாற்ற முயற்சிக்காதே தம்பி. இது அவசரத்தால் எடுத்த முடிவு அல்ல. ஒரு மாதமாய் பொறுமையாய் சிந்தித்து எடுத்த முடிவு. இனி இதில் எந்த மாற்றமும் இல்லை. நீங்க போகலாம்."

"அதெப்படி? கண் எதிரே ஒரு உயிர் போவதை அனுமதிக்க முடியும்?"

"கர்ணா! அதுதான் ஏதோ டுபாக்கூர் பண்ணுதுன்னா நீயும் நம்பிடுவியா? இதைப் பார்த்தா சூஸைட் பண்ற மாதிரியா இருக்கு. எவனாவது இது லவ்வர் இங்கே வருவான்னு நினைக்கிறேன். நாம இருந்தா இடைஞ்சலா இருக்கும்னு நம்மளை வெளியேறச் சொல்லுது. இது எப்படியோ போய்த் தொலையட்டும். வாடா! நாம இன்னும் சுத்திப் பார்க்க எவ்வளவோ இடம் இருக்கு!" என ஒருவன் உரக்கவே சொல்ல, அனைவரும் அதை ஏற்றுக் கொண்டதுபோல் சின்ன சலசலப்புடன் இறங்கிச் சென்றனர்.

அவர்கள் வெளியேறி விட்டனர் என்பதை உறுதி செய்துவிட்டு வசந்தநிலா குதிக்கத் தயாரானாள். சூரியன் தன் ஓய்விற்கு தயாராய்க் கீழே இறங்கினான்.

## 2

ஆழ்கடலில் தத்தளித்து நான்
எடுத்த முத்துஒன்றை விதிஅவன்
பறித்தது ஏன்? - உற்சவத்து சிலை
இதன் பூச்சரங்கள் உதிர்ந்ததும்
பூஜையதும் கலைந்தது ஏன்?

காரை விட்டு இறங்கினார் மகாதேவன். கடற்கரை செல்லும் வழியெங்கும் கடைகள். கூட்டங்கள். டிரைவரை அழைத்தார்.

"மணி!"

"ஸார்!" என்றவாறு இறங்கி ஓடிவந்தான் மணிகண்டன்.



"இன்னிக்கு எதுவும் விசேஷ நாளா? இவ்ளோ கூட்டமா இருக்கே?"

"ஸார்! இன்னிக்கு பௌர்ணமி ஸார். கடல் அலைகளையும் நிலவையும் பார்க்க ரொம்ப அருமையா இருக்கும். அதான் இவ்வளவு கூட்டம்!"

"அப்போ கடற்கரையிலும் ரொம்ப கூட்டமா இருக்குமோ?"

"இருக்கும் ஸார். எதுக்கும் கொஞ்சம் நகர்ந்து போய் நடமாட்டம் கம்மியா இருக்கிற பக்கம் போனா நல்லது."

"சரி, நான் பார்த்துக்கிறேன். நீ காரை ஓரமா நிறுத்திட்டு காபி எதுவும் சாப்பிடுறதா இருந்தா சாப்பிடு. நான் போயிட்டு வர்றேன்."

"நானும் வரவா ஸார்?" எனக் கேட்டான் பவ்யமாய்.

"இல்லை வேண்டாம். நான் கொஞ்ச நேரம் தனிமையா இருக்கணும். எம்மக நடந்த இடத்தில கொஞ்ச நேரம் உட்காரணும். என்னைத் தேடாதே. பசிச்சா சாப்பிட்டு வெயிட் பண்ணு... சரியா? "

"சரிங்க ஸார்!" என்றவாறு பின்பக்கம் கதவைத் திறந்தான்.

குனிந்து அந்தப் பொருளை எடுத்துக் கொண்டார் மகாதேவன். உடலும் உள்ளமும் பதறியது. கைகள் நடுங்க அதைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். பட்டுத் துணியால் மூடப்பட்டிருந்த பொருளைப் பார்த்ததும் உலர்ந்திருந்த கண்கள் மீண்டும் ஊற்றெடுத்தது. நடப்பதற்கு சற்றுத் தடுமாறினார்.

மணிகண்டன் குரல் கொடுத்தான். "ஸார்!"

"ம்...!"

"வந்து... சத்யா சார் உங்களைத் தனியா விடக்கூடாதுன்னு சொன்னாங்க. எப்பவும் என்னையும் கூடப் போன்னு சொன்னாங்க!" என்றான் தயங்கி.

வருத்தமாய்ப் புன்னகைத்தார் மகாதேவன். "எம்மேல உள்ள அக்கறையில அப்படிச் சொல்லியிருப்பான். நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே. ஆமா! வழக்கமா நிலா இங்கே வரும்போதெல்லாம் எங்கே சுற்றிப் பார்ப்பாள்? எந்த இடம் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்?"

"ஸார்! அம்மா எப்போ வந்தாலும் அதோ தெரியுதே அந்த பில்டிங்லதான் மணிக்கணக்கா நிற்பாங்க!" எனக் காட்டிய திசையைப் பார்த்து வியந்தார். அது ஒரு வெற்றுக் கட்டிடம். கோவிலோ சிலைகளோ கடைகளோ இல்லாத இடம்.

"இதுவா? இங்கே நின்று என்ன செய்வாள்?" என்றார் வியப்பாய்.

"ஸார்! இங்கேதான் மூணு கடலும் ஒண்ணாச் சேருதாம். அதுக்கு அடையாளமாத்தான் இந்த பில்டிங்க கட்டி வெச்சிருக்காங்களாம். இங்கே நின்னு கடலை அமைதியா ரசிக்கத்தான் நிலாம்மா பிரியப்படுவாங்க."

மீண்டும் மனம் கனத்தது. நிலா எப்போதும் இப்படித்தான். அவள் ஒரு தனிமை விரும்பி. கூட்டமாய் இருக்கும் தியேட்டர்களுக்கு போக விரும்ப மாட்டாள். கேசட்டை வாங்கித் தன் அறையில் அமர்ந்து தனியாக படம் பார்ப்பாள். செவ்வாய், வெள்ளி அன்று கோவிலுக்குப் போகாமல் புதன்கிழமை மட்டுமே போவாள்.



கேட்டால், அன்னிக்குத் தாம்ப்பா கோவில்ல கூட்டமே இருக்காது. சாமியை நின்று நிதானமாய்ப் பார்க்கலாம் என்பாள். கல்யாண வீடு, விருந்து, விசேஷம் எங்கு என்று நடந்தாலும் வர மறுத்துவிடுவாள். அன்றே அதை மாற்றியிருக்க வேண்டும்.

தன் மகள் அமைதியே உருவானவள். அமைதியை விரும்புகிறாள் எனக் கவனியாமல் விட்டதால்தான் என் மகள் அமைதியாகி விட்டாளோ?

அப்போதே நாலு இடத்திற்கு அழைத்துச் சென்று அனைவரிடமும் பழக வைத்திருக்க வேண்டும். அப்படிப் பழகியிருந்தால் துணிச்சலும் தைரியமும் இயல்பாகவே வந்திருக்கலாம்.

பெற்றவனிடமே பேசத் துணிவில்லாமல் என் மகள் என்னைத் தவிக்கவிட்டு போயிருக்க மாட்டாள். எல்லாம் என்னால்தானே! செல்லமாய் வளர்த்த நான் அவளைத் தைரியமாய் வளர்க்கவில்லையே!

"ஸார்!" மணிகண்டன் குரல் கொடுக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"ஸார்! ஏற்கெனவே நேரமாகிப் போச்சு. நாம இன்னும் திரும்பிப் போகணுமே... இன்னும் கொஞ்ச நேரத்தில இருட்டிடும்."

"ம்... சரிப்பா. நான் போறேன். நீ காரை ஓரமா நிறுத்திக்க..." என்றவாறு கடற்கரையை நோக்கி நடக்க ஆரம்பித்தார் மகாதேவன்.

மீண்டும் நிலாவையே எண்ணி ஓடியது அவரது மனம். நிலா அவரது ஒரே மகள். நிலா பிறந்து ஏழு வருடத்திலேயே அவரது மனைவி சந்திரமதி மூளைக் காய்ச்சலில் மரித்துவிட, அன்றிலிருந்து தாயாய் தந்தையாய் மாறியவர். மகளின் ஒவ்வொரு வளர்ச்சியையும் கூடவே இருந்து பார்த்து மகிழ்ந்தவர்.

ஆனால் இந்த நிமிடம் வரையிலும் அவரால் நம்ப முடியவில்லை. எப்படி என்னை விட்டுப் போகத் துணிந்தாள்? யாரும் சத்தமாகப் பேசினாலே பயப்படுபவள், சாலையில் ஒரு பூனை அடிபட்டுக் கிடந்தாலே அதை நினைத்து அன்று முழுவதும் அழுபவள் எப்படி சாவைத் துணிவாய் எதிர்கொண்டாள்?

சினிமாக்களில்கூட சண்டைக் காட்சியோ இறுதி ஊர்வலமோ வந்தால் உடனே சேனலை மாற்றி விடுவாள். ஏழு வயதில் அன்னையின் மரணத்தைக் கண்டவளின் மனதில் இந்தப் பயம் இருப்பது சகஜம்தான் என விட்டிருந்தார் மகாதேவன். உறவினர் வீட்டில் சாவு நடந்தாலும் அழுது ஆர்ப்பாட்டம் செய்து வராமல் சாதித்து விடுவாள். அத்தனை மரண பயம் அவளுக்கு.

அவ்வளவு பயம் இருந்தவள் எப்படித் தன் உயிரைப் போக்கிக் கொள்ளத் துணிந்தாள்?

இதே கேள்வியைத் தனக்குத் தானே கேட்டுக் குமைந்து போனவரிடம் வாசுதேவன்தான் சொன்னான்.

"அங்கிள்! உங்களுக்குத்தான் நிலாவைப் பற்றி ஒண்ணும் தெரியவில்லை. பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு, அவள் என்ன காரியம் செய்திருக்கிறாள்



தெரியுமா?" - நிலா இறந்து போன பத்தாம் நாள் கையில் கடிதத்தோடு வந்த வாசுதேவன் கேட்டதும் நிமிர்ந்தார் மகாதேவன்.

"என்ன? என்ன காரியம் செய்தாள்?"

"எவனோ ஒருத்தனை விரும்பியிருக்கிறாள். அது புரியாமல் நீங்கள் சத்யாவைப் பேசி முடித்ததால்தான் நிலா உயிரை விட்டிருக்கா...!" வாசு சொன்னதும் அதிர்ந்து எழுந்தார்.

"என்ன? என்ன சொன்னாய்? என் மகளைப் பற்றி என்னடா சொன்னாய்?" என அவன் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினார்.

"என்கிட்ட கோபப்பட்டு என்ன பிரயோஜனம்? பாருங்க... அவளே எழுதின லெட்டர். அவ டயரியில இருந்தது. இப்பத்தான் பார்த்தேன்!" என அவன் நீட்டிய கடிதத்தைப் பார்த்ததும் சுத்தமாய் இடிந்து போனார்.

"சத்யாவை உங்களுக்குப் பிடிக்கும் என்பதற்காக நான் அவரை மணக்க முடியுமா? எனக்கென்று ஆசைகளும் கனவுகளும் இருக்கிறதே அப்பா! அதை நீங்கள் கேட்கவில்லையே! என்னால் சத்யாவை மணக்க முடியாது. அந்த ஆசை எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை. அதனால் என் முடிவை நானே தேடிக் கொள்கிறேன்!" என்று மட்டுமே எழுதியிருந்தாள்.

மணிகண்டனையே காரை வேகமாக ஓட்ட அனுமதிக்காதவள் தானே காரை எடுத்துக் கொண்டு போய் மலை உச்சியிலிருந்து கீழே விழுந்து சிதறினாள் என்றால்

அவள் மனதில் எத்தனை துணிச்சல் வந்திருக்கும்? உயிரை விடுவதில் காட்டிய துணிச்சலை என்னிடம் காட்டி யிருக்கலாமே!

"சத்யா வேண்டாம் அப்பா! எனக்கான துணையை நானே தேர்ந்தெடுத்திருக்கிறேன்!" என்று அவள் சொல்லியிருந்தால் அவன் யாராக இருந்தாலும் அவனையே மணமுடித்து வைத்திருப்பேனே... என்னைப் பற்றித் தெரியாதவளா என் மகள். பிறகேன் என்னிடம் எதுவும் சொல்லாமல் மரித்துப் போனாள்.

இந்த வயதான தகப்பனைத் தனியே தவிக்கவிட்டுப் போகும் அளவிற்கு கல்நெஞ்சக்காரியா அவள்? இல்லை... இல்லை என ஓலமிட்டது இதயம். நெஞ்சோடு சேர்த்து அணைத்திருந்ததைப் பார்த்தார். பலமாக வீசிய காற்றில் போர்த்தியிருந்த பட்டுத்துணி விலகிவிட, சிறுமண் குடுவை தெரிந்தது. உள்ளே சாம்பலாகிப் போன நிலா இருந்தாள்.

நெஞ்சை அடைத்தது. விம்மி அழுதார். நடமாட்டம் இல்லாத பகுதியைத் தேர்ந்தெடுத்து மணிகண்டன் சொன்ன இடத்தில் வந்து நின்றார். வேகமான அலைகள் அவரது பாதம் தொட்டு நனைத்துச் சென்றது.

கையிலிருந்த மண்குடுவையை கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டார். "மகளே! எத்தனை தவம் இருந்து உன்னைப் பெற்று கண்ணாய் வளர்த்தேன். இன்று பிடி சாம்பலாய் கரையப் போகிறாயே... என் கண்ணே! என்னை மட்டும் ஏனம்மா விட்டுச் சென்றாய். இந்தப் பாழும் உலகில் நான் மட்டும் தனித்து வாழ்ந்து என்ன சாதிக்கப் போகிறேன்!" - உடல் குலுங்கியது.



அடுத்தடுத்து வந்த அலைகள் பாதி உடம்பை நனைத்துச் சென்றது. "பெரியவரே! இன்னிக்கு அலை அதிகமாக இருக்கும். இங்கே நிற்காதீங்க. வாரிச் சுருட்டிடும்!" என எச்சரித்துவிட்டுச் சென்றனர் இரு இளைஞர்கள்.

சட்டெனக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். சற்றுத் தூரம் உள்ளே நடந்து சென்று கையிலிருந்த மண்குடுவையில் உள்ள சாம்பலைக் கரைத்து விட்டார். கரைக்கும்போதே மீண்டும் நெஞ்சை அடைத்தது சமாளித்தவாறே முழுவதையும் கரைத்துவிட்டு மண்குடுவையை நீரில் விட்டார்.

அது நீரின் ஓட்டத்திற்கேற்ப அடித்துச் செல்ல, இருகரம் கூப்பி கடல் அன்னையை வணங்கினார் மகாதேவன்.

"என் மகளின் ஆத்மா சாந்தியடையட்டும். தெய்வமாய்ப் போன என் மனைவியிடம் போய் சேர்ந்து கொள்ளட்டும். சந்திரமதி! நம் மகளை அணைத்துக் கொள். நானும் விரைவில் வந்துவிடுகிறேன்!" கண்மூடி வேண்டிக் கொண்டபோது பெரிய அலை வந்து கழுத்து வரை நனைத்து அவரைத் தள்ளிவிட்டுச் சென்றது.

தடுமாறி எழுந்து நின்றார். "என் மகள் போய் விட்டாள். சாம்பலாய் இருந்தவள் இன்று காற்றோடு கடலோடு கரைந்து போய்விட்டாள். என் மகளின் மனதை அறியாமல் நானே அவளைக் கொன்று விட்டேன். என் பேச்சுக்கு மறுபேச்சு பேச விரும்பாமல் தன் உயிரையே வெறுத்து உதறிவிட்டாள் என் கண்மணி. நான் பாவி. பெற்ற பிள்ளையின் மனம் போல் வாழ்க்கை அமைத்துக்

கொடுக்கத் தவறிய பாவி!" - முகத்தில் அறைந்து கொண்டு கதறினார்.

இப்போது நெஞ்சு பலமாக வலிக்கத் துவங்கியது. மூச்சை விடக்கூட முடியாமல் திணறினார். கரைக்குப் போய் விடலாம் எனத் திரும்பியவர் அதிர்ந்தார். கரையிலிருந்து வெகு தூரம் வந்திருக்கிறோம் என உணர்ந்து வேகமாய் நடக்க முயன்றவரை இரைச்சலோடு வந்த அலை அடித்து உருட்டிச் சென்றது.

அலையின் வேகத்தோடு சென்று முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் அமைத்திருந்த கட்டிடத்தைத் தாங்கியிருந்த அஸ்திவாரத் தூண் மீது மோதினார் மகாதேவன்.

அலையிலிருந்து மீள முடியாதபடி அடுத்த அலை அவரை உள்ளே இழுத்துச் சென்றது. இதய வலியாலும் நீர் அடித்துச் சென்ற அதிர்ச்சியாலும் கடைசி மூச்சுக்குத் திணறினார் மகாதேவன். அவரை இழுத்துச் சென்ற அலை ஆவேசமாக வந்து பாறையில் மோதிச் சிதறியது.

பாறையில் தலைமோதி சூடாய் இரத்தம் வழியத் தொடங்கியது. தலையைத் தூக்கவும் முடியாமல் அலையின் விருப்பத்திற்கே விட்டுவிட்டார்.

"இனி உயிர்பிழைத்து என்ன செய்யப் போகிறேன்? என் மகளின் சாம்பலோடு என் உயிரும் போகட்டும். கடல் அன்னையே என்னை எடுத்துக் கொள்!" என்றவாறு கண்களை மூடிக் கொண்டார் மகாதேவன்.

கட்டடத்தின் மேல் தளத்தில் பொறுமையின்றி காத்திருந்தாள் வசந்தநிலா. இளைஞர்களின் கூட்டம் விலகிச் சென்ற மறுகணம் மேலே வந்த புதுமண ஜோடிகள் அவ்விடத்தை விட்டு அசைவதாக இல்லை.



அவர்களின் கிசுகிசுப்பும் சிரிப்பொலியும் எரிச்சலைக் கிளப்பியது. தனிமையான இடத்தை அவர்களது படுக்கை அறை என எண்ணி அத்துமீறத் துவங்க, அருவெருப்பாக முகத்தைச் சுளித்தாள். தெருநாயைவிடக் கேவலமான பிறவிகள் போலும். இதற்கு மேலும் இங்கு நின்றால் அது தனக்குத்தான் அசிங்கம் என எண்ணியவாறு காறி உமிழ்ந்தவாறு கீழே இறங்கத் தொடங்கினாள்.

அப்போதும் அவர்களின் கூத்து நிற்கவில்லை. சட்டென இருள் பரவிவிட, விடுவிடுவென இறங்கி வந்தவள் தரையைத் தொடுமுன் தன்மீது வீசிய நீர்த்துளிகள் பட்டு, தன் பார்வையை வெளியே திருப்பினாள்.

சாதாரணமாகப் பார்த்தவளின் விழிகள் அதிர்ந்தன. கரையோரமாய் ஏதோ சடலத்தை ஒதுக்கித் தள்ளியது அலை. ஏதோ ஒரு ஆணின் உடல். அடுத்த அலை அவரைப் புரட்டிப் போட உடல் முழுக்க அதிர்ந்தது.

ஏதோ அசைவு தெரிய வேகமாய் இறங்கி ஓடினாள் வசந்தநிலா. கரையோரமாய் ஒதுங்கியவரை நெருங்கினாள். ஏதோ முனகல் கேட்டது. உயிர் இன்னும் இருக்கிறது என்று தெரிந்தவுடன் அவரைப் பற்றி இழுத்து மேட்டில் போட்டுவிட்டுச் சத்தமாய்க் கூக்குரல் இட்டாள். அவள் குரலில் கூட்டம் கூட ஆரம்பித்தது.

# 3

**இரவும் பகலும் உரசிக் கொள்ளும்**
**அந்திப் பொழுதினில் வந்துவிடு**
**அலைகள் உரசும் கரையில் இருப்பேன்**
**உயிரைத் திருப்பித் தந்துவிடு!**

இராமேஸ்வரம். நன்றாக இருட்டிவிட்ட போதும் கடற்கரையை விட்டு எழ மனமின்றி அமர்ந்திருந்தான் சத்யன். கூட்டம் வெகுவாய் குறைந்து விட்டிருக்க, பௌர்ணமி நிலவு மெல்ல மேலெழுந்து ஜொலித்தது. இரவில் கடற்கரை வெளியில் முழு நிலவைக் காண்பது சொர்க்கம்தான்.

ஏனோ இன்று ரசிக்க முடியவில்லை. மனம் முழுவதும் எதிரே இருந்த கடல் போல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பௌர்ணமி என்றால் நிலாவிற்கு இருப்பு கொள்ளாது. “கடற்கரைக்குப் போலாம்ப்பா... நிலாவைப் பார்க்கும்போது எவ்வளவு அழகா இருக்கும் தெரியுமா? அதில நம்ம அம்மா முகம்கூட எனக்குத் தெரியும்!” என நச்சரித்து விடுவாள்.

அவளது குழந்தைத்தனமான பேச்சும் செய்கையும் வேடிக்கையாகத்தான் இருக்கும். மாமாவோ சத்யனோ யாராவது ஒருவர் கூடப் போவார்கள். அப்படி யாருக்கும் நேரம் கிடைக்கவில்லையென்றால் மணிகண்டனையாவது கூட்டிக் கொண்டு போய் விடுவாள். இன்று?

சற்று முன்னரே இந்தக் கடலில் கரைந்திருந்த அஸ்தி அவள் நினைப்பை கண்களில் கண்ணீராக வெளியேற்றியது. மணமுடிக்க வேண்டிய கரங்களால் உன் சாம்பலைக் கரைக்க வைத்து விட்டாயே நிலா.



ஏன்? ஏன் அப்படிச் செய்தாய்? என்னைப் பிடிக்கவில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கலாமே. உன் தந்தையிடம்தானே சொல்ல முடியாமல் போனது. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உன் மனதுக்குப் பிடித்தவனை நானே பேசி முடித்திருப்பேனே...! ஏன் என்னிடம் கூட சொல்லாமல் உயிரை விட்டாய்.

உன் இழப்பை இந்த ஜென்மம் முழுக்க எங்களால் மறக்க முடியாதே! என்னால்தான் இறந்தாய் என்று நானும் உன் அப்பாவும் தினம் தினம் மருகுவது உனக்குத் தெரிகிறதா? நெஞ்சிற்குள் நெருஞ்சி முள்ளாய்க் குத்திக் கொண்டே இருப்பாயே! இனி எப்படி நிம்மதியாய்ச் சாப்பிட தூங்க முடியும். விழிகளை மூடினால் உன் மரணம்தானே கண்முன் நிற்கிறது.

என்னால்தான் மரித்துப் போனாயா? என்னை மணக்கப் பிடிக்காமல் உன் உயிரை விட்டாயா? ஏன் நிலா என்னிடம் கூறவில்லை. நிச்சயம் முடிந்தபின்கூடச் சொல்லவில்லையே. சந்தோஷமாகத்தானே இருந்தாய். பத்திரிக்கை அச்சடித்தபோதுகூட தோழியருக்கு என்று நூறு பத்திரிக்கை எடுத்து வைத்தாயே! கடைசி நேரத்தில் எப்படி என்னைப் பிடிக்காமல் போனது?

நான் என்ன அத்தனை அசிங்கமாகவா இருக்கிறேன். உனக்குப் பொருத்தமாய் இருக்க மாட்டேன் என்று நினைத்தாயா? உன் மனதில் என்ன ஆசை இருந்தது. அவன் யாரென்று சொல்லாமலே போய்விட்டாயே... இனி திரும்பி வரவே மாட்டாயே...! உன் தந்தையை நான் எப்படித் தேற்றுவேன்? மீண்டும் கண்கள் நிறைந்தது.

இன்றோடு நிலா இறந்து பதினாறு நாட்கள் ஆயிற்று. "கன்னிப் பொண்ணு. அதுவும் துர்மரணம் அடைஞ்சிருக்கா. அவா அஸ்தியை பூஜை பண்ணி பதினாறாம் நாள் கொண்டு போய் கடல்ல கரையுங்கோ. அப்பத்தான் அவா ஆத்மா சாந்தமாகி மேல் லோகம் போய்ச் சேரும்!" என மூன்று சிறு மண்குடுவையில் நிலாவின் அஸ்தியை அடைத்துத் தந்திருந்தார் ஈமகிரியை செய்தவர்.

அதன்படி மகாதேவன் கன்னியாகுமரிக்கும் வாசுதேவன் தூத்துக்குடிக்கும் சத்யன் ராமேஸ்வரத்திற்கும் பயணித்திருந்தனர்.

மற்றவர்கள் இந்நேரம் வீடு திரும்பியிருக்கலாம். ஆனால் சத்யனால் கடற்கரையை விட்டு எழ முடியவில்லை.

"இந்த மாப்பிள்ளையைப் பிடிக்காமத்தான் மலையில இருந்து குதிச்சாளாம். மகாதேவனும் ஏன் இப்படிச் செய்தார்? என்னதான் தங்கை மகன்னாலும் ஒரே பொண்ணு, அவ சம்மதம் கேட்காம இவரே முடிவு பண்ணலாமா? இப்பப் பாரு... கைகால், முகம்னு ஒவ்வொரு உறுப்பா தேடி எடுத்துப் பொட்டலமா கட்டித் தந்திருக்காங்க. எவ்வளவு கொடுமையான சாவு!"

"ஆனா அந்தப் பொண்ணு எவ்வளவு அமைதியான பொண்ணுப்பா. அது எப்படி காரை எடுத்துக்கிட்டு மலைமேல போச்சு. ஆச்சர்யம்தான்!"

"அதானே! தற்கொலை பண்றதுக்கு ஒரு கயிறோ விஷமோ கிடைக்காமலா மலை உச்சிக்குப் போச்சு. எனக்கென்னவோ சந்தேகமா இருக்குப்பா!"



"இதுல என்ன சந்தேகம்? வீட்ல வெச்சு உயிரை விட முடியாமத்தான் அவ்வளவு தூரம் போயிருக்கா. அவளுக்கு எவ்வளவு வருத்தமும் வெறுப்பும் இருந்ததோ!"

"ஏம்ப்பா! சத்யனுக்கு என்ன குறைன்னு அந்தப் பொண்ணு இப்படிப் பண்ணினா? வலை போட்டுத் தேடினாலும் சத்யன் மாதிரி ஒரு பையன் நமக்குக் கிடைக்காதுப்பா. அந்தப் பொண்ணுக்கு இவன் அருமை தெரியலை!"

வீட்டில் நிலாவின் சடலத்தை வைத்துக் கொண்டே அவரவர் விருப்பத்திற்கேற்ப விமர்சித்துக் கொண்டிருந்தனர். சத்யன் சுத்தமாய் நொறுங்கிப் போனான். தன்னைப் பிடிக்காமல் வெறுத்து ஒரு பெண் உயிரை மாய்த்துக் கொண்டாள் என்பதை, அதன் வலியை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"மாமா! உங்களுக்காகத்தானே இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்தேன். நான் நிலாவை விரட்டி விரட்டி விரும்பவில்லையே. மிரட்டியும் சம்மதிக்க வைக்கவில்லையே! உங்கள் விருப்பத்தை மறுக்காமல் ஏற்றுக் கொண்டேனே...! அதற்காகவா எனக்கு மீளாத பழியைத் தேடித் தந்தாள் நிலா. சொல்லுங்க மாமா! நிலாவின் மரணத்திற்கு நானா காரணம்?" - எனக் கேட்டுக் கதறியவனைக் கட்டி அணைத்துக் கொண்டார் மகாதேவன்.

"வேண்டாம் சத்யா! மனம் கலங்காதேப்பா. இந்த உடம்பில் இன்னும் உயிர் ஒட்டிக் கொண்டிருப்பது உனக்காகத்தானப்பா. நீ வருந்தாதே! நீ எப்படிப்பட்ட உத்தமமான பிள்ளை. நீ சுடர்விட்டுப் பிரகாசிக்கும்

சூரியன்டா. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தால் சூரியனுக்கு ஒன்றும் அவமானமல்ல. நீ எதுக்கும் கலங்காதே. எனக்கு நீ... உனக்கு நான்!" எனத் தேற்றினார் மகாதேவன். மற்றவர்களின் முகம் சுண்டிப் போனது. அதோடு வாயை மூடிக் கொண்டனர்.

கண்களில் இருந்து வழிந்த நீரைச் சுண்டியெறிந்தான் சத்யன்.

மாமா எத்தனை நல்ல மனிதர். சிறு வயது முதலே தாயை இழந்தவன் என்ற அன்பில் தனக்கு ஒரு வாரிசு இல்லையே என்ற ஏக்கத்தில் தங்கையின் மகனைத் தன் மகனாய் ஏற்றுக் கொண்டவர். சத்யன் வந்து எட்டு வருடம் கழித்தே சந்திரமதிக்கு நிலா உண்டானாள். நிலா பிறந்ததுமே மாமா சொன்ன வார்த்தை: "எம்மருமகனுக்கு நிலாதான் பொண்ணு. நம்ம பொண்ணை இவனுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சிடணும். அப்பத்தான் கடைசி காலம் வரை இவன் நமக்குக் கஞ்சி ஊத்துவான்!" என்பதுதான்.

"மாமா! நான் எப்பவும் உங்க கூடவேதான் இருப்பேன் மாமா. உங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்!" எனப் பெருமிதமாய்ச் சொன்னது இன்னும்கூட நினைவில் நிற்கிறது. அப்போது முதலே மாமாதான் எல்லாம் அவனுக்கு.

கொஞ்ச நாளில் அம்மாவின் பிரிவைத் தாங்க இயலாத அப்பாவும் போய்ச் சேர்ந்துவிட மகாதேவனும் சந்திரமதியும் சத்யனின் பெற்றோர்களாயினர். தன்னைப் பெற்றவர்களின் முகம்கூட மறந்துதான் போனது.



"வாரிசு இல்லையேன்னு கவலைப்படாதீர்கள் அண்ணா. என் பிள்ளையை உன் பிள்ளையாய் நினைத்துக் கொள்!" என்று மகாதேவனின் தம்பி தன் ஆறாவது பிள்ளையான வாசுதேவனைக் கொண்டு வந்து விட்டபோது சத்யனுக்கு பதினைந்து வயது. விபரம் தெரிந்த வயது.

மாமாவிடம் தனியே சென்று, "மாமா! வாசு வேண்டுமானால் இங்கே உங்களுடன் இருக்கட்டும். நான் எங்காவது ஹாஸ்டலில் தங்கிப் படிக்கட்டுமா?" எனக் கேட்டபோது பதறி மறுத்துவிட்டார் மகாதேவன்.

"யார் வந்தாலும் நீதான் என் வாரிசு. யாருக்காகவும் உன்னை விட்டுக் கொடுக்க மாட்டேன். என் உடம்பில் உயிர் இருக்கும் வரை நீ என்னுடன்தான் இருக்க வேண்டும்!" எனக் கண்டிப்பாய்க் கூறிவிட்டார்.

வாசுதேவனுக்கோ அவனது பெற்றோர்களுக்கோ தன்னைப் பிடிக்காமல் போனது ஏன் என்று இன்று வரை புரியாத புதிர். சொந்தத் தங்கை மகன்தானே! ஆனால் ஜென்ம விரோதியைப் போலத்தான் பார்ப்பார் சகாதேவன்.

முதலில் வருத்தமாக இருந்தாலும் அதுவே பழகிப் போயிற்று. அதிலும் மாமா தும்மினால்கூட தன்னைத்தான் தேடுவார். இதனிடையே அத்தை நோயில் படுத்து விரைவில் பிரிந்து விடவே தளர்ந்த மாமாவைத் தாங்கிப் பிடிக்க ஆரம்பித்தவன் இன்று வரை அந்தப் பிடியை விடவில்லை.

நிலாவின் திருமணப் பேச்சை எடுத்தபோதுகூட, "உங்க முடிவுக்கு மறுபேச்சு ஏது மாமா?" என ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டான்.

ஆனால் அதுதான் தப்பாகிப் போனதோ? நிலாவின் மனதில் என்ன இருக்கிறது என்று அவளிடம் தனியே கேட்டிருக்க வேண்டும். தன் முன்பேதான் அவளிடமும் கேட்டார் மாமா.

"உங்க இஷ்டம்ப்பா!" என்றாளே... எப்போதுமே அதிகம் பேசாதவள் என்பதால் அப்போது அது பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் இப்போது அந்த வார்த்தை மனதை அறுத்தது.

மாமாவிற்காகத்தான் சம்மதித்திருப்பாளோ? அதனால்தான் அப்படிச் சொன்னாளா? ஆனால் அதன் பிறகு சந்தோஷமாகத்தானே இருந்தாள். நகைகள் வாங்கும்போதும் புடவை எடுக்கும்போதும் இன்விடேஷன் பிரிண்ட் பண்ணக் கொடுக்கும்போது கூட உற்சாகமாய் ஆசையாய் அவளேதான் தேர்ந்தெடுத்தாள்.

திருமணத்திற்கு இரண்டு நாட்கள் இருக்கும்போது ஏன் பிடிக்காமல் போனது. மனதிற்குள்ளே குமைந்து கடைசி நேரம் தைரியமாக மரணத்தை தேடிக் கொண்டாளோ? எத்தனை முயன்றும் விடை தோன்றவில்லை.

அயர்ச்சியாய் அப்படியே மணல்வெளியில் மல்லாந்து படுத்தான். கடல் அலைகள் அவனது கால் வரை வந்து நனைத்து விளையாடிச் சென்றது. வானில் தெரிந்த பால்நிலவை உற்றுப் பார்த்தான். நிலாவின் முகம் தெரிகிறதா? ம்ஹூம்.

ஏமாற்றமாய் கண்களை மூடிக்கொண்டபோது செல்போன் கிணுகிணுத்தது. சட்டென எடுத்தான். ஏதோ புதிய எண்கள். யாராக இருக்கும்? யோசனையோடு





போனைக் காதிற்கு கொடுத்தான். மறுமுனையில் மணிகண்டன் பதட்டமாய்ப் பேசினான்.

"சத்யா ஸார்! நான் மணி பேசுறேன்!" என்றான் கலக்கமாய்.

"சொல்லு மணி! எல்லாம் முடிஞ்சதா? வீடு திரும்பியாச்சா?"

"இன்னும் இல்லய்யா...!"

"இன்னும் வீட்டுக்குப் போகலியா? சரி! இது யார் நம்பர்?" என்றவாறு எழுந்து அமர்ந்தான்.

"ஸார்! நான் எஸ்.டி.டி. பூத்ல இருந்து பேசுறேன் ஸார்!"

"ஏன்? மாமாவோட செல் என்னாச்சு? மணி ஒன்பதாகப் போகுதே... இன்னும் என்ன செய்கிறீர்கள் அங்கே?"

"ஸார்! வந்து இங்கே..."

"மணி எதுவா இருந்தாலும் நீ லேட் பண்ணாதே. மாமாவிற்கு உடல்நிலை சரியாய் இல்லை. ஏதேனும் நல்ல ஹோட்டலில் சாப்பிட்டு விட்டே கிளம்புங்கள். சரியா?"

"ஸார்! பெரிய ஐயா இன்னும் காருக்கு வரல்ல ஸார்."

"வ்வாட்! காருக்கு வரலையா? ஹேய்! உன்னை நான் மாமா கூடவே போகச் சொன்னேனே... நீ போகலையா?" என்றான் சற்றே கோபமாய்.

"ஸார்! நானும் வர்றேன்னு சொன்னேன் ஸார். பெரிய ஐயாதான் கொஞ்ச நேரம் தனிமையா இருந்துட்டு

வர்றேன். தேடாதேன்னு சொல்லிட்டுப் போனாங்க. ஏழு மணி வரைக்கும் காத்திருந்து பார்த்துட்டு கடற்கரைப் பக்கமா போய்த் தேடிப் பார்த்தேன். ஐயாவைக் காணோம் ஸார்!" என்றான் அழுகுரலில்.

அதிர்ந்து எழுந்தான் சத்யன். "யூ இடியட்! நிலா போனதுல இருந்தே மாமா சரியா சாப்பிடுறதில்ல... தூங்குறதில்ல... ஏற்கனவே ஹார்ட் பேஷண்ட். இதெல்லாம் சொல்லித்தானே உன்னை கூடவே இருக்கும் படி அனுப்பினேன். நீ ஏன் அவரைத் தனியே விட்டே?" சுள்ளென எரிந்து விழுந்தான்.

"மன்னிச்சிடுங்க ஸார்! இப்படி ஆகும்னு நினைக்கல்ல!"

"இப்ப நீ எங்கே நிற்கிற?"

"காந்தி மண்டபம் பக்கத்தில காரை நிறுத்தியிருக்கேன். கடற்கரையில போய் தேடிட்டு ஒருவேளை காருக்கு வந்திருக்கலாமோன்னு இங்கே வந்தேன். இங்கேயும் இல்லை ஸார்!"

சத்யனின் உடல் உதறிக் கொண்டது. "மை காட்! மாமாவுக்குப் போன் பண்ணிப் பார்த்தியா?"

"ரெண்டு மணி நேரமா ட்ரை பண்றேன் ஸார். லைன் கிடைக்கவே இல்லை. என் போன்ல சார்ஜ் சுத்தமா இல்லை. அதான் எஸ்.டீ.டி. பூத்ல இருந்து பேசுறேன்."

"லைன் கிடைக்கலியா? ஒருவேளை ஸ்விட்ச் ஆஃப் பண்ணியிருப்பாரோ?"



"இல்லை ஸார். அப்படியும் பதில் வரல்ல. சைலண்ட்டாவே இருக்கு. அதான் எனக்கு ரொம்ப பயமா இருக்கு."

"நீங்க எத்தனை மணிக்கு கன்னியாகுமரி போய்ச் சேர்ந்தீங்க?"

"நாலரை மணிக்கெல்லாம் வந்திட்டோம் ஸார்!"

"நாலரை மணிக்குப் போனவரை ஏழு மணி வரைக்குமா தேடாமல் விட்டாய். முட்டாள்!"

"ஸாரி ஸார்."

"ஆமா! எதற்கெடுத்தாலும் ஒரு ஸாரி சொல்லிடு. அங்கே கடற்கரையோரமா விசாரிச்சியா! மாமாவோட அடையாளம் சொல்லிக் கேட்டியா?"

"ஆள் புழங்குகிற இடத்தில எல்லாம் கேட்டுப் பார்த்தேன் ஸார். யாருக்குமே தெரியல. ஸார் போன இடத்துக்குப் போய்ப் பார்த்தேன். அங்கே யாருமே இல்லை."

"மாமா எங்கே போனாங்க?"

"நிலாம்மா போய் நிக்குமே... அந்த இடம்தான்."

"ஓ... காட். இப்ப என்ன பண்றது? மாமாவுக்கு எதுவும் விபரீதமாய்...!"

"ஸார்! அப்படிச் சொல்லாதீங்க ஸார். நீங்க கொஞ்சம் உடனே புறப்பட்டு வாங்க ஸார். எனக்கு ரொம்ப பயமா இருக்கு."

"மணி! நான் இராமேஸ்வரத்தில் இருக்கேன். அஸ்தியைக் கரைச்சிட்டு இன்னும் கடற்கரையிலதான்

இருக்கேன். இனிமே கிளம்பினாலும் அங்கே வந்து சேர நாளைக்குக் காலையில ஆகிடுமே!"

"இப்போ... இப்போ என்ன ஸார் பண்றது?" மணிகண்டனின் குரல் உள்ளே போயிற்று.

"மணி! நீ எதற்கும் இன்னொரு முறை கடற்கரையைச் சுற்றிப் பாரு. ஒரு பவர்ஃபுல் டார்ச் வாங்கிக்க. இருட்டில நல்லாத் தேடிப் பார். மனவருத்தத்தில எங்கேயாவது அமைதியா உட்கார்ந்திருக்கலாம். பொறுமையா நல்லா தேடிப்பார். நான் வாசுவுக்கு போன் பண்ணி உடனே அங்கே வரச் சொல்றேன்."

"சரிங்க ஸார்."

"மணி! முதல்ல ஏதாவது ஒரு கடையில கேட்டு உன் போனை சார்ஜ் ஏத்திடு. அப்பப்ப எனக்குப் போன் பண்ணு. மாமாவைப் பார்த்ததும் எங்கிட்ட பேசச் சொல்லு."

"சரிங்க ஸார்!"

"ம்... அப்புறம் டார்ச் வாங்க காசு வெச்சிருக்கியா?"

"இருக்கு ஸார்."

"ஓ.கே. கிளம்பு. ஒரு நொடியைக் கூட வீணாக்காதே. நான் வாசுவுக்குத் தகவல் சொல்லி அவனை அனுப்புறேன். போனை வெச்சிடு."

"சரிங்க ஸார்!" என்றவாறு அவன் போனை வைத்துவிட, பதறிய உள்ளத்தை சமாளித்தவாறே வாசுதேவனுக்குப் போனைப் போட்டான். மூன்று முறை முழுவதும் பெல் அடித்து ஓய்ந்துவிட நான்காவது முறையில் "ஹலோ!" என்றான் வாசுதேவன்.



"என்ன செய்து கொண்டிருந்தாய் வாசு? எத்தனை முறை போன் போடுவது?"

"சத்யாவா? என்ன சத்யா! நீ அங்கேயே தங்கிட்டியா? பெரியப்பாவும் இன்னும் வரல்ல...!" என்ற வாசுவின் குரலை வைத்தே அவன் போதையில் இருப்பதைக் கண்டு கொண்டான் சத்யன்.

"வாசு! குடிச்சிருக்கியா?"

"ம்...? என்ன கேட்டே?"

"குடிச்சிருக்கியான்னு கேட்டேன்...!" என்றான் கோபமாய்.

"வெரிகுட் சத்யா. நீ உண்மையிலே அறிவாளிதான். புத்திசாலிதான். நான் ஒத்துக்கிறேன். பெரியப்பாவுக்கு உன்னை மட்டும் ஏன் ரொம்பப் பிடிக்குதுன்னு இன்னிக்குத்தான் எனக்குத் தெரியுது!"

"போதும் வாசு. ஆமா! இது என்ன புதுப் பழக்கம்?"

"இல்லையே... பழைய பழக்கம்தான். முன்னே வெளியே போய் போடுவேன். இப்போ நிலா போன சோகத்தில, வீட்டிலயும் யாரும் இல்லையா? அதான் கொஞ்சம் ஊத்திக்கிட்டேன்!" என்றான் குழறலாய்.

"மாமாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் தெரியுமா?"

"தெரியாது சத்யா. அவர் வர்றதுக்குள்ள நான் தூங்கிடுவேன்."

இவனிடம் சொல்லலாமா? சொன்னால் இவனால் போக முடியாது. பேச்சு குழறுவதைப் பார்த்தால் நிச்சயம்

அதிகம் குடித்திருக்கிறான். இந்த நிலையில் இவனால் காரை ஓட்ட முடியாது. இவனிடம் வேலையைச் சொல்லி புரிய வைப்பதைவிட, கந்தசாமியிடம் சொல்லலாம் என்ற முடிவுடன், "வாசு! போனை கந்தசாமிகிட்டே கொடு!" என்றான்.

"கந்தசாமியா? அவன்கிட்டே ஏன் கொடுக்கணும்?"

"சீக்கிரமாக் கொடு. பேச நேரமில்ல...!" வெடித்தான் சத்யா.

"என்னவோ சொல்ற! நடு சாமத்தில போன் பண்ணினா அவனை எப்படி எழுப்புறது? அவன் தூங்குவானே!"

"டேய்! ஒன்பது மணிதான் ஆகுது. போனை அவர்கிட்ட கொடு."

"ஒன்பதுதானா? நான்தான் தூங்கிட்டேனா? ஏய் கந்தசாமி... இந்தா! சத்யா உன்கிட்ட பேசணுமாம்..."

கந்தசாமி மணிகண்டனின் அப்பா. அந்த வீட்டின் நிரந்தர காரோட்டி. "சொல்லுங்க தம்பி!" – என்றவரிடம் மளமளவெனச் செய்தியைச் சொல்லி உடனே அம்பாஸிடரை எடுத்துக் கொண்டு வாசுவோடு கன்னியாகுமரிக்குப் போகச் சொன்னான்.

"சரி தம்பி! ஆனா... வாசு தூங்கியாச்சே!"

"ஷிட்! அதுக்குள்ள தூங்கிட்டானா? சரி, அவன் வீட்டில் இருக்கட்டும். நீங்க உடனே கிளம்புங்க. நானும் புறப்பட்டு விட்டேன்!" என்றவாறு போனை கட் பண்ணிவிட்டு சாலையோரம் நின்ற காரை நோக்கி ஓடினான் சத்யன்.



# 4

கண்ணுக்கொரு வண்ணக்கிளி
காதுக்கொரு கானக்குயில்
நெஞ்சுக்கொரு வஞ்சிக்கொடி
நீதானம்மா...!

நாகர்கோவிலின் அந்தப் பெரிய மருத்துவமனை முன்பு மருத்துவரிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள் வசந்தநிலா. அடிபட்ட காயத்தைச் சுற்றிலும் தன் புடவைத் தலைப்பால் கட்டுப் போட்டிருந்தாள். மகாதேவன் அரைகுறை நினைவோடு அரற்றிக் கொண்டிருக்க, அதைக் காண சகியாமல் கைகூப்பினாள்.

"டாக்டர்! உயிரைக் காப்பாத்த வேண்டிய கடவுள் நீங்க. நீங்களே இப்படிப் பேசினா எப்படி? இவரை எப்படியாவது காப்பாத்துங்க ப்ளீஸ்!"

அந்த நடுத்தர வயது மருத்துவர் எரிச்சலாய் அவளை ஏறிட்டார். "ஏம்மா! சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிட்டு இருக்கிறதை விட பேசாம கிளம்பற வேலையைப் பாரு. இது தற்கொலை கேசு. நாங்க அட்டெண்ட் பண்ண முடியாது. கவர்மெண்ட் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போ."

"அப்படிச் சொல்லாதீங்க டாக்டர். இது எந்த ஊர்? இங்கே வேற எங்கெல்லாம் ஹாஸ்பிடல் இருக்குன்னு எனக்குத் தெரியாது டாக்டர். அவசரத்துக்கு ஒரு டூரிஸ்ட் வேன்தான் கிடைச்சது. அவங்கதான் இங்கே இறக்கிட்டுப் போனாங்க. நடக்க முடியாத இவரை நான் எங்கே தூக்கிட்டுப்

போக முடியும்? ப்ளீஸ் டாக்டர்! முதலுதவி மட்டுமாவது பண்ணுங்க. இரத்தம் நிற்கவே இல்லையே!"

"அட என்னம்மா உன்னோட ஒரே தொல்லையாப் போச்சு. ஒரு தடவை சொன்னாப் புரியாது. போம்மா... வேற இடம் பாரு!" அலட்சியமாய்ச் சொல்லி விட்டு அந்த மருத்துவர் நகர்ந்து செல்ல உஷ்ணமானாள் வசந்த நிலா.

"யோவ் நில்லுய்யா!" அவளது ஆவேசமான குரலில் மருத்துவரோடு மற்றவர்களும் திரும்பிப் பார்க்க, மருத்துவரை நெருங்கினாள்.

"நான் என்ன உங்கிட்ட பிச்சையா கேட்கிறேன். அடுத்த இடம் பாருன்னு விரட்டுறே! இப்போ ட்ரீட்மெண்ட் பண்ண முடியுமா? முடியாதா?"

"என்னம்மா... மரியாதை இல்லாம பேசுற?"

"உனக்கென்னய்யா மரியாதை. கண்ணு முன்னால ஒரு உசுரு கிடந்து துடிச்சிட்டு இருக்கு. அதைக் காப்பாத்தாம அலட்சியமாப் போற. நீ எல்லாம் எதுக்குய்யா டாக்டருக்குப் படிச்சே?"

"ஏய்! என்னை யாருன்னு நினைச்சே. மரியாதையாப் பேசு!" மருத்துவரும் சீறினார்.

"யோவ்! நீ யாரா வேண்ணா இருந்திட்டுப் போ. இப்போ இவரைக் காப்பாத்த முடியுமா? முடியாதா?"

"என்ன மிரட்டிப் பார்க்கிறீயா? இங்கே பார்க்க முடியாது. கிளம்பு!"

"அப்போ ஹாஸ்பிடலை இழுத்து மூடு. நான் போறேன்!" என்றாள் வசந்தநிலா.



"வாட் நான்சென்ஸ். ஹாஸ்பிடலை மூடுறதா? இது டிவெண்டி ஃபோர் ஹவர்ஸ் ஹாஸ்பிடல். இங்கே எத்தனை பேஷண்ட்ஸ் இருக்காங்கன்னு தெரியுமா உனக்கு! ஸ்டுப்பிட் மாதிரி மூடச் சொல்றே!"

"இருபத்திநாலு மணிநேர சேவைன்னு இங்கே தூக்கிட்டு வந்தோம். ஆனா எங்கே சேவை பண்றீங்க? நான் ஒருத்தி அரை மணிநேரமா கெஞ்சிட்டு இருக்கேன். கொஞ்சம்கூட மனசாட்சி இல்லாம போற. பிறகெதுக்கு இது திறந்திருக்கணும்... மூடு."

"அட! என்னம்மா நீ பெரிய ரௌடி மாதிரி பேசுற?"

"ரௌடிங்க உருவாகுறதில்லை. உங்களை மாதிரி ஆட்களால உருவாக்கப்படுறாங்க...!" வசந்தநிலா வாதாடிக் கொண்டிருக்கையில் உள்ளேயிருந்து ஒரு வயதான மருத்துவர் வந்தார்.

"என்ன சுகுமார்? என்ன கலாட்டா இங்கே?"

"குட் ஈவினிங் டாக்டர்! இது ஏதோ சூஸைட் கேஸ். இந்தப் பொண்ணு இதை நாமதான் அட்டெண்ட் பண்ணணும்னு பிரச்சனை பண்ணிட்டு இருக்கு."

"இல்லை டாக்டர்! இது தற்கொலை இல்லை. பெரியவர் கரையோரமாத்தான் நின்னார். திடீர்னு அலை அடிச்சிட்டு போயிடுத்து. தலையிலயும் அடிபட்டு ரத்தம் வருது. ஃபர்ஸ்ட் எய்ட் கூட பண்ணாம விரட்டுறார் இவர். நான் வேற ஹாஸ்பிடல் தேடி அலையுறதுக்குள்ள இவர் உயிர் போயிடுச்சுன்னா என்ன பண்ண முடியும்? இந்த சுகுமார் மீட்டுத் தருவாரா?" கோபமாய்க் கேட்டவளைப் பார்த்து வியந்து போனார் மருத்துவர்.

"அது சரிம்மா! இது ஒருவேளை தற்கொலையா இருந்தா..."

"ஏன் ஸார்! அவருக்குத்தான் உயிர் இருக்கே. அதைப் போக விடாம தடுக்கத்தான் ஹாஸ்பிடல் கொண்டு வந்திருக்கேன். முதல்ல ட்ரீட்மெண்ட் பண்ணுங்க ஸார். அதுக்கப்புறம் எதுவும் பிரச்சனைன்னா என்னைக் கைகாட்டிடுங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்."

"ம்... பரவாயில்லயே... இது யாரும்மா? உன் உறவினரா?" என்றவாறு மகாதேவனின் நாடித்துடிப்பைச் சோதித்தார்.

ஒரு நிம்மதிப் புன்னகையோடு, "யாருன்னு தெரியலை ஸார். பெரியவர் கண் விழிச்சப்புறம் தான் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்!" என்றாள் வசந்தநிலா.

மகாதேவனின் கண்கள் நீரைச் சிந்தின. இரவு விளக்கொளியில் அந்தப் பெண்ணின் முகம் சரியாகப் புலப்படவில்லை. இருதயம் இன்னும் வலித்துக் கொண்டே இருக்க, தனது வலக்கையை நீட்டி அவளது கரத்தை நன்றியோடு பற்றிக் கொண்டார்.

சட்டெனத் திரும்பி மகாதேவனிடம் குனிந்தாள். "என்னப்பா! ரொம்ப வலிக்குதா? இதோ பெரிய டாக்டர் வந்திட்டாரு. இப்ப ஊசி போட்டா சரியாகிடும். நீங்க தைரியமா இருங்க...!" என்றாள் தெம்பூட்டும் விதமாக.

மருத்துவர் புன்னகைத்தார். "நோ ப்ராப்ளம். பல்ஸ் நார்மலா இருக்கு. சுகுமார்! இவரை ஐ.சி.யூ.வுக்கு கொண்டு போங்க. முதல்ல காயத்தை சுத்தம் பண்ணி கட்டுப்



போடுங்க. ஒரு இ.சி.ஜி எடுத்துப் பார்த்துடலாம். கமான்... க்விக்!" என்றதும் மளமளவென காரியங்கள் நடந்தது.

மகாதேவன் ஏ.சி. ரூமிற்குள் அழைத்துப் போகப் பட்டார். டாக்டர்களும் நர்சுகளும் வேகமாகச் செயல் பட்டனர். வராந்தாவில் தயக்கமும் துளி பயமுமாய் நின்று கொண்டிருந்தாள் வசந்தநிலா.

என்ன நினைத்து இங்கு வந்தோம்! இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என எண்ணும் போதே அன்னையின் நினைவு வந்தது. அம்மா தேட ஆரம்பித்திருப்பார்களே! அண்ணனும் குணாவும் கூட வீடு வந்திருப்பார்கள். அம்மாவை எப்படி இம்சிக்கிறார்களோ? அதைப் பற்றிச் சிந்திக்காமல் யாரோ ஒருவரைக் காப்பாற்றத் துடித்துக் கொண்டிருக்கிறேனே... லேசாய்க் கண்கள் கசிந்தன.

கதவைத் திறந்து கொண்டு ஒரு நர்ஸ் வந்தாள். வசந்தநிலாவை நெருங்கி, "அந்தப் பெரியவரை அட்மிட் பண்ணியது நீங்கதானே!" என்றாள்.

"ஆமாம் சிஸ்டர்! அவர் எப்படி இருக்கார்?"

"ஹீ இஸ் ஃபைன். ஊசி போட்டிருக்கோம். ட்ரிப்ஸ் ஏறுது. தூங்குறார்."

"ஓ... தேங்க் யூ. அவர் உயிருக்கு ஆபத்து ஒன்னுமில்லையே?"

"இன்னும் கொஞ்ச நேரத்தில டாக்டர் வருவார். கேட்டுக்கோங்க. இப்போ கௌண்டர்ல இந்த பில்லை பே பண்ணிட்டு இந்த மெடிஸன்ஸை வாங்கிட்டு வாங்க!" என்றவாறு கையில் சில பேப்பர்களைக் கொடுத்தாள்.

வசந்தநிலா திக்கென அதிர்ந்தாள். 'பணம்? பணத்திற்கு எங்கே போவேன்? கடவுளே! இதைப் பற்றி யோசிக்கவே இல்லையே! பெரிய வீராப்பாய் கொண்டு வந்து சேர்த்தாயிற்று. பணம் இல்லையென்றால் சும்மா விடுவார்களா?'

"என்னம்மா! இங்கே நிற்கிறே? பணம் கட்டலியா?" நக்கலாய்க் கேட்ட சுகுமாரைப் பார்வையால் அடக்கினார் பெரியவர்.

"என்னம்மா! உங்கிட்ட பணம் குறைவா இருக்கா? இருப்பதை இப்ப பே பண்ணு. மிச்சத்தை பேஷண்ட்டோட ஃபேமியில உள்ளவங்க வந்தப்புறம் தரட்டும்!" என்றார் கனிவாய்.

நடுங்கும் விரலால் கையில் இருந்த பில்லைப் பார்த்தவள் இன்னும் அதிர்ந்தாள். எட்டாயிரம் ரூபாய்க்கு பில் போடப்பட்டிருந்தது. கையில் பத்து பைசா கூட இல்லையென்று தெரிந்தால் காறித் துப்ப மாட்டார்களா? நடுக்கமாய்க் கழுத்தோரம் வியர்த்து ஊற்றிய வியர்வையைத் துடைத்தவளின் கையில் அது தென்பட்டது. செயின்! அம்மா முதன்முறையாய் பீடி சுற்றிச் சேர்த்த சம்பளப் பணத்தில் வாங்கிய தங்கச் செயின். சாகும் வரை இது தன்னுடன் இருக்கட்டும் என்று அதை மட்டும் கழற்றாமல் வந்திருந்தாள்.

அவசரத்திற்கு உதவட்டுமே! மளமளவென செயினைக் கழற்றி பெரியவரிடம் நீட்டினாள். "டாக்டர்! இந்தச் செயின் ஒன்பது கிராம். இன்னிக்கு விலைக்கு பதினைஞ்சாயிரம் பெறும். இதை இப்போ வெச்சிக்கங்க. காலையில பெரியவர் கண் விழிச்சதும் அவங்க வீட்டுக்குத் தகவல் சொல்லிட்டு அவங்க பணம் கொண்டு வந்ததும் இதை மீட்டுக்கிறேன்."



"ஏம்மா! இது என்ன அடகுக் கடையா?"

"சுகுமார்! நீங்க கிளம்புங்க. நான் பேசிக்கிறேன்."

"பாத்து டாக்டர். ஏதாவது வில்லங்கமாகிடப் போகுது. இந்தப் பொண்ணே வில்லங்கமானவளாத்தான் இருக்கா!"

"சுகுமார். யூ மே கோ நௌ."

"யெஸ் டாக்டர்!" என்றவாறு அவர் விலகிவிட, வசந்தநிலாவை ஏறிட்டார் மருத்துவர்.

"ஏம்மா! கையில பணம் இல்லாம எந்த தைரியத்தில இவ்ளோ பெரிய ஹாஸ்பிடலுக்கு வந்தே! அதுவும் அத்தனை ரகளை செய்து அட்மிட் பண்ணினாயே!"

"ஸாரி டாக்டர். அந்த நேரத்தில அவரோட உயிரைக் காப்பாத்தணும்கிற ஒரே எண்ணம்தான் இருந்ததே தவிர, பணத்தைப் பற்றி நான் யோசிக்கவே இல்லை."

"இட்ஸ் ஓ.கே. ஹாஸ்பிடல்ல இதே மாதிரி ஜுவல் எல்லாம் வாங்கிறதில்ல. இது உங்கிட்டேயே இருக்கட்டும். நீ பேஷண்ட் பக்கத்தில இரு. அவருக்கு நினைவு திரும்பியதும் கேட்டுப் பணத்தைக் கட்டிடு. பட் ஒன் திங்க்! பணத்தை பே பண்ணாம நீ வெளியே போகக் கூடாது." - கண்களை உருட்டி மிரட்டினார்.

"நோ ஸார்! நான் போக மாட்டேன். அவர் கண் விழிக்கும் வரை நான் இங்கேயே இருக்கேன். அப்படியே அவர் சார்பில யாரும் பணம் கட்ட வராமல் போனாலும் இந்தச் செயினை வித்தாவது உங்க பணத்தைக் கட்டிடுவேன்!" என்றாள் உறுதியாய்.

"ஓ.கே. நீ போய் அவரைப் பாரும்மா!" என்றவாறு விலகி நடந்தார் மருத்துவர். வேகமாய் அறைக்குள் நுழைந்தாள் வசந்தநிலா.

தலையிலும் கையிலும் கொஞ்சம் பெரிதாய்க் கட்டுப் போட்டிருக்க, இடது கரத்தில் துளித்துளியாய் ட்ரிப்ஸ் இறங்கிக் கொண்டிருந்தது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் மகாதேவன். அவரது ஈர ஆடைகள் ஹேங்கரில் மாட்டப்பட்டிருக்க, மருத்துவமனை ஆடை அணிவிக்கப்பட்டிருந்தது.

அவரது சட்டைப் பையினுள் கைவிட்டுத் தேடினாள். ஒன்றும் கிடைக்கவில்லை. கடலில் விழுந்ததில் எல்லாம் போயிருக்குமோ... இவரது வீட்டிற்கு எப்படித் தெரிவிப்பது? பணம் கட்டுவார்களா? இல்லை பிள்ளைகளால் கைவிடப் பட்ட அனாதையா? வேண்டும் என்றேதான் போய் கடலில் விழுந்தாரா?

யோசனையோடு மகாதேவனைப் பார்த்தாள். பார்த்தால் பெரிய இடத்து மனிதராகத்தான் தெரிகிறது. பார்க்கலாம். முதலில் அவர் கண் விழிக்கட்டும். பாவம்! இந்த நேரம் இவரைக் காணாமல் எங்கெல்லாம் தேடுகிறார்களோ என்ற எண்ணம் தோன்றிய போதே இன்னொன்றும் உறைத்தது.

அம்மா! தன்னைத் தேடி அழுது ஓய்ந்திருப் பார்களோ... நான் இங்கு இருப்பதை எப்படித் தெரிவிப்பது? போன் பண்ணலாம் என்றால் அண்ணனுக்குத்தான் பண்ண வேண்டும். இரவானால் குடித்துவிட்டுப் புரள்ப வனிடம் என்னவென்று சொல்வது?



தகவல் கிடைத்த உடன் பாஸ்கர்தான் வந்து நிற்பான். போயும் போயும் அவன் முகத்திலா விழிப்பது? ச்சே! மனதில் தோன்றிய கசப்புடன் கட்டிலின் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். தூக்கம் தூரமாகிப் போனது.

நாளைய தினத்தை நினைக்கையில் வயிற்றில் புளியைக் கரைத்தது. இவரது குடும்பத்தார் வந்து இவரை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பணத்தைக் கட்டிவிட்டு எப்போது வீடு போய்ச் சேர்வது? அதுவரை அங்கே என்ன கூத்தை நடத்துவார்களோ? தவிப்பாய்க் காத்திருக்க ஆரம்பித்தாள்.

## 5

தேடித் தேடிப் பார்க்கிறேன்
என் கால்கள் ஓய்ந்ததே
வாராமலே என்னாகுமோ
என் ஆசைக் காவியம்!

"அவ வர மாட்டா! வரவே மாட்டா... பாஸ்கி! உன் அம்மாதான் அவளை எங்கேயோ அனுப்பி வெச்சிட்டாங்க. எனக்குத் தெரியும். ஆரம்பத்தில் இருந்தே உன் அம்மாவுக்கு என்னைப் பிடிக்கலை. அவங்கதான் அவளை எங்கேயோ மறைச்சி வெச்சிருக்காங்க. நீ கேளு பாஸ்கி!" ஆத்திரமாய் பாஸ்கரை உசுப்பினான் குணசீலன்.

இதுவரை பேசியதே தாளாமல் மூச்சிரைத்தது அவனுக்கு. தனது நூற்றி பத்து கிலோ உடம்பை தாங்கி நிற்க இயலாமல் திண்ணையில் அமர்ந்தான் பாஸ்கர்.

சிவப்பேறிய தன் கண்களால் அன்னையை நோக்கினான்.

"அம்மா! குணா சொல்றது உண்மையா? நீதான் அவளை அனுப்பிச்சியா? யார்கூட அனுப்பினே? சொல்லும்மா...!" உறுமினான்.

"பாஸ்கரா! அவன்தான் போதையில உளறிட்டு இருக்கான்னா நீயும் அதை நம்புறியா? அவ கோயிலுக்குத் தான்டா போனா...!" என்ற அமராவதியின் கழுத்தைப் பற்றினான்.

"பொய் சொல்லாதேம்மா! கொன்னுடுவேன் உன்னை...!"

"கொன்னுடடா. ஒரே நாள்ல போயிடுறேன். நான் உயிரோடு இருப்பதால்தானே என்னைக் காட்டி மிரட்டி என் தங்கத்தை இந்தத் தறுதலைக்கு மூன்றாம் தாரமாய் கட்டி வெக்கப் பார்க்கிறாய். நான் இல்லையென்றால் என் பிள்ளை அவள் வழியைப் பார்த்துக் கொண்டு போய் விடுவாள்."

"பார்த்தியா பாஸ்கி! உன் அம்மா வாயில இருந்தே உண்மை வருது பார்! ஏன் அத்தே! மூணாம் தாரம்னா என்ன? நான் என்ன வீட்ல ரெண்டு பேரை வெச்சிக்கிட்டா உங்க பொண்ணைக் கேட்டேன்."

"நீ பேசாதடா. உன் யோக்யதைதான் ஊருக்கே தெரியுமே... உன் பொண்டாட்டிங்க எப்படிச் செத்தாங்கன்னு எனக்கும் தெரியும்!" அமராவதி ஆவேசமாய்ச் சொல்ல, குணாவின் முகம் மாறியது.

"தெரியுமில்ல. தெரிஞ்சுமா என்மேல பயம் வரலை?"



"சண்டாளப் பாவி! நீ ஒரு கொலைகாரப் பாவி. உனக்கு எம்பொண்ணைக் கொடுப்பதைவிட அவளை நானே கொன்னுடுவேன்."

"அத்தே! சும்மா கத்தாதே. யாருக்காக அவளுகளைக் கொன்னேன். உம் பொண்ணுக்காக. என் வசந்திக்காக. வசந்திதான் என் வீட்டு மகாராணி. அவளுக்குச் சேவை செய்வாளுங்கன்னு பார்த்தா அவளுங்க எனக்கெதிரா போர்க் கொடியைத் தூக்கினாளுங்க. விடுவேனா? எனக்குத்தான் யாரும் எதிர்த்துப் பேசினா பிடிக்காதே!" என்றான் கோணலாய்ச் சிரித்தபடி.

"பாஸ்கரா! கேட்டியாடா. இந்தக் கொலைகாரப் பாவிக்கா உன் தங்கையைப் பலி கொடுக்கப் போகிறாய். வேண்டாம்யா. அம்மா சொன்னாக் கேளுய்யா!" - மகனிடம் கையேந்தினாள்.

"சரிம்மா கேட்கிறேன். ஆனா நீ ரெண்டு லட்சம் தருவியா?"

அதிர்ந்து போனாள் அமராவதி. "பாஸ்கரா! என்னடா சொல்றே?"

"ஆமாம்மா! வசந்தியை இவனுக்குக் கட்டிக் கொடுக்க எனக்கு ரெண்டு லட்சம் தர்றான் குணா. அதை வெச்சு நான் ஏதாவது பிஸினெஸ் பண்ணலாம்னு இருக்கேன். நீ சொல்றபடி கேட்டா எனக்கு எப்படி ரெண்டு லட்சம் கிடைக்கும்?"

"டேய்! வியாபாரி மாதிரி பேசாதடா. அவ உன் தங்கை."

"இருக்கட்டுமே... நான் என்ன அவளை பலான தொழிலுக்கா அனுப்புறேன். நல்லபடியா கல்யாணம்தானே பண்ணி வெக்கிறேன்."

காதுகளைப் பொத்திக் கொண்டு அழுதாள் அமராவதி. "பாவி! கொள்ளி வைக்க ஒரு புள்ளை வேணும்னு கோவில் கோவிலா ஏறி உன்னைப் பெத்தேனே... நீ இப்படி தினம் தினம் கொள்ளி வெக்கிறியே...!"

"ம்மோவ்! சும்மா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதே. வசந்தி குணாவுக்குத்தான். அதில எந்த மாற்றமும் இல்லை. இப்ப அவ எங்கே இருக்கான்னு சொல்லு!"

"சொல்ல மாட்டேன். என் உயிரே போனாலும் சொல்ல மாட்டேன்."

"உனக்கு எவ்வளவு கல் மனசும்மா. உன் பொண்ணை மட்டும் பார்க்கிறியே. என்னைப் பத்தி நினைச்சுப் பார்க்கிறியா? இவன் தர்ற பணத்தை வெச்சு கடை திறக்கலாம்னு இடமெல்லாம் பார்த்து வெச்சிட்டேன் தெரியுமா? என்னை ஏமாத்திடாதேம்மா. நான் சம்பாதிச்சு உன்னை ராணி மாதிரி வெச்சுக் காப்பாத்துறேன்மா."

"வேண்டாம்யா. இந்தப் பாவி கையால பணம் வாங்கினா நீ உருப்பட மாட்டே. அது பாவப்பட்ட பணம்ப்பா. உனக்குப் பணம்தானே வேணும். நான் தர்றேன்!"

"எப்படித் தருவே? ராத்திரியெல்லாம் லொக் லொக்னு இருமிட்டு பீடி சுத்துறியே. அதைச் சேர்த்து தருவியா? இத்தினி வருஷமா சுத்தி இப்பத்தான் உன் மகளுக்குக் கம்மல், நூல் போல செயினுன்னு ஒவ்வொன்னா



சேர்க்கிற. நீ எப்போ ரெண்டு லட்சம் சேர்ப்ப. என் ஆயுசு முடிஞ்ச பிறகா?"

"அப்படிப் பேசாதப்பா! உனக்கு... பீடிக் கம்பெனியிலேயே ஒரு வேலை கேட்டு வெச்சிருக்கேன். அதுல சேர்ந்தா நாம ரெண்டு பேரும் சேர்ந்து சம்பாதிச்சு வசந்திக்கு நல்ல இடத்தில மாப்பிள்ளை பார்த்து கட்டி வெச்சுடலாம்!" அமராவதி ஆவலாய்ச் சொல்ல குணா எழுந்து வந்தான்.

"பாத்தியா பாஸ்கி! திட்டம் போடுறதில கிழவி நம்மளையே மிஞ்சிடும் போலிருக்கே. ஊமைக்கோட்டான் மாதிரி இருந்துகிட்டு மனசுல எவ்வளவு ஐடியா வெச்சிருக்கு பாரேன்!" என்றான் நக்கலாக.

"நீ பேசாதடா. எம்புள்ளையைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கினதே நீதான்!"

"அடடா! உம்புள்ளைக்கு வாயில விரலை வெச்சா கடிக்கத் தெரியாது பாரு. எம் பொண்டாட்டிங்களைக் கொல்லச் சொன்னதே உம்புள்ளைதான். அது தெரியுமா உனக்கு?"

நம்ப முடியாத அதிர்ச்சியோடு மகனைப் பார்த்தாள் அமராவதி. "அவனைப் பார்த்தா எப்படி? என் தங்கச்சி உன் வீட்டுக்கு வந்து வாழணும்னா அவளுக்குப் போட்டியா உன் வீட்ல எவளும் இருக்கக் கூடாது. முதல்ல அவ கதையை முடிச்சிட்டு வா. அடுத்த முகூர்த்தத்தில உனக்கும் என் தங்கைக்கும் கல்யாணம்னான். இவன் பேச்சைக் கேட்டு நானும் கச்சிதமா முடிச்சிட்டு வந்தா பொண்ணைக் கர்ணோம்னு எங்ககிட்டேயே ரீல் விடுறியா? நாங்க எமகாதகன்ங்க. எங்ககிட்டேயேவா?"

"பா... பாஸ்கரா! இவன்... சொ... சொல்றதெல்லாம்?"

"உண்மைதான். அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன பண்ணப் போற?"

"அடப்பாவி! இப்பவே போலீசுல சொல்லி...!"

"வெயிட்! வெயிட். போலீஸ்ல போய் என்ன சொல்லுவ? ஒருத்தி கரண்ட் ஷாக்கடிச்சு செத்தா. இன்னொருத்தி சிலிண்டர் வெடிச்சு செத்தா. இதை எப்படிப் போய்ச் சொல்லுவ? அதோட இந்த விஷயம் வெளியே கசிஞ்சா உன்னையும் குடிசையோட வெச்சுக் கொளுத்திடுவேன்!" - மகன் மனதில் துளியும் பயமின்றிப் பேசியதைக் கேட்டு உயிரற்ற சடலமாய்ப் போனாள் அமராவதி.

தன் மகன் இவ்வளவு மோசமானவனா? கொலை செய்வதற்கே தயங்காதவன் வேறு எதற்கு அஞ்சுவான்? இனி இவனிடம் பேசிப் பயனில்லை. கெஞ்சியும் எதுவும் மாறப்போவதில்லை. கோவிலுக்குப் போகிறேன் என்ற மகளைக் காணவில்லை. இவர்களது எண்ணப்படி அவள் எங்கேயோ ஓடிவிட்டாள் என்பதுதானே! ஓடியவள் ஓடியதாகவே இருக்கட்டும்.

இனி இவனிடம் எதையும் பேசக்கூடாது. கத்தும் வரை கத்திவிட்டுப் போகட்டும். கடவுளே! என் மகளுக்கு எந்தத் துன்பமும் நேர்ந்திருக்கக் கூடாது. அவளைக் காப்பாற்று. பத்திரமான இடத்தில் அவளைச் சேர்த்துவிடு. இந்த வயதான நோயாளித் தாயின் மீது உள்ள அன்பினால் அவள் இங்கு வந்து இவர்களிடம் மாட்டிக் கொள்ள வேண்டாம். அவளுக்கான வாழ்வை நீயே அமைத்துக் கொடு இறைவா!



கண்கள் கசிய வேண்டிக் கொண்டு தூணில் சாய்ந்து அமர்ந்தவாறு பீடியைச் சுற்ற ஆரம்பித்தாள். இருவரும் ஆக்ரோஷமாய் அவளை நெருங்கினர்.

"அம்மா! நான் இங்கே நாய் மாதிரி கத்திகிட்டு இருக்கேன். நீ பாட்டுக்கு பீடி சுத்தினா எப்படி?" இரைந்தான் பாஸ்கர்.

"என்னப்பா பண்றது? பெத்தது ரெண்டுமே என்னை ஏமாத்திட்டது. நீ இவன்கூட சேர்ந்து எல்லாவித கெட்டப் பழக்கமும் கத்துக்கிட்ட. அவ யாருகூட சேர்ந்தாளோ என் மானம், மரியாதையை காத்தில பறக்க விட்டுட்டுப் போயிட்டா. இனி நான் என்ன செய்ய முடியும்? என் கடைசி மூச்சு வரைக்கும் என் கஞ்சிக்கு வழி பார்க்க வேண்டாமா?"

"அம்மா! பேச்சை மாத்தாதே. வசந்தி எங்கே போனா?"

"வீட்டை விட்டு ஓடிப் போனவ எனக்குப் பிள்ளையே இல்லடா. அவ எங்கே போனாளோ தெரியாது. உனக்குத் தேவைன்னா நீயே தேடிப் பார்த்துக்கோ!" என்றாள் நிமிர்ந்தும் பாராமல்.

"அம்மா! எங்கிட்ட நடிக்காதே. உன் மகள்ன்னா உனக்கு உசுருன்னு எனக்குத் தெரியும். உண்மையைச் சொல்லு."

"பாஸ்கி! இனிமே உன் அம்மா வாயில இருந்து உண்மை வராது. பேசாம கதையை முடிச்சிடு."

"இல்ல குணா! இவ இருக்கணும். கண்டிப்பா இவளை விட்டுட்டு வசந்தி எங்கேயும் போயிருக்க மாட்டா. எவளாவது

ஃபிரெண்ட் வீட்டுக்குப் போயிருப்பா. ஒரு நாளைக்கு மேலே அவளால அம்மாவைப் பார்க்காம இருக்க முடியாது. நிச்சயமா வருவா!"

"வந்திடுவான்றியா?"

"நிச்சயமா வருவா. அம்மா இருந்தாத்தான் நம்ம காரியம் நடக்கும். வா! நமக்குத் தெரிஞ்ச இடத்தில தேடிப் பார்ப்போம்."

"இந்த ராத்திரியிலயா? காலையில தேடுவோம்."

"இல்ல குணா! நாளையில இருந்து பகல் முழுக்க அம்மாவைக் காவல் காக்கணும். நாம வீட்லதான் இருக்கணும். புரியுதா?"

"ம்.. புரியுது. இப் ப எங்கே போறோம்?"

"வா... பஸ் ஸ்டாண்ட்ல இல்ல ஏதாவது கோவில் வாசல்ல உட்கார்ந்திருக்காளான்னு பார்ப்போம். எதுக்கும் கதவை வெளியே பூட்டிட்டுப் போவோம். கிழவியை நம்ப முடியாது!" என்றவாறு இருவரும் வெளியேறி கதவை வெளிப்புறமாக பூட்டிவிட்டுச் செல்லும்வரை அமராவதியிடம் அசைவில்லை.

அவர்களின் குரல் தேய்ந்து மறைந்து போனதும் எழுந்து காமாட்சி விளக்கை ஏற்றினாள். "தாயே! என் மகளை இவர்கள் கண்ணில் படாமல் காப்பாற்று! அவள் வாழ்வு சீரழிந்துவிடக் கூடாது. என் மகளைக் காப்பாற்று!" விடாமல் வேண்டிக் கொண்டே இருந்தாள்.

வாசல் கதவை யாரோ தட்ட, சட்டென கண்களைத் திறந்தாள். பதட்டமாய்க் கதவருகே சென்றாள். "யாரு?"



"நான்தான் பார்கவி. தூங்கிட்டீங்களா அமராவதிம்மா!"

"இல்லை. பீடி சுத்திட்டு இருந்தேன்."

"கதவைத் திறங்களேன். உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"பார்கவி! வெளியே தூரத்தில எங்கேயாவது எம் மகன் நிற்கிறானா பாரும்மா...!" அமராவதியின் குரல் நடுங்கியது.

"இல்லையேம்மா... இப்பத்தான் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில அந்தத் தடியன்கூட பார்த்தேன். ஏம்மா?"

"அந்த வக்கிரம் பிடிச்சவனுங்க கதவை வெளியே பூட்டிட்டுப் போயிட்டாங்கம்மா. எம் மகளைத் தேடி அலையுறானுங்க."

"அடடா! இப்படின்னு தெரிஞ்சா அவன் கிட்டேயே சொல்லியிருப்பேனே...!"

"எதை... எதைச் சொல்லியிருப்பாய்?" படபடப்பாய்க் கேட்டாள்.

"நம்ம வசந்தியை..." எனத் தொடங்கிய பார்கவியை அடக்கினாள் அமராவதி.

"வேண்டாம்மா. சத்தமா பேசாதே. நீ இந்தப் பக்கம் ஜன்னல் கிட்ட வா!" என்றவாறு ஜன்னலைத் திறந்துவிட்டு வீட்டினுள் எரிந்த விளக்கை அணைத்தாள்.

"ம்... சொல்லும்மா! என் மகளைப் பார்த்தாயா?"

"என்னம்மா? எதுவும் பிரச்சனையா? ஏன் உங்க குரல் நடுங்குது. லைட்டை அணைச்சிட்டு ஏன் இருட்டில நிக்கிறீங்க?"

"பார்கவி! அதெல்லாம் பிறகு சொல்றேன். முதல்ல நீ வந்த விஷயத்தைச் சொல்லு."

அந்தப் பார்கவி ஒரு கணம் தயங்கிவிட்டு, "அமராவதியம்மா! நம்ம வசந்தியை தேவஅன்பு ஹாஸ்பிடல்ல பார்த்தேன்!" என்றாள்.

"என்ன? நாகர்கோவில்லயா?"

"ஆமாம்மா! யாரோ ஒரு பெரியவர் கடல்ல விழுந்திட்டாராம். அவரைக் காப்பாற்றி அந்த ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கா.

எங்க அப்பாவுக்கு உடம்பு முடியாம அங்கேதானே வெச்சிருக்கோம். பார்த்திட்டு வரும்போது தான் அவளைப் பார்த்தேன்."

"அவ உன்னைப் பார்த்தாளா?"

"ம்! பார்த்தா. அந்தப் பெரியவரோட அட்ரஸ் எதுவும் தெரியலையாம். அவர் கண் முழிச்சபிறகு அவங்க வீட்டுக்குத் தகவல் தந்துட்டு வருவாளாம். நீங்க தேடி பதற வேண்டாம்னு சொன்னா. அதான் நான் வீட்டுக்குக் கூட போகாம உங்ககிட்ட சொல்லிட்டுப் போக வந்தேன்.

பஸ் ஸ்டாண்டில் பாஸ்கரைப் பார்த்ததும் சொல்லலாம்னு நினைச்சேன். கூடவே அந்தத் தெரு நாயும் இருந்ததாலே பேசாம வந்துட்டேன்."

"நல்ல காரியம் செய்தே பார்கவி. இல்லேன்னா எல்லாம் நாசமாப் போயிருக்கும். என் குலசாமி நீதான்."

"என்னம்மா? என்னென்னமோ சொல்றீங்க?"



"ஆமாம்மா! உனக்குத்தான் தெரியுமே. அந்த குணாகூட சேர்ந்துகிட்டு என் மகனும் வசந்தியை அவனுக்கு கட்டிக் கொடுக்கணும்னு அலையுறானே!"

"ஆமா. நீங்களும் சம்மதிச்சிட்டீங்களா?"

"சேச்சே! அவனுக்கு எப்படியம்மா பொண்ணைக் கொடுக்க முடியும்? அவளுக்கும் இதில விருப்பமில்லை. என்ன சொன்னாலும் எம் மகன் கேட்கலை. அவனுக்குப் பணவெறி. அந்த சண்டாளப் பாவிக்கு அதுவே வசதியாப் போச்சு."

"சரிம்மா... இப்ப நான் என்ன பண்ணணும்? நான் மத்தியானமே கிளம்பிப் போயிட்டேன். வீட்ல புள்ளைங்க தேடிட்டு இருக்கும்!" என்றாள் பார்கவி.

"ஆமாம்மா. நான் நேரிடையா விஷயத்துக்கு வர்றேன். நீ எப்போம்மா ஆஸ்பத்திரிக்குப் போவே?"

"நாளைக்குக் காலையில அப்பாவுக்கு சாப்பாடு எடுத்திட்டுப் போவேன்."

"அப்போ என் மகளைப் பார்த்தா இங்கே வரவேண்டாம்னு சொல்லும்மா. ஆத்தூர்ல என் நாத்தனார் வீடு இருக்கு. அங்கே போய் ஒரு பத்து நாள் இருக்கச் சொல்லும்மா. இல்ல ஒரு மாசம் இருந்தாலும் சரிதான்!"

"என்னம்மா சொல்றீங்க?"

"காலையில இருந்து வசந்தியைக் காணோம். அவ எங்கேயோ ஓடிப் போயிட்டான்னு தேடுறானுங்க. ஆமா பார்கவி! இவனுக்கு என் நாத்தனார் அறவே ஆகாது. அதனால அங்கே தேடிப் போக மாட்டான். என்னைப் பத்தி

கவலைப்படாம அவளைத் தைரியமா போகச் சொல்லும்மா. எதுவும் அவசரம்னா உன் வீட்டுப் போன்ல பேசச் சொல்லும்மா. எனக்கு என் புள்ளையைக் காப்பாத்த வேற வழியில்லம்மா..."

"ஆனா... இவனுங்க உங்களைச் சும்மா விடுவானுங்களா?"

"என்னை ஒண்ணும் பண்ண மாட்டாங்கம்மா. அப்படியே பண்ணினாலும் எனக்கு ஒரு பயமும் இல்லை. நான் வாழ்ந்து முடிச்சவ. எம்புள்ளை வாழ வேண்டிய குருத்து. இவன் கையில கிடைச்சா அது நிலைமை என்னாகுமோ? எப்படியாவது எம் மகளைக் காப்பாத்த உதவி செய்யும்மா. உனக்குப் புண்ணியமாப் போகும்!" கைகூப்பினாள் அமராவதி.

"சரிங்கம்மா. ஒருவேளை காலையில அவ கிளம்பி இங்கே வந்தாலும் வந்திடக் கூடாதே. எதுக்கும் நான் இப்பவே போன் பண்ணி அவகிட்டே பேசிடுறேன். எங்க அம்மா கையில போன் இருக்கு. பக்கத்து ரூம்லதான் வசந்தி இருக்கா. நான் பேசிட்டுக் காலையில உங்களைப் பார்க்கிறேன்."

"ரொம்ப நன்றிம்மா. இது போதும்!"

"அம்மா! நான் உங்களுக்கு ஹெல்ப் பண்றது அவனுங்களுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னுடுவாங்களே...!" பார்கவியின் குரலில் அச்சம் தொனித்தது.

"வசந்தியைக் காணோம்னு கோபத்தில சுத்துறாங்க. அவளைத்தான் தேடி அலைவானுங்க. எதுக்கும் நீ இந்தப் பக்கம் வராம இரும்மா. நான் பீடிக் கம்பெனிக்குப்



போகும்போது உன்னைப் பார்த்துக்கிறேன். 'நீ போம்மா போயிடு."

"சரிம்மா...!" என்றவாறு விலகி அவள் வேகமாகப் போய்விட, நிம்மதிப் பெருமூச்சோடு தரையில் அமர்ந்தாள் அமராவதி.

"என் கண்ணே! அம்மாவால் இதுதான் முடியும். எப்படியாவது உன்னைக் காப்பாற்றிக் கொள்ளம்மா. இறைவனின் அருள் இருந்தால் மீண்டும் பார்ப்போம்!" - மகளை எண்ணிக் கண்ணீர் விட்டாள். மகளைக் காப்பாற்றும்படி இறைவனிடம் மன்றாடினாள்.

## 6

அம்மா உன் வார்த்தை வேதம்
என்றெண்ணும் மகளும் நான்தானம்மா
உலவும் என்கோவில் பேசும் என்
தெய்வம் உலகில் நீதானம்மா!

காதிலிருந்து போனை எடுக்காமலே நின்றிருந்த வசந்தநிலாவைத் தொட்டு அசைத்தாள் அந்த அம்மாள். திடுக்கிட்டு விழித்தாள்.

"என்னம்மா! வீட்ல எதுவும் பிரச்சனையா?"

"ம்? இல்லை...!" மறுப்பாய்த் தலையசைத்தாள்.

"இல்லை. இந்த நேரத்துக்குப் போன் வந்ததாலே கேட்டேன். பேசிட்டியா?"

"ம்... பேசிட்டேன். அம்மா! எனக்கு ஒரு சின்ன ஹெல்ப் பண்ண முடியுமா?" என்றாள் தயங்கியவாறே!

"சொல்லும்மா."

"வந்து... எங்க அத்தை வீட்டுக்கு ஒரு போன் பண்ணிக்கட்டுமா? என் கையில சில்லரை இல்லை."

"பரவாயில்லை... பண்ணிக்கோம்மா!"

"ரொம்ப நன்றிம்மா...!" அவசரமாய் எண்களை அழுத்திவிட்டுப் போனை காதிற்குக் கொடுத்தாள். முதல் ரிங் போனதுமே போன் எடுக்கப்பட்டது.

"ஹலோ!" எரிச்சலாய்க் கேட்டது அத்தையின் குரல்.

தூக்கத்தைக் கலைத்து விட்டேனா? பதட்டமாகக் குரல் கொடுத்தாள் வசந்தநிலா.

"அத்தே! நான்தான் வசந்தநிலா பேசுறேன்."

"வாம்மா... வா! ஆமா ஆத்தாளும் மகளும் மனசுல என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க?" - எடுத்த எடுப்பிலேயே பொரிந்தாள் அத்தை.

"என்ன அத்தை? நான்...!"

"நீ ஒன்னும் சொல்ல வேண்டாம். இப்பத்தான் உன் அண்ணன் போன் பண்ணி நார்நாராய்க் கிழித்தான். ஆமா! எவனையோ இழுத்திட்டு ஓடிட்டியாமே.

ஏன்டியம்மா! பூனை மாதிரி இருந்துகிட்டு பெரிய பெரிய வேலையெல்லாம் செய்திருக்கிறியே... நீ இங்கேதான் வந்திருப்பேன்னு உன் அண்ணன் என்னை மிரட்டுறான். நீ போய்த் தொலையறதுக்கு எங்க தலையை ஏன் உருட்டுறான்?"

"அத்தே! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க."



"என்ன சொல்லப் போற? எங்களுக்கு அடைக்கலம் தாங்கன்னு கேட்கப் போறீயா? கண்ட கண்ட ஓடுகாலிக்கெல்லாம் என் வீட்ல இடம் தந்தா என் பொண்ணை எவன் கட்டுவான்? வேற இடம் பாரு!"

"அத்தே...!" சட்டென கோபமானாள்.

"என்னடி அத்தே சொத்தேன்னுட்டு. என் கொழுந்தன் மகனுக்கு உன்னைப் பெண் கேட்டதுக்கு உன் அம்மா வாய்கிழிய பேசினாளே. பையன் கருப்பு. குட்டையா இருக்கான்னு நொண்டிச் சாக்கெல்லாம் சொன்னா! இப்போ நீயா தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை எப்படி இருக்கான்?"

கடுகடுவென கோபம் ஏறியது. பதில் சொல்லும் முன் அத்தையே பேசினாள்.

"உன் அம்மா சம்மதத்தோடத்தான் போனியாக்கும். உன் அம்மாவுக்கும் சாமர்த்தியம்தான்."

"எங்க அம்மாவைப் பத்திப் பேச உங்களுக்கு எந்த அருகதையும் இல்ல!" வசந்தநிலா சீறியதும் கொதித்துப் போனாள் அத்தை.

"அடி! ஓடுகாலி நாயே! அருகதையைப் பத்தி நீ பேசுறீயா? போடி! நீ எப்படி வாழ்ந்திடுறேன்னு நான் பார்க்கத்தான் போறேன். உன் அண்ணன் கொலை வெறியோட சுத்திட்டு இருக்கான். இப்பவே அஞ்சுகிராமம் கன்னியாகுமரி முழுக்க வலை போட்டுத் தேட ஆரம்பிச்சுட்டான். மாட்டின உன் கதை அவ்வளவுதான்!"

வசந்தநிலாவின் உடல் உதறிக் கொண்டது. நான் என்ன தவறு செய்தேன் என்று என்னைத் தேடுகிறான். அத்தை ஏன் இப்படிப் பேசுகிறாள். தலை சுற்றியது.

"பேசாம உன் அண்ணன் பார்த்த மாப்பிள்ளையைக் கட்டிக்க. நல்லவனோ பொல்லாதவனோ வீட்டில பார்த்த மாப்பிள்ளையைக் கட்டினாத்தான் மரியாதை. நாளைக்கே இவன் விட்டுட்டு ஓடிட்டான்னா என்ன பண்ணுவ?"

"எவன்?" என்றாள் புரியாமல்.

"ம்...? அதான். நீ இழுத்திட்டு ஓடினியே... அவன்?"

"அத்தே! என்ன பைத்தியக்காரத்தனமா பேசுறீங்க!"

"ஆமாம்டி! உங்கிட்ட இவ்வளவு நேரம் பேசிட்டு இருக்கேனே நான் பைத்தியக்காரிதான். கடைசியா ஒன்னு சொல்றேன் கேட்டுக்க. தப்பித் தவறிக்கூட என் வீட்டுப் பக்கம் வந்திடாதே. நான் ஒருத்தி இருப்பதையே மறந்திடு. என் கண்ல பட்ட உடனே உன் அண்ணனுக்குத் தகவல் கொடுத்திடுவேன். பேசாம ஏதாவது வெளிநாட்டுக்குப் போயிடு!" என்றவாறு போனை வைத்து விட்டாள்.

அதிர்ந்து போய் நின்றாள் வசந்தநிலா. போனை கட் பண்ணி அந்த அம்மாளிடம் நீட்டினாள். "ரொம்ப தேங்க்ஸ்மா!"

"பரவாயில்லைம்மா... நான் எங்க ரூமுக்குப் போறேன்."

"ம்..." அவள் சென்றதும் கதவைச் சாத்திவிட்டு மீண்டும் மகாதேவன் அருகே வந்து அமர்ந்தாள். எத்தனை கொடும் மொழிகள். இவற்றை எல்லாம் கேட்பதற்கா உயிரோடு திரும்பி வந்தேன். பெரியவரைக் காப்பாற்ற முயன்ற நேரத்தில் என் உயிரை விட்டிருக்கலாமே. இப்போது இத்தனை அவப்பெயரைத் தாங்கிக் கொண்டு எங்கே செல்வது?



"கொஞ்ச நாளைக்கு இங்கே வராதே. உன் அம்மாவிடம் பேச வேண்டும் என்றால் என் வீட்டுக்குப் போன் பண்ணு. இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். உன் அம்மாவைப் பத்தி பயப்படாதே!" சற்று முன் பேசிய பார்கவியின் குரல் செவியில் மோதியது.

"தப்பித் தவறிக்கூட என் வீட்டுப் பக்கம் வந்திடாதே. பேசாம ஏதாவது வெளிநாட்டுக்குப் போயிடு!" அத்தையின் குரல் முகத்தில் அறைந்தது.

கடவுளே! இது என்ன சோதனை! நான் எங்கே போவேன்? எனக்கு எதுவுமே தெரியாதே. பேசாமல் விடிந்ததும் வீட்டிற்குப் போய் அண்ணனின் காலில் விழுந்து விட்டால் என்ன!

ஐயோ! குணாவைப் பார்த்தாலே உடல் உதறுமே. அவன் கையில் தாலி வாங்கி அவனுடன் குடும்பம் நடத்துவதா? அதைவிட மரணமே மேல் என்று தானே கடலைத் தேடி ஓடினேன். என்னைச் சாகவும் விடாமல் வாழவும் முடியாமல் சிக்கிச் சிதைக்கிறாயே இறைவா! இனி என்ன செய்வேன்? அவர்களிடம் இருந்து எப்படித் தப்புவேன்?

கண்களில் நீர் சுரந்து வழிந்தது. பேசாமல் இங்கேயே இப்போதே உயிரைப் போக்கிக் கொண்டால் என்ன? எண்ணம் தோன்றிய உடன் பார்வையைச் சுழற்றினாள்.

அறையின் மூலையில் மரத்தாலான மேஜை மீது குளுகோஸ் பாட்டில்கள், மருந்து மாத்திரைகளோடு சேர்த்து சில்வர் ட்ரேயில் மருத்துவ உபகரணங்களும் இருந்தது.

சட்டென அதை நெருங்கினாள். கத்தரிக்கோல், இடுக்கி, கத்தி.

கத்தியைக் கையில் எடுத்தாள். பளபளப்பாய் இருந்தது. இடது கை மணிக்கட்டைக் குறிவைத்து இறக்கிய நேரம் அந்த முனகல் கேட்டது.

"நிலா! நிலாம்மா... நிலாம்மா...!"

திடுக்கிட்டுத் திரும்பினாள். தன் தந்தையின் குரல். அதே தொனி. தந்தை மட்டும்தான் நிலா என்று அழைப்பார். அவசரமாகத் தேடினாள். மூளை உத்தரவிட்டது.

இறந்து போனவர் எப்படிப் பேசுவார் முட்டாள் பெண்ணே!

ஆமா! அப்பா இப்போ இல்லையே.... வேறு யார் என்னை நிலாவென்று அழைத்தது?

"நிலாம்மா! அப்பாவைக் கண்திறந்து பாரம்மா. நிலாக் கண்ணு...!" இம்முறை தெளிவாய்க் கேட்டு துள்ளித் திரும்பினாள்.

மகாதேவன் உதடுகள்தான் முனகிக் கொண்டிருந்தது. கண்களைத் திறக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அவரை நெருங்கினாள். என் பெயர் எப்படி இவருக்குத் தெரிந்திருக்கிறது? இவர் யார்?

மீண்டும் அவர் முனகவே, மெதுவாய் அவரைத் தொட்டாள். "ஸார்! நான்தான் நிலா. இங்கே உங்க பக்கத்திலேதான் இருக்கேன். பயப்படாதீங்க!" என்றாள் மெல்லிய குரலில்.



மகாதேவனின் உடல் ஒருமுறை துள்ளியது. திடும்மென கண்களைத் திறந்தார். "நிலா! நிலா! நீ எம் பக்கத்துலதான் இருக்கியாம்மா. அப்போ நான் கண்டதெல்லாம் கனவா?" என எழ முயற்சித்தவர் வலியால் முகம் சுளித்தார். எதுவும் புரியாமல் விழித்தாள்.

"ஸார்! படுத்துக்கங்க. தலையிலேயும் கையிலேயும் கட்டுப் போட்டிருக்கு!" என்றவாறு அவரைப் படுக்க வைத்தாள்.

அவளைப் பார்த்து வியந்தார். "நீ... நீ யாரும்மா?"

"என் பேர் வசந்தநிலா. கடல்ல நீங்க விழுந்து தத்தளிச்சப்போ நான்தான் உங்களைக் காப்பாத்தி இங்கே கொண்டு வந்து சேர்த்தேன். இப்போ நாம ஹாஸ்பிடல்ல இருக்கோம்."

மகாதேவனுக்கும் எல்லாம் புரிந்து போனது. நேற்று இரவு மருத்துவமனை வாசலில் நின்று போராடினாளே.... கடற்கரையில் ஒற்றை ஆளாய் நின்று தன்னைக் கரை சேர்த்தாளே... அவரது முகம் புன்னகை பூத்தது.

"நினைவிருக்குதம்மா... ரொம்ப நன்றி!" கைகூப்பினார்.

"என்ன ஸார் இது? எமோஷனல் ஆகாதீங்க!" அவரது கையைப் பிரித்து விட்டாள்.

"அம்மாடி! உன் பேர் உண்மையாவே வசந்த நிலாவா?"

"ஆமா ஸார். ஏன் அப்படிக் கேட்கிறீங்க?"

"எம் பொண்ணோட பேரும் அதுதான். நிலான்னு கூப்பிடுவோம்!" என்றார் கண்கள் பனிக்க.

"ஈஸிட்! ஓ... அதுதான் நிலா நிலான்னு புலம்புனீங்களா? நான்கூட ஒரு நிமிஷம் எங்க அப்பான்னு நினைச்சு ஏமாந்திட்டேன். என் அப்பாகூட என்னை அப்படித்தான் கூப்பிடுவாங்க. ஆனா இப்ப அப்பா இல்லை."

"ஓ... ஸாரிம்மா!"

"பரவாயில்லை ஸார். சரி... உங்க பொண்ணு எப்படி இருப்பாங்க? என்னை மாதிரியா!" ஆவலாய்க் கேட்டாள்.

"உருவத்தில் கொஞ்சம் ஒற்றுமை இருக்கு. ஆனா குணம் நேர் எதிர்!"

"என்ன ஸார் சொல்றீங்க?"

"ஆமாம்மா! நீ ஒத்தை ஆளா நின்னு என்னைக் காப்பாத்த எப்படிப் போராடினேன்னு பார்த்தேனே... டாக்டர்கிட்ட பேசினியே அதில பாதிகூட என் மகள் பேச மாட்டாள். ரொம்ப பயந்த சுபாவம்!"

"அப்படியா? எனக்கு அவங்களைப் பார்க்கணும் போல இருக்கு. ஆமா! உங்களுக்கு எந்த ஊர் ஸார்? உங்க பேர் என்ன? அதைக்கூட கேட்கலையே நான்... நேத்து ஹாஸ்பிடல்ல உங்க பேரைக் கேட்டாங்க. காலையில உங்ககிட்ட கேட்டுட்டு சொல்றேன்னு சொன்னேன்!"

அதுவரை இருந்த கவலைகளும் மனக் கலக்கமும் மறைந்து போய்விட சகஜமாய்ச் சிரித்தாள் வசந்தநிலா.



"எம் பேர் மகாதேவன். வட்டப்பாறை ஜமீன்மா நான்...!"

"ஓ! அப்போ ரொம்ப பெரிய இடம்." மரியாதையாய் எழுந்து நின்றாள்.

"எல்லாம் நம்ம மனசைப் பொறுத்துத்தாம்மா. நீ உட்கார். பெரியவன், சின்னவன் என்று எதுவுமே இல்லை."

"சரி ஸார். உங்கள் வீட்டில் தேடுவார்களே...! விடியப் போகிறது. உங்கள் வீட்டு போன் நம்பர் சொன்னால் நான் பேசி தெரியப்படுத்துவேன்."

சட்டென சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தார் மகாதேவன். "என் செல்....!"

"ஸாரி ஸார்! இது ஹாஸ்பிடல் ட்ரெஸ். உங்க ட்ரெஸ் ஃபுல்லா நனைஞ்சுப் போச்சே. அதோ ஹேங்கர்ல காயுது. பட் உங்க பாக்கெட்ல எதுவுமே இல்லை. தேடிட்டேன்."

"எல்லாம் கடல்ல போயிடுச்சா. ஏம்மா! ஹாஸ்பிடலுக்குப் பணம் கட்டணுமே. என்னம்மா பண்ணினே?" பதட்டமாய்க் கேட்டார்.

கழுத்தில் உள்ள செயினைக் காட்டினாள். "இதைக் கொடுத்தேன். வாங்க மாட்டேன்னுட்டார் டாக்டர். பீஸ் கட்டுற வரை வெளியே போகக்கூடாதுன்னு உத்தரவு. இப்போதைக்கு நான்தான் அடமானப் பொருள்!" என்றாள் சிரித்தபடி.

"அடடா! என்னால் உனக்கு எவ்வளவு சிரமம்? நேற்று முழுவதும் நீ வீட்டிற்குப் போகவில்லையாம்மா. உன் வீட்டில் தேடியிருப்பார்களே... பெண் பிள்ளை ஆயிற்றே!"

வசந்தநிலாவின் முகம் வாடியது. தன்னுடைய இன்றைய நிலையை எண்ணி இயலாமையால் கண்ணீர் சுரந்தது. பற்களைக் கடித்து சமாளிக்க முயன்றும் முடியாமல் தோற்றாள்.

"என்னம்மா ராஜாத்தி! ஏன் அழுகிறாய்?" பதறினார் மகாதேவன்.

"எனக்கென்று யாருமே இல்லை ஸார். நான் ஒரு அநாதை."

"அப்படிச் சொல்லாதேம்மா. கடவுள் படைப்பில் யாருமே அநாதையில்லை."

"இதெல்லாம் பேசவும் கேட்வும் நல்லா இருக்கும் ஸார். ஆனா....!"

"ஆனா என்ன ம்மா! எல்லாருக்குமே கஷ்டம் இருக்கு. ஆனா அடுத்தவங்களோட கஷ்டத்தை வைத்துப் பார்க்கும்போது நம்ம கஷ்டம் பெரிசாத் தெரியாது. இப்போ நீ என்னை உன் தந்தையாய் நினைத்துக் கொண்டால் நீ எப்படி அநாதை ஆவாய்?"

"ஸார் விளையாடாதீங்க. இதை மட்டும் உங்கள் மகள் கேட்டால் போதும். உங்களை உண்டு இல்லையென்று ஆக்கிவிடப் போகிறார்கள்."

மறுப்பாய்த் தலையசைத்தார். "இல்லையம்மா! அவள் அப்படி எதுவும் செய்ய மாட்டாள்."

"ஸார்! என்னதான் அப்பாவியான பொண்ணா இருந்தாலும் தன்னோட உரிமையை எப்படிப் பங்குபோட விடுவாள்? பாருங்க. நாம ஏதேதோ பேசிட்டு இருக்கோம். முதல்ல உங்க வீட்டுப் போன் நம்பர் கொடுங்க ஸார்."



"அட! நான்கூட மறந்திட்டேன் பார். என்னவோம்மா உன்கூட பேசினா வேற எந்த நினைவும் வரமாட்டேங்குது. ரொம்ப வருஷம் பழகின மாதிரி ஒரு ஃபீலிங்ஸ்."

"எனக்கும்தான் ஸார். உங்களை அந்நியமா நினைக்கவே தோணலை!"

"அப்போ என்கூட என் வீட்டுக்கு வந்திடுறியா?" மகாதேவன் திடீரென கேட்டதும் நிலாவின் பேச்சு நின்று போனது.

"என்னம்மா! இந்த ஆளைப் பார்த்து முழுசா ஒரு நாள்கூட ஆகலை. அதுக்குள்ளே வீட்டுக்குக் கூப்பிடுறானேன்னு நினைக்கிறியா?"

"அ... அப்படி இல்லை!"

"நான் உன்னை என் மகளா நினைச்சுக் கூப்பிடுறேம்மா. வருவியா?"

"ஸார்! நான் யாருன்னுகூடத் தெரியாம எப்படி?" தயங்கினாள்.

"இதுவரைக்கும் நீ யாரோவா இருந்திருக்கலாம். ஆனா உன்னை எப்போ பார்த்தேனோ அப்பவே என் மகளாத்தான் பார்க்கிறேன். நானும் உன்னை மாதிரி ஒரு அநாதைதாம்மா."

"ஸார்!"

"ஆமாம்மா! மனைவியையும் இழந்து பெற்ற ஒரே மகளையும் எமனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்திட்டு அநாதையா நிக்கிறேன்மா!" – கண்கள் கசிய அவர் கூற, அதிர்ந்து போனாள் வசந்தநிலா.

"ஸார்! நீ... நீங்க என்ன சொல்றீங்க?"

"ஆமாம்மா! நேற்றுக் கடற்கரையில எம் மகளோட அஸ்தியைக் கரைக்கத்தான் வந்தேன். லேசான நெஞ்சு வலி. அதான் தடுமாறி விழுந்திட்டேன். உயிர் போனாலும் பரவாயில்லைன்னுதான் இருந்தேன். அந்தச் சமயத்தில தான் நீ என்னைக் காப்பாத்தின. என் நிலா சாகலம்மா. உன் உருவத்தில அவ திரும்பவும் எனக்குக் கிடைச்சுட்டாம்மா!"

"ஸார்...?"

"மறுக்காதேம்மா! என் ஜமீன்ல உன்னை ராணி மாதிரி வெச்சு நான் காப்பாத்துறேன். உனக்கேத்த ராஜகுமாரனைத் தேடி உனக்கு மணம் செய்கிறேன். நீ அநாதை இல்லம்மா. என் மகள். எனக்கு உயிர் பிச்சை கொடுத்த இன்னொரு தாய். உனக்குத் தாயாய், தந்தையாய் நான் இருக்கிறேன். என் குடும்பம் இருக்கிறது. என் ஊர் இருக்கிறது. வாம்மா!" - உணர்ச்சிப் பெருக்கில் அவர் பேச வசந்தநிலாவிற்குத் தலை சுற்றியது.

பேச்சு எழாமல் தடுமாறினாள். ஏதோ கடலில் தத்தளிக்கிறார் எனக் காப்பாற்றினோம். அதற்காக அவர் வீட்டிற்கே போக முடியுமா? அதுவும் தன்னை அநாதை என்று பொய் சொன்னோமே! அது பெரிய தப்பாயிற்றே! பெரியவர் தன்னை மகளாக ஏற்றுக் கொள்கிறேன் என்றவரிடம் பொய் சொன்னது தவறல்லவா! அவளது சிந்தனையைக் கலைத்தது மருத்துவரின் குரல்.

"அடடே! பரவாயில்லையே... பெரிய ரௌடியிசம் பண்ணி பெரியவரை எழுந்து உட்கார வைத்து விட்டாயே. வெரிகுட்!" - என்ற பாராட்டுதலோடு உள்ளே நுழைந்தார் சுகுமார்.



சங்கோஜமாய் எழுந்து நின்றாள் வசந்தநிலா. "ஸாரி டாக்டர். நேற்று கொஞ்சம் மரியாதைக் குறைவாய் நடந்து கொண்டேன். தலையிலும் உடம்பிலும் இரத்தத்தைக் கண்டவுடன் கொஞ்சம் பயந்துட்டேன்."

"பரவாயில்லம்மா. நான் செய்ததும் தப்புதான். நேத்து ரெண்டு ஆக்ஸிடெண்ட் கேஸ் பார்த்துக் கொஞ்சம் டென்ஷனா இருந்திட்டேன்."

"டாக்டர்! உங்க தொழில்ல பொறுமையும் கனிவான பேச்சும்தான் முக்கியம். நீங்க பேசுற விதத்திலேயே பேஷண்ட் பாதி குணமாகிடுவாங்க. ஸோ! எந்த டென்ஷனா இருந்தாலும் டியூட்டி ஹவர்ஸ்ல அதை ஒதுக்கி வெச்சிடுங்க"

"ம்! ரெம்ப கெட்டிக்காரிதான். டாக்டருக்கே டியூஷன் எடுக்கிறாளே...!" என்றவாறு தலைமை மருத்துவரும் உள்ளே நுழைந்தார்.

"வாங்க டாக்டர்! குட் மார்னிங்."

"குட் மார்னிங்மா. என்ன சொல்றார் ஸார்?" என்றவாறு மகாதேவனை நெருங்கிப் பரிசோதிக்க ஆரம்பித்தார்.

"ஸார்! இவர் பேர் மகாதேவன். ஊர் வட்டப் பாறையாம்!" வசந்தநிலா சொல்ல வியந்தார் மருத்துவர்.

"ஈஸிட்! வாட் எ சர்ப்ரைஸ். மிஸ்டர் மகாதேவன் நீங்க ஜமீனா?"

"யெஸ் டாக்டர். உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்ன ஸார் நீங்க! உங்க அத்தைதான் எங்க சித்தப்பா வொய்ஃப். உங்க ஃபேமிலியைப் பற்றி சித்தி ரொம்ப சொல்லியிருக்காங்க. பட்! நேரில பார்த்ததில்ல. எனிவே உங்களை மீட் பண்ணினதுல ரொம்ப சந்தோஷம். நான்தான் இந்த ஹாஸ்பிடலோட சீஃப் டாக்டர். என் பேர் மகேந்திரன்."

"ஓ! நைஸ் மீட்டிங் டாக்டர். எனக்குப் பெரிசா ஒண்ணும் அடி இல்லையே! நான் வீட்டுக்குப் போலாமில்ல...!"

"ஓ... ஷ்யூர். பட் காயம் ஆறுற வரைக்கும் ரெஸ்ட் எடுக்கணும். வீட்டுக்குத் தகவல் சொல்லிட்டீங்களா?"

"இன்னும் இல்லை ஸார். என் போன் கடல்ல விழுந்திடுச்சின்னு நினைக்கிறேன். அதான்...!"

"நோ ப்ராப்ளம்! இந்தாங்க என் செல்லில கூப்பிட்டுச் சொல்லுங்க!" - என போனை நீட்டினார் மகேந்திரன்.

மகாதேவன் நன்றி சொல்லி போனை வாங்கித் தன் வீட்டினரைத் தொடர்பு கொள்ள, வசந்தநிலா மருத்துவரை நெருங்கினாள்.

"டாக்டர்! பெரியவர் உங்க ஃபேமிலி ரிலேஷனாகவும் இருக்கார். நினைவும் திரும்பிட்டார். இனி நான் இங்கே இருக்க வேண்டாமில்ல... அவங்க ஃபேமிலில உள்ளவங்க வந்ததும் ஃபீஸ் கட்டிடுவாங்க. நான் போகலாமா?" என்றாள் மெதுவாய்.

"என்னம்மா நீ? ஜான்ஸி ராணி மாதிரி சண்டை போட்டுப் போராடி இவரைக் காப்பாத்தியிருக்க. இவர்



குடும்பத்தார் உனக்கு நன்றி சொல்லத் தேடுவாங்களே.... இப்பவே போகணுமா? கொஞ்சம் வெயிட் பண்ணும்மா."

"இல்லை டாக்டர்! நான் யாரோட நன்றியையும் எதிர்பார்த்து இவரைக் காப்பாத்தலை. அதோட நான் வீட்டுக்குப் போகணும். அம்மா வேற தேடிட்டு இருப்பாங்க...!" சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

மகாதேவன் போனைக் காதிலிருந்து இறக்கி விட்டு அவளை நிமிர்ந்து பார்த்தார். "என்னம்மா சொன்னாய்? அம்மா தேடுவார்களா? உனக்கு அம்மா இருக்காங்களா?" என்றார் வியப்பாய்.

என்ன சொல்லித் தப்பிப்பது? என அவஸ்தையாய் நெளிந்தபோது பார்கவியும் அவள் பின்னேயே அமராவதியும் ஓட்டமாய் அறைக்குள் நுழைந்தனர்.

"வசந்தி! நல்லவேளை நீ இங்கதான் இருக்கியா? கிளம்பிப் போயிருப்பியோன்னு நினைச்சுப் பயந்து போயிட்டோம். உன் அண்ணனும் அந்தக் குணாவும் உன்னைத் தேடி ஆத்தூருக்குக் கிளம்பிப் போயிருக்காங்க. அதை உன்கிட்டச் சொல்லி உன்னைப் போக விடக்கூடாதுன்னுதான் அவங்க அப்படிப் போனதும் நாங்க கிளம்பி ஓடி வந்தோம்!" மூச்சு வாங்கப் பேசினாள் பார்கவி.

மகளைப் பார்த்த நிம்மதியில் பேச்சு வராமல் நின்ற அமராவதியை நெருங்கினாள் வசந்தநிலா. "ஸார்! இவங்கதான் என் அம்மா. பெயர் அமராவதி!" என அறிமுகம் செய்தாள்.

# 7

மைவிழி வாசல் திறந்ததிலே - ஒரு
மன்னவன் நுழைந்ததென்ன!
அவன் வருகையினால் இந்த
இதழ்களின் மீது புன்னகை விளைவதென்ன!

**பா**ர்கவியும் அமராவதியும் மாறி மாறி சொன்ன தகவல்களைப் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிருந்த மகாதேவன் வருத்தமாய்க் கண்களை மூடிக் கொண்டார். தன்னைக் காப்பாற்றியதால் தானே இந்தப் பெண்ணுக்கு ஒரே நாளில் இத்தனை அவப்பெயர் என எண்ணுகையில் மனம் நொந்தது.

"மன்னிச்சிடும்மா! இந்த நிலைக்கு நான்தானே காரணம். என்னால்தானே இன்று உன்னை எல்லோரும் தூற்றுகிறார்கள்."

வசந்தநிலா பதறினாள். "ஸார்! நீங்க ஒண்ணும் மனம் கலங்க வேண்டாம். உண்மையைச் சொன்னா நீங்கதான் என் உயிரை நேற்றுப் போக விடாம காப்பாத்தியிருக்கீங்க!" என்றாள் மெதுவாய்.

"என்னம்மா சொல்றே?"

"ஆமா ஸார். நேற்று நான் கடற்கரைக்கு வந்ததே கடல்ல விழுந்து தற்கொலை பண்ணிக்கத்தான்!" என்றாள் தலையைக் குனிந்தவாறே.

"என்ன?" மற்றவர்களோடு பெற்றவளும் அதிர, வசந்தநிலா கண்ணீரோடு தாயை நிமிர்ந்து பார்த்தாள்.



"அம்மா! நான் என்னம்மா பண்ணுவேன்? உயிரே போனாலும் குணாவோட என்னால வாழ முடியாதும்மா. குணாவை கட்டலன்னா அண்ணன் உங்களை இம்சிப்பான். அதை என்னால் எத்தனை நாள் தாங்கிக் கொள்ள முடியும். அதனாலதான் பேசாம செத்துப் போயிடலாம்னு...!"

"என்ன பேச்சும்மா இது? இந்த அம்மாவை விட்டுட்டுப் போக எப்படியம்மா மனசு வந்தது உனக்கு!" கண் கலங்கக் கேட்டாள் அமராவதி.

"எனக்கு வேற வழியே தெரியலம்மா...!"

"நான் ஒரு வழி சொன்னா ஏத்துப்பீங்களா?" என்ற மகாதேவனை மூவருமே வியந்து நோக்கினர்.

"என் குடும்பம் ஜமீன் குடும்பம்மா. ஆனா எனக்கு வாரிசு கிடையாது. ஒரே ஒரு பெண். அதையும் இப்பத்தான் பறிகொடுத்திட்டு தனி மரமா நிற்கிறேன். வாழ்க்கையே வெறுத்துப் போன எனக்கு உங்க மகள்தான் மறுஜென்மம் தந்திருக்கா. இந்த ஜென்மத்தை அவளுக்காக வாழப் போறேன்."

"ஐயா! நீங்க என்ன சொல்றீங்க?"

"ஆமாம்மா! உங்க பொண்ணை என் மகளா நான் பார்த்துக்கிறேன். அவளை எனக்குத் தந்திடுங்கம்மா...!" என இருகரங்களையும் நீட்டி யாசித்தார்.

"ஸார்!"

"ஆமாம்மா! நான் இன்னிக்கே ஊருக்குக் கிளம்பிடுவேன். என்கூட உங்க பெண்ணை அனுப்பி

வையுங்க. வட்டப்பாறை ஜமீனுக்குள்ள என்னை மீறி ஒரு ஈ, காக்கா கூட நுழைய முடியாது. அதனால உங்க பையனையோ அந்த ரௌடிப் பயலையோ நினைச்சு நீங்க பயப்பட வேண்டாம்."

வசந்தநிலா தாயைப் பார்த்தாள். அமராவதியின் கண்களில் நிம்மதி தோன்றியது. மகாதேவன் உற்சாகமாய்ச் சொன்னார்.

"என் வீட்ல நாலைஞ்சு பெண்கள் வீட்டோட தங்கியிருந்து வேலை செய்யுறாங்க. அதனால உங்க பொண்ணைப் பற்றி நீங்க எந்தக் கவலையும் பட வேண்டாம். என் தங்கை மகனும் என் தம்பி மகனுமாய் இரண்டு சிங்கக் குட்டிகள் என்னுடன் இருக்கிறது. உங்க பெண்ணை நாங்கள் பாதுகாத்துக் கொள்கிறோம். என்னை நம்பி என்னுடன் அனுப்புங்கள். என்ன சொல்றீங்க?"

அமராவதி மகளை நோக்கினாள். "போறியாம்மா?"

வசந்தநிலாவால் நம்ப முடியவில்லை. "அம்மா...!"

"ஆமாம்மா! இப்போதைக்கு நமக்கு இருக்கிற ஒரே வழி இதுதான். நானும் ரொம்ப நேரம் இங்கே இருக்க முடியாது. உன் அண்ணன் வர்றதுக்குள்ள வீட்டுக்குப் போயிடணும். உனக்கு அங்கே போக சம்மதமாம்மா?"

"அம்மா! உங்களை விட்டுட்டு நான் எப்படி?"

மகாதேவன் குறுக்கிட்டார். "பயப்படாதேம்மா! உன் அம்மா கொஞ்ச நாள் இங்கே இருக்கட்டும். உன் அண்ணனின் கோபம் குறைந்தபின் உன் அம்மாவையும் நம் வீட்டிற்கே அழைத்துக் கொள்வோம். உனக்கேற்ற ஒரு



நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து உனக்குத் திருமணம் செய்து என்னுடன் வைத்துக் கொள்கிறேன். கடைசி வரை என் மகளாக இருந்து விடம்மா!"

"இது நல்ல ஐடியா வசந்தி. உனக்குக் கல்யாணம் ஆன பின்னால உன் அண்ணனால ஒண்ணும் பண்ண முடியாது. தயங்காதே வசந்தி. நீ தயங்குகிற ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு ஆபத்துதான்!" என்றாள் பார்கவி.

"ஐயா! உங்களை என் சகோதரனா நினைச்சு எம் பொண்ணை அனுப்புறேன். பத்திரமா பார்த்துக்குங்க. முடிஞ்சா இவ வீட்டுக்குக் கொஞ்சம் போன் பண்ணிப் பேசச் சொல்லுங்க! எம்பொண்ணு குரலை மட்டுமாவது நான் கேட்டுக்கிறேன். எம் பொண்ணைக் காப்பாத்த வேறு வழியில்லாமத்தான் இந்த முடிவை எடுத்திருக்கேன்."

"பயப்படாதீங்கம்மா! இவ இனிமே எம் பொண்ணு. என் உயிரா பாதுகாத்துப்பேன். நிலா! நீ என்னம்மா சொல்றே?"

"நான்... நான் என்ன சொல்றது? கட்டுறதுக்கு மாத்துத் துணி கூட இல்லாம... எப்படி உங்க வீட்டுக்கு...?"

"எம்பொண்ணோட துணிமணி, நகைநட்டு எதையுமே நாங்க தொடலைம்மா. அவ அறையிலே எல்லாம் அப்படியே இருக்குது. அதை யூஸ் பண்ணிக்கோம்மா. வேற எதைப் பத்தியும் யோசிக்க வேண்டாம். என்னைக் காப்பாத்தின உன்னைக் காப்பாத்துறது என் கடமைம்மா!"

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க ஸார். நான் வர்றேன். ஆனா நான் வர்றது உங்க குடும்பத்தில யாருக்காவது சங்கடமா இருந்தா...?"

"யாருக்கும் ஒரு சங்கடமும் இருக்காதும்மா. சத்யா என் செல்லப்பிள்ளை என்னை எதிர்த்து ஒரு வார்த்தை பேச மாட்டான். அதோட அவன் குணமும் தங்கம். அப்புறம் வாசு! அவன் என்னுடைய வளர்ப்புப் பிள்ளை. என் எதிரில் நின்று ஒரு வார்த்தைகூட பேசமாட்டான். என் பணியாட்கள் அனைவரும் வழிவழியாய் வந்த குடும்பத்தவர்கள். அன்பும் விசுவாசமும் நிறைந்தவர்கள். எல்லோரும் உன்னிடம் அன்பாகவும் மரியாதையாகவும் பழகுவார்கள்."

பார்கவி சிரித்தாள். "வசந்தி! துன்பத்திலும் ஒரு இன்பம் என்பார்களே... அது இதுதான் போலும். இத்தனை நாள் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் போனாலும் இனி நீ ஜமீன் வாழ்க்கை வாழப் போகிறாய். சந்தோஷமா இருக்கு."

"ஆனா அங்கே என் அம்மா இருக்க மாட்டாங்களே!" வசந்தநிலாவின் கண்கள் கலங்கியது. பரிவாய் மகளை அணைத்துக் கொண்டாள் அமராவதி.

"தைரியமாப் போம்மா. அம்மாகூட போன்ல பேசு. இங்கே இருந்தா அவனுங்களோட நம்மால போராட முடியாதும்மா. பாவம் இவர்! வளர்ந்த பிள்ளையைப் பறி கொடுத்திருக்கிறார். அவருக்கு மகளா இருந்து கொஞ்சம் நிம்மதியைக் கொடு. அடுத்தவருக்காக வாழும்போதுதான் நம்ம வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும். இதையும் ஒரு சேவையா நினைச்சுக்க. மனசு வருந்தாதேம்மா!"

"சரிம்மா! நான் போயிட்டு வர்றேன். நீங்க பத்திரமா இருங்க!" - என்றாள் கண்களைத் துடைத்துக் கொண்டே.

"அமராவதிம்மா! நீங்க கிளம்புங்க. நான் மத்தியானமா வர்றேன். சேர்ந்து போக வேண்டாம். சீக்கிரம் கிளம்புங்க!" அவசரப்படுத்தினாள் பார்கவி.



"ம். இதோ கிளம்பிட்டேன்!" என்றவாறு மகளைக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். தனது புடவைத் தலைப்பிலிருந்த முடிச்சை அவிழ்த்து நைந்து போயிருந்த ரூபாய் நோட்டை எடுத்து நீவி மகளிடம் தந்தாள்.

"இதுல ஒரு முன்னூறு ரூபா இருக்கும்மா. செலவுக்கு வெச்சிக்க...!" என வசந்தநிலாவின் கைகளில் திணித்தாள்.

"ஐயா! வர்றேனுங்க. எம்பொண்ணை காப்பாத் தினதுக்கு ரொம்ப நன்றி. பத்திரமா பார்த்துக்குங்க."

"நான் பார்த்துக்கிறேன்ம்மா. தைரியமா போயிட்டு வாங்க. நாளைக்குப் போன் பண்றோம்!" - மகாதேவன் சொன்னதும் மகளைப் பார்த்து தலை அசைத்துவிட்டுப் புறப்பட்டாள் அமராவதி. மனம் கனக்கத் தாயின் பின்னே வந்தாள் வசந்தநிலா. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. தாயின் பிம்பம் கண்ணை விட்டு மறையும் வரை வாசலில் நின்றாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ. மிஸ்டர் மகாதேவன் இந்த அறையில்தானே இருக்கிறார்?" என்ற குரலில் கலைந்தாள் வசந்தநிலா. கேட்டவனை நிமிர்ந்து பார்த்தாள். சரியாக சவரம் செய்யாத முகத்துடன் தூக்கம் தொலைந்த சிவப்பேறிய கண்களுடன் இருந்தபோதும் கம்பீரமாய்க் களையாய் நின்றான். முகத்தில் படிப்புக் களை தெரிய, கண்களில் சோகம் இழையோடியது.

"நீங்க... நீங்க யார்?" தயக்கமாய்க் கேட்டாள்.

"நான் சத்யன்!" சுருக்கமாய் வந்தது பதில்.

"சத்யன் என்றால்..."

"சத்யன் என்றால் சத்யா. ப்ளீஸ்... வழியை விடுறீங்களா?"

'சத்யா... ஓ! பெரியவரின் செல்லப்பிள்ளையாக்கும். அதற்கு ஏன் முகம் இப்படிக் கடுப்படிக்கிறது!' - மனதுக்குள் எண்ணியவாறு சற்று ஒதுங்கி நின்றாள். அவளை ஏறெடுத்தும் பாராமல் அறைக்குள் நுழைந்தவன் மகாதேவனைக் கண்டு பதறிப் போனான்.

"மாமா! மாமா என்னாச்சு? அய்யோ! எவ்ளோ பெரிய காயம்?" பதட்டமாய் அவரருகே சென்று காயத்தைத் தொட்டான்.

"வந்திட்டியா சத்யா! என்னைக் காணோம்னு ரொம்ப பயந்திட்டியா?"

"அதிருக்கட்டும் மாமா! எப்படி இந்தக் காயம்? என்னாச்சு... என்ன நடந்தது?"

"எல்லாம் கார்ல போகும்போது சொல்றேம்ப்பா. நீ போய் டாக்டரைப் பார்த்து பில் பே பண்ணிட்டு வா. நாம வீட்டுக்குப் போகலாம்."

"வீட்டுக்கா? என்ன மாமா விளையாடுறீங்களா? இவ்ளோ அடி பட்டிருக்கு. எப்படி உடனே வீட்டுக்குப் போக முடியும். குணமான பின்னாலே போகலாம்."

"இல்லை சத்யா! எனக்கு ஒண்ணும் பெரிய காயம் இல்லை. பாறையிலே மோதினதுல லேசான காயம்தான். கட்டுதான் பெரிசாப் போட்டிருக்காங்க. நீ பயப்படாதே!"



"பாறையிலே மோதினீங்களா? எப்... எப்படி மாமா?"

மகாதேவன் பெருமூச்சு விட்டார். "நேற்று நிலாவோட அஸ்தியைக் கரைக்கப் போனேன்ப்பா... அப்போ!" எனச் சுருக்கமாய் நடந்ததை விவரித்தார்.

"இதற்குத்தான் தனியே போக வேண்டாம் என்றேன். கேட்டீர்களா? இப்போ உங்களுக்கு ஏதாவது ஒன்று என்றால்...!" பேச்சு தடைபட உதடு கடித்து அவன் தன்னைக் கட்டுப்படுத்துவது தெரிந்தது.

அவனது கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டு பதறினாள் வசந்தநிலா. சட்டென, "அதெல்லாம் ஒன்றும் ஆகாது சத்யா சார். உங்கள் மாமாவிற்கு ஆயுள் கெட்டி. உங்கள் பேரன் பேத்திகளையெல்லாம் கொஞ்சாமல் போக மாட்டார்!" - என்றாள் கேலியாக.

கலங்கிய கண்களோடு நிமிர்ந்தான் சத்யா. சட்டென பார்வையைத் திருப்பிக் கொண்டு மகாதேவனைப் பார்த்து "யார் இவள்?" எனக் கேட்டான்.

அவர் அதைக் கவனியாதவராய், "ஏம்மா! எனக்கு அவ்வளவு ஆசையெல்லாம் கிடையாதும்மா. சத்யாவின் பிள்ளைகளைப் பார்த்தாலே போதும். எனக்குப் பரம திருப்தி வந்துவிடும்!" என்றார் சற்றே வேதனையாய்.

"இல்லை ஸார்! எங்க ஊர்ல சொல்வாங்க. ரொம்ப புண்ணியம் செய்தவங்க... நல்ல மனசு உள்ளவங்க எல்லாம் மூன்றாவது தலைமுறை, நாலாவது தலைமுறை எல்லாம் பார்த்திட்டுத்தான் கண்ணை மூடுவாங்களாம்."

"அப்படியா! அப்போ சத்யாவோட பிள்ளைகள் என்னை என்னன்னு கூப்பிடும்?" - ஆர்வமாய்க் கேட்டவரை அதட்டினான் சத்யா.

"மாமா! தேவையில்லாத பேச்சு எதுக்கு? இது யார்?" என்றான் கடுப்பாய்.

"அடடே! உன்கிட்ட சொல்லலியே. இந்தப் பொண்ணுதாம்ப்பா என்னைக் காப்பாத்தி இந்த ஹாஸ்பிடலுக்குக் கொண்டு வந்து சேர்த்து கூடவே இருந்து பார்த்துக்கிட்டா. சத்யா! இவ பேர் என்ன தெரியுமா?"

"பேர் எதுவா இருந்தா என்ன மாமா? உங்களைக் காப்பாத்தினதுக்காக இவங்களுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் நன்றி சொல்லலாம். என் மாமாவைப் பத்திரமா பாதுகாத்து எங்கிட்ட தந்ததுக்கு ரொம்ப நன்றி!" என்றான் அவளிடம்.

லேசாய் சிரித்தவாறே, "இதுல என்னங்க இருக்கு...!" என அவள் பதில் சொல்லும் முன் மகாதேவனிடம் திரும்பினான்.

"மாமா! நான் போய் டாக்டரைப் பார்த்திட்டு வர்றேன்."

"சரிப்பா! தேவையான மருந்து மாத்திரையெல்லாம் வாங்கிட்டு வந்திடு. நாம உடனே வீட்டுக்குக் கிளம்பணும்."

"என்ன மாமா! அவசரம் உங்களுக்கு?"

"அவசரம்தாம்ப்பா. இப்பவே கிளம்பணும். எல்லா விஷயமும் உன்கிட்ட பொறுமையா சொல்றேன். முதல்ல வீட்டுக்குப் போலாம்."



"மாமா! உங்களைக் காணோம்னு தேடி கடைசியா போலீஸ்ல கம்ப்ளெய்ன்ட் கொடுத்திருக்கோம். அவங்ககிட்ட போய் நீங்க கிடைச்சதை சொல்லிட்டு கம்ப்ளெயின்ட்டை வாபஸ் வாங்கணும். அப்புறம்..."

"இல்லை சத்யா! எங்களால இப்போ எங்கேயும் அலைய முடியாது. நாங்க இப்போ நம்ம வீட்டுக்குப் போயாகணும்."

"நாங்களா? யாரெல்லாம் மாமா?" வியந்தான் சத்யா.

"சத்யா! சொல்ல மறந்திட்டேனே... இனிமே இவ நம்மகூடத்தான் நம்ம வீட்ல இருப்பா. நம்மகூட கூட்டிட்டுப் போகப் போறோம்!" என்றார்.

வசந்தநிலாவை ஏறிட்டான் சத்யா. அவளது கிழிந்த புடவையும் கலைந்த தலையும் சற்று முன்னரே அழுத விழிகளும் அவனுக்கு என்ன உணர்த்தியதோ அமைதியாய் மகாதேவனைப் பார்த்தான்.

"சரி மாமா!"

ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள் வசந்தநிலா. ஏன் எதற்காக என்று ஒரு வார்த்தைகூட கேட்கவில்லையே...!

"சத்யா! நீ இங்குள்ள வேலையெல்லாம் முடிச்சிட்டு பொறுமையா வா. முதல்ல மணிகண்டன்கூட நாங்க கிளம்புறோம். அவனைச் சீக்கிரம் வரச் சொல்லு. சரியா?"

"சரிங்க மாமா!" என்றவாறு தனது செல்லை எடுத்து மணிகண்டனைத் தொடர்பு கொண்டான். சற்று நேரத்தில் மணிகண்டன் காரோடு வந்துவிட,

"மணி! பக்கத்தில ஏதாவது ஜவுளிக்கடை இருந்தா நல்லதா ஒரு புடவை எடுத்திட்டு வா. இளம்பச்சை நிறத்தில் கிடைத்தால் பார்!" எனப் பணத்தை நீட்டினான். அவன் வாங்கிக் கொண்டு நகர, மகாதேவன் அவசரப்பட்டார்.

"என்ன செய்கிறாய் சத்யா? இப்போ எதுக்கு அவனை ஜவுளிக் கடைக்கு அனுப்புகிறாய்?"

"மாமா! முதன்முறையா நம்ம வீட்டுக்கு இந்தப் பொண்ணைக் கூட்டிட்டுப் போகப் போறீங்க. இப்படிக் கிழிஞ்ச புடவையிலா கூட்டிட்டுப் போவீங்க!" - சத்யா சொன்னதும்தான் தனது புடவைத் தலைப்பைப் பார்த்தாள். மகாதேவன் அடிபட்டு இரத்தக் காயத்துடன் கிடந்தபோது அவசரமாய்ப் புடவையைக் கிழித்துக் கட்டுப்போட்டது நினைவு வந்தது.

பற்களால் கடித்துக் கையால் இழுத்துக் கிழித்ததில் நார்நாராய்த் தொங்கிக் கொண்டிருந்தது. திடீரென பார்ப்பவர் யாராக இருந்தாலும் வேறு விதமாகத்தான் யோசிக்க வைக்கும். அவசரமாய்ப் புடவையை இழுத்துச் செருகினாள்.

"அடடா! நான்கூட இதை யோசிக்கவே இல்லையே... என் தலையில் கட்டுப் போட புடவையைக் கிழித்தாளே...! எப்படி மறந்தேன்?"

"பரவாயில்லை மாமா! இப்போ மணி புடவை கொண்டு வந்திடுவான். கட்டிட்டு தலை வாரி அதுக்கப்புறம் கூட்டிட்டுப் போங்க. நான் டாக்டர் கிட்ட பேசி மெடிஸன்ஸ் எல்லாம் வாங்கிட்டு வர்றேன்!" எனத் திரும்பினான்.

ஏதோ நினைவு வந்தவனாக, "மாமா! எல்லாருமே பசியோட இருப்பீங்க. போகும்போது சாப்பிட்டுப் போங்க!"



எனத் தன் பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்து அவரது பாக்கெட்டில் வைத்துவிட்டுப் போனான்.

"ஸார்! புடவை..." என வந்த மணிகண்டனிடம் பார்சலை வாங்கி வசந்தநிலாவிடம் நீட்டினார் மகாதேவன்.

"உள்ளே போய் மாத்திட்டு வாம்மா. போலாம்!"

மௌனமாய் வாங்கிவிட்டு அறையினுள் நுழைந்து கதவைத் தாளிட்டு விட்டு, கவரைப் பிரித்தாள். பட்டுப் போன்ற புடவை வழுக்கியது. இளம்பச்சை நிறத்தில் மிதமான ஜமிக்கி வேலைப்பாடோடு கண்ணைப் பறித்தது. சத்யாவை நினைக்கையில் தன்னையும் மீறி புன்னகைத்தாள் வசந்தநிலா.

## 8

நிலவு தூங்கும் நேரம் - நினைவு
தூங்கிடாது இரவு தூங்கினாலும்
உறவு தூங்கிடாது - இது ஒரு
தொடர்கதை தினம் தினம் வளர்பிறை!

இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் வசந்தநிலா. அது மிகப்பெரிய புகைப்படம். பூஜையறையின் சுவற்றில் பாதி அளவை மறைத்துக் கொண்டு சந்தன மாலையோடு வீற்றிருந்தது. இதமான புன்னகையோடு இருந்த நிலாவின் புகைப்படம் பார்க்க சலிக்கவே இல்லை.

பால்நிற முகத்தில் குழந்தைத்தனமும் தெய்வீகக் களையும் குடிகொண்டிருக்க, போட்டோவிற்காக புன்னகைத்தாளா, அன்றி இயல்பாகவே புன்னகை ததும்பும்

முகமா என கண்டறிய முடியாத அளவிற்கு இயற்கையான அழகு. கருவண்டு விழிகள் பட்டாம்பூச்சி இமைகளோடும் வானவில்லாய் வளைந்த புருவங்களோடும் பார்ப்பவர்களின் மனதை மயக்கியது. அந்த லேசான புன்னகைக்கே பட்டுக் கன்னத்தில் அழகாய்க் குழி விழுந்திருந்தது.

கழுத்தை ஒட்டிய வைர அட்டிகையும் காதில் சற்றுப் பெரிதான கல் ஜிமிக்கியும் தவிர வேறு நகைகள் அணியாமலேயே அற்புதமான அழகாய் ஜொலித்தாள் நிலா. எந்தவித ஒப்பனையும் இன்றி ஒரு பெண் இத்தனை அழகாய் இருக்க முடியுமா என வியந்தாள் வசந்தநிலா.

இத்தனை அழகான பெண்ணைப் பறிகொடுத்து விட்டு தவிப்பது எத்தனை கொடுமை! மகாதேவன் ரொம்பப் பாவம்தான். அவருக்காக மனம் இரங்கியது. நீ ஏன் பெண்ணே இந்தச் சிறு வயதில் மரித்துப் போனாய்? ஜமீனின் ஒற்றை வாரிசு. தங்கமாய் தாங்கும் அப்பா! இந்தப் பணியாட்கள். இந்த அரண்மனை... இந்த அருமையான பசுமையான ஊர் இதையெல்லாம் விட்டுப் போக உனக்கு எப்படி மனம் வந்தது?

வசந்த நிலா தன் மனதிற்குள்ளாக பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தபோது சமையல்கார அம்மாள் வசந்தநிலாவை நெருங்கினார்.

"யம்மோவ்! எவ்ளோ நேரம்தான் இளைய ராணியம்மா படத்தைப் பார்த்திட்டே இருப்பீங்க. பசியோட இருப்பீங்களே! வாங்கம்மா சாப்பிடலாம்."

"சாவித்திரிம்மா! உங்க இளைய ராணி ரொம்ப அழகு இல்ல...!" புகைப்படத்தை விட்டுப் பார்வையை விலக்காமலே கேட்டாள் வசந்தநிலா.



"மெய்தானுங்கம்மா! சுத்துப்பட்டியில எங்க இளைய ராணி அழகுக்கு ஈடு யாருமே கிடையாதும்மா. கொள்ளை அழகையும் மொத்தமாக் கொட்டி படைச்ச சாமி இப்படி பொசுக்குன்னு பறிச்சிடுச்சே!" சாவித்ரியின் கண்கள் கசிந்தன.

வசந்தநிலாவின் மனமும் வருந்தியது. "கஷ்டம்தான். இப்படி ஒரு பொண்ணை இழந்திட்டு ஸார் எவ்வளவு வேதனைப்படுவார்?"

"எங்க ஐயா கழுத்துச் செயினோடயும் விரல்ல மோதிரத்தோடயும் கம்பீரமாய் நடக்கிறப்போ அப்படியே சிங்கம் மாதிரி இருக்கும்மா. சின்னம்மா போனபோது ஐயாவோட கம்பீரமும் போச்சு. ராஜநடையும் போச்சு. உடம்புல பொட்டுத் தங்கம்கூட போடுறதில்ல. எல்லாம் பொட்டியில தூங்குது."

"பெத்தவராச்சே! அவரால எப்படித் தாங்க முடியும்?"

"எங்க சின்னய்யா மட்டும் இல்லைன்னா பெரிய ஐயா இல்லைம்மா. சின்னம்மா பிரேதத்தை எடுக்கும்போதே உசுரை விடப் போனவகள சின்னய்யாதான் அணைச்சு ஆறுதல் சொல்லி கூடவே இருந்து பாதுகாத்து நடமாட வெச்சாக!"

"சின்னய்யான்னா... யாரு வாசுதேவனா?"

"இல்லங்கம்மா...! சத்யா ஐயாதான் சின்னய்யா. சின்னம்மாவைக் கட்டிட்டு இந்த ஜமீனையே ஆளவேண்டிய புள்ளை இப்போ சரியா சாப்பிடாம தூங்காமத் துரும்பா இளைச்சுப் போச்சும்மா!" சாவித்திரி வருத்தமாய்ச் சொல்ல, வசந்த நிலாவின் மனம் வலித்தது.

காரில் வரும்போதே மகாதேவன் அனைத்தையும் சொல்லியிருந்தார். சத்யனைப் பிடிக்காமலா இந்தப் பெண் உயிரை மாய்த்துக் கொண்டாள்? அவனுடைய உயரத்திற்கும் கம்பீரத்திற்கும் இவள் வெகு பொருத்த மாய்த்தான் இருந்திருப்பாள். பிறகேன் அவனைப் பிடிக்காமல் போனது. அவனை விடவும் அழகான இன்னொருவனைப் பிடித்துப் போயிருக்குமோ?

"சாவித்திரிம்மா! சத்யாவுக்கு நிலான்னா ரொம்பப் பிடிக்குமோ?" கொஞ்சம் தயங்கித்தான் கேட்டாள்.

"சின்னம்மாவை யாருக்கும் பிடிக்காமப் போகுமா? அம்மா மேல ரொம்பப் பிரியமா இருப்பாக. சினிமாவில காட்டுற மாதிரி ரொம்ப இழையுறதில்ல. ஆனா அம்மாவைக் கேட்காம எந்த முடிவையும் எடுக்க மாட்டாங்க ரெண்டு ஐயாவும்...!"

"அப்போ... கல்யாணத்தைப் பத்தியும் கேட்டுத்தானே முடிவு பண்ணியிருப்பாங்க. பிறகேன் இப்படி?"

"யம்மாவ்... சத்தமா பேசாதீங்க...!" எச்சரித்தாள் சாவித்திரி.

"ஏன்? எதுக்கு?" புரியாமல் கேட்டாள் வசந்தநிலா.

"வாசுய்யா காதுல விழுந்தா போச்சு. வீட்ல யாரும் அதைப் பத்தி பேசக் கூடாதாம். பெரிய ஐயா மனசு சங்கடப்படும்னு அப்படிச் சொல்லியிருக்காக...!"

"ஓஹோ! சரி, இங்க நாமதானே இருக்கோம். சொல்லுங்க சாவித்திரிம்மா. நிலாவோட சம்மதம் கேட்டுத்தானே செய்திருப்பாங்க."



அறை வாயிலை பயமாய் ஒரு முறை எட்டிப் பார்த்துவிட்டு, "ஆமாம்மா! சின்னம்மாவுக்கும் சம்மதம்தான். கல்யாணப் புடவை எடுக்கும்போதுகூட எவ்வளவு பூரிப்பு அம்மா முகத்துல...!" என்றாள் ரகசியமாய்.

"பின்னே! பின்னே ஏன் அப்படி தற்கொலை பண்ணினா?"

"சின்னம்மா ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டாங்கம்மா. சத்யா ஐயாவைப் புடிக்கலைன்னு கண்ணு இல்லாதவ கூட சொல்ல மாட்டாளே!"

"அப்புறம்... எப்படி?"

"காரை ஓட்டத் தெரியாமத்தான் போய் விழுந்திட் டாங்கன்னு எனக்குத் தோணுதும்மா. மத்தபடி எனக்கு ஒண்ணும் தெரியலை. சரி... வாங்கம்மா. சாப்பாடு ஆறிப் போகுது!" சட்டென நழுவ முயன்றாள் சாவித்திரி.

வசந்த நிலாவின் மண்டை குடைய ஆரம்பித்தது. நிலாவின் மரணத்தில் ஏதோ மறைக்கப்படுகிறது. என்ன அது? அதை ஏன் நம்மிடம் யாரும் சொல்ல மறுக்கிறார்கள் என நினைத்த கணமே மனம் சோர்ந்தது.

நான் யார் இவர்களுக்கு? அகதி போல் அடைக்கலம் தேடி வந்தவளுக்கு இவ்வளவு மரியாதை கிடைப்பதே அதிகம். அதிலும் பெரியவர் தன் பணியாட்களிடமும் தம்பி மகனிடமும் தன் மகள் என்றே அறிமுகம் செய்து வைத்தார். அதோடு தன் மகளின் அறையைத் தனக்குத் தந்திருக்கிறார். இதுவே தனக்குப் பெரிதுதான்.

இந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதை விட்டுவிட்டு வம்புப் பேச்சில் வாயை விடக்கூடாது. கூடுமான வரை தன்னால் முடிந்த வேலைகளைச் செய்து கொண்டு அமைதியாய் இருப்பது நலம். மீண்டும் நிலாவின் புகைப்படத்தை ஏறிட்டாள்.

"நிலா! நான் உன் வீட்டில் இருப்பது யாருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ உன் அப்பாவிற்காகத்தான் வந்தேன். உன் விஷயத்தில் மூக்கை நுழைத்ததற்கு என்னை மன்னித்துவிடு!" என்றவாறு அறையை விட்டு வெளியேறினாள்.

எதிரே செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டு வந்த வாசுவின் முகம் கடுத்தது. "காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாதுன்ற மாதிரி என் பெரியப்பாவுக்கு இது தேவையா? நாம சொன்னா கேட்பாரா? அவன் சொன்னா அப்படியே கேட்பாரு. அப்படி என்னதான் வசியம் பண்ணி வெச்சிருக்கானோ... பெற்ற ஒரே மகளை பலியிடக் காரணமானவன் மேலே ஒரு துளியாவது கோபம் வருதா? தொட்டதற்கெல்லாம் அவன்தான் வேணுமாம். ம்... இன்னும் வரல்ல!" என்றவாறு கடந்து போனான்.

வசந்தநிலா அப்படியே நின்றாள். 'இந்த வாசுவுக்கு ஏன் என்னைப் பிடிக்கவில்லை. பெரியவர் அறிமுகப் படுத்தும் போதுகூட இவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்ததே! ஒரு சிலரின் சுபாவம் போலும். சும்மா இருக்கும் இவனுக்கே இவ்வளவு வெறுப்பு வருகிறதென்றால்...

நிலாவிற்காக நிச்சயிக்கப்பட்டவன், நிலாவின் உதாசீனத்தால், மரணத்தால் அதிகம் நொந்து



போயிருப்பவன் சத்யன். இங்கு நிலாவின் இடத்தில் தன்னைக் கண்டால் எப்படி வெறுப்பானோ! அம்மா! வெயிலுக்குப் பயந்து அடுப்பில் விழுந்து விட்டேனா? குணாவிடமிருந்து தப்புவதற்கு வேறு ஏதேனும் முயற்சி செய்திருக்கலாமோ!'

"நிலாம்மா! என்ன யோசனை?" எனக் கேட்ட குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"ஸார்! ஒ... ஒன்னுமில்லை ஸார்!"

"இல்ல... ஏதோ இருக்கு." – அவள் கண்களைப் பார்த்து கேட்டார் மகாதேவன்.

"இல்லை... சும்மாதான். வீட்டு ஞாபகம் வந்திடுச்சு!" – சமாளித்தாள். அவர் முகம் சட்டென வாடியது.

"அப்போ! இந்த வீடு உனக்குப் பிடிக்கலையாம்மா?"

"ஐயோ! அப்படி இல்லை ஸார். ரொம்பப் பிடிச்சிருக்கு ஸார்."

"இதோ பாரும்மா. இங்கே உனக்கு எல்லா உரிமையும் இருக்கு. இதை உன் வீடா நினைச்சுக்க. அப்பத்தான் உன்னால இயல்பா இருக்க முடியும். நான் உன்னை என் மகளாத்தான் நினைக்கிறேன். உன் மனசுல அப்படி எந்த எண்ணமும் வரலையாம்மா?"

"ஸார்! புது இடம்ங்கிறதால கொஞ்சம் தயக்கமா இருக்குது. மத்தபடி இந்த ஊர் இந்த வீடு உங்க அன்பு எல்லாமே எனக்குப் பிடிச்சிருக்கு. அதுவும் நீங்க தந்த உரிமை ரொம்ப அதிகம் ஸார்!"

"அப்பான்னு கூப்பிடேம்மா! அப்படிக் கூப்பிட்டா எம் மகளே நேர்ல வந்த மாதிரி இருக்கும்."

"ஸார்... நான் உங்களை...!"

"பரவாயில்லைம்மா... உனக்கு எப்பத் தோணுதோ அப்போ கூப்பிடும்மா. இப்போ வாம்மா... சாப்பிடலாம். நானும் சாப்பிட்டு மாத்திரை போடணும்."

"வாங்க ஸார்!" - அவருடன் நடந்து சாப்பாடு அறைக்குள் நுழைந்தாள். அகலமாய், நீளமாய் அமைந்திருந்த பெரிய சாப்பாடு மேஜை மீது விதவிதமான பதார்த்தங்களுடன் சாப்பாடு. அமைதியாய் அமர்ந்து சாப்பிட்டாள்.

இந்த வீட்டுச் சாப்பாட்டை எந்த உரிமையில் நான் சாப்பிடுகிறேன்? மனம் குத்தியது. ஏதேனும் வேலை செய்தால் பரவாயில்லை. உழைக்கிறோம், அதற்கு ஈடாக சாப்பிடுகிறோம் என்ற நிம்மதியாவது கிடைக்கும்.

"ஸார்! நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சிக்க மாட்டீங்களே?"

"தெரியும். என்ன? ஏதாவது வேலை தாருங்கள் என்றுதானே கேட்கப் போகிறாய்!" மகாதேவன் இயல்பாய்க் கூற வியந்தாள் வசந்தநிலா.

"ஸார்! ரியல்லி கிரேட் நீங்க. கரெக்டா சொல்லிட்டீங்களே!"

"இது என்ன பிரமாதம். உன் மனதில் என்ன ஓடுகிறது என்று தெரிகிறது. சரி, இப்போ வேலைக்கு என்ன அவசரம்?"



"இல்லை ஸார். சாப்பிடுற சாப்பாட்டுக்கு ஏதாவது உழைக்க வேண்டாமா? அதோடு இப்போ நான் இருக்கிற மனநிலையில ஏதாவது வேலையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டால் நல்லாயிருக்கும்னு நினைக்கிறேன்."

"ஓ.கே. எனக்கும் வீட்டு நிர்வாகத்தைக் கவனிக்க நம்பிக்கையான ஆள் தேவைதான். அந்தப் பொறுப்பை இனி நீயே எடுத்துக்கம்மா."

"அப்போ நான்.... நான் வேணும்னா சமையல் காரங்களோட சேர்ந்து சமையல் வேலையைப் பார்க்கட்டுமா?" என்ற கோபமான குரலில் இருவருமே திரும்பினர்.

கண்களில் அனல் பறக்க வாசுதேவன் நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் தோன்றிய குரோதம் வசந்தநிலாவை அச்சுறுத்தியது.

"வாசு! என்ன பேசுகிறாய் நீ?" குரலை உயர்த்தினார் மகாதேவன்.

"பின்ன என்ன பெரியப்பா? கம்பெனி கணக்கு வெளிவேலை எல்லாம் சத்யா பார்த்துக்கிறான். வீட்டு நிர்வாகத்தையும் இவகிட்ட கொடுத்திட்டா நான் என்ன பண்றது?"

"ஏம்ப்பா! இதுக்கு முன்னால வீட்டு நிர்வாகத்தை நிலாதானே பார்த்துக்கிட்டா. அதைத்தான் இவளிடம் ஒப்படைக்கிறேன். நீ எப்போதும் போல் தோப்பு கணக்கு வழக்கையும் தொழிலாளர்கள் சம்பளக் கணக்கையும் பார்க்க வேண்டியதுதான்!" என்றவாறே கைகழுவினார்.

அவர் கையைத் துடைக்க டவலை எடுத்து நீட்டியவாறே, "நான்தான் பெரியப்பா ஒரு பத்து நாளா வீட்டு நிர்வாகத்தை கவனிச்சிட்டு இருக்கேன். இவ யாரு? விருந்தாளிதானே! வேளாவேளைக்கு நல்லா சாப்பிட்டுட்டு வெளியே எங்கேயும் சுத்திப் பார்த்திட்டு நாலு நாள்ல ஊருக்குப் போறவகிட்ட ஏன் நம்ம வீட்டுப் பொறுப்பை ஒப்படைக்கணும்?" என்றான்.

"அவ நாலு நாள்ல போறதா நான் சொல்லவே இல்லையே!"

"பின்னே! கூட ஒரு பத்து நாள் இருப்பாளா? இருந்துட்டுப் போகட்டும்."

"இல்லை வாசு! இவ இனிமே இங்கேதான் இருப்பா!" என்றார் மகாதேவன் அழுத்தமாய்.

திடுக்கென நிமிர்ந்தான். "என்ன... என்ன பெரியப்பா சொன்னீங்க?"

"நிலா இனிமே இங்கேதான் இருப்பா. இவ என் மக. இவளுக்கு இந்த வீட்டுல எல்லா உரிமையும் இருக்கு. வீட்டு நிர்வாகத்தை இனிமே இவளே பார்த்துக்கட்டும். நீ கணக்கையும் சாவியையும் ஒப்படைச்சிடு."

"பெரியப்பா! நிலா போனதுல உங்களுக்கு என்னவோ ஆயிடுச்சு. முன்ன பின்னே தெரியாதவகிட்ட சாவியைக் கொடுக்கச் சொல்றீங்க. உள்ளே எல்லாமே இருக்கு பெரியப்பா. எதையாவது தூக்கிட்டு ஓடிட்டா...?"

"வாயை மூடு வாசு. அவ பொருளை அவளே தூக்கிட்டு ஓடுவாளா? நம்மை மாதிரியே அடுத்தவங்களை நினைக்கக் கூடாது."



"பெரியப்பா!" அதிர்ந்து போனான். கண்கள் வசந்தநிலாவின் பக்கம் திரும்பியது. அவள் பாதிச் சாப்பாட்டில் எழுந்து பதட்டமாய் நின்று கொண்டிருந்தாள். வெட்டி விடுவது போல் பார்த்தான். வசந்தநிலா பதறி, மகாதேவன் புறம் திரும்பினாள்.

"ஸார்! எனக்கு இவ்ளோ பெரிய பொறுப்பெல்லாம் வேண்டாம் ஸார். நான் இந்த வீட்ல ஏதாவது ஒரு வேலைதான் கேட்டேன். எனக்கு கணக்கு வழக்கெல்லாம் சரிப்படாது."

"ஆஹா! பிரமாதமான நடிப்பு. தொட்டிலையும் ஆட்டுவிடுகிறாயாக்கும். பொழுது போகாமல் கடற்கரையில் நின்றது இதற்காகத்தானா? எத்தனை நாள் திட்டம் போட்டு இங்கு நுழைந்தாய். யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறாய். சொல்லுடி!" என அவளை நெருங்கினான் வாசு.

"வாசு!" அதட்டினார் மகாதேவன்.

"இவள் வந்ததில் இருந்தே உன் முகம் சரியில்லை. நீ ஏதோ திருட்டுத்தனம் செய்கிறாய் என்று நினைக்கிறேன்!" என்றதும் சட்டென முகத்தை இயல்பாக்கினான். பரிதாபமாய் முகத்தை மாற்றிக் கொண்டான்.

"பெரியப்பா! என்னையா சந்தேகப்படுறீங்க? என்னையா...?"

"நீ அப்படித்தானே நடந்து கொள்கிறாய். புதிய பழக்கமாய் என்னோடு எதிர்வாதம் செய்கிறாய். என்னாச்சு உனக்கு? குடித்திருக்கிறாயா?"

"ஐயோ பெரியப்பா! ஏன் இப்படிப் பேசுறீங்க. நம்ம நிலா இருந்த இடத்தில ஏதோ தெருவில போறவளை இருக்க வைப்பது எனக்குப் பிடிக்கலை பெரியப்பா. அதான் கொஞ்சம் கோபப்பட்டேன். உங்களுக்கு உலகமே புரியலை பெரியப்பா. இப்போ விதவிதமா நடிச்சு ஏமாத்துறாங்களே...!" ஓரக்கண்ணால் வசந்தநிலாவைப் பார்த்துக் கொண்டே அவன் கூற, அவமானத்தில் முகம் கன்றிப் போனாள்.

கை கழுவிவிட்டு, "ஸார்! நான் கிளம்பறேன் ஸார். நான் யாரோ ஒருத்தி. எனக்காக உங்க குடும்பத்துக்குள்ள சண்டை வரவேண்டாம். நான் போறேன்!" என நகர்ந்தவளை நிறுத்தினார் மகாதேவன்.

"நில்லும்மா! உன்னை இங்கே அழைத்து வந்தவன் நான். இது என் வீடு. நான் எதுவும் சொல்லாமல் நீ போகக் கூடாது. உன்னை அனுப்பும் உரிமை எவனுக்கும் கிடையாது. வாசு ஒன்றும் என் சொந்தப் பிள்ளை இல்லையம்மா. இங்கு வேலை செய்பவர்களில் ஒருவன். அவனுக்கான சம்பளத்தை அவன் அப்பா மாதம்தோறும் வந்து வாங்கிவிட்டுப் போவான்.

அதனால் அவன் பேச்சையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. அதிகம் படிக்காதவன். யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரியாது. முட்டாள்! நீ வருத்தப்படாதேம்மா. நான் சொன்னது போல் வீட்டுப் பொறுப்பை கவனித்து கணக்கை எழுதி வை. நான் கேட்கும்போதோ, இல்லை சத்யா கேட்கும்போதோ காட்ட வேண்டும். சரியா?" உத்தரவாய்க் கேட்டவரிடம் மெல்ல தலையசை...



"ம். வெரிகுட்... வாசு! போய் வீட்டுக் கணக்கு நோட்டை எடுத்திட்டு வா. என் கண்ணு முன்னாலயே இவகிட்ட பொறுப்பைக் கொடு. இன்னிக்கு நல்ல நாள்தான்!" என்றதும் அவமானத்தில் முகம் சிவந்திருந்த வாசு அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

மகாதேவன் நிலாவை நெருங்கினார். "இதோ பாரும்மா! வாசு என் தம்பி மகனாய் இருக்கலாம். அதற்காக அவன் கேட்கும்போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டாம். எதைக் கேட்டாலும் அதற்கு கணக்கு கேள். இப்ப கொஞ்ச நாளா அவன் தண்ணியிலே மிதக்கிறதா எனக்குத் தகவல் வருது. அதனாலதான் அவன்கிட்ட உள்ள பொறுப்பை உன்கிட்ட ஒப்படைக்கிறேன். பார்த்துப்பியா?"

"கண்டிப்பா... ஸார்!" என்றாள் உற்சாகமாய்.

"ம். நீ சரியா சாப்பிடலையே... இந்தா இந்த பாஸந்தியை சாப்பிடு. நிலாவுக்கு பாஸந்தின்னா ரொம்ப இஷ்டம். அவ போனதுக்கப்புறம் இன்னிக்குத்தான் உனக்காக இதை செய்யச் சொன்னேன். சாப்பிடும்மா!" என பாஸந்தி கிண்ணத்தை அவள் கையில் கொடுத்தார்.

மௌனமாய் வாங்கிக் கொண்டே அவரைப் பார்த்தாள். இது என்ன பந்தம்? பார்த்த ஒரே நாளில் தன் ம்களாகவே நினைத்து வாழவும் தொடங்கி விட்டாரே. மகள் இறந்ததில் சித்தம் கலங்கிவிட்டதா? இல்லை போன ஜென்மத்தின் தொடர்ச்சியா?

வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. "சத்யா வந்திட்டான்னு நினைக்கிறேன். நீ சாப்பிடும்மா. நான் அவனைப் பார்த்திட்டு வர்றேன்!" என்றவாறு மகாதேவன்

அறையை விட்டு வெளியேற, லேசாய் வெளியே எட்டிப் பார்த்தாள் வசந்தநிலா.

வீட்டிற்குள் நுழையும் முன்பே அவனிடம் ஏதோ கிசுகிசுப்பாய் வாசு சொல்ல, சத்யனின் முகம் கடுத்தது. புன்னகை மறைந்து இறுகியது.

# 9

உன் பெயர் உச்சரிக்கும்
உன் நித்தமும் தத்தளிக்கும்
இங்கு நீ இல்லாத வாழ்வில்
ஏது வேனிற்காலம்தான் - என்
மனம் உன் வசமே!

“வாசு! என்ன சொல்ற?” கடுப்பாய்க் கேட்டான் சத்யன்.

“ஆமா சத்யா. இந்தப் பெரியப்பாவுக்கு பைத்தியம்தான் புடிச்சிருக்கு. எவளோ ஒருத்தியைக் கூட்டிட்டு வந்து வீட்டுப் பொறுப்பை ஒப்படைக்கப் போறாராம். நிலாவோட ரூமைக் கொடுத்ததே தப்புன்றேன் நான். இப்போ வீட்டுச் சாவியைக் கையில கொடுன்றார். நான் என்ன சொல்லியும் பிரயோஜனமில்லை. நீதான் சொல்லணும்.”

“நான் என்ன சொல்லணும்?” நடந்தவாறே கேட்டவனை, கூடவே நடந்து வந்த வாசு கோபமாக நிறுத்தினான்.

“என்ன சத்யா நீ? நான் எவ்வளவு முக்கியமான விஷயம் பேசுறேன். நீ பாட்டுக்கு நடந்திட்டே இருக்க...!”



“வாசு! ரெண்டு நாளா ஒரே அலைச்சல். தூக்கமும் கிடையாது. ரொம்ப டயர்டா இருக்கேன். அப்புறம் பேசுவோமே!”

“அப்புறம் பேசுறதா? எப்போ? அவ நம்ம சொத்தையெல்லாம் மொத்தமா சுருட்டிட்டுப் போன பிறகா?”

புருவத்தை நெறித்தான் சத்யன். “என்ன உளர்ற?”

“நான் ஒண்ணும் உளறலை. நடக்கப் போற உண்மையைத்தான் சொல்றேன். வந்திருக்கிறவளைப் பார்த்தாலே தெரியுது பக்கா ஃபிராடுன்னு. அவளும் அவ பார்வையும். நிச்சயமா எல்லாத்தையும் கொள்ளையடிக்கத்தான் வந்திருக்கா!” உறுதியாகச் சொன்னான் வாசு.

“எதை வெச்சு அப்படிச் சொல்ற?”

“சத்யா! அவ பேரே பொய்தான். நம்ம பெரியப்பாவை டீப்பா வாட்ச் பண்ணி அவரைக் கவிழ்க்கத்தான் இந்தப் பொண்ணு இந்தப் பேரை வெச்சிருக்கா!”

“அப்படி என்ன பேரு?” சலிப்பாய்க் கேட்டான்.

“பேரைக் கேட்டா நீ ஷாக்காகிடுவே சத்யா!”

“ம்ப்ச்! மொதல்ல பேரைச் சொல்லு. அப்புறம் பார்ப்போம்.”

“வசந்த நி...லா...வாம்!” வாசு நிறுத்தி நிதானமாய்ச் சொல்ல, சத்யனின் முகம் அதிர்ந்து நிமிர்ந்தது.

“வாசு! நீ... நீ என்ன சொல்ற?”

"பார்த்தியா! நீயே ஷாக்காயிட்ட... அதே மாதிரிதான் பெரியப்பாவும் இந்தப் பேர்லதான் விழுந்திட்டாங்க. இவ ஏதோ திட்டத்தோடதான் உள்ளே நுழைஞ்சிருக்கா. சத்யா! பெரியப்பாவை எச்சரிக்கையாய் இருக்கச் சொல். எவ்வளவு சீக்கிரம் இவளை வெளியேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் அனுப்பிவிட வேண்டும்!" - வாசுதேவன் தீவிரமாய்ப் பேசிக் கொண்டு போக சத்யனுக்கு வேறு எதுவும் காதில் விழவில்லை.

வசந்தநிலாவா? உண்மையாகவே இது அவளது பெயர்தானா? இல்லை... வாசு நினைப்பது போல் இவளாக வைத்துக் கொண்ட பெயரா? இந்தப் பெயரில் ஏமாந்துதான் மாமா இவளை இங்கு அழைத்து வந்தாரா?

"என்ன சத்யா நிட ானுட்டே! நான் சொல்றது புரியுதா?"

"என்னடா வந்ததும் வராததுமா அவன்கிட்டே கதை விட்டுட்டு இருக்கே. உன்கிட்ட நான் என்ன கேட்டேன்...?" என்றவாறு மகாதேவன் வரவும்,

"இதோ கொண்டு வர்றேன் பெரியப்பா!" என விலகினான் வாசு.

"சத்யா! மாத்திரை மருந்தெல்லாம் வாங்கிட்டு வந்தியாப்பா? தலையில உள்ள காயம் லேசா வலிக்கிறா மாதிரி இருக்குது."

"இதோ மாமா! இந்தக் கவர்ல எல்லாம் இருக்கு. சாப்பிட்டுட்டுத்தான் மாத்திரை போடணும். சாப்பிட்டீங்களா?"

"ம். ஆச்சுப்பா. சரி, நான் மாத்திரை போட்டுட்டு கொஞ்சம் படுத்து எழுந்துக்கிறேன். நீ சாப்பிடுப்பா."



"நான் குளிச்சிட்டு சாப்பிடுறேன் மாமா. நீங்க போய் படுங்க!" என்றவனின் கண்கள் வசந்தநிலாவைத் தேடியது.

"நிலாம்மா! நீ கூட நைட்டெல்லாம் தூங்கலியேம்மா. போய்ப் படுத்துக்கோ. நல்லா ரெஸ்ட் எடு."

"சரிங்க ஸார்!" என்றவள் மகாதேவன் சென்றதும் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்த முயன்றபோது எதிரே வந்து நின்றவனைக் கண்டதும் பதட்டமானாள்.

"வாங்க... வாங்க சத்யா ஸார்!" அவள் தயக்கமாய் அழைக்க, உரிமையாய் உள்ளே நுழைந்தவன் அவளை நேராய்ப் பார்த்துக் கேட்டான்.

"உன் உண்மையான பெயர் என்ன?"

"வ... வசந்தநிலா."

"ம்ப்ச்! அது நீயாக வைத்துக் கொண்ட பெயர். நான் கேட்டது உன் நிஜப் பெயரை...!" அடிக்குரலில் சீற்றமாய்க் கேட்டான்.

"இதுதான் என் நிஜப் பெயர். என் அப்பா வைத்த பெயர். ஏன் இப்படிக் கேட்கிறீங்க?" புரியாமல் கேட்டாள்.

"இதோ பார்! இந்தப் பால்வடியும் முகத்தைப் பார்த்து என் மாமா வேண்டுமானால் ஏமாறலாம். நான் ஏமாற மாட்டேன். சொல்... யார் நீ?"

"சத்யா! என் பெயர் வசந்தநிலா. சொந்த ஊர் அஞ்சுகிராமம்."

"அஞ்சுகிராமத்தில் இடமில்லை என்று இங்கு வந்தாயாக்கும்!" வெடுக்கெனக் கேட்டவனுக்கு பதில்

சொல்லத் திணறினாள். மகாதேவனிடம் சுலபமாய்ச் சொல்ல முடிந்த தன் நிலையை இவனிடம் சொல்ல முடியவில்லையே...! அவளது தடுமாற்றத்தைக் கண்டவன் இன்னும் கோபமானான்.

"என்ன? பேச்சையே காணோம். சொல்... எதற்காக வந்தாய்?"

"அது... நீங்கள் உங்க மாமாவிடமே கேட்டுக் கொள்ளுங்கள்."

"ஏன்? என்னிடம் சொல்வதற்கென்ன!" கடுப்பாய்க் கேட்டவனை நன்றாகப் பார்த்தாள் வசந்தநிலா. தலை கலைந்து வெகுவாய்க் களைத்திருக்கிறான் எனப் புரிந்தது. நேரமும் மாலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இவன் சாப்பிட்டானா... என்னவோ தெரியவில்லையே!

"சத்யா ஸார்! நீங்க ரொம்ப டயர்டா இருக்கீங்கன்னு தெரியுது. முதல்ல சாப்பிடுங்க. அப்புறம் எல்லாத்தையும் நானே சொல்றேன்!" என்றதும் வாயடைத்துப் போனான்.

உண்மையில் பசி வயிற்றைக் கிள்ளியது. அதோடு வந்து இறங்கியதும் வாசு பேசியதும் சேர்ந்து ஆத்திரத்தைக் கிளப்பியது. சூட்டோடு சூடாகக் கேட்டு விடலாம் என்றால் துளியும் பயமோ நடுக்கமோ இல்லாமல் பேசுகிறாளே... தப்பு செய்பவளாக இருந்தால் முகத்தில் மிரட்சி தெரியுமே!

"சத்யா ஸார்! என்னைப் பொறுமையாக பார்த்துக் கொள்ளலாம். வாங்க சாப்பிடலாம்" என முன்னே நடந்தாள்.

ஒரு கணம் நின்று, பின் அவளைத் தொடர்ந்தான். "நீ இன்னும் சாப்பிடலையா?"



"நானும் சாரும் இப்பத்தான் சாப்பிட்டோம். வாங்க ஸார்! கை கழுவிட்டு வாங்க. சாப்பாடு எடுத்து வைக்கிறேன்."

"சாவித்ரியம்மா சாப்பாடு போடுவாங்க. நீ போ!"

"ஏன் நான் பரிமாறினா சாப்பிட மாட்டீங்களா? சும்மா வாங்க ஸார்!" இயல்பாய் சாப்பாடு மேஜையை அடைந்து தட்டை எடுத்து வைத்தாள்.

"நான் குளிக்கணும்... குளிச்சிட்டு சாப்...!"

"இப்ப என்ன குளியல்? முதல்ல சாப்பிடுங்க. அப்புறமா நைட் தூங்கும் போது ஒரு வெந்நீர்க் குளியல் போட்டுட்டு படுத்தா நாளைக்கு காலையில வரை நல்லா தூங்கலாம் ம்... உட்காருங்க!" சற்றே மிரட்டலாய் அவள் சொல்ல மறுபேச்சின்றி அமர்ந்தான்.

இதுவரை அவனை இப்படி யாரும் அதட்டி உணவு உண்ண வைத்தது இல்லை. எத்தனை மணிக்கு வருவானோ அப்போது சூடாகப் பரிமாறுவாள் சாவித்ரி. சில சமயம் மாமாவோடு அரட்டை அடித்துக் கொண்டு இரவு உணவு உண்பதுண்டு.

இத்தனை நாளில் நிலா ஒரு முறைகூட நின்று பரிமாறுவதில்லை. மாறாக மாமாதான் அவளுக்குப் பரிமாறுவார். இவள் இன்றுதான் வந்திருக்கிறாள். எத்தனை உரிமையாய் மிரட்டி சாப்பிட வைக்கிறாள். யாரிவள்? என் அம்மாவா?

பரிமாறியவளை விழியெடுக்காமல் பார்த்தான். "ஸார்! உங்க கோபம், சந்தேகம் எல்லாம் நியாயமானதுதான். பட்! இங்கு வந்து சேரும் வரை உங்கள் பணமோ வசதியோ

எனக்குத் தெரியாது. நேற்று நான் காப்பாற்றியது ஒரு வயதான பெரியவரை...! உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவரை... அந்த நேரம் எனக்கு அவர் பணக்காரரா... ஏழையான்னு தெரியலை. அவரைக் காப்பாத்தறதுதான் முக்கியமா பட்டுது. அதனால நான் எந்த நோக்கத்தோடயும் இங்க வரலை. மனசைப் போட்டுக் குழப்பிக்காம முதல்ல சாப்பிடுங்க. சாப்பிடும்போது வேற எந்த சிந்தனையும் வரக்கூடாது!" என்றவாறு சாம்பாரை ஊற்றினாள் வசந்த நிலா.

அமைதியாய்ச் சாப்பிட ஆரம்பித்தான். தட்டைப் பார்த்து எது தேவை எனக் கவனித்துப் பரிமாறினாள். சாப்பிட்டு முடிந்ததும் திருப்தியாய் அவளைப் பார்த்தான்.

"இப்போ கேளுங்க. உங்களுக்கு என் மேல என்ன சந்தேகம்?" கண்களை லேசாய்க் கசக்கியவாறு கேட்டவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"நீ போய் ரெஸ்ட் எடு. நான் மாமாவிடமே கேட்டுக் கொள்கிறேன்!" என தன் அறையை நோக்கி நடந்தான். எதிரே கையில் நோட்டோடு வந்த வாசு,

"என்ன சத்யா! பெரியப்பாகிட்ட பேசிட்டியா?" என்றான் ஆர்வமாய்.

"மாமா படுத்திட்டாங்க வாசு. அப்புறம் பேசலாம்."

"நல்லதாப் போச்சு. வா என்கூட. அவளை விசாரிப்போம்."

"என்ன விசாரிக்கப் போகிறாய்?"



"என்ன சத்யா இப்படிக் கேட்கிற? அவ இந்தச் சொத்தை அபேஸ் பண்ணத்தான் வந்திருக்கா. அவ மட்டும் தனியாளா? இல்ல... இவ பின்னாலே ஒரு கேங் இருக்குதான்னு விசாரிக்க வேண்டாமா?"

"வாசு! நீ நிறைய சினிமா பார்த்து கெட்டுப் போற. என்னை விடு. நான் பத்து நிமிஷமாவது படுத்து எழணும்."

"நில்லு சத்யா. உனக்கு நம்ம சொத்து மேல கொஞ்சமாவது அக்கறை இருந்தா இப்படிப் பேசுவியா? ஒரு பொறுப்பு வேண்டாம்!"

"என்ன? நம்ம சொத்தா? வாசு உனக்கு என்னாச்சு?" வியப்பாய்க் கேட்டான் சத்யா.

"ஏன்? நான் என்ன தப்பாகச் சொல்லி விட்டேன்."

"தப்புதான். இது நம்ம சொத்து இல்லை. மாமாவோட சொத்து. அவங்க விருப்பம். அந்தப் பொண்ணுக்கு தன்னோட சொத்தை எழுதி வெச்சாக்கூட தப்பில்லை. அதுல தலையிட உரிமையும் கிடையாது நமக்கு...!"

"என்ன சொல்ற சத்யா? பெரியப்பாவுக்குப் பிறகு இந்தச் சொத்தெல்லாம்...!"

"ஸ்டாப் இட் வாசு! அப்படி ஒரு எண்ணம் இருந்தா அதை இப்பவே மறந்திடு. நம்மை வளர்த்தவருக்கு நம்மால முடிஞ்சவரை உழைப்போம். மத்தபடி இந்த சொத்தைப் பத்தியெல்லாம் பேசாதே. எதிர்பார்த்து ஏமாறாதே!"

"நான் ஏன் ஏமாறணும்? இதுல என் அப்பாவோட பங்கும் இருக்கே!"

"உன் அப்பாவோட பங்குல பாதி குதிரை ரேஸ்ல போயிடுச்சு. மீதி உன் அண்ணன்களுக்குப் போயிடுச்சு. நீ பங்கு கேட்கணும்னா உன் அப்பாகிட்டதான் கேட்கணும்!" சத்யா இலகுவாய்ச் சொல்ல வாசுவின் முகம் மாறியது.

"சத்யா! இது வாரிசு இல்லாத சொத்து. பெரியப்பாவுக்கு நாமதானே வாரிசு. அதுக்காகத்தானே நம்மை எடுத்து வளர்க்கிறாரு...!"

"முட்டாள் மாதிரி பேசாதே வாசு. நான் சின்ன வயசில தாயை இழந்தவன். என்னைத் தாயாய் நின்னு வளர்த்தவர் மாமா. உன் விஷயம் அப்படியில்லை. வரிசையாய் ஆறு குழந்தைகளைப் பெற்று அதை வளர்க்க முடியாமல் நீ சவலைப் பிள்ளை போல் இருந்ததால் உன்னை இங்கு வந்து தந்தார்கள் உன் பெற்றோர். மாமாதான் நிறைய மருத்துவரிடம் உன்னைக் காட்டி சத்துள்ள ஆகாரங்களைக் கொடுத்து உன்னைத் தேற்றி நடமாட வைத்தார்.

ஸோ! நாம ரெண்டு பேருமே மாமாவுக்குக் கடன் பட்டிருக்கோம். அதனால மாமா காலம் வரை நம்மால முடிஞ்ச உதவியை அவருக்கு செய்யணுமே தவிர, அவர் சொத்தை எதிர்பார்க்கக் கூடாது. இந்தச் சொத்துக்கு வாரிசு நிலா."

"அவதான் இப்போ இல்லையேப்பா!"

"ஸோ வாட்? மாமா சொத்து அவர் யாருக்குக் கொடுத்தாலும் நாம் கவலைப்படக் கூடாது. போ... போய் வேலையைப் பார்!"

"எனக்குப் புரிஞ்சு போச்சு சத்யா!" என்றான் வாசு ஒரு மாதிரிக் குரலில்.



"என்ன? என்ன புரிந்தது?" சத்யனின் குரலில் கோபம் தொனித்தது.

"எப்படியும் சொத்து முழுசும் உனக்குத்தான் வரப் போகுது. அதனாலதான் உனக்கு எந்த டென்ஷனும் இல்லாம கூலா இருக்க!"

"வாசு! என்ன உளர்ற?" சீறினான்.

"சும்மா கத்தாதே சத்யா. ஏற்கெனவே நிலாவை உனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சிட்டு எல்லாச் சொத்தையும் உன் பேருக்கு மாத்திடணும்னு பெரியப்பா ஆசைப்பட்டார். உன் துரதிர்ஷ்டம் அது நடக்காமப் போச்சு. இப்போ இன்னொருத்தியை மகளா கூட்டிட்டு வந்திருக்கார். இனிமே இவளை உனக்குக் கட்டி வெச்சு தன்னோட வாரிசாக்கிடுவார். பிறகெப்படி உனக்கு வருத்தம் இருக்கும்?"

"முட்டாள்...! முட்டாள் மாதிரி பேசாதே. என் வாழ்க்கையில இனிமே கல்யாணம்கிற பேச்சுக்கே இடமில்லை. இந்த மாதிரி பேசறதை விட்டுட்டுப் பெரியவர் மனசு கோணாம நடந்துக்கப் பாரு. இடியட்!" இரைந்துவிட்டு விடுவிடுவென மாடியேறி தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

வாசுவின் முகம் புன்னகைத்தது. 'அப்படி வா வழிக்கு! நானும் என் குடும்பமும் கொக்கு மாதிரி காத்துக்கிட்டு இருப்போம். நீ நோகாம சொத்தெல்லாம் அடிச்சிட்டுப் போயிடுவியா? விடுவேனா? இந்த அரண்மனை இந்த ஜமீன் சொத்து முழுசும் எனக்குத்தான். இதை யாரும் உரிமை கொண்டாட விடமாட்டேன். சத்யா! நீ அவருக்குச் செல்லப்பிள்ளையா இருக்கலாம். பட்! அவரோட வாரிசு

நான்தான். நான் மட்டும்தான்...!' இறுமாப்புடன் வாசு வெளியேற, தன் அறைக்குள் அமர்ந்திருந்த வசந்த நிலாவிற்கு உடல் முழுக்க வெடவெடத்தது.

தன்னால்தான் இங்கு பிரச்சினை உருவாகிறதோ...? இது பெரியவருக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? ஏற்கெனவே இதய நோயாளி. இதில் மகளைப் பறிகொடுத்த துயரம் ஒருபுறம். இந்தச் சூழ்நிலையில் தன்னுடைய சொத்துக்காக மற்றவர்கள் அடித்துக் கொள்வது தெரிந்தால் நொந்து விடுவாரே!

இந்த வாசுவின் பேச்சு செயல்பாடுகள் எதுவுமே சரியில்லை. இவனிடம் ஏதோ தப்பு இருக்கிறது. இவனைக் கவனிக்க வேண்டும். அதே சமயம் இவனிடம் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

கதவை மூடிவிட்டு அறையினுள் நடை போட்டாள். உடல் முழுக்க அலுப்பு இருந்தபோதும் படுக்கத் தோன்றவில்லை. இந்த அரண்மனையில் ஏதோ தப்பு நடக்கிறது. எது என்று தெரியாவிட்டாலும் ஏதோ மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. நிலாவின் மரணம் ஏன் எப்படி நிகழ்ந்தது என்பதை அறிய ஆவல் எழுந்தது.

யாரிடம் கேட்பது? நிச்சயமாய் மகாதேவனிடம் துருவிக் கேட்க முடியாது. பாவம்! ரணமான மனதைக் கிளறக் கூடாது. வேலையாட்களிடம் விசாரிப்பது முறையல்ல. வாசுவைப் பார்த்தாலே ஏனோ அச்சமாகத்தான் இருக்கிறது. சத்யனைவிட இளையவனாகத்தான் இருப்பான். எனினும் பார்க்கும்போது அப்படித் தெரியவில்லை. உடல் முழுக்க ஊளைச்சதை போட்டு பெரிய முகத்தோடு அவனைப் பார்க்கும்போது ஏனோ குணாவின் நினைவுதான் வந்தது.



சத்யாவிடம் இயல்பாய்ப் பேசுவது போல் இவனிடம் பேச முடிவதில்லை. ஏன் பார்க்கவே பிடிக்கவில்லை. கண்களில் எப்போதும் வெறியுடன் திரிபவனுடன் எப்படிப் பேசிப் பழக முடியும்? குணாவைப் பார்க்கும் போதும் இதே வெறுப்புதான் வரும்.

இவன் கண்களில் கோபவெறி என்றால் அவன் கண்களில் காமவெறி தாண்டவமாடும். முகத்தைப் பார்த்து பேசாத மூர்க்கன். அவன் வீட்டிற்குள் நுழைந்தாலே நெருப்பில் நிற்பது போலத்தான் இருக்கும். அண்ணனை அடிமையாக்கி வைத்திருப்பவனை எதிர்க்கவும் முடியாது. மானமுள்ள எந்தப் பொண்ணாலும் அவனை மணக்கவும் முடியாது.

அவனிடமிருந்து தப்பிக்கத்தானே இங்கு வந்தோம். இது புரியாமல்... ஏன் இந்தக் கோணல் புத்தி? வாசு தாறுமாறாய்ப் பேசுகிறான். குணாவின் நினைப்பு வந்தவுடனே அம்மாவின் நினைப்பும் வந்தது. அம்மா என்ன செய்து கொண்டிருப்பார்களோ? சாப்பிட்டார்களோ என்னவோ? அம்மாவிடம் பேசினால் நன்றாக இருக்குமே...!

பார்கவி வீட்டிற்குப் போன் செய்து பார்க்கலாமா? பெரியவரிடம் கேட்காமல் எப்படிப் பேசுவது? தூங்கியிருப்பாரே...! தயக்கமாய் நின்றாள்.

அறைக்குள்ளே போன் இருந்தது. எடுத்துப் பேசிவிட்டு பிறகு பெரியவரிடம் சொல்லிக் கொள்ளலாம். ஒன்றும் நினைக்க மாட்டார். ஐந்து நிமிடப் போராட்டத்திற்குப் பிறகு ஒரே முடிவாய் போனை நெருங்கி ரிசீவரை எடுத்து காதில் வைத்துக் கொண்டு, பார்கவி வீட்டு எண்களை அழுத்தக் கையைக் கொண்டு போனவள் நின்றாள்.

காதிற்குள் கரகரப்பாய் பேச்சுக் குரல்கள். 'ஐயோ! யாரோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்!' அவசரமாகப் போனை வைக்க முயன்றவள் அதிர்ந்தாள். பேச்சு தன்னைப் பற்றியது... அதுவும் பேசியவன் வாசு என்றதும் சட்டென உஷாராகி காதைக் கூர்மையாக்கினாள்.

"அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். நீங்க நான் சொன்ன இடத்தில போய் விசாரிங்கப்பா. அவ பேரு வசந்தநிலாவாம். அஞ்சுகிராமம் போய் எல்லார்கிட்டயும் விசாரியுங்க. எப்படியும் அவளுக்கு ஒரு குடும்பம் இருக்குமில்ல... அதைப் பிடிச்சி மிரட்டி ஒழுங்கா இவளை வந்து கூட்டிட்டுப் போகச் சொல்லுங்க. இவ இங்கே இருக்கிற வரைக்கும் நமக்குக் கெட்ட நேரம்தான். இந்தப் பெரிசு நிலா நிலான்னு கொண்டாடுது. பார்க்கப் பார்க்க எனக்கு எரியுது!"

வசந்த நிலாவின் இதயம் எகிறித் துடித்தது. பெரியப்பா பெரிசு ஆகிவிட்டாரா? இவனுக்கு என்மேல் அப்படியென்ன விரோதம்? எதிர்முனையில் குரல் கேட்க உன்னிப்பானாள்.

"சரிடா! ஒருவேளை அவ உண்மையாவே அநாதையா இருந்தா என்ன பண்றது? அவர் அவளைத் தத்தெடுத்திருப்பாரோ! அப்படியிருந்தா நம்மால ஒண்ணும் செய்ய முடியாதே!" சற்றே வயதான குரல் கேட்டது.

"ஏன் முடியாது? நிலாவுக்குக் கொடுத்த மோட்சத்தை இவளுக்கும் கொடுத்திட வேண்டியதுதான். நிலான்னு பேர் வெச்சிருக்கிறவ எல்லாம் நம்ம கையில சாகணும்னு வர்றாளுங்கப்பா. நாம என்ன செய்ய முடியும்?" - வாசுவின் குரலில் நக்கலும் வெறியும் கலந்திருக்க, சில்லிட்டுப் போனாள் வசந்தநிலா.



'இந்த அரண்மனையில் உள்ள தப்பு வாசுதான். அந்த நிலா தற்கொலை செய்யவில்லை. கொலை செய்யப்பட்டிருக்கிறாள். கடவுளே! என்னையும் இவன் கொலை செய்யப் போகிறான்!' வசந்தநிலாவின் உடல் உதறிக் கொண்டது.

# 10

காலங்கள் தோறும் உன்மடி
தேடி கலங்கும் என் மனமே
பெரும் காற்றினிலும் வரும்
கனவினிலும் நான் காண்பது உன் முகமே!

முழுதாய் மூன்று நாட்கள் ஆகியும், வசந்தநிலாவின் காய்ச்சல் நின்றபாடில்லை. குளிரில் உடல் உதறிக் கொண்டே இருக்க, ஜமீன் மருத்துவர் போட்ட ஊசியும் மருந்தும் பலனின்றிப் போக பயந்து போனார் மகாதேவன். இரண்டு நாள்களாய் வீட்டில் தங்காமல் வெளிவேலையாய் சுற்றிக் கொண்டிருந்த சத்யனை அழைத்தார்.

"சத்யா! வீட்டுக்கு வாப்பா!" என்றார் போனில்.

"என்ன மாமா? எதுவும் அவசரமா? நான் மதுரைக்குப் போகலாம்னு கிளம்பினேன்!" என்றான் சத்யன்.

"அந்த வேலையை வாசுவிடம் ஒப்படைத்து விட்டு வா. சீக்கிரம் வந்துடு."

வாசு என்ற பெயரைக் கேட்டதும் வசந்தநிலாவின் உடம்பு உதறியது. குளிர் காய்ச்சலில் நடுங்குகிறாள் என

நினைத்துக் கம்பளிப் போர்வையை எடுத்துக் கழுத்து வரை மூடினார்.

"என்ன மாமா! எதுவும் பிரச்சனையா?"

"நம்ம நிலாவுக்கு ஒரே குளிர் ஜுரம்ப்பா. மூணு நாளாச்சு. புள்ளை இன்னும் கண்ணைத் திறக்கவே இல்லைப்பா."

"டாக்டருக்குப் போன் பண்ணீங்களா மாமா!" பதட்டமாய்க் கேட்டான்.

"நம்ம டாக்டரும் மூணு நாளா ஊசி போட்டுத்தான் பார்க்கிறார். ஆனால் ஜுரம் குறையவே இல்லைப்பா. உடம்பெல்லாம் உதறிட்டே இருக்கு. எனக்கு ரொம்ப பயமா இருக்குப்பா... உடனே வாயேன்!"

"இதோ மாமா! இன்னும் அரைமணி நேரத்தில அங்கே இருப்பேன். மேட்டூர்ல என் ஃபிரெண்ட் ஹாஸ்பிடல் வெச்சிருக்கான். அவனுக்குப் போன் பண்ணி வீட்டுக்கு வரச் சொல்றேன். அவன் வந்தா பார்க்கச் சொல்லுங்க. நான் கிளம்பி வர்றேன்!" என்றவாறு போனை வைத்தான் சத்யா.

கவலையாய் வசந்தநிலாவின் அருகே அமர்ந்தார். நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். அனலாய்த் தகித்தது. என்ன ஜுரம் இது? இத்தனை மருந்து மாத்திரையில் துளியும் குறையவில்லையே! தவிப்பாய் அவளது தலையை வருடினார்.

கையில் சூடான பானத்துடன் வந்தாள் சாவித்ரி. "ஐயா! ஹார்லிக்ஸ் கொண்டு வந்திருக்கேன்யா."



"கொண்டா சாவித்ரி. அந்த ஸ்பூனை எடு!" என்றவாறு ஸ்பூனால் வசந்தநிலாவிற்கு ஊட்டினார். பாதிகூட இறங்கவில்லை. கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள சாவித்ரியை ஏறிட்டார்.

"சாவித்ரி! எம் புள்ளை இப்படிக் கிடக்கிறாளே... ஒரு சொட்டுத் தண்ணிகூட இறங்க மாட்டேங்குதே...! நான் என்ன பண்ணுவேன்?"

"ஐயா! பதறாதீங்கய்யா. இது குளிர் ஜுரம் மாதிரி தெரியலைய்யா. அம்மா எங்கேயோ பயந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்!"

"என்ன...? பயமா? ஏன்?"

"இது புது இடமில்ல. தூக்கம் வராம உலாத்தும் போது இருட்டைப் பார்த்துக்கூட பயந்திருக்கலாமே... அதான் உடம்பு இப்படி உதறுது."

"குழந்தையா? இருட்டைப் பார்த்து பயப்படுறதுக்கு...!"

"அப்போ தாய் நினைப்பு வந்திருக்குமோய்யா. இவுகளுக்கு அம்மா, அப்பா இருக்காங்களா?" சாவித்ரி கேட்க, திக்கென அதிர்ந்தார் மகாதேவன்.

'அப்படியும் இருக்குமோ? தாயை விட்டுப் பிரிய மனமில்லாமல் தானே இங்கு வந்தாள். வந்த அன்றே வீட்டு நினைவில் சோர்ந்து போனாளே...! ஒருவேளை தாயைப் பிரிந்த ஏக்கத்தில் ஜுரம் வந்துவிட்டதோ! அதனால்தான் மருந்துக்கு அடங்கவில்லையோ?

இப்போது என்ன செய்யலாம்? அந்த அம்மாள் சொன்ன வீட்டிற்குப் போன் செய்து அமராவதியை இங்கு

புறப்பட்டு வரச் சொல்லலாமா? பேசினால்கூடப் போதுமே. கொஞ்சம் தெம்பாகி விடுவாள் நிலா.' - ஆர்வமாய் எழுந்து போனை நெருங்கியவர் நின்றார்.

'நம்பர்? அடடா! நிலாவுக்குத்தானே நம்பர் தெரியும்? கண் விழிக்காமல் கிடப்பவளிடம் எப்படிக் கேட்பது?' சோர்வாய்க் கட்டிலருகே திரும்புகையில் வெளியே காரின் ஓசை கேட்டது.

"சாவித்ரி! யாருன்னு பாரு?"

"இதோய்யா!" என்றவள் வெளியேற, கையில் மருத்துவப் பெட்டியுடன் உள்ளே நுழைந்தான் ரஞ்சன்.

"ஐயா! டாக்டர் மாதிரி தெரியுதுய்யா..." என்றாள் சாவித்ரி.

"டாக்டரேதான். வணக்கம் ஸார். நான் ரஞ்சன். மேட்டூர்ல இருந்து வர்றேன். இப்ப கொஞ்ச நேரம் முன்னால சத்யா போன் பண்ணினான்."

"ஓ! வாப்பா. இவதான் எம் பொண்ணு. பாருப்பா சீக்கிரம்!" என எழுந்து நின்றார் மகாதேவன்.

"என்னாச்சு ஸார்?" என்றவாறே தனது ஸ்டெதஸ்கோப்பை எடுத்துக் காதில் மாட்டி விட்டு வசந்த நிலாவைப் பரிசோதிக்க ஆரம்பித்தான்.

"நல்லாத்தான் இருந்தா. ரெண்டு நாளைக்கு முன்னால சாயங்காலம் ஒரு ஆறுமணி இருக்கும். அப்ப படுத்த புள்ளதான். குளிர்காய்ச்சல் மாதிரி உடம்பு நடுங்குது. ஜுரம் குறையவே இல்லை. ஃபேமிலி டாக்டர் தினமும் ஊசி



போட்டார். ஆனா புள்ள கண்ணைத் திறக்கவே இல்லைப்பா. என்னன்னு பாருப்பா?" என்றார் தவிப்பாய்.

"இதோ பார்க்கிறேன் ஸார்! கூலா ஏதாவது சாப்பிட்டாங்களா? மழையில நனைஞ்சாங்களா?" என்றவாறே இமைகளைப் பிரித்துச் சோதித்தான் ரஞ்சன்.

"இப்போ மழை இல்லையே! ஆம்... அன்னிக்கு கடல்ல நான் விழுந்தப்போ என்னை இவதான் கரைக்கு இழுத்திட்டு வந்தா. முழுக்க நனைஞ்சிருப்பா. அதே ஈரத் துணியோடதான் நைட் முழுக்க ஹாஸ்பிடல்ல இருந்தா. அதனால இருக்குமோ?"

"இருக்கலாம் ஸார். ஒண்ணும் பயப்பட வேண்டாம். எதுக்கும் ப்ளட் டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாம்!" என்றவாறு ஊசியை எடுத்தான் ரஞ்சன்.

ஊசியைச் செருகும்போது மட்டுமே முகத்தைச் சுருக்கினாள் நிலா. கண்களைத் திறக்காமல் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருக்க, ரஞ்சன் சற்று யோசனையோடு அவளைப் பார்த்தான். மேலும் சில பரிசோதனை செய்து முடிக்கும்போது சத்யா வேகமாய் உள்ளே நுழைந்தான்.

"மாமா! என்னாச்சு? ரஞ்சன்! செக்-அப் பண்ணியா? பயப்படுற மாதிரி ஒண்ணுமில்லையே. சாதாரண ஜுரம் தானே!" படபடப்பாய்க் கேட்டான்.

"சத்யா! ஜுரம் குறையறதுக்கு இன்ஜெக்ஷன் போட்டிருக்கேன். ப்ளட் டெஸ்ட் பண்ண ப்ளட் கலெக்ட் பண்ணியிருக்கேன். டெஸ்ட் பண்ணி பார்த்துடலாம். பட்! இவங்க எதுக்கோ பயந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்."

"ரஞ்சன்! நீ என்ன சொல்றே?"

"யெஸ். சத்யா! ஏதோ ஒரு அதிர்ச்சியிலதான் இப்படி முனகுறாங்க. யாராவது பக்கத்தில இருந்து பேசிட்டே இருங்க. அவங்க பயம் தெளிஞ்சாத்தான் கண்ணைத் திறப்பாங்க. கண் விழிச்சா ஈஸியா குணமாக்கிடலாம்."

"ஓ.கே. ரஞ்சன்!" என்றவாறு வசந்த நிலாவைப் பார்த்தான். நைந்து போயிருந்தவளைப் பார்க்கும்போது கஷ்டமாக இருந்தது. இந்தப் பெண்ணிற்கு என்ன ஆயிற்று? எதைக் கண்டு பயந்தாள்?

மூடிய இமைகளைத் திறக்க முயற்சிப்பதும் மறுப்பாய் தலையசைப்பதுமாய் ஏதோ முனகினாள் வசந்தநிலா. ரஞ்சன் புறப்பட்டான்.

"இந்த மருந்தையெல்லாம் கரெக்ட்டா கொடுங்க. ஜூரம் குறைஞ்சிடும். ரொம்ப முடியலைன்னா ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிடலாம். வரட்டுமா சத்யா?"

"சரி, ரஞ்சன். எதுவும் அர்ஜெண்ட்னா நான் போன் பண்றேன்!" என்றவாறு அவனை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தவன் திடுக்கிட்டான்.

மகாதேவன் வாயைப் பொத்திக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்.

"மாமா! என்ன இது? ஏன் அழறீங்க?" பதட்டமாய் அவரை நெருங்கினான்.

"சத்யா! எனக்கு என்னவோ பயம்மா இருக்குடா. தாய்கிட்ட இருந்து இந்தப் புள்ளையை பறிச்சு எமன்கிட்டே கொடுத்திடுவேன் போலிருக்கே...!"



"மாமா! சாதாரண காய்ச்சலுக்கு ஏன் இத்தனை பெரிய வார்த்தையை விடுறீங்க. ஒண்ணும் ஆகாது, இன்னும் கொஞ்ச நேரத்தில கண்விழிச்சிடுவா. தைரியமா இருங்க மாமா."

வசந்த நிலாவின் காதில் சத்யனின் குரல் எங்கோ தொலைவாய்க் கேட்டது. சட்டென அவளது நினைவுகள் மேலெழுந்தன. வாசு கொடியவன். இரக்கமில்லாமல் நிலாவைக் கொன்றவன். இதை மகாதேவனிடம் சொல்ல முடியாது. சத்யன்! உங்களிடம்தான் சொல்ல வேண்டும். உங்கள் நிலா தற்கொலை செய்யவில்லை. கயவர்கள் கொன்றுவிட்டார்கள்.

"சத்யா! எங்கே இருக்கீங்க. கொஞ்சம் வாருங்களேன். சத்யா! என் குரல் கேட்கிறதா?" சத்தமாகவே அழைத்தாள். ஆச்சர்யமாய் திரும்பினான். என்னையா அழைத்தாள்?

"சத்யா! பேசுங்களேன். நான் கூப்பிடுவது கேட்க வில்லையா?"

மகாதேவன் பதட்டமாய் எழுந்தார். "நிலா பேசுகிறாள் சத்யா! உன்னைத்தான் தேடுகிறாள். வா... அவளிடம்பேசு!" எனக் கட்டிலை நெருங்கினார். சத்யா தயக்கமாய் அவள் அருகில் சென்றான்.

"பேசு! ஏதாவது பேசு சத்யா!" மகாதேவன் அவனை ஊக்கினார்.

சத்யா லேசாக தொண்டையைச் செருமிக் கொண்டு, "நான்... நான் இங்குதான் உன் பக்கத்தில்தான் இருக்கிறேன்...." அவன் சொல்லி முடிக்கும் முன் சட்டென கண்களைத் திறந்தாள் வசந்தநிலா.

ஆவேசமாய் அவனது கையைப் பற்றிக் கொண்டாள். திடுக்கிட்டு தன் கையை விலக்க முயன்றான் சத்யா. முடியவில்லை. இறுகப் பற்றியிருந்தாள்.

"ச... சத்யா! நான் கேட்டேன் சத்யா. அவன் பேசியதை நான் கேட்டேன்!" பேசியவளின் குரலும் உடலும் நடுங்க, சற்றுத் தடுமாறினான்.

"என்ன கேட்டாய்? யார் பேசினார்கள்?"

"அவன்தான். அந்த வா....!" கப்பென வாயை மூடிக் கொண்டாள். எதையோ பார்த்து மிரண்டு போய் சத்யனை நெருங்கி ஒண்டிக் கொண்டாள். அவளது பார்வையைத் தொடர்ந்து தனது பார்வையைச் செலுத்தியவன் கோபமானான்.

"வாசு! உன்னை மதுரைக்குத்தானே போகச் சொன்னேன்? இங்கே என்ன செய்கிறாய்?"

"என்னைப் போகச் சொல்லிட்டு, வவுச்சரை நீ கையோட கொண்டு வந்திட்டா நான் போய் என்ன பண்றது? வவுச்சரைக் கொடு!" என்றான் வாசு அலட்சியமாய்.

"ஓ! அதைத் தரவில்லையா?" என நகர முயன்றவனை இறுகப் பற்றிக் கொண்டாள் வசந்த நிலா.

"வேண்டாம் சத்யா! என் பக்கத்திலேயே இருங்க. எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு. ப்ளீஸ் போயிடாதீங்க."

"சத்யா! நீ இருப்பா. நான் போய் எடுத்திட்டு வர்றேன்!" என மகாதேவன் எழுந்தார்.

"மாமா! கார்லதான் ஃபைல் இருக்கு. அதில இருக்கும்!" என்றான் சத்யா. நிலாவின் உடல் இன்னமும் நடுங்கிக் கொண்டிருக்க, வாசு மெல்ல நெருங்கினான்.



"ம்... ராஜவைத்தியம் போல... ரஞ்சன் வந்திட்டுப் போறார்!"

"ஜுரமாம். நான்தான் வரச் சொன்னேன்."

"சத்யா! உனக்குப் புரியலியா? எல்லாமே ஆக்டிங்தான். உன்னை ஏமாத்த வேறு வழியில்லையே அவளுக்கு. பார்த்தியா! உன்னை எப்படிக் கட்டிட்டு இருக்கா. நம்ம நிலாகூட உன்னைத் தொட்டிருக்க மாட்டாள். இப்போதாவது தெரிகிறதா? இவள் எப்படிப்பட்ட பெண் என்று!" வாசு சொல்ல சட்டென கைகளை எடுத்துக் கொண்டாள் வசந்த நிலா.

நடுக்கத்தையும் மீறி கோபம் எழுந்தது. "இதோ பார்! உன்னை மாதிரி எனக்கு நடிக்கத் தெரியாது. நீ யார்? எப்படிப்பட்டவன் என்று மற்றவர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும்!" என்றாள் வேகமாய்.

வாசுவின் முகம் நொடியில் மாறியது. சட்டென இயல்பாகி அலட்சியமாய்ச் சிரித்தான். "பார்த்தியா சத்யா! ஜுரத்தில கண் விழிக்காம கிடந்தவளால இப்படிப் பேச முடியுமா? இப்படி எழுந்து உட்கார முடியுமா? இவ நடிப்புக்கு நீயும் பெரியப்பாவும் வேணா ஏமாறலாம். நான் ஏமாற மாட்டேன். பார்த்து ஜாக்கிரதையா இருந்துக்கோ!" என்றவன் நிலாவை நோக்கினான்.

"ஆமா! என்னைப் பற்றி என்ன தெரியும் உனக்கு? நான் இந்த ஜமீனை விட்டு வெளியே எங்கும் வருவதில்லை. நீ யார் என்றுகூட எனக்குத் தெரியாது. என்னைப் பிறகெப்படி உனக்கு என்னைப் பற்றித் தெரியும். என்னைப்

பற்றி மட்டும்தான் தெரியுமா? இல்லை... பெரியப்பா பற்றியும் சத்யாவைப் பற்றியும் தெரியுமா? எல்லாத்தையும் விசாரிச்சிட்டுத்தான் வந்தியா?"

வாசுவின் கேள்வியில் சத்யனும் முகம் மாறினான். அவளை விட்டு விலகி நின்றான்.

"இதோ பாரும்மா! உன் லீலைகளுக்கு வேற ஆளைப் பாரு. நாங்கள்லாம் உத்தமமான பிள்ளைகள். எங்கள் பெரியப்பாவின் வளர்ப்பு அப்படி. எங்களை உன் வலையில் வீழ்த்தலாம் என்று கனவு காணாதே!"

"ச்சீ! வாயை மூடு. அதுக்கு வேற ஆளைப் பாரு. நான் ஒன்றும் நீ நினைப்பது போல பொண்ணு இல்லை. நிலாவை மாதிரி அப்பாவியும் இல்லை. என்னைப் பேசவிட்டால் உனக்கு ஆபத்து என்றுதானே பேச்சை திசை திருப்புகிறாய். உன்னை மயக்குகிறேனா? எனக்கென்ன கண் இல்லை என்று நினைத்தாயா?" வசந்தநிலாவும் பதிலுக்குச் சீற மகாதேவனின் வரவால் பேச்சு நின்றது.

"சத்யா! இதை ஃபில்-அப் பண்ணிக் கொடுத்து அனுப்பு. இவன் சொதப்பிடுவான்!" என்றதும், "இதோ வர்றேன் மாமா!" என்றவாறு அவரை நெருங்கினான்.

கண்களில் கோபக்கனல் தெறிக்க, வசந்தநிலாவின் அருகில் வந்தான் வாசு.

"ஏய்! உனக்கு ரெண்டு நாள் அவகாசம் தர்றேன். உசுரோட ஓடிப் போயிடு!" என அடிக்குரலில் மிரட்டினான்.

"போகலைன்னா? என்னையும் கொன்னுடுவியா? இப்பத்தானே சொன்னேன். நான் நிலாவை மாதிரி அப்பாவி



இல்லையென்று...!" நிமிர்வோடு பதில் சொன்னவளைப் பார்த்து மிரண்டான்.

அவசரமாய்க் கணக்குப் போட்டான். இவளுக்கு ஏதோ தெரிந்திருக்கிறது. இல்லையென்றால் இத்தனை துணிச்சலாய்ப் பேச மாட்டாள். இவளை இனி பேசவிடக் கூடாது.

"என்ன? கதை விடுற... என்னைப் பற்றித் தெரியாம வார்த்தையை விடாதே!"

"எல்லாம் எனக்குத் தெரியும். உன் சாயத்தை வெளுக்காமல் நான் இங்கிருந்து நகர மாட்டேன். மகாதேவன் சாரையும் அவரது சொத்தையும் காப்பாற்றுவேன். "

"ஏய்! முதல்ல உன் உயிரைக் காப்பாத்த முடியுதான்னு பார்!"

"அதையும் பார்க்கலாம்."

"என்னடா! உடம்பு சரியில்லாத புள்ளைகிட்ட என்ன பேசிட்டு இருக்க...?" என மகாதேவன் அவனிடம் வந்தார்.

"ம்... நலம் விசாரிக்கிறேன்!" என்றவாறு அவரிடமிருந்த வவுச்சரை வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

"அம்மாடி! உடம்பு பரவாயில்லையாமா? நான் ரொம்பப் பயந்திட்டேன்மா!"

"நான்கூட பயந்துட்டேன் ஸார். இனிமே பயப்பட மாட்டேன். எனக்கு ஒண்ணும் ஆகாது!" என்றாள் தெம்பாய்.

"எப்படியோ சின்னய்யாவாலதான் அம்மாவுக்கு குணமாகி இருக்கு. அம்மா! சாப்பிட ஏதாவது கொண்டு வரவா?" என்றாள் ரங்கநாயகி.

"சாப்பிடணும் ரங்கா! எனக்கு நிறைய வேலை இருக்கு. நல்லா சாப்பிடணும். ஆனா இப்போ வாயெல்லாம் கசக்குது. முதல்ல ஸாருக்கு சாப்பாடு போடு. நான் அப்புறமா சாப்பிட்டுக்கிறேன்."

"பெரிய ஐயா! அம்மாதான் எழுந்துட்டாங்களே...! இப்பவாவது சாப்பிட வாங்க. சின்னய்யா நீங்களும் வாங்க...!" ரங்கநாயகி அழைக்க,

"போங்க ஸார். நீங்க சாப்பிடுங்க. நான் கொஞ்சம் ஓய்வெடுக்கணும்!" என்றாள் வசந்தநிலா. புருவம் நெறிய அவளைப் பார்த்தான் சத்யன். எதுவும் பேசாமல் வெளியேறினான்.

"ஏம்மா! உங்க அம்மாவோட போன்ல பேசுறியா?" எனப் பரிவாய்க் கேட்டார் மகாதேவன்.

"பேசணும் ஸார். ஒரு ஆறு மணிக்குப் பேசுவோம். அப்பத்தான் அண்ணன் வீட்ல இருக்க மாட்டான். இப்போ நீங்க போய் சாப்பிடுங்க."

"சரிம்மா. நீ படுத்துக்கோ!" – என்றவாறு அவர் வெளியேற, கதவைப் பூட்டினாள் வசந்தநிலா. அறையில் விளக்கைப் போட்டுவிட்டு நிலாவின் பீரோவைத் திறந்தாள்.

உள்ளே விதம்விதமான விலை உயர்ந்த புடவை வகைகள் வரிசையாய் அழகாய் அடுக்கப்பட்டிருந்தன.



அவற்றைக் கலைக்க மனமின்றி சுவரோரமாய் அமைக்கப் பட்டிருந்த அலமாரியைத் திறந்தாள்.

கூடுமானவரை எல்லாமே அலங்காரப் பொருள்கள். ஒரு சில புத்தகங்கள். நகைகள் என எல்லாம் இருந்தது. சோர்வாய் அடுத்த அலமாரியைத் திறந்தாள். அரை மணிநேரத் தேடலுக்குப் பின் அது கிடைத்தது. நிலாவின் டைரி.

வெற்றிக் களிப்போடு கட்டிலில் அமர்ந்து அதைப் பிரித்தாள்.

பாதிப் பக்கம் முழுவதும் ஸ்ரீராம ஜெயம்தான் எழுதியிருந்தாள் நிலா. இடையிடையே ஒரு பக்கத்தில், 'இன்று அப்பாவின் பிறந்த நாள். டைமண்ட் ரிங் பரிசளித்தேன்!' என்று எழுதப்பட்டிருந்தது.

கவனமாய் ஒவ்வொரு பக்கமாய்த் திருப்பினாள். "இன்று எனக்கும் சத்யனுக்கும் நிச்சயதார்த்தம். சபாரி சூட் சத்யாவுக்கு ரொம்பப் பொருத்தமாய் கம்பீரமாய் இருந்தது!" என்று இருந்தது.

முகத்தில் தோன்றிய புன்னகையோடு அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். "இன்று நானும் சத்யாவும் இன்விடேஷன் பிரிண்டிங் கொடுக்க மேட்டூர் போனோம். சத்யா எவ்வளவு அழகாய் கார் ஓட்டுகிறார். அதைப் பார்த்த எனக்கும் காரை ஓட்ட வேண்டும் என்று ஆசை வருகிறது."

இரண்டு மூன்று தாள்கள் வெற்றுத் தாள்களாய் இருக்க, அதற்கடுத்த பக்கத்தில் "உலகில் எட்டாவது அதிசயமாய் வாசு இன்று ரொம்ப அன்பாய்ப் பேசினான்.

எனக்குக் கார் ஓட்டக் கற்றுத் தருவதாகச் சொன்னான். கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கச் சொல்லி சத்யாவே சொன்னாராம். மறுப்பேனா? உடனே ஒத்துக்கொண்டேன்."

"இன்று மூன்று கிலோ மீட்டம் தூரம் காரை ஓட்டக் கற்றுக் கொடுத்தான் வாசு. அப்பாவிடம் சொல்லலாம் என ஆசையோடு வீடு திரும்பினேன். அப்பாவிடம் இப்போது சொல்ல வேண்டாம். நன்றாகக் கற்றுக் கொண்ட பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று சத்யா சொல்லி விட்டாராம்.

அப்பாவிடம் இதுவரை எதையும் மறைத்ததில்லை. இதை எப்படி மறைப்பது? சத்யாவுக்காக சம்மதித்தேன். ஆனால் இதை சத்யா நேரிடையாக என்னிடம் சொல்லியிருக்கலாமே! வாசுவிடம் ஏன் சொல்ல வேண்டும்? சத்யாவிடம் கேட்க வேண்டும்!"

ஆவலாய் அடுத்த பக்கத்தைப் புரட்டினாள் வசந்த நிலா. வெறுமையாய் இருந்தது. தவிப்பாய் அடுத்த பக்கத்தைப் புரட்ட அதுவும் வெறுமையாகவே காட்சியளித்தது.

என்ன ஆயிற்று? சத்யனிடம் கேட்டாளா? தவிப்பாய் பக்கங்களைப் புரட்டியபோது கதவு தட்டும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்து அவசரமாய் டைரியைத் தனது பெட்டுக்கு அடியில் திணித்துவிட்டு நிமிர்ந்தபோது மீண்டும் கதவு தட்டப்பட்டது.

தவிப்பாய்க் கதவை நெருங்கினாள் வசந்தநிலா. மெல்ல கதவைத் திறக்க வெளியே சத்யன் நின்றிருந்தான்.



# 11

நீ சுடும் தீயென்றால் நான் குளிர்
காய்வேன் அன்பே தீயாய் இரு
நீ ஒரு முள்ளென்றால் நான் அதில்
ரோஜா அன்பே முள்ளாய் இரு!

"உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்?"

"உள்ளே வாங்க!" என்றவாறு விலகி வழி விட்டாள்.

உள்ளே நுழைந்தவன் கதவைச் சாத்திவிட்டு அவளிடம் திரும்பினான்.

"என்ன இதெல்லாம்?"

"எ... எதெல்லாம்?"

"இந்தக் காய்ச்சல் நாடகம் ஏன்? வேலை விஷயமாக வெளியே இருந்தவனை நீதான் வரச் சொன்னாயா மாமாவிடம்?" கோபமாய்க் கேட்டான்.

"சத்யா... நான்..." எனத் தொடங்கியவளைக் கை உயர்த்தித் தடுத்தான்.

"லுக்! நீ யார் என்றுகூட எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை. என் மாமாவின் விருப்பத்தை மதிப்பவன் நான். அதனால்தான் மறுவார்த்தைப் பேசாமல் உன்னை அழைத்து வரச் சம்மதித்தேன். அதற்காக நீ எல்லை மீறி நடப்பதை அனுமதிக்க மாட்டேன்."

"என்ன? நான் எல்லை மீறி நடந்தேனா?"

"இன்று மற்றவர்களின் முன்னிலையில் என்னிடம் எப்படி நடந்து கொண்டாயாம்? உன் மரியாதையை நீயே கெடுத்துக் கொண்டாயே!"

வசந்த நிலாவின் முகம் அவமானத்தால் குன்றிப் போனது. "உன்னை வருத்த வேண்டும் என்று நான் பேசவில்லை. பட்! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. உன் பேச்சு என் மாமாவோடு நிற்கட்டும். என்னை நெருங்க முயற்சிக்காதே! என்னை வைத்து ஏதேனும் திட்டம் போட்டிருந்தால் அதை அழித்து விடு"

"ஸ்டாப் இட் சத்யா. என்ன நினைத்து இப்படிப் பேசுறீங்க?"

"உன்னைப் பற்றி வாசு நிறைய சொன்னான். ஆனால் அடுத்தவரைப் பற்றி பேசுவது எனக்குப் பிடிக்காது. பேசுபவரையும் பிடிக்காது. அதனால் அதை நம்பவில்லை. நீ அவன் பேச்சை உண்மையாக்கி விடாதே."

"சத்யா ப்ளீஸ். அவசரப்பட்டு போய்விடாதீர்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள்."

"என்ன சொல்லப் போகிறாய்? வாசு பொய் சொல்கிறான் என்றா?"

"ஆமாம் சத்யா. வாசு நல்லவன் இல்லை. உங்களிடம் அதைப் பற்றி சொல்ல வந்தபோதுதான்...!"

"நிறுத்து. என்ன இருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் குற்றப் பத்திரிகை வாசிக்கிறீர்களா? இப்போதுதானே சொன்னேன். அடுத்தவரைப் பற்றிப் பேசுவது எனக்குப் பிடிக்காது."



"சத்யா! இது நல்ல எண்ணம்தான். ஆனால் வாசுவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் நிலா எப்படி இறந்தாள் என்று தெரியுமா?"

சத்யனின் முகம் இறுகியது. "அது எங்கள் குடும்ப விஷயம். அதில் நீ தலையிட வேண்டாம். மைண்ட் யுவர் பிஸினெஸ் ஒன்லி." - கோபமாய்த் திரும்பி வாசலை நோக்கி நடந்தான். வேகமாய்ச் சென்று வழியை மறைத்து நின்றாள்.

"சத்யா! நான் சொல்ல வந்ததை நீங்க இன்னும் கேட்கலையே...!"

"ஹேய்! ஒருமுறை சொன்னால் புரியாதா உனக்கு? வழியை விடு."

"கோபப்படாதீங்க சத்யா! நான்... பேசப் போறது உங்க நிலாவைப் பற்றி....!"

"நோ! வாயை மூடு. நான் மறக்க நினைப்பதை நினைவுபடுத்த வேண்டாம். நிலாவைப் பற்றி நீ பேச வேண்டிய அவசியமில்லை."

"பேசலாம் சத்யா. பேசினால்தானே உங்களுக்கு உண்மை தெரியும்?"

"உனக்கு இப்போ என்ன தெரியணும்? நிலா ஏன் இறந்தாள் என்றுதானே! சொல்கிறேன் கேள். என்னைப் பிடிக்காமல் அதை என் மாமாவிடம் சொல்லத் துணிவு இல்லாமல் உயிரை விட்டாள். திருமணத்திற்கு முந்தைய நாள் உயிரை விட்டாள். எங்கள் திருமணம் பத்திரிகை வரை வந்து நின்று போனது. போதுமா?"

"இல்லை சத்யா. நிலாவுக்கு உங்களைப் பிடிக்கும்."

வறட்சியாய்ச் சிரித்தான். "நீ என்ன குறி சொல்பவளா? குழந்தையில் இருந்தே பார்த்தவன் நான். எனக்குத் தெரியாத உண்மை நேற்று வந்த உனக்குத் தெரியுமோ?"

"தெரியும். ஒரு பெண்ணின் மனம் இன்னொரு பெண்ணிற்குத்தான் தெரியும். அவசரப் புத்தி உடைய உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"வீண்வாதம் பண்ணி என் நேரத்தை வீணாக்காதே. உன் மனதில் வீண் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு என்னை நெருங்காதே என்று சொல்லத்தான் இங்கு வந்தேன். வழியை விடு."

"அதெப்படி சத்யா? என்னைப் பற்றி நீங்களே முடிவு பண்றது? கொஞ்சம் பயத்தில் ஜுரவேகத்தில் உங்கள் கையைப் பிடித்ததும் உங்களை விரும்புபவராக நினைத்துக் கொள்வதா?"

"இப்போ ஜுரம் எங்கே போச்சு?" அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள். சட்டென நினைவு வர,

"அதை உங்கள் நண்பரிடம்தான் கேட்க வேண்டும்!" என்றாள்.

பதில் பேச வாயைத் திறக்குமுன் அவனது செல்போன் சிணுங்கியது. எடுத்துக் காதிற்குக் கொடுத்தவாறு அவளை விலக்கி விட்டு கதவைத் திறந்து வெளியேறியவனை ஏமாற்றமாய்ப் பார்த்துக் கொண்டே நின்றாள்.



இவனிடம் எதுவுமே சொல்ல முடியவில்லையே. சொன்னாலும் நம்ப மாட்டானோ... இவனை எப்படி நம்ப வைப்பது? முதலில் இவன் என்னை நம்ப வேண்டும். பிறகுதான் நான் சொல்வதை நம்புவான்.

யோசித்ததில் வயிறு எரிந்தது. காய்ச்சலில் காய்ந்த வயிறு பசியில் கிடப்பதை உணர்ந்து உணவு அறைக்குள் நுழைந்தாள்.

"வாங்கம்மா சாப்பிடுங்க!" என்றாள் ரங்கநாயகி.

"ரங்கா! சாவித்ரியம்மா எங்கே?" என்றவாறு அமர்ந்தாள் வசந்தநிலா.

"பெரிய ஐயாவோட காயத்தைப் பிரிச்சுக் கட்டுறதுக்கு டாக்டரய்யா வந்திருக்காக. சாவிம்மா சுடுதண்ணி எடுத்துட்டுப் போயிருக்காக."

"கொஞ்சம் ரசம் சாதம் மட்டும் போதும் ரங்கா."

"தொட்டுக்க நார்த்தங்காய் ஊறுகாய் வைக்கட்டுமாம்மா?"

"ம்...!" என்றவாறு சாப்பிட ஆரம்பித்தாள். "ரங்கா! நீ எத்தனை வருஷமா இங்கே வேலை செய்யுற?"

"ஏழெட்டு வருஷமா இருக்கேன்மா. ஏம்மா?"

"இல்லை சும்மாதான். சரி, வாசுவோட அம்மா, அப்பால்லாம் எங்கே இருக்காங்க. இங்கே வருவாங்களா?"

"அவங்க இருக்கிற இடம் இங்கேயிருந்து உள்ளே கொஞ்ச தூரம் போகணும்மா. அங்கன பஸ்கூட போகாதும்மா. மலைப் பகுதி. போன்கூட பேசமுடியாதாம்.

மாசம் பொறந்தா முதல் தேதியில வருவாக. ரெண்டு நாள் இருந்துட்டுப் போவாங்க."

"எப்படி இருப்பாங்க? சார்கிட்ட அன்பா இருப்பாங்களா? நிலாகிட்ட எப்படிப் பழகுவாங்க?"

"அதெல்லாம் சரியாத் தெரியாதும்மா. நாங்க எங்க வேலையைப் பார்த்துட்டு இங்கன இருப்போம். அந்த வீட்டு அம்மா அசுவதியம்மா சும்மாகூட ஒரு வார்த்தை பேசமாட்டாங்க. ஐயாவோட தம்பி மட்டும் கொஞ்சம் காரசாரமாப் பேசுறது கேட்கும். மத்தபடி நாங்க எதையும் காதுல போட்டுக்கிறதில்லம்மா. இன்னும் கொஞ்சம் சாப்பாடு வெக்கட்டுமாம்மா?"

"இல்லை ரங்கா. போதும். நீ சாப்பிட்டியா?"

"இன்னும் இல்லீங்கம்மா."

"சரி, நீ சாப்பிடு. நான் போய் சாரைப் பார்த்திட்டு வர்றேன்!" என்றவாறு கையைக் கழுவி விட்டு வெளியே வந்தாள். மருத்துவருடன் பேசிக் கொண்டே வெளியே போய்க் கொண்டிருந்தான் சத்யன்.

மகாதேவனின் அறைக்குள் நுழைந்தாள். கட்டிலில் புதிய கட்டோடு படுத்திருந்தார் மகாதேவன். கண்கள் எதிரே இருந்த சுவற்றையே வெறித்த வண்ணம் இருக்க, வசந்த நிலா சுவற்றைப் பார்த்தாள்.

பூஜை அறையில் இருந்த அதே அழகான படம். சந்தனப் பொட்டு வைத்து, பெரிய ரோஜா மாலையுடன் இருந்தது. தயக்கமாய் அவரை நெருங்கினாள்.



"ஸார்!" சட்டெனத் திரும்பினார். கண்களைத் துடைத்துக் கொண்டே சிரித்தார்.

"வாம்மா! சாப்பிட்டியாம்மா?"

"ஆச்சு ஸார். டாக்டர் என்ன சொன்னார்?"

"காயம் ரொம்ப ஆழமா இல்லையாம். சீக்கிரமே ஆறிடும்னார். மருந்து வெச்சுக் கட்டிட்டுப் போனார். உட்காரும்மா!" - கட்டிலைக் காட்டினார்.

ஓரமாய் அமர்ந்து புகைப்படத்தில் இருந்த நிலாவைப் பார்த்தாள்.

"போன மாதம் இதே நாள் என் மக என்கூட இருந்தா. இப்போ...!" தொண்டை அடைக்க நிறுத்தினார்.

"ஏன் ஸார்! உங்கப் பொண்ணு ரொம்ப பயந்த சுபாவம்னு சொன்னீங்க. பிறகெப்படி காரெல்லாம் ஓட்டினாங்க?" என்றாள் மெதுவாய்.

"அதுதாம்மா எனக்கே ஆச்சரியம். காரெல்லாம் அவ ஓட்டினது கிடையாது. அன்னிக்குப் பொள்ளாச்சியில இருந்து விருந்தினர் எல்லாம் வந்தாங்க. சத்யா அவங்களைக் கூட்டிட்டு வர போயிருந்தான். நான் நம்ம தோட்டத்தில் இருக்கிற நிலாவோட அம்மா சமாதிக்கு மாலை போடப் போயிருந்தேன்.

நம்ம மகளோட கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்கிட்டு மனசு அமைதிக்காக அங்கேயே கொஞ்ச நேரம் இருந்திட்டேன். வந்து பார்த்தா நிலாவைக் காணோம். வேலையாட்களிடம் விசாரித்தேன்.

எல்லோரும் கல்யாண வேலையில் இருந்ததால் கவனிக்கவில்லை என்றார்கள்."

"பிறகு? பிறகு எப்படி ஸார் தெரிந்தது?"

"வாசுதான் சொன்னான்மா."

"என்ன சொன்னார்?" வசந்த நிலாவின் இதயம் பலமாய்த் துடித்தது.

"நிலா கண்ல கண்ணீரோட காரை எடுத்துக்கிட்டு வேகமா போறா பெரியப்பா. எங்கேன்னு கேட்டேன். திரும்பவே முடியாத இடத்துக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போறா. போய் அரை மணிநேரம் ஆயிடுச்சுன்னான்."

"அப்புறம்?"

பெருமூச்சு விட்டார். "அப்புறம்... தேடாத இடமில்லை. கடைசியா மறுநாள் அவ கிடைச்சா. ஆனா முழுசாக் கிடைக்கலைம்மா. காரை வெச்சுத்தான் அடையாளம் கண்டுபிடிச்சோம். பிறந்ததுல இருந்தே என் நெஞ்சுல போட்டுத்தான் அவளைத் தூங்க வெப்பேன். எம்புள்ள கடைசியாத் தூங்கினது மலை உச்சியில. ஒரு நாள் முழுக்க... தனியா... ஐயோ! எப்படியெல்லாம் துடிச்சாளோ... நிலா... நிலா....!" கண்ணீரோடு தன் நெஞ்சை நீவி விட்டுக் கொண்டார்.

"மாமா! என்னாச்சு? நெஞ்சு வலிக்குதா?" என வேகமாய் அறைக்குள் நுழைந்தான் சத்யன். வசந்த நிலாவும் பதறி எழ,

"இல்லப்பா! வலி இல்லை. சும்மா லேசா இருக்கு."



கோபமாய் அவளிடம் திரும்பினான். "என்ன கேட்டாய் மாமாவிடம்?"

"இல்லே... சும்மா... நிலாவைப் பற்றிப் பேசிட்டு...!"

"வாயை மூடு. எதைப் பற்றிப் பேசினாலும் என் மாமாவின் மனம் புண்படுமே என்று தெரிந்து நாங்களே மறக்க நினைக்கும் ஒன்றை ஏன் மேலும் மேலும் பேசிக் கிளறி விடுகிறாய்? உன் வாயை மூடிக் கொண்டு இருக்க முடியாதா?" சீறினான்.

கப்பென வாயை மூடிக் கொண்டாள். "தப்புதான். பெற்றவரிடமே பிள்ளையின் மரணத்தைப் பற்றி துருவி யிருக்கக் கூடாதுதான். அதுவும் நோயுற்ற மனிதரிடம் இந்தப் பேச்சையே எடுத்திருக்கக் கூடாது."

"ஸாரி ஸார். நான் இப்படி ஆகும்னு நினைக்கலை. நீங்க ரெஸ்ட் எடுங்க ஸார்!" என்றவாறு தன் அறையை நோக்கி நடந்தாள்.

இனி நிலாவைப் பற்றி யாரிடமும் எதுவும் விசாரிக்கக் கூடாது. நம்மிடம்தான் அவளது டைரி இருக்கிறதே... அதைவிடப் பெரிய ஆதாரம் என்ன இருக்கிறது? முழுதும் படித்துவிட்டு உண்மையைத் தெரிந்து கொண்டு அதை சத்யனிடம் சொல்ல வேண்டும். அதற்கு முன் இதைப் பற்றி யாரிடமும் ஏன் வாசுவிடம் கூட மூச்சுவிடக்கூடாது.

தன் அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டினாள். கட்டிலில் வந்து அமர்ந்து ஒளித்து வைத்திருந்த டயரியை எடுத்துப் புரட்டினாள்.

நான்கு பக்கங்கள் வெறுமையாய் இருக்க, அதற்கடுத்த பக்கம் எழுதப்பட்டிருந்தது. ஆவலாய் வாசிக்க ஆரம்பித்தாள்.

"திருமணப் புடவை எடுக்க, நகை வாங்க என்று தொடர்ந்து நான்கு நாட்கள் சத்யனுடனே சுற்ற வேண்டியதாகிப் போயிற்று. இந்த நான்கு நாட்களில் சத்யனைப் பற்றி முழுதாய்த் தெரிந்து கொள்ளவும் முடிந்தது. சாப்பாட்டில் இட்லியை விட மிளகு பொங்கலும் சட்னியும்தான் பிடித்திருக்கிறது.

இதமான ரோஜா நிறம் பிடிக்கிறது. காரில் பாட்டுக் கேட்டுக் கொண்டே பயணிக்கப் பிடிக்கிறது. மிதமான அலங்காரம் மட்டுமே பிடித்திருக்கிறது. இரவில் பழைய பாடல்களை மெல்லிய ஓசையில் கேட்கப் பிடிக்கிறது. வட்டப்பாறை மலைப் பகுதி பிடித்திருக்கிறது. கொட்டும் மழையை சூடான காபியை சுவைத்துக் கொண்டே பார்க்கப் பிடிக்கிறது.

திருமணமான பிறகு சத்யனுக்குப் பிடித்ததை எல்லாம் செய்ய வேண்டும். இதையெல்லாம் அப்பாவிடம் சொல்ல வேண்டும்.

"இன்று வாசு என்னை அதிகமாய்க் குழப்பி விட்டான். சத்யனைப் பற்றி என்னிடமே தவறாகப் பேசுகிறான். சண்டை போட்டுவிட்டு திரும்பினேன். இன்று கார் ஓட்டப் போகவில்லை.

"இன்று வாசு என்னிடம் மன்னிப்புக் கேட்டான். அண்ணன் என்ற அக்கறையில்தானே சொன்னேன் என்கிறான். சத்யன் நிறைய குடிக்கிறாராம். கண்ட



இடங்களுக்குப் போகிறாராம். எனக்குத் தெரியாதா சத்யாவைப் பற்றி...?

"இன்னும் இரண்டே நாளில் திருமணம். நாளை மலைமீது கார் ஓட்டக் கற்றுத் தருவதாகச் சொல்லியிருக்கிறான் வாசு. எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. ரோட்டில் நன்றாக ஓட்டுகிறேன். மலைமீது எப்படி ஓட்டுவேன்? சுலபம்தான் என்கிறான் வாசு. பார்க்கலாம்!"

மறுபக்கம் புரட்டினாள். வெறுமையாய் இருந்தது. அதற்கடுத்த பக்கங்களும் வெறுமையாய் இருக்கப் பதட்டமானாள். என்ன நடந்தது? எப்படி நடந்தது? பரபரப்பாய் அறை முழுக்கத் தேடினாள். திருமணப் பத்திரிகை ஒன்றுகூட கண்ணில் படவில்லை. டயரியை முன்போலவே பத்திரப்படுத்தி விட்டு கதவைத் திறந்து பூஜையறைக்குள் நுழைந்தாள்.

மகாலக்ஷ்மி படத்தின் கீழே நான்கு புறமும் மஞ்சள் தடவியிருந்த ஒரே ஒரு பத்திரிகை கண்ணில் பட்டது. ஆவலாய் எடுத்துப் பிரித்தாள். பெரிய அட்டை போன்று மணமக்களின் புகைப்படத்தோடு அச்சாகியிருந்தது அழைப்பிதழ். ஒரு நிமிடம் அதை ரசனையோடு பார்த்து விட்டு திருமணத் தேதியை கவனித்தாள்.

இறப்பதற்கு முந்தைய நாள் வரை எழுதியிருக்கிறாள். திருமணத்திற்கு முந்தைய நாள் இறந்திருக்கிறாள். ஸோ! நிச்சயமாக இது தற்கொலை இல்லை. வாசுதான் அவளை மலைக்கு அழைத்துப் போய் காரோடு தள்ளிக் கொலை செய்திருக்கிறான். இதை அவன் வாயாலே சொன்னானே... இதை எப்படி மற்றவர்களிடம் தெரிவிப்பது?

சிறுவயது முதலே இந்த வீட்டில் வளர்பவன் வாசு. நேற்று வந்த நான் அவனைப் பற்றிச் சொன்னால் என்னை நம்புவார்களா? சத்யாவே நம்ப மாட்டான். பிறகெப்படி மற்றவர்களை நம்ப வைக்க முடியும்? வாசு தன் வாயால் சொன்னால்தான் உண்டு. அவன் சொல்வானா? எப்படிச் சொல்ல வைப்பது?

நான் இதை அறிந்து கொண்டேன் என்று தெரிந்தால் முதலில் என்னைத்தான் கொல்ல முயற்சிப்பான். கூடாது. நிலாவின் மரணத்தை நிரூபிக்கும் முன் அவனிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது. அவனிடம் வாயைக் கொடுத்து பலியாகிவிடக் கூடாது. எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மனதில் தோன்றிய முடிவோடு நிலாவின் புகைப்படத்தைப் பார்த்தாள். அது அவளைப் பார்த்துப் புன்னகைத்தது.

# 12

துள்ளித் திரிந்த பெண் ஒன்று
துயில் கொண்டதேன் இன்று
தொடர்ந்து பேசும் கிளி ஒன்று
பேச மறந்ததேன் இன்று!

வீட்டிற்குள் பலமான ஆரவாரம் கேட்டும் திரும்பாமல் தன் வேலையிலே கண்ணாய் இருந்தாள் வசந்தநிலா. இரவெல்லாம் விடாமல் பெய்த மழையால் பூச்செடிகளின் பாத்திகள் கரைந்து போயிருந்தன. சிறிய களைக் கொத்தியால் மண்ணைக் கொத்திப் பெரிதாய்ப் பாத்தி கட்டினாள். சிறுசிறு செடிகளைத் தனியே பாத்தி கட்டிப் பிரித்து வைத்தாள். காய்ந்திருந்த இலைகளை அகற்றிச் சுத்தம் செய்தாள்.



தரையில் குனிந்த நிலையிலேயே வேலை செய்தவளின் முன் இரண்டு கால்கள் வந்து நின்றன. காலுக்குரியவன் யாரென்று தெரிந்தும் நிமிராமலே பணியைத் தொடர்ந்தாள். இரண்டு நிமிடம் நின்று பார்த்த சத்யன் செருமிக் கொண்டே குரல் கொடுத்தான்.

"நீ ஏன் இந்த வேலையெல்லாம் செய்கிறாய்?"

பதிலின்றி அமைதியாய் வேலையில் கண்ணாய் இருந்தாள்.

"உன்னைத்தான் கேட்கிறேன். இதெல்லாம் மாடசாமி செய்வான். உனக்கேன் கஷ்டம்?"

"எனக்கென்ன கஷ்டம்? சாப்பிடுற சாப்பாட்டுக்கு இந்த வேலையாவது செய்ய வேண்டாமா?" விட்டேறியாய் பதில் வந்தது.

"அதான் வீட்டுப் பொறுப்பை கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொள்கிறாயே! மாமாவையும் கவனித்துக் கொள்கிறாய்."

"அது என் கடமை."

"ஓ.கே. இப்படி ஈரத்தில் இருந்து வேலை செய்ய வேண்டுமா? ஏற்கெனவே குளிர் ஜுரம் வந்தது மறந்து போச்சா?" - அக்கறையாய் கேட்டவனைக் கோபமாய் நிமிர்ந்து பார்த்தாள்.

"அதெல்லாம் நடிப்பு. உங்களுக்குத் தெரியுமே!"

"ஓ! நான் சொன்னதை இன்னும் மறக்கலையா? ஸாரி. அன்னிக்கு ஏதோ கோபத்துல....!"

"இருக்கட்டும் ஸார். நீங்க இந்த வீட்டின் உரிமையாளர். எப்படி வேண்டுமானாலும் பேசுவீங்க. ஆனா... நான் யாரு? அகதி மாதிரி வந்தவதானே! நீங்க என்ன பேசினாலும் கேட்டுத்தான் ஆகணும்."

"ஐயோ! ஏன் இப்படிப் பேசுற? நான் வேணும்னே அப்படிப் பேசலை. அதோடு நானும் அநாதைதான். என் மாமாவிடம் அடைக்கலம் தேடி அவர் நிழலில் வாழ்பவன்தான். இந்த வீட்டின் உரிமையாளன் இல்லை."

அவன் பேசியதைக் கவனியாதவள் போல அருகே இருந்த காய்கறிக் கழிவுகளை ரோஜா செடிகளுக்கு இட ஆரம்பித்தாள்.

"நான் சொல்றதை நம்பலையா?"

"இப்போ என்ன வேணும் உங்களுக்கு? எனக்கு வேலை இருக்கு."

"மாமா உன்னைக் கூப்பிட்டாங்க."

"எதுக்கு?"

"இன்னிக்கு... நிலாவுக்கு நாற்பதாம் நாள் காரியம். அதனால அவ சமாதிக்குக் கிளம்பிட்டு இருக்கோம். உன்னையும் கூட்டிட்டுப் போலாம்னு...!"

மௌனமாய் எழுந்து செடிகளின் நடுவே இருந்த பைப்பைத் திருகி கைகளைக் கழுவினாள். அமைதியாய் வீட்டை நோக்கி நடந்தாள். கூடவே நடந்தபடி,

"உங்க அம்மாவிடம் பேசினாயா?" எனக் கேட்டான்.



பதில் இல்லை. மீண்டும் கேட்டான். "பேசினியா? இல்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"நான் போன் போடும் வீட்டில் ஊருக்குப் போயிருக்காங்க போலிருக்கு. ஒரு வாரமா பெல்தான் அடிச்சிட்டே இருக்கு. யாரும் எடுக்கலை?"

"ஓ! அதான்... இப்படி யாரோடவும் பேசாம இருக்கியா?"

"நான் எப்பவும் போலத்தான் இருக்கேன்!" மிடுக்காய்ச் சொன்னாள்.

"இல்லையே! உன்னால் எதையும் துருவாமல் இருக்க முடியாதே! இப்போதெல்லாம் உன்னை யாரோடும் பேசியபடி பார்க்க முடியவில்லையே!"

"எனக்கேன் ஸார் வம்பு? உங்கள் குடும்ப விஷயத்தை நான் ஏன் துருவ வேண்டும்? உங்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளவா?" சொல்லிக் கொண்டே விடுவிடுவென வீட்டினுள் சென்றாள் வசந்தநிலா.

ஒரு கணம் அமைதியாய் நின்றுவிட்டு லேசாய்த் தோளைக் குலுக்கியவாறு வீட்டினுள் சென்றான்.

"வாம்மா நிலா! இதுதான் என் தம்பி சகாதேவன். கோட்டூர்ல இருக்கான். சகா, இதுதான் நிலா!" என பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார் மகாதேவன்.

நேரிடையாய்ப் பார்த்துக் கொண்ட இருவரின் முகங்களும் சிரிக்கவில்லை.

"வணக்கம்!" என்ற வசந்தநிலாவிடம், "ம்...ம்..." எனத் தலையசைத்து விட்டு வேறு விஷயம் பேச ஆரம்பித்தார் சகாதேவன். உருவத்தில் வாசுவை விட இருமடங்கு விரிந்திருந்தார்.

முகத்தில் அலட்சியமும் அதிகாரத் தோரணையும் தாண்டவமாடியது. அவர் அருகே அமர்ந்திருந்த அவரது மனைவி அசுவதி லேசாய்ப் புன்னகைத்துவிட்டு இதுவே அதிகம் என்பது போல் அமைதியாகிவிட்டாள். தாயின் அருகே அமர்ந்திருந்த வாசுவின் முகம் கடுகடுப்பாகவே இருக்க, மகாதேவனை நெருங்கினாள்.

"ஸார்! நானும் வரணுமா?"

"கண்டிப்பாம்மா. நம்ம தோப்புலதான் வெச்சிருக்கோம். எல்லோருமே போறோம். நீ மட்டும் இங்க தனியா இருக்க வேண்டாம். வாம்மா!"

"சரி சார். அஞ்சு நிமிஷத்தில வந்திடுறேன்!" என்றவாறு தன் அறைக்குள் நுழைந்தாள். சகாதேவன் வியப்பாய்த் தமையனிடம் திரும்பினார்.

"அண்ணே! இந்தப் பொண்ணை நம்ம நிலா ரூம்லயா தங்க வெச்சிருக்கீங்க?"

"ஆமாம்ப்பா... ஏன் கேட்கிற?"

"என்ன அண்ணே நீங்க? நிலா ரூம்ல எல்லாம் விலையுயர்ந்த புடவையும் நகையும் இருக்குமே! அதை என்ன பண்ணீங்க?"



"அதை வெச்சு நானோ நீயோ என்னப்பா பண்ணப் போறோம்? அதான் இந்தப் பொண்ணுக்கே கொடுத் திட்டேன்!" என்றார் சாதாரணமாய்.

"அண்ணே! இவளுக்குக் கொடுத்திட்டீங்களா? இவ யாருண்ணா நமக்கு?"

"என் பொண்ணுப்பா. எனக்கு உயிர் கொடுத்த என் அம்மா. ஆமா! அவளை நான் அப்படித்தான் நினைக்கிறேன். சகா! உனக்குத் தெரியுமா? நிலாவோட அஸ்தியைக் கரைச்சிட்டுக் கலங்கிப் போய் நின்னப்போ நெஞ்சை அடைச்சிடுச்சு...!"

"ஐயோ! அப்புறம்...?"

"பொழுதும் இருட்டிப் போச்சு. யாரும் என்னைக் கவனிக்கலை. சரி, நம்ம ஆயுசு முடியட்டும்னு நான் நினைச்சப்பதான் இந்தப் பொண்ணு என்னைப் பார்த்து பதறி ஓடிவந்து ஒத்தையா நின்று கரை சேர்த்தா. அன்னிக்குப் பௌர்ணமி. பெரிய பெரிய அலை வந்து மோதியது. ஆனா இந்தப் பொண்ணு தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாம என்னைக் காப்பாத்தப் போராடினா...!"

மகாதேவன் உணர்ச்சிப் பெருக்கில் சொல்லிக் கொண்டே போக, சத்யன் அவர் பின்னால் நின்று அமைதியாய்க் கேட்டுக் கொண்டு நின்றான்.

"அப்புறம் நாகர்கோவில்ல நம்ம மகேந்திரன் அங்கேதான் வேலை பார்க்கிறான். அந்த ஹாஸ்பிடல்ல என்னை உள்ளே சேர்க்கவே இல்லை. இந்தப் பொண்ணுதான் வாதாடி என்னைச் சேர்த்தா. உனக்கே

தெரியும். நிலா போன பிறகு நான் எந்த ஆபரணமும் அணியுறதில்லை. கடல்ல விழுந்ததில என் பணம், போன் எல்லாம் தண்ணியோட போச்சு!"

"அது எப்படி பெரியப்பா உங்களுக்குத் தெரியும். இவகூட அதை அடிச்சிருக்கலாமே!" என்றான் வாசு.

"வாயை மூடுடா. நான் ஒன்னும் மயங்கிடலை. ஹாஸ்பிடல்ல சேர்க்கும் வரைக்கும் எனக்கு நினைவு இருந்தது. ஹாஸ்பிடல்ல கட்டப் பணம் கிடையாது. இந்தப் பொண்ணு தன்னோட செயினை கழட்டிக் கொடுத்திருக்கா. அதை வாங்க மாட்டோம்னு சொல்லிட்டாங்களாம். பணம் கட்டுற வரைக்கும் இவ வெளியே போகக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க. பாவம் இந்தப் பொண்ணு எனக்காக விடிய விடியக் காத்திருந்தா...!"

"அது சரிண்ணா! சத்யா வந்ததும் ஏதாவது பணத்தைக் கொடுத்து, வீட்டுக்கு அனுப்பியிருக்கலாமே... ஏன் அவளுக்கு வீடு, வாசல் எதுவும் கிடையாதாமா?" அஞ்சுகிராமம் சென்று அலைந்துவிட்டு ஏமாற்றமாய்த் திரும்பியிருந்த சகாதேவன் சாமர்த்தியமாய் விசாரிக்கவும் சட்டென சுதாரித்துக் கொண்டார் மகாதேவன்.

"அப்படி யாரும் இல்லைப்பா. பாவம்! அதுவே கடல்ல விழுந்து சாகணும்னுதான் அங்கே வந்திருக்கு...!"

சத்யன் அதிர்ந்து போனான். இந்தச் செய்தி அவனுக்குப் புதியது.

மாமா மேலோட்டமாய் சொல்லியிருந்தாரே தவிர, இத்தனைத் தெளிவாய்ச் சொல்லவில்லை. அவனும்



கேட்கவில்லை. இப்போது அவர் சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான்.

"எனக்கும் நிலாவே திரும்பக் கிடைச்ச மாதிரி ஒரு உணர்வு. அதான் நான் இருக்கேன் வாம்மான்னு கூட்டிட்டு வந்திட்டேன்."

"எல்லாம் சரி. கொஞ்ச நாள் பார்த்துக்க முடியும். வாழ்நாள் முழுக்கப் பார்த்துக்க நம்மால முடியுமா? பொட்டப்புள்ளை பாரு?"

"ஆமா சகா! கொஞ்ச நாள் போகட்டும். அப்புறம் நம்ம சொந்தத்துலயே நல்லதா ஒரு மாப்பிள்ளை பார்த்து கட்டி வெச்சிடலாம்னு இருக்கேன்!" மகாதேவன் சொன்னதும், வாசுவும் சகாதேவனும் அதிர்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பார்வையில் அவசரமாய் செய்தியைப் பரிமாறிக் கொண்டனர்.

மகாதேவன் அதைக் கவனிக்கத் தவறினார் என்றாலும் அவர்களுக்கு எதிரே நின்ற சத்யனின் கண்களில் அந்தக் காட்சித் தெளிவாய் விழுந்தது. சட்டெனப் புருவம் சுருக்கினான். இவர்கள் ஏன் அதிர்ச்சி அடைய வேண்டும்?

இவர்களது கண்ணில் கள்ளத்தனம் இருக்கிறது. ஏதோ ரகசியம் ஒளிந்திருக்கிறது. இருவரையும் கூர்மையாய்ப் பார்த்தான் சத்யன்.

அதே நேரம் கதவைத் திறந்து கொண்டு வசந்தநிலா வெளியே வரவும் மற்றவர்களின் பேச்சுத் தடைபட்டது. சத்யன் வியந்து விழிகளை விரித்தான்.

சந்தன நிறக் காட்டன் புடவையில் வெகு எளிமையாய் நின்றவளின் வசீகரம் பிரமிக்க வைத்தது. நிலாவே நேரில் வந்து நின்றதுபோல் தடுமாறிப் போனான்.

தன் நண்பனின் ஜவுளி ஷோரூம் திறப்பு விழாவிற்குப் போய் விட்டு இந்தப் புடவையை வாங்கி வந்திருந்தான் சத்யன். சந்தன நிறம் தனக்கு எடுப்பாக இருக்காது என்று அதை இதுவரை கட்டவே இல்லை நிலா.

இன்று அதே புடவையில் வசந்த நிலாவைக் கண்டதும் இயல்பாய் புன்னகை பூத்தது. அனைவரும் அமைதியாய் இருக்க, "ஸார், நான் ரெடி. போலாமா?" என்றாள் வசந்தநிலா.

"ம்... போலாம்மா! சத்யா, மாலையை எடுத்து வெச்சிட்டியா?" என்றவாறே எழுந்தார் மகாதேவன்.

"கார்ல இருக்கு மாமா. போகலாம்!" என்றவாறு அவன் வெளியேற மற்றவர்களும் வெளியேறினர். மாடசாமியைத் தவிர மற்றவர்கள் காரில் ஏற நான்கு கார்களும் புறப்பட்டுச் சென்றன.

வாசல் அருகே வந்ததும் மாடசாமியை அழைத்தார். "மாடசாமி. நீ ஒரு அரை மணிநேரம் இரு. யாராவது வந்தா தோப்புக்கு வரச் சொல். அப்புறமா கிளம்பி வா. சரியா?"

"சரிங்கய்யா!" என்றவாறு கேட்டை அகலமாய்த் திறந்து வைத்தான். சரியாய் பத்தே நிமிடத்தில் வந்து இறங்கிய இடத்தைப் பார்த்ததும் வசந்த நிலாவின் மனதில் பாரம் ஏறிக்கொள்ள, சுற்றுமுற்றும் தேடினாள். எங்கே? அந்த தேவதை உறங்கும் இடம் எங்கே?



"உள்ளே போக வேண்டும். வா!" என்றான் சத்யா. அவன் கையில் பெரியதாய் ரோஜாப்பூ மாலை. முன்னே நடந்த மகாதேவன் கண்ணீர் வடிப்பதை உணர்ந்து யாருமே பேசவில்லை. சத்யனின் கண்கள்கூட கலங்கியிருந்தது.

மௌனமாய் நடந்தாள் வசந்தநிலா. பறவைகளின் ஒலிகளைத் தவிர அசாத்திய அமைதி. வரிசையாய் உயரமாய் தென்னை மரங்கள். செழிப்பான இளநீரோடு நின்றிருக்க, இடையிடையே கொய்யா மரங்கள். சற்றுத் தள்ளி வரிசையாய் மாமரங்கள். பூவும் பிஞ்சுமாய் காய்த்துத் தொங்கின. தோப்பின் நடுவே இருந்தது அது.

வெண்மைநிற பளிங்குகளால் ஆன சிறிய மண்டபம். சிறிய கேட் போடப்பட்டிருந்தது. கேட்டைத் திறந்து வரிசையாய் உள்ளே நுழைந்தனர். இரண்டு சமாதிகள். முழுவதும் சலவைக் கற்களால் கட்டப்பட்டிருந்தன. தலையருகே பெரிய புகைப்படம். பெயர், பிறப்பு, இறப்பு இவற்றோடு சிறிய பல்பு எரிந்து கொண்டிருந்தது.

ஒன்று வசந்தசேனாவின் புகைப்படம். மகாதேவனின் மனைவி! நிலாவைப் பிரதியெடுத்து மாட்டியதுபோல் அத்தனை அழகு - அம்சம் - ஒற்றுமை. அடுத்தது நிலாவின் புகைப்படம். சமீபத்தில் எடுத்ததாக இருக்கும். சிரித்த முகமாய் மனதை அள்ளினாள்.

பார்ப்பவர்களின் கண்களைக் கசிய வைத்தாள். வசந்தநிலாவிற்கு தொண்டையை அடைத்தது. சாகும் வயதா உனக்கு? உன் மனம் கவர்ந்தவனை மணந்து தேன்நிலவு

கொண்டாட வேண்டிய வேளையில் உனக்குக் காரியம் செய்ய வைத்து விட்டானே. நிலா... வாசுதான் கொலையாளி என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் நான் சொன்னால் யாராவது நம்புவார்களா? முதலில் உன் சத்யனே நம்ப மறுக்கிறாரே! சத்யனை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

கைகளைக் கட்டிக் கொண்டு அமைதியாய் நின்றபோதும் கண்களில் நீர் நிறைந்து நின்றது. அந்தக் கண்ணீரைப் பார்க்கப் பிடிக்காமல் மீண்டும் நிலாவின் புகைப்படத்தை ஏறிட்டாள்.

நிலா! அடுத்த வருஷம் உன் நினைவு நாளன்று வாசு இங்கே இருக்க மாட்டான். இருக்க விடமாட்டேன். அவனை அவனது நயவஞ்சகத்தை வெளிக்கொண்டு வந்து விடுவேன். எதற்காக உன்னைக் கொன்றான் என்று அவன் வாயாலேயே சொல்ல வைத்து அவனைத் தூக்குமேடை ஏறவைப்பேன். இதெல்லாம் நடக்காமல் உன் வீட்டை விட்டு வெளியேற மாட்டேன்.

சத்யனைப் பிடிக்காமல் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள் நிலா என்ற அவப்பெயரை துடைத்து விடுவேன். அதற்கான துணிவை திறமையை நீதான் எனக்குத் தரவேண்டும். மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டிருந்தபோது அங்கே நிலவிய மௌனத்தைக் கலைத்தார் சகாதேவன்.

"வாசு! பெத்த பொண்ணு சமாதியில பூஜை பண்ண எந்த அப்பனால முடியும்! பாவம் அண்ணன். துவண்டு



போய் உட்கார்ந்திருக்கார். நீதாம்ப்பா பூஜை பண்ணணும். அந்த ஊதுபத்தியை ஏற்று!" என்றார் மகனிடம்.

வெடுக்கென நிமிர்ந்தாள் வசந்தநிலா. இந்தக் கொலைகாரப் பாவி பூஜை செய்வதா? அதை நிலாவின் ஆன்மா ஏற்றுக் கொள்ளுமா? கூடாது. மகாதேவன் மகளின் சமாதியில் சாய்ந்து குலுங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்புவதும் சரியில்லை. சத்யனிடம் திரும்பினாள்.

"சத்யா ஸார்! நீங்க மாலையைப் போடுங்க. நீங்கதான் போடணும்!"

கலங்கிய கண்களோடு நிமிர்ந்தான். "நா... நானா?"

"ஆமா ஸார். நீங்க போட்டு பூஜையைப் பண்ணினாத்தான் நிலாவோட ஆன்மா குளிரும். ம்... போங்க!" என ஊக்கினாள்.

கோபமாய்த் திரும்பினார் சகாதேவன். "நீ யாரம்மா என் குடும்ப விஷயத்தில் தலையிட. பூஜையை நாங்கள் தான் செய்ய வேண்டும். சத்யா எங்கள் தங்கையின் மகன். இன்னொரு குடும்பத்தின் வாரிசு. அவன் இதைச் செய்யக் கூடாது."

"இல்லை ஸர். சத்யா சார்தான் இதைச் செய்ய வேண்டும். ஏன்னா நிலாவை மணக்க இருந்தவர். தாலி மட்டும்தானே கட்டவில்லை. மற்றபடி நிச்சயம்கூட முடிந்து விட்டதே!"

"இவனைப் பிடிக்காமல்தானே அவள் இறந்தே போனாள். இவன் கையால் பூஜை செய்ய அவள் ஆன்மா சம்மதிக்காது."

"யார் சொன்னது நிலாவிற்கு சத்யாவைப் பிடிக்காது என்று?" துணிவாய்க் கேட்டவளைப் பார்த்து, சற்று தடுமாறினார் சகாதேவன். தந்தையின் நிலை கண்டு மகன் முன்னே வந்தான்.

"அதுதான் தெளிவாய் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறாளே!"

"யாரிடம் கொடுத்துவிட்டுப் போனாள் வாசு? உங்களிடமா?"

"ஏய்! எங்கே வந்து பிரச்சனை செய்கிறாய். இதற்குத்தான் கண்டதுகளையும் உள்ளே விடக்கூடாது என்பது!" என்றார் சகாதேவன்.

வசந்தநிலா வாயைத் திறக்கும் முன் சத்யா தடுத்தான். "வேண்டாம். பூஜையை அவர்களே செய்யட்டும். காயங்களைக் கிளற வேண்டாம்."

ஒரு வெற்றிச் சிரிப்போடு அவளை ஏறிட்டான் வாசு. சத்யனிடமிருந்து மாலையை வாங்கிக் கொண்டு சமாதியை நெருங்க, வசந்தநிலாவின் மனம் கொதித்தது.

சமாதியை நெருங்கிய வாசு அப்படியே நின்றான். கண்களை இறுக மூடிக் கொண்டு பலமாய்த் தள்ளாடினான்.

"மாலையைப் போடுடா. ஏன் நிக்கிறே?"

அவஸ்தையாய் விழிகளைத் திறந்தான். "அப்பா! அப்பா... எனக்கு என்னவோ பண்ணுதுப்பா. என்னால முடியலை!" திணறலாய்ச் சொன்னான்.



"என்னடா? என்ன பண்ணுது?" சகாதேவன் கேட்டுக் கொண்டிருந்தபோதே கையில் இருந்த மாலையைத் தவற விட்டுவிட்டு தன் தலையை இறுகப் பற்றிக் கொண்டான் வாசு. தடாலென கீழே விழுந்து தரை முழுக்கப் புரண்டான்.

"அப்பா! என் தலையை எதுவோ குடையுற மாதிரி இருக்குப்பா. அம்மா! என்னால வலியைத் தாங்க முடியலை. குடையுது... புழு மாதிரி குடையுதுப்பா!" வீறிட்டு அலறினான்.

அனைவரும் பதறி அவனை நெருங்க மகாதேவன் நினைவு கலைந்து எழுந்தார். "என்னாச்சு வாசு? ஏன் இப்படித் துடிக்கிறான்?"

"ஐயோ! என் தலை இப்பவே வெடிச்சிடும் போல இருக்கே... அப்பா! என்னால முடியலை! ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டுப் போங்கப்பா!" வலி தாளாமல் கத்தினான்.

அசுவதி மகனின் நிலை கண்டு அலற, நான்கைந்து பேராய்ச் சேர்ந்து வாசுவைத் தூக்கிக் கொண்டு காருக்கு ஓடினர். சகாதேவனும் அசுவதியின் பின்னால் ஓட, சத்யன் செய்வதறியாது நின்றான்.

இரண்டு கார் உறவினரோடு புறப்பட்டுச் செல்ல, மகாதேவன் சத்யனிடம் திரும்பினார். "என்னப்பா இது? பூஜை பண்ற நேரம் இப்படி ஆகிப் போச்சு. இவனுக்கு என்னதான் ஆச்சு?" என்றார் கவலையோடு.

"ஒன்றும் பயப்பட வேண்டாம், மாமா! வாசுவுக்குக் குடி அதிகமாகிப் போச்சு. நேற்று நைட் ஓவரா குடிச்சிருப்பான். அதான் தலை வலிச்சிருக்கு. அவன்தான் வலி தாங்க மாட்டானே...! அதுக்குத்தான் இப்படிக் கத்தியிருக்கான்."

"இப்போ... உறவுக்காரங்களும் போயிட்டாங்களே!"

"மாமா! உறவுக்காரங்க என்ன மாமா செய்வாங்க? குற்றம் குறை கண்டுபிடிக்கத்தான் வருவாங்க. நிலாவோட பிரேதத்தை வீட்ல வெச்சுக்கிட்டே வாய்க்கு வந்தபடி பேசின கூட்டம்தானே இது. இவங்க போனதைப் பற்றி ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்."

"ஆமா ஸார். நல்ல மனசோட நாலு பேர் நின்னாப் போதும்!" என்றாள் வசந்தநிலா.

"அதில்லம்மா... நாம மட்டும்... எப்படி எல்லாம் பண்றது?"

"பண்ணலாம் ஸார். நிலா இப்போ தெய்வமாகிட்டாங்க. பூஜை பண்ணுறது நம்ம கடமை. தயங்காம செய்யுங்க ஸார்!"

"ஆமா மாமா. நாம இருக்கோம். நிலாவைத் தன்னோட குழந்தையா பாதுகாத்து வளர்த்த சாவித்ரியம்மா, காத்தவராயன், காமாட்சி எல்லோரும் இங்கே இருக்காங்க. இது போதும் மாமா. நிலா நம்ம பூஜையை சந்தோஷமா ஏத்துப்பா!" என்றான் சத்யன்.

"சரிப்பா... அம்மா நிலா, நீ விளக்கேத்தும்மா...!" என்றவாறு மாலையை எடுத்து மகளின் சமாதியில் மாட்டினார். அணையா விளக்கை ஏற்றினாள் வசந்தநிலா.

அவள் விரும்பிச் சாப்பிடும் பலகாரங்களை சாவித்ரியும் காமாட்சியும் படையல் போட, காத்தவராயன் செவ்விளநீர்களைக் கொண்டு வந்து வைத்தான். சத்யா



கற்பூரம் காட்ட, பூஜை எளிமையாய் முடிந்தது. புகைப்படத்திலிருந்த நிலாகூட புன்னகைத்தாள்.

பூஜை முடிந்து பணியாளர் கிளம்ப, "நீங்க போங்க. நான் இன்னிக்கு முழுக்க இங்கேதான் இருக்கப் போறேன்!" என மகாதேவன் அமர்ந்து கொண்டார்.

வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கு சாப்பாடு செய்யவென்று மற்றவர்களை கந்தசாமி அழைத்துச் சென்றுவிட, சத்யனும் வசந்த நிலாவும் அமைதியாய் நின்றனர்.

"நிலாம்மா! சத்யன் எதுவும் சாப்பிடலை. வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் சாப்பிட வையும்மா. நீயும் சாப்பிடு!" என்றார் மகாதேவன்.

"ஸார்! நீங்களும் எதுவும் சாப்பிடலையே ஸார்?"

"இல்லைம்மா. இன்னிக்கு நான் எதுவும் சாப்பிட மாட்டேன். நீங்க கிளம்புங்க. நான் கொஞ்சநேரம் அமைதியாக இருந்து என் மனைவியோடும் மகளோடும் பேசணும்!" என்றார் கெஞ்சுதலாய்.

"சரி, மாமா! நாங்க கிளம்புறோம்!" என சத்யன் முன்னே நடக்க, அமைதியாய் அவனைப் பின்தொடர்ந்தாள் வசந்த நிலா.

சற்று நேரம் அமைதியாகவே நடந்து வந்தவன் திடீரெனக் கேட்டான்.

"ஏன் அப்படிச் சொன்னே?"

"எப்படி?"

"வாசுவை ஏன் பூஜை செய்ய விடாமல் தடுத்தாய்?" என்றவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"சொல்லி விடலாமா?" ஆவலாய் வாயைத் திறந்தாள்.

# 13

தூங்காத கண்களால் நீங்காமல்
பார்க்கிறேன் நீதானே என்
காலைகளின் சூர்யோதயம் ஏன்
இந்தப்பெண்மனம் ஏகாந்தம் ஆனது
நீயில்லையேல் பாவைமனம் பாலைவனம்

சொல்லிவிடலாம் என்று வாயை திறக்கும் முன் அடுத்த கேள்வியைக் கேட்டான் சத்யன்.

"உனக்கு ஏன் வாசுவைப் பிடிக்கவில்லை. இதற்கு முன்பே உனக்கு அவனைத் தெரியுமா?"

முகம் கடுப்பாகிவிட பேசாமல் நடந்தாள் வசந்த நிலா. "இப்படி ஒன்றும் பேசாமல் போனால் எப்படி?"

"ம்? நான் என்ன சொன்னாலும் அது உங்கள் மரமண்டையில் ஏறப் போவதில்லை. பிறகேன் வெட்டிப்பேச்சு பேசி பொழுதை வீணாக்க வேண்டும். நான் வீட்டுக்குப் போக வேண்டும். காரை எடுங்கள்." – கோபமாய் காரை நோக்கிச் சென்றவளை அவனது அடுத்த கேள்வி நிறுத்தியது.

"நீ ஏன் சாகப் போனாய்?"



நின்று திரும்பினாள் "என்ன?"

"காலையில் மாமா சொல்லும்போது கேட்டேன். சொல். எதற்காக?"

"அது... அதெல்லாம் என் சொந்த விஷயம்"

"ஹீம். என்ன பெரிய ரகசியம்? உன் வயதுப் பெண்கள் இந்த வயதில் சூஸைட் டிரை பண்ண வேறு என்ன காரணம் இருக்கும். என்ன லவ் பெயிலியரா?"

அவள் பதில் சொல்லாமல் நடக்க, "நான் சொன்னது சரிதானே" – என்றான் விடாமல்.

"மிஸ்டர் சத்யா! எதை பேசினாலும் கேள்வியும் நானே, பதிலும் நானேன்னு நீங்களே முடிவைச் சொல்லி விடுகிறீர்கள். உங்களை வைத்துக்கொண்டு எப்படித்தான் மகாதேவன் ஸார் குப்பை கொட்டுகிறாரோ?"

"அது என் மாமாவின் கவலை. என் கேள்விக்கான பதில் எங்கே?"

"இப்போ என்ன தெரிய வேண்டும் உங்களுக்கு?"

"உன்னைப் பற்றிய உண்மைத் தகவல்கள் தெரிய வேண்டும். உன்னைப் பார்க்கும்போது வாசுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதே. அதற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும். சொல்."

நின்று நிதானமாய் அவனைப் பார்த்தாள். "அதற்குமுன் என் கேள்விக்கு விடை தெரிய வேண்டும்" – என்றாள் அழுத்தமாய்.

"என்ன? என்ன தெரிய வேண்டும்?"

"நீங்கள் நிலாவை விரும்பினீர்களா?"

"வாட் யூ மீன்?"

"யூ லவ் ஹெர்? எனக்கு உண்மையான பதில் வேண்டும்."

"எதற்காக?"

"அதைப் பிறகு சொல்கிறேன். வீட்டில் உங்களைத் தனியாகப் பார்க்க முடிவதே இல்லை. ப்ளீஸ் சொல்லுங்கள்."

சலிப்பாய் பெருமூச்சு விட்டான் சத்யன். "நிலா எங்கள் குடும்பத்தில் ஒரே பெண் வாரிசு. அதனால் அவளை எங்கள் எல்லோருக்கும் பிடிக்கும்."

"மற்றவர்களை விடுங்கள். உங்களுக்கு?"

"ம்... பிடிக்கும்."

"பிடிக்குமா? இல்லை விரும்பினீர்களா?"

"இதென்ன கேள்வி?"

"கேட்டதற்கு பதில் சொல்லுங்கள்."

"நிலாவை பிடிக்கும். நான் இந்த வீட்டிற்கு சிறு வயதிலேயே வந்துவிட்டேன். அப்போது அவள் குழந்தை. அதிலிருந்தே பிடிக்கும்."

"திருமணப் பேச்சை யார் எடுத்தது?"

"மாமாதான். மாமாவிற்கு ரொம்ப வருஷமாய் இந்த ஆசை உண்டு. நிலா நிறைய படிக்க வேண்டும் என்றாள். அவள் படிப்பு முடிந்ததும் திருமணம் பேசி முடிவு செய்தார்கள்."



"உங்களுக்கு இதில் பரிபூரண சம்மதமா?"

"ம். சம்மதம்தான். முன்பின் அறியாத ஏதோ ஒரு பெண்ணை மணப்பதை விட கூடவே வளர்ந்த நிலாவை மணப்பதில் எனக்கு சம்மதம்தான்."

"நிலாவுக்கும் உங்களை மணப்பதில் சம்மதம்தான்."

"அப்படித்தான் நானும் மாமாவும் நினைத்து ஏமாந்து போனோம். அவள் மனதில் யாரேனும் இருக்கக்கூடும் என்று நினைக்கவே இல்லை. அது எவ்வளவு பெரிய தப்பு என்று அன்று மலைமீது சிதறிக் கிடந்தாளே அன்றுதான் தெரிந்தது" - தொண்டை அடைக்க பேச்சை நிறுத்தினான்.

"என் மாமாவின் பெண்ணாய் அவளைப் பிடித்திருந்ததே தவிர, அவள் மீது தீராத ஆசை கொண்டதில்லை. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நானே அவளை அவனுக்கு மணம் முடித்து வைத்திருப்பேன்."

இப்போ என்னால் தான், என்னை மணக்க விருப்பம் இல்லாமல் தான் இறந்துபோனாள் என்ற தீராத பழியை என்மேல் ஏற்றி வைத்துவிட்டுப் போய்விட்டாள். அவள் ஏன் அப்படிச் செய்தாள்? கண்ணே மணியே என்று நான் கொஞ்சியதில்லை.

ஆனால் அவள் எதைச் சொன்னாலும் நானோ, மாமாவோ தட்டுவதே இல்லை. நினைத்த நேரம் எங்கு போக வேண்டும் என்றாலும் அழைத்துச் செல்வோம்.

அவள் கேட்பதையும், கேட்காததையும் வாங்கிக் குவித்திருக்கிறேன். அதிலே என் அன்புதான் இருந்தது. காமமோ மோகமோ கிடையாது.

இது அவளுக்குத் தெரியும். தெரிந்தும் ஏன் என்னிடம் மறைத்தாள்? நிச்சயம் நடந்த அன்றுகூட சந்தோஷமாகத் தான் இருந்தாள். அதன்பிறகு கூட அவள் முகம்வாடி நான் பார்க்கவேயில்லை.

ஒருவேளை கல்யாண வேலையில் கவனிக்காமல் விட்டுவிட்டேனோ என்று தினமும் என் மனம் உறுத்திக் கொண்டே இருக்கிறது" - சத்யனின் முகம் வேதனையில் சுருங்கியது.

"சத்யா! நிலாவுக்கு கார் ஓட்டத் தெரியுமா?"

"சேச்சே! அவளுக்கு ரொம்ப பயந்த சுபாவம். காரில் வேகமாய் போனாலே பயப்படுவாள்."

"பிறகெப்படி காரில் அதுவும் மலைமீது ஓட்டிக் கொண்டு போனார்கள்?"

"இன்றுவரை அதுமட்டும் புரியவில்லை. கந்தசாமியையோ, மணிகண்டனையோ அழைத்துப் போகவில்லை. வாசுவும் வீட்டில்தான் இருந்திருக்கிறான். அவனையும் அழைக்கவில்லை. அதுசரி, தற்கொலை செய்யப் போகிறவள் துணைக்கு ஆளையா கூட்டிச் செல்வாள்?" - என்றான் கசப்பாய்.

"ஏன் சத்யா? அவங்களுக்கு உங்களைப் பிடிக்கலன்னு யார் சொன்னா?"



"வாசுகிட்டத்தான் சொல்லியிருக்கா. இந்த இடியட் கல்யாணமாகிட்டா எல்லாம் சரியாகிடும்னு நினைச்சு எங்ககிட்ட சொல்லாம விட்டிருக்கான்."

"அதை நீங்க நம்புறீங்களா சத்யா?"

"முதல்ல நம்பல்ல. ஏன்னா வாசு எப்பவுமே சிடுசிடுன்னுதான் இருப்பான். நிலா அவன்கூட பேசி நானோ மாமாவோ பார்த்ததேயில்ல. அதனால நம்பிக்கை வரல்ல. ஆனா ஒருவாரம் கழிச்சு அவ எழுதி வெச்சிட்டுப் போன லெட்டர் கிடைச்சுது."

"யார் கையில கிடைச்சுது?"

"வாசுதான் காட்டினான். ஏதோ புக்குல வெச்சிட்டுப் போயிட்டா போலிருக்கு. அந்த லெட்டரைப் படிச்சதும்தான் சுத்தமா நொறுங்கிட்டோம். மக மனசு புரியாம அவளை சாகடிச்சிட்டோமோன்னு மாமாவும், நான்கூட நிலாகிட்ட தனியா விசாரிக்கலையேன்னு நானும் மொத்தமா நொந்துட்டேன்.

அப்போ ஒடுங்கிப் போனதுதான். அதற்கப்புறம் என் மாமா எங்கேயும் நடமாடலை. அப்புறம் வாசுதான் கன்னிப்பொண்ணு தற்கொலை செய்தா அவ ஆவி அடங்காதுன்னு ஏதோ சாந்தியமெல்லாம் செய்தான். அவ அஸ்தியை மூணா பிரிச்சு ஒவ்வொரு கடல்லயும் போய்க் கரைச்சோம்.

அப்படி கன்யாகுமரிக்கு வந்தப்போதான் என் மாமாவை நீ காப்பாத்தி இருக்க. உனக்கு நன்றி

சொல்லத்தான் நினைச்சேன். அதுக்குள்ள வாசு ஏதேதோ சொல்ல நான் கொஞ்சம் கடுமையா நடந்துக்கிட்டேன். ஸாரி."

"வாசுவுக்கும் உங்களுக்கும் ரிலேஷன்ஷிப் எப்படி?"

"வாசு என் சின்ன மாமாவின் மகன்."

"அது தெரியும். உங்களுக்குள்ள உறவு எப்படி? ரொம்ப அன்யோன்யமா இல்ல. பிரெண்ட்ஸ் மாதிரி இருப்பீங்களோ?"

"அதெல்லாம் கிடையாது. வாசுவுக்கோ அவங்க அப்பாவுக்கோ என்னை எப்பவுமே பிடிக்காது. இப்ப வரைக்கும் அப்படித்தான்."

"ஏன்?"

"என் அம்மா இறந்தப்போ என் மாமா என்னைத் தன் பிள்ளையா எடுத்து வளர்த்தாங்க. அது எங்க சின்ன மாமாவுக்குப் பிடிக்கலைன்னு நினைக்கிறேன். வாசு வந்தப்புறம் கூட மாமா எம்மேலதான் ரொம்ப பிரியமா இருப்பாங்க. அதனாலதானோ என்னவோ அவனுக்கும் என்னைக் கண்டால் ஆகாது."

"அது உண்மைதான் சத்யா. அந்தப் பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் தான் உங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது."

"என்ன?"

"ஆமா சத்யா. நீங்க நினைக்கிற மாதிரி நிலா உங்களைப் பிடிக்காமல் தற்கொலை செய்யவில்லை. அவளைக் கொன்றிருக்கிறார்கள்."



இடியை நேரிடையாய் தாங்கியவனாய் அதிர்ந்து போனான். "என்ன? என்ன சொல்கிறாய்? நிலாவைக் கொன்றார்களா?"

"ஆமாம்."

"யார்? யார் அப்படிச் செய்தது?" - வெறிவந்தவன் போல் அவளது தோளைப் பற்றி உலுக்கினான் சத்யா.

"நன்றாக இருக்கிறதப்பா. ரொம்ப நன்றாக இருக்கிறது" - என்ற குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப சகாதேவன் தன் குடும்பத்தோடு வந்து கொண்டிருந்தார். சட்டென கையை விலக்கிக்கொண்டான்.

"ஏம்ப்பா. உன்னைக் கட்டிக்க இருந்தவ செத்துப்போய் நாற்பது நாள்தான் ஆச்சு. காரியம் கூட இன்னும் முடியல்ல. அதுக்குள்ள அவ சமாதிக்கு பக்கத்திலேயே உங்க சல்லாபத்தை தொடங்கிட்டீங்களா?"

"மாமா" - கத்தினான் சத்யா.

"சும்மா கத்தாதே. அதான் இவகூட கொட்டமடிச்சத கண்ணால பார்த்தோமே. நான்கூட இவதான் ஏதோ திட்டத்தோட இங்க நுழைஞ்சான்னு பார்த்தேன். இப்பத்தான் புரியுது. நீதான் இவளை இங்கே வரவழைச்சிருக்கே." - வாசு சொல்ல ஆக்ரோஷமாய்த் திரும்பினான் சத்யா.

"முட்டாள்தனமாய் உளராதே வாசு. நான் என்ன பேசிக் கொண்டிருந்தேன் தெரியுமா?"

வசந்தநிலா பதறிப் போனாள். வாசுவிற்குத் தெரியக் கூடாது என்று இருந்தோமே. அவனைக் கையும் களவுமாய்

பிடிக்க வேண்டுமே. சத்யன் சொன்னதும் உஷாராகி விடுவானே எனப் பதறி, தலையசைத்தாள்.

"வேண்டாம் சத்யா, வேண்டாம்" - கண்களால் மன்றாடினாள்.

"அடச்சீ இந்தக் கண்றாவிய நாங்க கேட்கணுமாக்கும். என் அண்ணனைச் சொல்லணும். தெருவில கிடக்கிற குப்பையை எல்லாம் வீட்டுக்குள்ள சேர்த்தா அது இப்படித்தான் நடக்கும்."

"மரியாதையாய் பேசுங்கள் சகாதேவன். எனக்கும் பேசத் தெரியும்" - சீறினாள் வசந்தநிலா.

"என்ன பேசுவாய்? நீ யாரென்று எங்களுக்கு இப்போதுதான் தெரிந்தது. என் அண்ணனை ஏமாற்றியது போல் என்னை ஏமாற்ற முடியாது? உண்மையைச் சொல் நீ அநாதையா?" - மிரட்டலாய் கேட்டார் சகாதேவன்.

வசந்தநிலா தவிப்பாய் பார்க்க, "உனக்கு அம்மா இல்லை. ஒரு அண்ணன் இல்லை. இல்லையென்று சொல் பார்க்கலாம்" - என்றார் கெத்தாக.

சத்யன் திகைப்பாய் அவளைப் பார்த்தான். உடல் மொத்தமும் வியர்த்து ஊற்ற வெலவெலத்துப் போய் நின்றிருந்தாள் வசந்தநிலா.

"என்ன பதிலையே காணோம். உன் ஜாதகமே எங்கையில இருக்கு."

"மாமா! என்ன சொல்றீங்க? இவளைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?"



"ஏன் உனக்கு எதுவும் தெரியாதா?"

"இல்லை. சரியாகத் தெரியாது."

"தெரியாமல்தான் தொட்டு விளையாடினீர்களாக்கும்?"

"மாமா! நான் ஒன்றும்..."

"புரிகிறதப்பா. நீயும்தான் என்ன செய்வாய்? உன் வயது அப்படி. நான் உன்னைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இந்த இடத்தில் இப்படி நடந்துகொள்ளலாமா? ஏன் உங்களுக்கு வேறு இடமா கிடைக்கவில்லை" - அவரது பேச்சில் கோபம் தலைக்கேற வெடித்தாள் வசந்தநிலா.

"வயசுக்கு தகுந்த மாதிரி பேசுங்க. தப்பா நடக்கிறவங்களுக்குத்தான் பார்க்கிறதெல்லாம் தப்பாத் தெரியும்?"

"அப்படியாம்மா. அப்போ நீ யாரும்மா! ரொம்ப ஒழுக்கமானவளா?"

"சகாதேவன். வார்த்தையை அளந்து பேசுங்கள். என் ஒழுக்கத்தைப் பற்றி நீங்கள் பேச வேண்டாம்."

"நான் மட்டும் பேசவில்லையம்மா. உன் ஊரே பேசுகிறது. உன் ஒழுக்கக் கேட்டால்தான் உன் அம்மாவே தற்கொலை செய்து கொண்டார்களாம். ஊரே காறித் துப்புகிறது."

வசந்தநிலா ஆவேசமாய் அவரது சட்டையைப் பற்றினாள்.

"யோவ்! என்னய்யா சொன்னே. என் அம்மா... என் அம்மா."

"விடும்மா" - என அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் சகாதேவன்.

"சத்யா! இந்தப் பொண்ணு ஒரு மாதிரியானவளாம். இவளுக்கு கல்யாண ஏற்பாடெல்லாம் செய்து முடிச்சாச்சாம். நம்ம நிலா மாதிரி இவளும் மாப்பிள்ளையைப் பிடிக்காமல் ஓடி வந்திருக்கிறாள்" - சகாதேவன் அழுத்திச் சொன்ன வார்த்தை சரியாக வேலை செய்தது.

கண்கள் இரத்தமெனச் சிவக்க வசந்தநிலாவை வெறித்தான் சத்யா.

"இன்னும் கேளுப்பா. இவ இப்படி ஊரைவிட்டு ஓடி வந்ததும் அந்த மாப்பிள்ளை இவ வீட்ல போய் நியாயம் கேட்டிருக்கான். அவன் மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தவன் போலிருக்கு. அவன் கேட்ட கேள்வியில் இவ அம்மா மனசு உடைஞ்சு தூக்குல தொங்கிட்டாளாம்."

"இல்லை. பொய். என் அம்மாவிற்கு ஒன்றும் ஆகியிருக்காது" - வீறிட்டாள் வசந்தநிலா.

"நான் என்ன பொய்யா சொல்றேன். நம்ம சோமசுந்தரத்தை இப்பத்தான் ஆஸ்பத்திரியில பார்த்தேன். இவளோட உறவுக்காரன்தானாம். கையில போட்டோவை வெச்சு தேடிட்டு இருந்தான். இது நம்ம வீட்ல இருக்கிற பொண்ணாச்சேன்னு மேலோட்டமா விசாரிச்சேன். விஷயத்தைப் புட்டுபுட்டு வெச்சிட்டான்."

வசந்தநிலாவிற்கு தலை சுற்றியது. கண்கள் இருட்டியது. மூளை அவசரமாய் சிந்தித்தது. இவர் சொல்கிற



சோமசுந்தரம் யாரென்றே தெரியாது. பொய்யான நபராகக்கூட இருக்கலாம். ஆனால் இவர் ,சொன்ன செய்தி? இரு தினங்களுக்கு முன்புகூட வாசு போனில் பேசும்போது "இன்னுமா விசாரிக்கல்ல. உங்களால முடியலன்னா வேற எவனையாவது அனுப்ப வேண்டியது தானே" - என எரிந்துவிழுந்து கொண்டிருந்தானே.

ஒருவேளை அந்த விசாரணை தன்னை பற்றித் தானோ. என் அம்மாவிற்கு என்ன ஆயிற்று?

கடவுளே! இவர் சொல்வது உண்மையாக இருக்கக் கூடாது. மனம் பதற சத்யனை ஏறிட்டாள்.

"ஸார்! தயவு செய்து காரை எடுங்கள். என் அம்மாவிற்கு போன் செய்ய வேண்டும்." - என்றவாறு காரின் கதவைத் திறந்தாள்.

"நில்லு" - இதுவரை மென்மையாக இருந்த சத்யனின் குரல் கடினமாக மாறியிருந்தது. அதிர்ச்சியாய் நின்றாள்.

"மாமா சொன்னதெல்லாம் உண்மையா?"

"தெரியல்ல சத்யா. அதுக்குத்தான் போன் பண்ணப்போறேன்"

"நீ ஓடி வந்த கதையைக் கேட்டேன்"

சட்டென திகைத்து, "நான் உங்கள் மாமாவிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறேன். அதோடு நான் ஓடிவரவில்லை. சாகத்தான் போனேன்" - என்றவளிடம் கோபமாய் நெருங்கினான்.

"ஏன்டி! ஏன்டி இப்படி இருக்கீங்க. மாப்பிள்ளைய பிடிக்கலேன்னா வீட்ல சொல்ல வேண்டியதுதானே. இல்லே மாப்பிள்ளையிடமாவது சொல்லலாமே. இப்படி சாகறதும், ஓடிப் போவதும் உங்களுக்குக் கைவந்த கலையா? உங்களால் மாப்பிள்ளைகள் மானத்தையும் நிம்மதியையும் இழந்து தவிக்கவேண்டுமா? அடுத்தவரின் மன வருத்தத்தை புரிந்து கொள்ள மாட்டீர்களா?"

"சத்யா! புரியாமல் பேசாதீர்கள்"

"புரிந்துதான் பேசுகிறேன். இதற்குத்தான் உன்னைப் பற்றி விசாரிக்கும் போதெல்லாம் நழுவினாயா? இதில் என்னிடம் குறுக்கு விசாரணை வேறு. பெரிய ஆள்தான் நீ."

"ஐயோ சத்யா. நான் எல்லாம் பொறுமையாகப் பிறகு சொல்கிறேன். இப்போ என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்களேன்."

"நீ என்ன சொல்வது? அதுதான் எல்லாம் மாமா சொல்லிவிட்டாரே. வேறு என்ன கதைசொல்லி ஏமாற்றலாம் என்று திட்டம் போடுகிறாயா?"

"சத்யா! என் அவசரம் புரியாமல் பேசாதீர்கள். வீட்டுக்குப் போகலாம்."

"வீட்டுக்கா? இனி உனக்கு அங்கே இடம் இல்லை. இப்போதே என் அண்ணனிடம் சொல்லி உன்னை வெளியேற்றத்தான் இங்கு வந்தேன்" - எகிறினார் சகாதேவன்.

"என்னை வெளியே அனுப்பத்தான் இந்த பொய்யைச் சொன்னீர்களா? உங்கள் சுயநலத்திற்காக ஒரு பெண்ணின் மீது பழியைப் போடலாமா. இதுதான் உங்கள் ஜமீன் பழக்கமா?"



"ஏய் வாயைமூடு. செய்கிற தப்பையெல்லாம் நீ செய்துவிட்டு என் மாமாவிடம் ஏன் பாய்கிறாய்?" - சத்யா சீறினான்.

"சத்யா! நான் என்ன தப்பு செய்தேன்?"

"ஓஹோ. கல்யாணம் பண்ணிக்கப் போகும் நேரத்தில் வீட்டை விட்டு ஓடிவருவது உன் அகராதியில் தப்பில்லையோ."

"நிறுத்துங்கள் சத்யா. நான் ஒன்றும் உங்களைப் போல் உத்தமரான ஒரு மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஓடி வரவில்லை. உங்களைப் போல் ஒருவரை மணக்க நான் மறுக்கவும் மாட்டேன்." - ஏதோ வேகத்தில் வசந்தநிலா பேசிவிட வாயடைத்துப் போனான் சத்யா.

"என் அண்ணன் ஒரு குடிகாரன். பேராசைக்காரன். அவனது வீக்னெஸ்ஸை புரிந்துகொண்டு அவனது நண்பன் என் அண்ணனுக்கு பணத்தாசை காட்டி என்னை மணக்கக் கேட்டான். எனக்காக அவன் பேசிய விலை இரண்டு லட்சம். அதோடு தினமும் தண்ணி, அதற்கு ஆசைப்பட்டு என் அண்ணன் என்னைக் கேளாமலேயே சம்மதித்துவிட்டான்.

நானும் அம்மாவும் எவ்வளவோ போராடிப் பார்த்தோம். முடியவில்லை. மாப்பிள்ளை எப்படிப்பட்டவர் தெரியுமா? திடீர் பணக்காரன். பார்க்கும் பெண்களை யெல்லாம் படுக்கைக்கு அழைப்பவன். அவனை மணக்க சம்மதிக்க முடியுமா?" - கோபமாய்க் கேட்டாள்.

"சும்மா கதையை மாத்தாதே. எனக்கு எல்லாம் தெரியும்" - என்ற சகாதேவனை எரித்துவிடுவதைப் போல் பார்த்தாள்.

"உங்களுக்கு என்ன ஸார் தெரியும்? குணாவை எனக்கு சின்ன வயசுல இருந்தே தெரியும். தெரு தெருவாய் பழைய பேப்பர் வியாபாரம் செய்தவன். அப்போதே மோசமான கேரக்டர் உள்ளவன். அதோடு இப்போ பணம் சேர்ந்தபிறகு அவன் கொட்டம் அதிகமாகிப் போச்சு. ஏற்கனவே அவன் விரும்பிக் கட்டினவளை வீட்ல வெச்சிட்டே இன்னொருத்தியையும் கூட்டிட்டு வந்திட்டான். என்னைக் கட்டுறதுக்காக அவங்க ரெண்டு பேரையுமே கொன்னுட்டான்.

சத்யா! நீங்களே சொல்லுங்க. இப்படி ஒரு காமப் பிசாசை கொலைகாரப் பாவியை எந்தப் பொண்ணாவது கட்டுவாளா? ஒருவேளை நான் பணத்தாசை பிடிச்சவளா இருந்தா பணத்துக்காக என்னவேணா செய்யலாம்னு நினைச்சிருந்தா அவனைக் கட்டியிருப்பேன்.

ஆனா என் அம்மா என்னை அப்படி வளர்க்கல்ல. என் அப்பா போன பிறகு பீடி சுத்தி எங்களை வளர்த்தவங்க. நான் எப்படி சம்மதிப்பேன். எங்க அம்மாவை, எங்க அண்ணன் பண்ணின கொடுமை தாங்காமத்தான் அன்னிக்கு சாகப் போனேன். பாழும் விதி. என்னை இங்கே கொண்டு வந்து விட்டிருச்சு. சத்யமா சொல்றேன் சத்யா. இந்த வீட்டுக்கு வர எனக்குத் துளியும் சம்மதம் கிடையாது.

என் அம்மாதான் இந்தப் பிரச்சனை முடியும்வரை பாதுகாப்பாய் இரும்மா என்று உங்கள் மாமாவுடன் அனுப்பி



வைத்தார். மற்றபடி வேறு எந்த எண்ணத்திலும் நான் இங்கு வரவில்லை" - கண்ணீரோடு அவள் முடிக்க, சத்யன் சிலையாய் நின்றான்.

வாசு அலட்சியமாய் உதட்டைச் சுளித்தான். "உன் அம்மாவே அனுப்பி வைத்தாளா? கேட்கவே சந்தோஷமா இருக்கு. எந்தத் தாயாவது வயது வந்த பெண்ணை இப்படி அனுப்பி வைப்பாளா? இதிலிருந்தே உன் குடும்ப லட்சணம் நன்றாகத் தெரிகிறது."

பெண் புலியாய் சீறினாள் வசந்தநிலா. "அடுத்தவர் சொத்துக்கு ஆளாய் பறக்கும் நீ என் குடும்பத்தைப் பத்தி பேசுகிறாயா? என் அம்மா குணா என்ற மிருகத்திடம் இருந்து என்னைக் காப்பாற்ற இங்கு அனுப்பினார். ஆனால் இது பிணம் தின்னும் கழுகுகள் கூட்டம் என்று என் அப்பாவி அன்னைக்குத் தெரியாமல் போய்விட்டதே. தெரிந்திருந்தால் தன் மகள் இறந்துபோவதே மேல் என்று என்னை சாகவிட்டிருப்பார். என் தாய் செய்த தவறுக்கு இன்று நான் உங்களிடம் இந்தப் பேச்சையெல்லாம் கேட்க வேண்டியதாகிப் போயிற்று.

வாசு! நீ நெருப்போடு விளையாடுகிறாய். பொசுங்கி விடுவாய். ஏழைகளின் வயிற்றெரிச்சல் உங்களைச் சும்மாவிடாது. நீ செய்யும் பாவமே உன்னை அழித்துவிடும்" - ஆவேசமாய் எச்சரித்துவிட்டு நிற்காமல் வேகமாய் வெளியே ஓடினாள்.

வாசுதேவனும் சகாதேவனும் ஆத்திரமாய் நிற்க, சத்யா வெளியே ஓடியவளை பார்த்துக்கொண்டே இருந்தான். யார்

சொல்வது உண்மை? இவளை சந்தேகிக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது. நானும் வரம்பு மீறி பேசி இந்தப் பெண்ணின் இதயத்தைப் புண்ணாக்கி விட்டேனோ. முதலில் மாமாவைப் பார்த்து பேச வேண்டும் என்ற முடிவுடன் சமாதியை நோக்கி நடந்தான். மனம் வசந்தநிலாவின் பின்னே ஓடியது.

# 14

என் மனம் என்பது உன்னிடம்
என்றபின் என்னிடம் கோபம்
கொள்ளுவதோ ஒன்றில் ஒன்றான
பின் தன்னைத் தந்தானபின் - உன்னிடம்
நான் என்ன சொல்லுவதோ!

புயலைப்போல் வீட்டினுள் நுழைந்தவளை ஆர்வமாய் எதிர்கொண்டாள் ரங்கநாயகி. "அம்மா! உங்களுக்கு மூணு வாட்டி போன் வந்திடுச்சிம்மா. உங்க கிட்டதான் பேசணுமாம். நீங்க வந்ததும் போன் பேசச் சொன்னாங்க."

"சரி. நான் பேசுறேன்" - மூச்சு வாங்க போனை நெருங்கினாள்.

"ஏம்மா! உடம்பு முழுக்க தெப்பமா நனைஞ்சிருக்கு. ஓடியா வந்தீங்க. சின்னய்யாவோட கார்ல வந்தா என்னவாம்" - ரங்கநாயகியின் கேள்விக்கு பதில் சொல்ல விரும்பாமல் நடுங்கும் விரல்களால் பார்கவியின் வீட்டு தொலைபேசி எண்களை அழுத்தினாள்.



தொடர்பு கிடைத்ததும் போன் எடுக்கப்பட்டது. "பார்கவிக்கா! நான்... நான் வசந்தி பேசுறேன்."

"வசந்தி! இவ்வளவு நேரம் எங்கே போயிட்டே. உனக்கு எத்தனை முறை செய்வது." - பார்கவியின் குரல் அரற்றியது.

"அக்கா! அம்மாவுக்கு ஒண்ணும் இல்லையே. நன்றாகத்தானே இருக்கிறார்கள். சொல்லுங்க அக்கா" - தன் படபடப்பை மறைத்துக்கொண்டு இயல்பாகக் கேட்பது போல் கேட்டாள்:

"ஐயோ! வசந்தி நான் என்னன்னு சொல்லுவேன். நான் என் நாத்தனார் கல்யாணத்துக்காக காஞ்சிபுரம் போயிட்டு இன்னிக்கு காலையிலதான் வந்தேன். இங்கே என்னெல்லாமோ நடந்திடுச்சும்மா" - அழுதவாறே சொன்னாள்.

"அக்கா ப்ளீஸ். என்ன ஆச்சுன்னு சொல்லுங்க. அம்மாவுக்கு பயப்படுற மாதிரி ஒண்ணும் ஆகலையே" - கேட்கும்போதே உடல் நடுங்கியது.

"வசந்தி! மனதை திடப்படுத்திக்கம்மா. உன் அம்மா செத்துப்போய் ரெண்டு நாளாச்சும்மா."

உடல் முழுக்க அதிர கையில் ரிஸீவரோடு தரையில் பொத்தென அமர்ந்தாள் வசந்தநிலா. அறையை சுத்தம் செய்து கொண்டிருந்த சிந்தாமணி ஓடிவந்தாள்.

"அம்மா! என்னங்கம்மா ஆச்சு? எழுந்திருங்கம்மா."

"எனக்கு ஒண்ணுமில்ல. நீ போ." – என்றவாறு மெல்ல எழுந்து போனை காதிற்குக் கொடுத்தாள். எதிர்முனையில் பார்கவி கத்திக் கொண்டிருந்தாள்.

"வசந்தி! லைன்ல இருக்கியா? நான் பேசறது கேட்குதா?"

"சொல்லுங்கக்கா! எப்படி... எப்படி ஆச்சு?" – விம்மினாள்.

"வசந்தி. என்ன ஆச்சுன்னு எனக்குத் தெளிவாத் தெரியல்ல. ஆனா யாரோ உன்னைத் தேடி ரெண்டு நாளா வந்து விசாரிச்சிருக்காங்க. உன் அம்மா ஏதோ சொல்லி அனுப்பிட்டாங்க போலிருக்கு. இது எப்படியோ உன் அண்ணனுக்கும் அந்தத் தடியனுக்கும் தெரிஞ்சுப்போச்சு போலிருக்கு. உன் அம்மாக்கிட்ட அடிச்சு மிரட்டியிருக்காங்க. அம்மா எதுவும் சொல்லாமலே உசுரை விட்டுட்டாங்களாம்."

"எங்க அம்மாவுக்கு... அங்கே யாருமே ஹெல்ப் பண்ணலையாக்கா. எல்லாருடைய மனிதாபிமானமும் செத்துப்போச்சா?"

"ரெண்டும் குடிகாரப் பசங்க. யார் போய் பேச முடியும். அதுவும் ஊரெல்லாம் என்ன சொல்லி வெச்சிருக்காங்க தெரியுமா? கல்யாண சமயத்தில பொண்ணு ஓடிப்போனதில அவமானம் தாங்காம கயத்துல தொங்கினதா சொல்லி வைச்சிருக்காங்க."

தலையில் அடித்துக்கொண்டு அழுதாள் வசந்தநிலா. "கடவுளே! என் அம்மாவை இப்படிப் பறிகொடுக்கவா இங்கே ஓடி வந்தேன். நல்லதோ, கெட்டதோ அங்கேயே நான்



இருந்திருக்க வேண்டும். இப்படித் தாயை தனியாய் விட்டுட்டு ஓடிவந்தேனே. எனக்கு கடவுள் எவ்வளவு பெரிய தண்டனையைத் தந்திருக்கார். கடைசிவரை என் தாயின் சடலத்தைக் கூட காண முடியாமல் போய்விட்டதே. இந்தப் பாவத்தை நான் எங்கே கொண்டுபோய் தொலைப்பேன். இனி நான் யாருக்காக வாழ வேண்டும்."

"அப்படிச் சொல்லாதே வசந்தி. நீ உடனே புறப்பட்டு வா. உன் அம்மாவை இன்னும் எடுக்கவில்லை."

சட்டென கண்ணீர் நிற்க அதிர்ந்தாள். "என்ன?"

"ஆமாம். நீ எப்படியும் உன் அம்மாவைப் பார்க்க வருவேன்னு ரெண்டுநாளா ஐஸ் பெட்டியில வெச்சு ரெண்டுபேரும் காவல் காத்திட்டு இருக்காணுங்க. இன்னிக்கு ஈவ்னிங் எடுக்கிறதா பேச்சு. அதுக்குமேல தாங்காதாம். வயசானவங்கல்ல. தெருவில பேசிக்கிட்டாங்க."

"அக்கா! நான். உடனே புறப்பட்டு வர்றேன். தயவு செய்து என் அம்மாவை எடுக்கவிடாம பார்த்துக்கங்க. ப்ளீஸ். நான் கடைசியா என் அம்மாவை ஒரே ஒருமுறை பார்க்கணும்."

"அது சரிம்மா. ஆனா நான் என்ன பண்ண முடியும்?"

"அக்கா! சும்மா தெருவல இருக்கிறவங்க கிட்ட அமராவதி அம்மாவோட பொண்ணு வந்திட்டு இருக்காளாமேன்னு ஒரு வார்த்தை விடுங்க. காத்துவாக்கில அது அண்ணனுக்குப் போய்ச் சேர்ந்திடும். கண்டிப்பா எடுக்கமாட்டான். அதுக்குள்ள நான் வந்திடுவேன்."

"அப்போ... நீ வர்றியா?"

"ஆமாக்கா. என் அம்மாவை நான் பார்த்தே ஆகணும்."

"இவனுங்க உன்னை சும்மா விடமாட்டானுங் களேம்மா"

"நடப்பது நடக்கட்டும். போனை வெச்சிடுங்க. நான் கிளம்பி வர்றேன்" என்றவாறு போனை வைத்துவிட்டு கண்களை அழுந்தத் துடைத்துக்கொண்டாள்.

வேகமாய் தன் அறைக்குள் நுழைந்து நிலாவின் புடவையைக் கழற்றினாள். கப்போர்டில் இருந்த தன் புடவையை எடுத்தாள். கிழிந்திருந்த பகுதியை ஓரம் தைத்து வைத்திருந்தாள். அதே ரவிக்கையை போட்டுக்கொண்டு மளமளவென புடவையைச் சுற்றினாள்.

புடவையின் முந்தானையில் அம்மா தந்த முன்னூறு ரூபாய் இருந்தது. முடிச்சை அவிழ்த்து பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு மீண்டும் முடிந்துகொண்டாள். நிலாவின் புடவையை மடித்து எடுத்த இடத்தில் வைத்துவிட்டு அறையைப் பூட்டிவிட்டு சாவியை மகாதேவன் அறையில் வைத்தாள்.

புகைப்படத்தில் புன்னகைத்த நிலாவைப் பார்த்தாள். "இனி இந்த வீட்டிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை நிலா. நான் போகிறேன். என்னை மன்னித்துவிடு. என்னால் எதையும் செய்ய முடியவில்லை. மன்னித்துவிடு" - என்றவாறு அறையைவிட்டு வெளியேறினாள்.



"சாவித்திரிம்மா. நான் அவசரமா ஊருக்குப் போகணும். ஐயா வந்தா சொல்லிடுங்க"- என்று கூறி அவள் பதிலுக்குக் காத்திராமல் வெளியே வந்தாள். போர்டிகோவில் நின்று காரைத் துடைத்துக் கொண்டிருந்த கந்தசாமியை நெருங்கினாள்.

"கந்தசாமி அண்ணே!"

தன் வேலையை நிறுத்திவிட்டு ஓடிவந்தார் கந்தசாமி. "என்னங்கம்மா!"

"அண்ணே! இந்த ஊர்ல பஸ் எங்கே நிற்கும்னு எனக்குத் தெரியாது. என்னைக் கொஞ்சம் பஸ் ஸ்டாப்ல இறக்கி விட்டுறீங்களா?"

"உட்காருங்கம்மா" - பணிவாய் கதவைத் திறந்து விட்டார். பதில் பேசாமல் ஏறி அமர்ந்தாள். கார் புறப்பட்டது. அந்த வீட்டைத் திரும்பியும் பாராமல் புறப்பட்டாள் வசந்த நிலா.

அஞ்சு கிராமம். நேரம் மாலையை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த ஓலைக் குடிசையில் கண்ணாடி பெட்டியினுள் அமைதியாய் படுத்திருந்த அமராவதி வெளுத்திருந்தாள். தொடர்ச்சியாய் மூன்றாவது நாள்வரை பனிக் கட்டியின் மீது கிடந்த உடல் லேசாய் விரைத்திருந்தது. அவளது இறப்பை எண்ணி அழக்கூட ஆளில்லாமல் இருக்க, சற்றுத் தள்ளி தரையில் அமர்ந்திருந்தனர் குணாவும் பாஸ்கரனும்.

அவர்களைச் சுற்றிலும் காலியான மதுபாட்டில்களும் ஏராளமான சிகரெட் துண்டுகளும் வீடு முழுக்க இறைந்து

கிடந்தன. வெளியே மழை லேசாய் தூறிக் கொண்டிருக்க, கோபமாய் கத்தினான் குணா.

"பாசு! இனிமே அவ வரமாட்டாடா. பேசாம பொணத்தை எடுத்துடலாம். இந்த சனியன் பிடிச்சு மழைவேறு விடாமல் அழுது கொண்டிருக்கிறது."

"டேய்! அழட்டும்டா. என் ஆத்தா போனதுக்கு அதாவது அழட்டும். விடு" - என்றவாறு புகையை ஆழமாய் இழுத்து விட்டான் பாஸ்கரன்.

"பாசு! உண்மையாவே உனக்கு வருத்தம் இல்லையா? என்ன இருந்தாலும் உன் அம்மாடா."

"அடப்போடா. அம்மாவாது ஆட்டுக் குட்டியாவது. எத்தனை முறை கேட்டேன் தெரியுமா? கிழவி வாயைத் திறக்கவே இல்லையே. அதான் கோபத்தில தலைய சுவத்தில மோதினேன். பட்டுன்னு போயிட்டா. இப்போ என் கவலையெல்லாம் அந்த ஓடுகாலிய பத்தித்தான். அப்படி எங்கேதான் போயிருப்பா?"

"அவ எங்கே இருக்கான்னே தெரியாம எப்படிடா வெயிட் பண்ணச் சொல்ற? ஏற்கனவே நம்ம ஏட்டு மோப்பம் பிடிச்சு வந்துட்டார். கவனிச்சு அனுப்பியிருக்கேன்."

"எதையும் உளறிட்டியா?" - சிகரெட்டை தூக்கி வீசிவிட்டு பதட்டமாய்க் கேட்டான்.

"சேச்சே! பொண்ணு ஓடிப்போன துக்கத்தில நெஞ்சுவலி வந்து உசுரு போயிடுச்சின்னு சொன்னேன். பொண்ணு வர்றதுக்காக வெயிட் பண்றோம்ன்னு சொல்லி அனுப்பினேன்."



"நம்பிட்டாரா?"

"சும்மா நம்பிடுவாரா? வெயிட்டா கொடுத்து அனுப்பியிருக்கேன். ரொம்ப வெயிட் பண்ணாதீங்க. மாட்டிக்கப் போறீங்கன்னு அட்வைஸ் பண்ணிட்டுப் போறார். இதுவே அதிகம்டா. இதுக்கு மேலேயும் நாம வெயிட் பண்ண வேண்டாம். எவனாவது பெரிய ஆபிஸர்கிட்ட போய் போட்டுக் கொடுத்திட்டா பெரிய பிரச்சனையாகிடும்."

"நம்மைப் பத்திப் போட்டுக்கொடுக்க எவனுக்கு தைரியமிருக்கு. இவளைக் காணோமேடா" - பற்களை நறநறவெனக் கடித்தான் பாஸ்கரன்.

"அவளை எப்பவேணா கண்டுபிடிச்சுக்கலாம் பாசு. ஆனா இதுக்கு மேலயும் இந்த பொணத்தோட இருப்பது நமக்கு நாமே சூனியம் வெச்ச மாதிரி."

"எனக்கும் புரியுது குணா. ஆனா நமக்கு இருக்கிற ஒரே துருப்புச் சீட்டு என் அம்மாதான். எப்படியும் அம்மாவை வெச்சுத்தான் அவளை நாம பிடிக்கமுடியும்."

"அதுசரி. ஆனா உன் அம்மா இறந்தது அவளுக்குத் தெரியாமப் போயிருந்தா..."

"தெரியும் குணா. நிச்சயமாத் தெரியும்."

"எப்படிடா... இவ்வளவு உறுதியாச் சொல்றே...?"

"குணா. நமக்கே தெரியாம இங்க உள்ள யாரோ வசந்திகிட்ட பேசிட்டுத்தான் இருக்காங்க. அது யாருன்னுதான் எனக்குத் தெரியல்ல. தெரிஞ்சது ஒரே அமுக்கா அமுக்கிடுவேன்."

"என்ன பாசு சொல்றே?" – வியந்தான் குணா.

"ஆமாம்டா. மத்யானம் ஹோட்டலுக்குப் போனேன்ல. அப்போ தெருவில பேசினதைக் கேட்டேன். வசந்தி புறப்பட்டுட்டாளாம். அநேகமா இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவா."

குணா துள்ளி எழுந்தான். "மச்சான் நீ என்ன சொல்றே?"

"ஆமாம்டா. அவ எப்படியும் வந்திடுவா. அதுவரை நாம பொணத்தை எடுக்கக்கூடாது. என்ன சொல்ற?"

"கண்டிப்பாடா. என்ன பிரச்சனை வந்தாலும் நான் பார்த்துக்குறேன். எனக்கு... எனக்கு வசந்தி வேண்டும்" – என்றான் கண்களில் வெறி மின்ன.

"உனக்குத்தான்டா. அதில என்ன சந்தேகம் உனக்கு?"

"மச்சான்! ஒருவேளை அவ வேற எவனையும் கட்டிக்கத்தான் நமக்குத் தெரியாம ஓடியிருப்பாளோ. ஒருவேளை புருஷனும் பொண்டாட்டியுமா வந்து நின்னா... நாம என்ன செய்யுறது?"

"ஏய்! என் தங்கையைப் பத்தி எனக்குத் தெரியும்டா. அவளுக்கு அப்படியெல்லாம் எந்தப் பழக்கமும் கிடையாது. நமக்குப் பயந்து எங்கேயோ பதுங்கத்தான் போயிருப்பா. வேணா பாரேன் அவ தனியாத்தான் வருவா."

"அப்படி வந்தா வந்ததும் கல்யாணம்தான் சரியா?" – ஆவலாய்க் கேட்டவனை அதட்டினான் பாஸ்கரன்.



"என்ன குணா முட்டாள் மாதிரி பேசுற. கிட்டத்தட்ட ஒரு மாசமா தாயைக் காணாம இருந்தவ இப்படித் தாயோட பொணத்தைப் பார்த்ததும் கதறி அழுவாளா இல்லே உங்கிட்ட உட்கார்ந்து தாலி வாங்குவாளா?"

"அப்போ... என் கல்யாணம்?"

"பொறு குணா. முதல்ல அவ வரட்டும். இங்க வந்தபிறகு நம்மளைத் தாண்டி எங்கேயும் போக முடியாது. அது அவளுக்கும் தெரியும். இழவு காரியம் முடிஞ்சதும் உங்க கல்யாணம்தான். சந்தோஷமா?"

"இதுபோதும் மச்சான். அப்போ நான் மேள தாளத்துக்குச் சொல்லிடவா? வசந்தி வரும்போது சும்மா தெருவே அதிர வேண்டாம்?"

"சொல்லு. என் ஆத்தா உசுரைக் கொடுத்து உங்க கல்யாணத்தை நடத்தித் தரப்போறா. அவ கடைசி ஊர்வலம் சும்மா சுடுகாடு வரை அதிரணும். தேர் மாதிரி பாடை கட்டணும். நான் இங்கே இருக்கேன் நீ போய் எல்லாத்தையும் ரெடி பண்ணு."

"அதுக்கெல்லாம் ஆள் இருக்கான். போன் பண்ணினா பத்தே நிமிஷத்தில ரெடி பண்ணிடுவான்." – என்றவாறு தன் செல்போனை எடுத்து குணா பேச ஆரம்பித்த விநாடி, உடல் முழுக்க நனைந்தபடி மூச்சிரைக்க ஓடி வந்தாள் வசந்தநிலா.

காதிலிருந்த போனை எடுத்த குணா சந்தோஷமாய் பாஸ்கரனைப் பார்க்க, அவன் அவசரமாய் எழுந்து

தங்கையை நெருங்கினான். அவர்களைக் கவனிக்க விரும்பாமல், நேராய் தாயிடம் ஓடினாள். தாயின் உடலைப் பார்த்து தரையில் மண்டியிட்டுக் கதறத் துவங்கினாள்.

இருவரும் அவளை நெருங்கி பார்வையால் துழாவினர். நெற்றி, கழுத்து, கால் விரல்கள் என பார்வையை ஓடவிட்டு நிம்மதியாய் புன்னகைத்துக் கொண்டனர்.

"பார்த்தியா நான் சொன்னேன்ல. என் தங்கை தனியாத்தான் வருவான்னு, இது அம்மா வாங்கிக் கொடுத்த புடவை. அம்மா செய்த செயின்தான். எப்படிப் போனாளோ அப்படியேதான் வந்திருக்கா. இல்லம்மா?" - என நயமாய்க் கேட்டான் பாஸ்கரன்.

வெடுக்கென நிமிர்ந்தாள். "நீயெல்லாம் ஒரு மனுஷனா? என்னடா பண்ணினே என் அம்மாவை?" - கோபமும் கண்ணீருமாய்க் கேட்டவளை கையமர்த்தினான்.

"உனக்கு மட்டுமில்ல எனக்கும் அம்மாதான்."

"அதையே தான் நானும் சொல்றேன். உன்னையும் பத்து மாசம் சுமந்து வலிச்சுத்தானே பெத்தாங்க. அந்தத் தாயை கொல்ல எப்படிடா உனக்கு மனசு வந்தது? உன்னை என்ன குப்பைத் தொட்டியிலா வீசியெறிஞ்சாங்க."

"ஏய் வாயை மூடுடி. பெத்துட்டா மட்டும் போதுமா. பெத்தப் புள்ளை நல்லா வாழணும்னு நினைக்க வேண்டாம்?"

"ச்சீ! நீயெல்லாம் ஒரு ஆம்பளை. உழைச்சு சம்பாதிக்க உனக்கு கை, கால் இல்ல. என்னை வித்துத்தான்



சம்பாதிக்கணுமா? அந்தக் காசை வாங்க உனக்குக் கூசாது?"

"ஏய்! நான் என்ன உன்னைப் பத்துப்பேருக்கா விக்கப்போறேன். ஒருத்தனுக்குத்தானே கட்டி வெக்கப் போகிறேன். அதுக்கு வாங்குற வரதட்சணைதான் ரெண்டு லட்சம்."

"பாவி! நீ உருப்படமாட்டே. பன்றியோட சேர்ந்த கன்று எதைத் தின்னுமோ. அதைத்தான் நீயும் தின்னப்போறே."

"அறைஞ்சு பல்லைப் பேத்திடுவேன் ஓடுகாலி நாயே. உன்னாலத் தாண்டி அம்மா செத்தா. நீ எங்கே போய் ஊர்மேயப் போன?" - கேட்டவாறே வசந்தநிலாவின் தோளைப் பற்றி தூக்கி நிறுத்தினான் பாஸ்கரன்.

"விடு என்னை. உன் மூஞ்சில முழிக்காம சாகத்தான் போனேன். விதி என்னை சாகவும் விடல" - என அவனை உதறினாள்.

"அதெப்படி கண்ணு உன் உசுரு என்னை விட்டுட்டுப் போயிடும். உனக்காக ஒருத்தன் ஒத்தைக்கால்ல தவம் பண்ணிட்டு இருக்கேனே. என்னை விட்டுப் போயிட முடியுமா உன்னால?" - என்ற குணாவை எரித்து விடுவதைப்போல் பார்த்தாள்.

"கொலைகார நாயே. நீதான்... நீதான் எல்லாத்துக்கும் காரணம். சும்மா இருந்த என் அண்ணனைக் குடிகாரனாக்கி இன்று தாயையே கொல்லும் அளவிற்கு கொண்டு வந்தவன் நீதான். உன்னை உயிரோடு விட்டால் இன்னும்

என்னென்ன செய்வாயோ. முதலில் உன்னைக் கொல்ல வேண்டும்" - வெறியோடு அவன் கழுத்தை இறுகப் பற்றினாள் வசந்தநிலா.

இதை எதிர்பாராத குணா அவள் பிடியில் சிக்கி மூச்சுக்குத் திணறினான். கைகளால் அவளைப் பலங் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளியும் வசந்தநிலாவின் பிடி தளரவில்லை. மேலும் மேலும் இறுக்கினாள்.

கண்கள் தெறித்துவிடுவதைப் போல் பிதுங்க, பாஸ்கரனைப் பற்றிக் கொண்டான் குணா. பாஸ்கரன் தலையை சிலுப்பிக்கொண்டு தங்கையை நெருங்கினான். தன் பலத்தைத் திரட்டி பளாரென அவள் கன்னத்தில் அறைய கையை விலக்கினாள் வசந்தநிலா.

பெரிய விடுதலை உணர்வோடு தொண்டையை நீவிக் கொண்டே தொடர்ச்சியாய் இருமினான் குணா. அதற்குள் அக்கம் பக்கம் உள்ளவர்கள் கூடிவிட, பற்களைக் கடித்தான் பாஸ்கரன்.

"குணா! நீ சொன்னதுதான் சரி. முதல்ல உங்க கல்யாணத்தை முடிச்சிடலாம். அப்புறமா பொணத்தை எடுக்கலாம்" - என்றதும் துடித்துப்போனாள்.

"அண்ணா! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. பெத்த தாயோட பொணத்தை வீட்ல வெச்சிட்டு எனக்கு கல்யாணம் பண்ணப் போறியா?"

"ஆமாம்டி. உனக்கு ரொம்பத் துணிச்சல் வந்திடுச்சி. நாங்க இப்படிப் பொணத்தை எடுத்திட்டுப் போனதும் நீ அப்படியே கம்பிய நீட்டிட்டா என்ன பண்றது? அதான் இந்த



ஏற்பாடு. குணா தாலிய எடு. என் அம்மா முன்னாடியே உங்க கல்யாணம் நடக்கட்டும்."

"ந்நோ" - வீறிட்டவாறே ஓடிச்சென்று தாயின் சடலம் இருந்த கண்ணாடிப் பெட்டியின் மேல் விழுந்து கதறினாள்.

பார்த்தவர்களின் மனம் பதறியது. சற்று வயதானவர் முன்னே வந்தார். "ஏம்பா. நீ செய்யுறது உனக்கே சரின்னு படுதா. பெத்தவள இழந்துட்டு நிக்கிற புள்ளைய இப்படி தாயோட சடலத்தை வெச்சிக்கிட்டே கல்யாணம் பண்ணிக் கொடுக்கப்போறியே. பாவம்ப்பா அந்தப் புள்ள!"

"யோவ் பெரிசு. இவ பாவமா? விட்டா என்னைக் கொன்னே போட்டிருப்பா. ஒழுங்கா வீடு போய்ச் சேருங்க. ஒரு பய இங்க நிற்கக்கூடாது. இது எங்க குடும்ப விஷயம். கிளம்பு. கிளம்பு" - குணா அதட்டவும் மறுவார்த்தை பேசாமல் கூட்டம் கலையத் துவங்கியது.

"இந்தப் பொண்ணு ஏன் திரும்பவும் வந்தா. அப்படியே போயிருக்கலாம். இப்போ இவனுங்ககிட்ட மாட்டிக்கிட்டு என்ன பாடு படப் போகுதோ?"

"இந்த அமராவதி மகளைக் கூட்டிக்கிட்டு எங்காவது போயிருக்கலாம். தாயும் மகளும் பொழைச்சிருப்பாங்க. ஆத்தாவும் போயிட்டா. இனி இந்தப் புள்ளையோட கதி?"

"அந்த தறுதலைக்கு வாக்கப்பட்டு காலத்தைத் தள்ள வேண்டியதுதான். வேற வழியே இல்லையே. ம்ஹூம். இவளைக் காப்பத்த அந்த ஆண்டவன்தான் நேரில் வரணும்!" - என்றவாறு ஒருவர் பின் ஒருவராக

புலம்பியவாறே நகர பேரிரைச்சலாக வந்து நின்றது போலீஸ் ஜீப்.

மளமளவென போலீஸார் இறங்கி வீட்டினுள் நுழைய, கலைந்த கூட்டம் ஆவலாய்க் கூடியது. ஸைரன் ஒலியுடன் ஆம்புலன்ஸ் வர அதன் பின்னே வந்த காரில் இருந்து இறங்கினர் மகாதேவனும் சத்யாவும்.

"பாட்டி! உன் வாயில சர்க்கரையைத் தான் அள்ளிக் கொட்டணும். நீ சொல்லி முடிக்கிறதுக்குள்ள அந்த ஆண்டவனே நேரில் வந்திட்டாரே" - என்ற பார்கவியைப் பார்த்து புன்னகைத்தார் மகாதேவன்.

# 15

வலி வந்தாலும் மொழி இல்லாம
நான் நின்னேனே ஊமையாய்
நீ பெண்ணல்ல ஒரு தெய்வந்தான்
இந்தக் கண்ணீரு தேவையா?

"விட்டது சனின்னு ரெண்டு நாள்கூட நிம்மதியா இருக்க முடியல. திரும்பவும் கூட்டிட்டு வந்திட்டாரு பெரியப்பா. அப்படி என்னதான் மோகமோ உங்க அண்ணனுக்கு அவமேல." - போனில் பொரிந்து கொண்டிருந்தான் வாசு.

"அசிங்கமா பேசாதடா. சரி இப்ப அவ எப்படி இருக்கா?"

"எப்படி இருக்காளா? மாமனும் மருமகனும் தாங்கோ தாங்குன்னு தாங்குறாங்க. நிலா சாப்பிடு, நிலா தூங்குன்னு



மாஞ்சு மாஞ்சு கவனிக்கிறாங்க. இந்த சத்யாப்பய ஒரு வாரமா வீட்லயே இருந்து அவளைக் கவனிக்கிறான்னா பாருங்களேன்."

"என்னடா சொல்ற?"

"ஆமாம்பா. வெளிய போறதேயில்ல. மணியை அனுப்பி வேலையை முடிச்சுக்கிறான். நிலாவைவிட்டு நகர்றதேயில்லை. கட்டுன பொண்டாட்டி மாதிரி அவ்வளவு அக்கறை. பார்க்கவே கடுப்பா இருக்கு."

"சரி சரி. யார் மேலயும் கோபத்தைக் காட்டாதே. பொறுமையா இரு."

"எவ்வளவு நாளைக்கு? எனக்கென்னவோ நம்பிக்கையில்லை."

"ஏன்டா? என்ன நம்பிக்கை இல்லை."

"முதல்ல பெரியப்பா மட்டும்தான் அவ மேல பைத்தியமா இருந்தார். இப்ப சத்யா ஒரு படிமேல போயி அவளுக்கு சாப்பாடே ஊட்ட ஆரம்பிச்சுட்டான். இனிமே என்ன? ஒரு நல்லநாளாப் பாத்து அவளைக் கட்டிவெச்சி இந்த சொத்துக்கு வாரிசாக்கிடுவாரு உங்க அண்ணன். பிறகு நாம பட்ட பாடெல்லாம் வீண்."

"வீணாகாதுடா. சத்யாவைப் பத்தி எனக்குத் தெரியும்டா. அவன் அப்படியெல்லாம் பொண்ணுங்களைப் பார்த்ததும் மயங்குறவன் இல்ல."

"அப்பா! அதெல்லாம் இவ வர்றதுக்கு முன்னால. இப்போ தலைகீழா மாறிட்டான். அவனைத் தனியே பார்க்கவே முடியல்ல."

"டேய்! தாயைப் பறிகொடுத்திட்டு தனியா நிற்கிறாளேன்னு ஒரு பரிதாபத்தில கூடமாட இருந்து ஆறுதல் சொல்வான். இதையெல்லாம் நாம பெரிசா எடுத்துக்கக்கூடாது."

"இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சா கிழவி செத்ததைச் சொல்லாமலே விட்டிருக்கலாம். நாம நம்ம வாயாலேயே கெட்டோம்ப்பா."

"அப்படி இல்லடா. எப்படியும் தாயைப் பார்க்க இவ கிளம்பிடுவா. அங்கே போனா அந்தக் குடிகாரப்பய இவளை விடமாட்டான்னு நினைச்சேன். ஆனா அண்ணன் இப்படி பின்னாலேயே போவார்னு நினைக்கலையே!"

"சமாதியில போய் சத்யா என்ன பேசினானோ தெரியல்ல. எவ்வளவு வேகமா வீட்டுக்கு வந்தாங்க. வேலைக்காரங்ககிட்ட விசாரிச்சாங்க. ரங்கநாயகி ஏதோ சொன்னா. உடனே சத்யா ரீ டயல் பண்ணி யார்கிட்டயோ பேசினான். பிறகு யார் கிட்டல்லாமோ விசாரிச்சான். உடனே கிளம்பிட்டாங்க. எனக்கு ஒண்ணுமே புரியல்ல. அப்புறம் பார்த்தா இவளைக் கூட்டிட்டு வந்து நிற்கிறாங்க."

"அங்கே என்ன நடந்ததுன்னு விசாரிச்சியா?"

"ம்... எல்லாம் விசாரிச்சேன். பெரியப்பா பெரிய போலீஸ் படையோடு போயிருக்கார். அவனுங்கள நாலு தட்டு தட்டினதும் இதுக்கு முன்னால ரெண்டு பொண்ணுங்கள கொன்னது வரை கக்கிட்டானுங்களாம். கிழவியோட பின்னந் தலையிலும் பெரிய காயம் இருந்ததாம். கையும் களவுமா பிடிச்சதால இனி வெளிய வரவே முடியாதுன்னு பேசிக்கிறாங்க."



"முட்டாப்பயலுக இப்படி மாட்டிக்கிட்டானுங்களே!"

"முட்டாளுகதான். இல்லன்னா அடிச்சுக் கொன்ன பொணத்தை மூணு நாளா வீட்ல வெச்சிட்டு இருப்பானுங்களா? அப்பா! இனி அவனுங்கள நம்பி எந்தப் பிரயோஜனமும் இல்லப்பா. தூக்கோ ஆயுள் தண்டனையோ. ஆனா நிச்சயம் வெளியே வரப் போறதில்லை. இப்போ நாம என்ன பண்ணப்போறோம்?"

"பொறுடா. கொஞ்ச நாளைக்கு இதை ஆறப்போடு. சாதாரணமா இரு. அடுத்தவாரம் உன் அண்ணிக்கு குன்னூர்ல வெச்சு வளைகாப்பு. அதுவரைக்கும் எந்தப் பிரச்சனையும் வேண்டாம். பிறகு பார்த்துக்கலாம்."

"சரிப்பா. நீங்க எப்போ வர்றீங்க?"

"இல்லடா. உன் அம்மாவும் நானும் இன்னும் ரெண்டு நாள்ல குன்னூர் போறோம். நீ வருவ இல்ல. அப்போ பேசுவோம்."

"பெரியப்பாவைக் கூப்பிட்டானா அண்ணன்?"

"பின்னே. நேர்ல வந்து கூப்பிடுவான்டா. எப்போ வர்றானோ தெரியல்ல."

"சரிப்பா. போனை வெச்சிடுங்க. பெரியப்பா வர்றார்" - என்றவாறு போனை கட் செய்தான்.

"என்ன வாசு போன்ல யாரு?" - என்றவாறு அவனை நெருங்கினார் மகாதேவன்.

"அப்பாதான் பெரியப்பா."

"அப்பாவா? எங்கேயிருந்து பேசுறான்?"

"கம்பெனியில இருந்து பேசினாங்க. வெளியே கிளம்புறீங்களா பெரியப்பா?"

"நீதான் போற. இந்தா! காரை எடுத்திட்டுப் போயி வொர்க்கர்ஸ்ஸுக்கு சம்பளத்தைக் கொடுத்திட்டு வா. அப்படியே பிளம்ஸ் எல்லாம் பறிச்சு லோடு ஏத்தி அனுப்பியாச்சான்னு பார்த்திட்டு வா."

"சத்யா... எங்கே பெரியப்பா?"

"அவன் வெளியே போறான். நீ கிளம்பு. நேரமாச்சு" - என கார் வரை வந்து அவனை அனுப்பிவிட்டு வீட்டினுள் நுழைந்தார் மகாதேவன்.

கட்டிலில் அசையாமல் அமர்ந்து கொண்டிருந்தாள் வசந்த நிலா. முகத்தில் விரக்தியும் சோகமும் இழை யோடியது. கண்களில் லேசாய் கண்ணீர். மெல்ல அவளருகில் அமர்ந்து தலையை வருடினார்.

"நிலாம்மா. இவ்வளவு நேரம் சொல்லியும் இப்படியே இருந்தா எப்படிம்மா?"

"எனக்கு எங்கேயும் போகப் பிடிக்கல ஸார். கம்பெல் பண்ணாதீங்க ப்ளீஸ்."

"அப்படியே விடுறது தப்பும்மா. சோகத்தை சீக்கிரம் விரட்டிடணும். இல்லேன்னா அது நம்மையே ஆக்கிரமிச்சு அடிமையாக்கிடும். இப்ப என்னையே



எடுத்துக்க. என் சோகத்தையெல்லாம் உன்னைப் பார்த்ததும் மறந்துடலையா?"

"பாவம் ஸார் அம்மா. தலையில எவ்வளவு பெரிய காயம். இரத்தமெல்லாம் உறைஞ்சு கறுப்பாய் மாறி... ஐயோ! எப்படி வலித்திருக்கும். நான் அங்கே இருந் திருந்தால் என் அம்மாவை இழந்திருக்க மாட்டேனே! என்னால்தானே..." - மேலே பேசமுடியாமல் விம்மினாள்.

அவளைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டார். "தாயை இழப்பது பெரிய கொடுமைதாம்மா. ஆனா அதையே நினைச்சு இப்படி உடம்பை வருத்திக்காதேம்மா."

"எனக்குன்னு யாருமே இல்லையே. இனி என் எதிர்காலம் எப்படிப் போகும். நானும் என் அம்மாவோடயே போயிருக்கலாமே" - கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

"நானில்லையா உனக்கு? என்னை உன் தந்தை யாக ஏற்றுக் கொள்ளவே மாட்டாயா? நானும் அனாதை தானேம்மா."

"ஸார்!"

"இறந்து போன என் மகளை உன் உருவத்தில் நான் பார்ப்பதுபோல் நீ உன் தாயாய் என்னை நினைத்துக் கொள்ள மாட்டாயாம்மா?" - அவரது கண்களும் கசிந்தன.

"வேண்டாம்ப்பா. நீங்க கண்கலங்க வேண்டாம். இந்த உலகத்தில எனக்கு இருக்கிற ஒரே உறவு நீங்கதான்ப்பா" - என அவரைக் கட்டிக்கொண்டாள்.

மகாதேவனின் உள்ளம் குளிர்ந்துபோனது. நிலாவின் கண்ணீரைத் துடைத்துவிட்டு அவளது நெற்றியில் முத்த மிட்டார். "இது போதும் ராஜாத்தி. என் மகளே என்னைக் கூப்பிட்டமாதிரி இருக்கும்மா. இது போதும்மா."

வாசலில் நின்று அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தான் சத்யன். மாமா இதுபோல் சந்தோஷப் பட்டுப் பார்த்ததில்லை. நிலாவே திரும்பவும் கிடைத்தது போல் இந்த முகத்தில் எத்தனை பரவசம்? அதைக் கலைக்க விரும்பாமல் விலகி வெளியேறினான்.

"சத்யா! ரெடியாகிட்டியாப்பா?" - என அழைத்தார் மகாதேவன்.

"ம். ஆச்சு மாமா. நிலாவுக்கு விருப்பமில்லைன்னா விட்டுடலாம்" - என்றான் திரும்பி வந்து.

"நிலாம்மா. முகத்தை அலம்பிட்டு கிளம்பும்மா. ரொம்ப அருமையான இடம். பொறுமையா காலற நடந்துட்டு வாம்மா." - என்றார் வசந்தநிலாவிடம்.

"நீங்களும் வாங்களேன் அப்பா."

"இல்லம்மா. மலைமேல ஏறக்கூடாதுன்னு டாக்டரும் சத்யாவும் உத்தரவு போட்டிருக்காங்க. நீங்க போயிட்டு வாங்க. எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு."

"சரிப்பா" - என்றவாறு எழுந்து அவள் பாத்ரூமை நோக்கிச் செல்ல, மகாதேவன் எழுந்து சத்யனை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

"சத்யா! பாவம்ப்பா இந்தப் பொண்ணு. ரொம்ப மனசொடிஞ்சு போயிருக்கா. பார்த்து பதமா பேசு. அப்படியே



நம்ம தோட்டத்தையெல்லாம் கூட சுற்றிக்காட்டு. சந்தோஷமா வெச்சுக்கப்பா."

"என்ன மாமா இது? இதோ இருக்கிற மலைக்குத்தானே போறோம்."

"இருக்கட்டும்ப்பா. நம்ம பேசுற பேச்சில அந்தப் பொண்ணு தன்னோட இழப்பையெல்லாம் மறக்கணும்ப்பா. அதுக்காகத்தான் சொல்றேன்."

"சரி மாமா. நான் பாத்துக்கிறேன்" - என சொல்லிக் கொண்டிருந்த போது வெளியே வந்தாள் வசந்தநிலா.

இதமான ரோஜா நிற எம்பிராய்டரி புடவை. நேர்த்தியாய் கட்டியிருந்தாள். எளிமையான ஒப்பனையில் பளீரிட்டாள்.

"ஒரு நிமிடம் இரும்மா" - என்றவாறு தன் அறைக்குள் நுழைந்து திரும்பிய மகாதேவன் கையில் இரட்டை அடுக்கு மாலை இருந்தது. டாலரில் ரோஜா நிற கற்கள் பதிக்கப்பட்டு முத்துவரிசை ஆடியது.

"அப்பா! எதுக்கு இதெல்லாம்?"

"போட்டுக்கம்மா. இதெல்லாம் எதுக்கு இருக்கு? நிலாவுக்கு எப்பவுமே உடைக்கு ஏத்த மாதிரி நகை போடுறது ரொம்பப் பிடிக்கும். இந்தக் கலர் கற்கள் கிடைக்காம நம்ம ஆசாரி திண்டாடிப் போயிட்டார் தெரியுமா? அப்புறமா வெளியூர்ல இருந்து வரவழைச்சு செய்தார்."

"எனக்கு எதுக்குப்பா?"

"பின்னே நானோ சத்யாவோ போட்டா நல்லாவா இருக்கும்?"

சிரித்தான் சத்யன் "மாமா இப்படிப் பேசி எவ்ளோ நாளாச்சு?"

"இனிமே பேசுவேன். இப்போ நேரமாச்சு ம். கிளம்புங்க. போட்டுக்கம்மா" - என அவளிடம் கொடுத்தார்.

தயக்கமாய் நின்றாள் வசந்தநிலா. "வந்து... இது... இதெல்லாம்..."

"நிலா! இதுல தயங்க என்ன இருக்கு? இப்போ நாம போற இடத்தில நம்ம எஸ்டேட்ல வேலை செய்யுறவங்க எல்லாம் உன்னைப் பார்ப்பாங்க. இதைப் போட்டுக்கிட்டா அப்படியே ஜமீன் இளையராணி மாதிரி இருப்பே. போட்டுக்கோ" - சத்யா முதன்முறையாய் தன்னை பெயர் சொல்லி அழைத்ததும் மறுவார்த்தை பேசாமல் வாங்கி அணிந்துகொண்டாள்.

மகாதேவன் நிறைவாய் புன்னகைத்தார். "அருமையா இருக்கும்மா. பார்த்து பத்திரமா போயிட்டு வாங்க."

"நிலா. உள்ளே கப்போர்டுல சால்வை இருக்கும் எடுத்துக்கோ. வர லேட்டானா குளிரும்" - என்றான் சத்யா.

"அதெல்லாம் கார்ல எடுத்து வெச்சிட்டேன். நீங்க கிளம்புங்க" - என்றார் மகாதேவன்.

"சரி மாமா. வர்றோம். வா நிலா" - என சத்யன் முன்னே நடக்க, அவனுடன் இணைந்து நடந்த நிலாவைப் பார்த்தவர்கள் விழிகளை விரித்தனர்.



"அம்மாடி! என்ன பொருத்தம் பாரேன். நம்ம சத்யா ஐயாவுக்கே செய்த மாதிரி என்ன அம்சம் இந்த அம்மா" - வாயைப் பிளந்தாள் ரங்கநாயகி.

"ரங்கா! கண்ணு போட்டுடாதே. அம்மா இன்னிக்குத்தான் சந்தோஷமா வெளியே புறப்படுறாங்க. நீ வேற கண்ணு வெக்காதே" - என்றாள் சாவித்ரி.

"சாவிம்மா. பொறாமையா பார்த்தாத்தான் திருஷ்டி விழும். நான் பார்த்தா ஒண்ணும் ஆகாது." - ரங்கநாயகியின் பேச்சு முகத்தில் புன்னகையை வரவழைக்க காரை அடைந்து முன்பக்கக் கதவைத் திறந்துவிட்டான் சத்யன்.

அமைதியாய் அவள் ஏறி அமர்ந்துகொள்ள, சத்யன் காரைக் கிளப்பினான். பின்னே வந்து நின்ற மகாதேவனுக்கு கையசைத்துவிட்டு வெளியேறினர். இருவரும் அமைதியாகவே வர சத்யன் டேப்பை ஆன் பண்ணி மெதுவாக பாடல்களை ஒலிக்க வைத்தான். இனிமையான இசை காதிற்கு இதமாய் இருந்தது.

"பாட்டுக் கேட்டுகிட்டே கார் ஓட்டுவது சத்யாவுக்குப் பிடிக்கும். சத்யா கார் ஓட்டுவதைப் பார்த்து மையல் கொண்டு நிலா எழுதியிருந்தது நினைவு வந்தது.

ரோஜா நிறம்கூட பிடிக்கும் என்று எழுதியிருந்தாளே என்ற நினைவு எழுந்தபோது சத்யன் வாய்விட்டே கேட்டு விட்டான்.

"நிலா! உனக்கும் ரோஜா நிறம் ரொம்பப் பிடிக்குமோ?"

"ம்? பிடிக்கும். உங்களுக்கு?"

"ரொம்பப் பிடிக்கும். கல்யாணப் புடவைகூட ரொம்ப ஆசைப்பட்டு இதே கலர்தான் எடுத்தேன்." – என்றவன் சட்டென பேச்சை மாற்றினான்.

"நீ குறிஞ்சிப்பூ பார்த்திருக்கியா நிலா?"

அவன் பேச்சை மாற்றுகிறான் என்று புரிந்தும் அவளும் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், "இதுவரை பார்த்ததில்லை. ராஜேஷ்குமார் கதையில படிச்சிருக்கேன். நீல நிறமா இருக்குமாமே" – என்றாள்.

"யா. பார்க்க ரொம்ப சூப்பரா இருக்கும். மொத்தமா கூட்டம் கூட்டமா பூத்திருக்கும். இப்போ நாம போற மலையோரத்தில கூட சிலசமயம் இருக்கும். எதுக்கும் சைடுல பார்த்திட்டே வா" – என்றான் உற்சாகமாய்.

"அப்படியா? நீங்க பார்த்திருக்கீங்களா?" – ஆர்வமாய்க் கேட்டாள்.

"ம். ஒருசில இடங்கள்ல பார்த்திருக்கேன். இந்த மலைமேல ஒரு கோயில்கூட இருக்கு நிலா. அமாவாசை அன்னிக்கு கூட்டம் வந்திட்டு போயிட்டு இருக்கும்" – என்றவாறு கரடுமுரடான மலைப்பாதை மீது கவனமாக காரை ஓட்டினான் சத்யன்.

அவன் கார் ஓட்டுவதையே பார்த்தாள். "நீங்க எவ்வளவு நாளா கார் ஓட்டுறீங்க சத்யா?"

வியப்பாய் அவளைப் பார்த்தான். மீண்டும் பாதையில் கவனத்தைச் செலுத்தியவாறே, "என்ன திடீர்னு இந்தக் கேள்வி?" – என்றான்.



"இல்ல. சும்மாதான்... நல்லா கார் ஓட்டுறீங்களே. அதான்."

"ஓ. தேங்க்யூ. என்னோட பதினாறாவது வயசில மாமாதான் காரோட்டக் கத்துக் கொடுத்தாங்க. நல்லா கத்துக்கிட்ட பிறகு முறைப்படி லைசென்ஸ் எடுத்த பிறகுதான் கார் வாங்கித் தந்தாங்க. அப்ப இருந்தே ஓட்டுறேன்."

"அப்போ பத்து வருஷத்துக்கு மேலே ஓட்டுறீங்களா?"

"பதிமூணு வருஷமா ஓட்டுறேன். ஏன்?"

"இத்தனை வருஷம் ஓட்டினாலும் இந்தப் பாதையில சிரமப்படுறீங்களே?"

"இது சிரமம் இல்ல. கவனம். எத்தனை வருஷ சர்வீஸ் இருந்தாலும் மலைமேல ஓட்டும்போது ரொம்பக் கவனமா இருக்கணும். கொஞ்சம் ஸ்லிப்பானாலும் போச்சு. அதள பாதாளத்துக்குப் போயிடுவோம்." – அவன் சொன்னதும் வெளியே எட்டிப் பார்த்தாள் வசந்தநிலா.

மிக உயரமான மலை அது. மேலே நின்று பார்க்கையில் வீடுகள் தீப்பெட்டி அளவில்தான் தெரிந்தது. பெரும்பாலும் பசுமையான மரங்கள் அடர்ந்திருந்தது. சாலையின் இருபுறமும் தெரிந்த பாறைகளின் இடுக்கையும் பாதாள சரிவையும் பார்த்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"பதிமூன்று வருடமாய் காரோட்டும் சத்யனே திணறுகையில் சில நாட்களே கார் ஓட்டக் கற்றுக்கொண்ட நிலா எப்படி காரை மலைமீது ஓட்டி வந்தாள் என்று ஏன்

யாரும் சிந்திக்கவில்லை. சிந்தித்து இருந்தால் வாசு மாட்டியிருப்பான்.

பெரிய இடத்துப் பெண். அதுவும் திருமணம் வேண்டாம் என்று உயிரை விட்டாள் என்று விஷயத்தை ஆராயாமல் விட்டுவிட்டார்களோ. வாசுதான் குற்றவாளி என்பதற்கு அந்த டயரி மட்டுமே போதாதுதான்.

ஆனால் சத்யனைப் பிடிக்காமல் நிலா தற்கொலை செய்து கொள்ளவில்லை என்பதற்கு அந்த டயரி போதும். முதலில் சத்யாவிடம் அதைக் காட்ட வேண்டும். அப்போதுதான் மேற்கொண்டு எதுவும் ஸ்டெப் எடுக்க முடியும். தன் சிந்தனையில் மூழ்கியிருந்தவள் கார் நின்ற பிறகும் உள்ளேயே அமர்ந்திருந்தாள்.

"இறங்கு நிலா. உன் பக்கம் அதிர்ஷ்டம் இருக்கு" - என்றான் சத்யா.

"என்ன? இறங்குமிடம் வந்திடுச்சா. என்ன அதிர்ஷ்டம். அதுவும் எனக்கு?" - என்றவாறே காரைவிட்டு இறங்கியவளின் கண்களைத் தன் கரங்களால் மூடினான்.

"என்ன... சத்யா என்ன இது?"

"ஷ். பேசாமல் வா" - என கண்களை பொத்திக் கொண்டே மெதுவாய் நகர்த்திக் கூட்டிப்போனான்.

வசந்த நிலாவிற்கு குறுகுறுத்தது. மலைக்காற்றின் ஜில்லிப்பைவிட சத்யனின் கரங்கள் சில்லிட்டது. அவனது அண்மை கதகதப்பூட்டியது. இனம்புரியாத உணர்வுடன் குதூகலமும் சேர்ந்துகொள்ள அவனுடன் நடந்தாள்.



ஓரிடத்தில் நின்று கைகளை மெல்ல விலக்கினான் "பார். நீ பார்க்க விரும்பிய குறிஞ்சிப் பூக்கள் உனக்காகவே பூத்திருக்கிறது பார். இது ரொம்ப அபூர்வமானது" - காதோரம் ஒலித்த அவனது மென்குரலில் சிலிர்த்து கண்களைத் திறந்தாள் வசந்தநிலா.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை மொத்தமாய் பூத்துக் குவிந்திருந்த இந்த சிறு நீலநிற மலர்கள்தான் குறிஞ்சிப் பூவா? என்ன அழகு. கண்களை விரித்து ஆசையாய் பார்த்தாள். நீலநிறமாக சற்றே வளர்ந்த சிறுபூக்கள். மொத்தமாய் பார்க்கும்போது ரம்மியமாய் இருந்தது. உற்சாகமாய் சத்யனிடம் திரும்பினாள்.

"சத்யா! இந்தப் பூவை பறிப்போமா?" - குழந்தை போல் ஆர்வமாய்க் கேட்டவளைப் பதறி மறுத்தான்.

"நோ... நோ... நாம மேட்டுல நிற்கிறோம். அது பள்ளத்துல இருக்கு. பாறைகளை நம்பி இறங்க முடியாது. வேண்டாம்."

"ப்ளீஸ் சத்யா! ஒரே ஒரு பூவாவது பறிப்போமே. வீட்ல போய் எல்லார்கிட்டவும் காட்டலாம். ப்ளீஸ்... ப்ளீஸ்..."

"நிலா! உனக்குத்தான் இது அபூர்வம். இங்க எல்லோருமே பார்த்திருக்கோம்."

"இருக்கட்டுமே. தூரத்தில இருந்துதானே பார்த்திருப்பீங்க. நிறைய இருக்கு சத்யா. அதோ அந்தப் பாறை பக்கத்தில நின்னு எட்டிப் பறிச்சாலே கைக்கு எட்டிடும். நானே பறிச்சிடுவேன். பறிக்கட்டுமா?" - குழந்தையாய் பிடிவாதம் பிடிக்க லேசாய் சிரித்தான்.

"பெண்கள் எத்தனை வளர்ந்தாலும் குழந்தையாகத் தான் இருக்கீங்க. அதே குதூகலம். அதே பிடிவாதம்."

"ஆண்களும் அப்படியேதான் இருக்கீங்க. எதற்கும் இளகாத கல் மனசு" - முகத்தைத் திருப்பிக்கொண்டாள் வசந்தநிலா.

"ஓ.கே... ஓ.கே... இப்ப என்ன? இந்தப் பூ வேணும். அவ்வளவுதானே. நானே பறிச்சுத் தர்றேன்."

சந்தோஷமாய்த் திரும்பினாள். "நிஜமாவே பறிச்சுத் தர்றீங்களா?"

"இதுக்கெல்லாமா பொய் சொல்வாங்க. நீ இரு. நான் போய் பறிச்சிட்டு வர்றேன்" - என நகர்ந்தவனோடு சென்றாள்.

"நானும் வர்றேன்."

"வேண்டாம் நிலா. காற்று பலமா வீசுது."

"எனக்கொன்றும் குளிரவில்லை. நான் வருகிறேன்."

"நான் அதற்குச் சொல்லவில்லை."

"பின்னே?"

"காற்றில் பறந்துவிட்டால் உன்னைப் பிடிப்பேனா? பூவைப் பறிப்பேனா?" துளியும் சிரிப்பின்றி அவன் சொன்னபடியே நடக்க, ஒரு கணம் யோசித்து அவன் சொன்னதன் அர்த்தம் புரிய, கோபமாய் முறைத்தாள்.

"நான் பறந்துவிடுவேனா? நாற்பத்தி ஐந்து கிலோ வெயிட்டை உங்கள் ஊர் காற்று தூக்கிக்கொண்டு போய் விடுமாக்கும்."



"நான் நம்பமாட்டேன்."

"ஏன்?"

"மிஞ்சிப்போனால் முப்பது கிலோதான் இருப்பாய் சாப்பிட்டால்தானே. இனி ஒழுங்காக சாப்பிடு."

"நான் சாப்பிடுவது இருக்கட்டும். இதோ இங்கிருந்து பறித்துவிடலாம்" - என முன்னே சென்றவளை நிறுத்தினான்.

"நீ இரு. நான் பறிச்சுத் தர்றேன்" - என அவளை விலக்கிவிட்டு பாறையில் ஒரு கை ஊன்றி எக்கிப் பறித்தான். ம்ஹும். எட்டவில்லை. இன்னும் கொஞ்சம் எட்டி முயற்சிக்க. பூ லேசாய் உரசியதே தவிர கைக்கு கிடைக்கவில்லை.

செருப்பை கழற்றிவிட்டு அந்தப் பாறை மீது தாவி ஏறினான். மெல்ல தவழ்ந்து எட்டிப் பறிக்க இப்போது கைக்கு வாகாய் பூ கிடைத்தது.

அப்படியே திரும்பி ஆவலாய் நின்ற வசந்தநிலாவைப் பார்த்தான்.

"நிலா! எத்தனை பூ வேணும்?"

"எவ்வளவு எட்டுதோ அவ்வளவும் வேணும்" - உற்சாகமாய்ச் சொன்னவளைப் பார்த்து கேலியாய் சிரித்தான்.

"ஆசையைப் பாரேன்" - என்றவாறு கையை எட்டிப் பூவைப் பறிக்க பாறையைப் பற்றியிருந்த இடது கையின் பிடிப்பு நழுவியது. சட்டென சுதாரிக்கும் முன் பாறையின் பின்புறமாய் சரிந்தான் சத்யன்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தநிலா வீறிட்டாள். "ஐயோ! சத்யா! என்ன ஆச்சு? சத்யா" - பாறை அருகே ஓடி வந்தாள்.

கிடுகிடுவென்ற பள்ளத்தாக்கில் உருண்டு கொண்டிருந்தான் சத்யன். உடலைவிட்டு உயிர் பிரிந்தாற் போல் வலி தோன்ற பயமாய் பதட்டமாய் அழுகையாய் எட்டிப் பார்த்து பதட்டமாய் குரல் கொடுத்தாள்.

"சத்யா! சத்யா ப்ளீஸ். எதையாவது பிடிச்சுக்கங்க. சத்யா. நான் பேசறது கேட்குதா? சத்யா" - அவளது குரல் அவளுக்கே திருப்பிக் கேட்க கீழே புரண்ட சத்யனைக் காணாமல் வெலவெலத்துப் போனாள்.

புற்களில்கூட அசைவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பள்ளம், பாறைக் கசிவுகள் மட்டுமே. காற்றின் ஓசையைத் தவிர ஆழ்ந்த அமைதி. கரகரவென கண்ணீர் சுரந்தது.

"சத்யா! எங்கே போயிட்டீங்க சத்யா. நீங்களும் என்னை விட்டுப் போயிட்டீங்களா? இனிமே நான் என்ன பண்ணுவேன்? அப்பாவுக்கு என்ன பதில் சொல்லுவேன். என்னால்தானே... என்னால்தானே இப்படியாகிவிட்டது. சத்யா! நான் உங்களைப் பார்க்கணும். எனக்கு நீங்க வேணும் சத்யா. நானும் உங்களோடு வந்து விடுகிறேன்" - என்றவாறு சிரமமாய் பாறை மீது ஏறத் துவங்கினாள்.

இரண்டுமுறை வழுக்கி மூன்றாவது முறையாக ஏற முயற்சிக்கும் போது சூடான கரம் ஒன்று அவளது தோளைத்



தொட்டது. பதறித் துள்ளி திரும்பியவள் கீழே சரியும் முன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டது அந்தக் கரம்.

# 16

நீ அலை நான் கரை என்னை
அடித்தாலும் ஏற்றுக்கொள்வேன்
நீ சுவாசம் நான் தேகம் - நான்
உன்னை மட்டும் - உயிர்
தொட அனுமதிப்பேன்!

தன்னைத் தொட்டது யார் எனத் திரும்புமுன்னே தன்னை அணைத்தவனை உதறித் தள்ளி கோபமாய் நிமிர்ந்த வசந்தநிலாவின் கண்கள் அதிர்ச்சியாய் விரிந்து பின் மெல்ல மெல்ல ஆனந்தமாய் மாறி கண்ணீர் சுரந்தது.

முகம் முழுக்க புன்னகையுடன் இடது கையில் கொத்தாய் குறிஞ்சிப் பூவுடன் நின்றிருந்தான் சத்யன். நம்பமுடியாமல் பதட்டமாய் அவனைத் தன் விரல்களால் வருடினாள் வசந்தநிலா.

"சத்யா! இது கனவில்லையே. உங்களுக்கு... உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே" - திணறலாய்க் கேட்டாள்.

"இதோ முழுதாய் நிற்கிறேனே. கனவல்ல நிஜம்தான்." - கண்கள் மின்ன மந்தகாசமாய் புன்னகைத்தான்.

"அப்போ... பள்ளத்தில் உருண்டு கீழே விழுந்தீர்களே... அது..."

"அதுவா? கீழே எட்டிப்பார்."

"என்ன?" - என லேசாய் எட்டிப் பார்த்தாள். புற்களின் நடுவில் பெரிய பாறை நின்றிருந்தது.

"இந்தப் பாறையில் நின்று கொண்டேன்" - என்றான் சிரித்தபடி.

பாறையின் கீழே எட்டிப்பார்த்தாள் வசந்தநிலா. அதள பாதாளம். தரையே தெரியவில்லை. உடல் சில்லிட்டுப் போக நிமிர்ந்து சத்யனைப் பார்த்தாள். கண்கள் குளமாகியது.

"சத்யா! இந்தப் பாறை இல்லாவிட்டால்..." - கேட்கும் போதே தேகம் நடுங்கியது. லேசாக அணைத்துக் கொண்டான்.

"ஒன்றும் ஆகியிருக்காது. நீ காப்பாற்றி இருப்பாய்"

"நானா? எப்படி?" - நிமிர்ந்து கேட்டாள்.

"எத்தனை சினிமா பார்த்திருப்போம். ஹீரோ ஏதாவது ஒரு செடியைப் பற்றிக்கொண்டு தொங்கிக் கொண்டிருப்பார். ஹீரோயின் தன் புடவையை உருவி அவனுக்கு வீசி உதவுவாள். அதே மாதிரி நீயும்..." - அவன் முடிக்கும் முன் அவனை விட்டு விலகி பட்பட்டென அடித்தாள்.

"பேச்சைப்பாரு! நான் எவ்வளவு பயந்துபோய் இருந்தேன். இந்த நேரம் என்ன பேச்சு இது?" - கோபமாய்க் கேட்டாள்.

"பயம் போயிடுச்சே."

"அட ஆமாம். சத்யா! இந்த இடமே வேண்டாம். வாருங்கள் வீட்டிற்குப் போகலாம்."



"அருமையான இடம் நிலா இது. மனசுல உள்ளதெல்லாம் வெளில வந்திடும் தெரியுமா?" - என்றான் அவளை ஆழமாய் நோக்கியவாறே.

சற்றுத் தடுமாறி நின்றவாறே, "என்ன? என்ன சொல்றீங்க?" - எனக் கேட்டாள்.

"இப்பக் கொஞ்சநேரம் முன்னால எதையோ சொன்னியே!"

"என்ன சொன்னேன்? எதுவும் சொல்லலையே!"

"நான் கேட்டேனே. அப்போ அது பிரமையா?"

"அதெல்லாம் தெரியாது. நான் காருக்குப் போறேன்" - என நடக்கத் துவங்கினாள்.

"நான் தான் வேண்டாம். கஷ்டப்பட்டுப் பறிச்சிட்டு வந்த பூவும் வேண்டாமா?"

"நம்ம தகுதிக்கு மீறி எந்தப் பொருளுக்கு ஆசைப்பட்டாலும் அது எவ்வளவு பெரிய கஷ்டத்துல கொண்டு போய் விடும்னு இப்பத்தானே பார்த்தேன். அதனால எனக்கு எதுவும் வேண்டாம்" - திரும்பாமலே நடந்தபடி சொன்னாள்.

கூடவே நடந்தபடி, "தகுதின்னு எதுவுமே இல்லை. நம்மால முடியாதது எதுவுமே இல்ல. அதுக்கு நான் பறிச்ச இந்தப் பூவே சாட்சி" - என அவளிடம் நீட்டினான்.

"நீங்க எதைச் சொல்றீங்க?"

"நீ எதைச் சொன்னாயோ அதைத்தான் நானும் சொன்னேன்."

"நான்... நான்..." - பேச முடியாமல் தடுமாறினாள் வசந்தநிலா.

"நிலா! இப்ப ஏன் இத்தனை பதட்டம். வா. காரில் ஏறு. பேசிட்டே போகலாம்." என காரைத் திறந்துவிட்டான். பூங்கொத்தை அவளிடம் நீட்டினான்.

"வீட்டுக்கா போறோம்?" - ஏமாற்றமாய் கேட்டாள்.

"இல்ல. நம்ம பழத் தோட்டத்திற்கு. நீ பார்க்க வேண்டிய இடம்."

"அது எங்கே இருக்கு?"

"கீழே இறங்கிப் போக வேண்டும். அரைமணி நேரப் பயணம்."

மனம் ஏனோ உற்சாகமானது. இன்னும் ரொம்ப நேரம் இவனுடன் இருக்கப் போகிறோம் என்ற எண்ணமே இனித்தது. உற்சாகமாய் காரினுள் ஏறி அமர்ந்தாள். ஆசையோடு பூக்களை வாங்கி மடியில் வைத்துக் கொண்டாள்.

ஏறும்போது சிரமமாய் முன்னேறிய கார் இப்போது வேகமாய் கீழே இறங்க சற்று பயமாய் சத்யாவை அழைத்தாள்.

"சத்யா! கொஞ்சம் ஸ்லோவா போங்களேன். பயம்மா இருக்கு."

"இது இறக்கம். அதுதான் அப்படிப் போகுது. மத்தபடி பயப்பட வேண்டாம். நான் எப்பவும் போகும் வேகம்தான்."



"இவ்வளவு வேகமா எப்பவும் போகாதீங்க சத்யா."

"இதைவிடக் கம்மியா போனா சைக்கிள் கூட ஓவர்டேக் பண்ணிப் போயிடும். நீ ஏன் இப்படிப் பயப்படுற நிலா?"

"ஆமா! எனக்கு எப்பவுமே கொஞ்சம் பயம்தான்."

"இந்தப் பயத்தைப் போக்கவேணும். உனக்கு கார் ஓட்டக் கத்துத் தரணும். கத்துத் தரவா?" - கண்கள் மின்ன அவன் கேட்க, அதுவரை நினைவில் இருந்து மறந்துவிட்ட நிலாவின் நினைவு தாக்கியது. சட்டென முகம் மாறியது.

"என்ன நிலா? பதிலையே காணோம்."

"ச... சத்யா! பெண்கள் காரோட்டுவது உங்களுக்குப் பிடிக்குமா?"

"இதென்ன கேள்வி? என்னைக் கேட்டா பெண்கள் எல்லாக் கலைகளையும் கத்துக்கிட்டா நல்லதுன்னுதான் சொல்வேன். அவங்களுக்குத் தன்னம்பிக்கை அதிக மாகுமில்லே"

"அ... அப்போ... நிலாவை நீங்கதான்... காரோட்டச் சொன்னீங்களா?" - அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டாள். வழக்கமாய் தோன்றும் ஒருவித இறுக்கம் இன்று தோன்றவில்லை. இயல்பாகவே பதிலளித்தான்.

"நானா? சரியாப் போச்சுப்போ. நிலாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"நிலாவைப் பத்தின்னா... கொஞ்சம் பயந்த சுபாவம். அமைதியான பொண்ணு. யாரோடவும் அதிகம் பேசமாட்டா."

"இவ்வளவுதான் தெரியுமா? இன்னொன்னும் தெரிஞ்சுக்க. நிலா ரொம்ப பிடிவாதக்காரி. அவ இஷ்டம்போல விட்டா பிரச்சனை இல்லை. நம்ம ஏதாவது கருத்துச் சொன்னாலோ, அட்வைஸ் பண்ணினாலோ அவ்வளவுதான். பிடிபிடியென்று பிடித்துவிடுவாள். அதற்கு பயந்து நானோ மாமாவோ அவளிடம் மல்லுக்கு நிற்பதே இல்லை."

"அப்போ வாசு என்ன சொன்னாலும் கேட்பாளா?"

"சுத்தம். கலகலப்பா சிரிச்சு பேசும் எங்ககூடவே நின்னு பேசமாட்டா. வாசுவோ எப்பவும் கடுகு மாதிரி வெடிச்சிட்டே இருப்பான். அவன்கிட்ட இவ பேசவே மாட்டா. பிறகெப்படி அவன் சொல்வதைக் கேட்பாள். ஆமா உனக்கு என்ன ஆச்சு? ஏன் இதெல்லாம் கேட்கிற?"

"இல்ல சத்யா. எனக்கென்னவோ நிலாவோட டெத்ல நிறைய சந்தேகம் இருக்கு."

சத்யனின் முகம் மாறியது. "வேண்டாம் நிலா. மறக்க முயற்சிப்பதை நினைவுபடுத்தாதே. பேசாமல் வா" - அவனது குரல் மாறியிருந்தது.

"அதெப்படி சத்யா? உங்களால் எப்படி அவளை மறக்க முடியும்?"

"ஏன் முடியாது? என்னை வேண்டாம் என்று ஒதுக்கியவளை நான் ஏன் மறக்கக்கூடாது. எத்தனை அவமானம் தெரியுமா? என்னை நிற்க வைத்து கேள்வி கேட்காத ஆட்களே கிடையாது. நான் என்ன அவளை



வற்புறுத்தியா மணக்கக் கேட்டேன். மாமாவிற்காகத் தானே சம்மதம் சொன்னேன்?"

"அதேபோல் அவளும் சம்மதித்திருக்கலாமே."

"இருக்கட்டும். பிறகாவது என்னிடம் தன் மனதில் இருப்பதைச் சொல்லியிருக்கலாமே. என்னை... என்னை ஒரு கொலைகாரனாய் நினைக்க வைத்துவிட்டு, என் மாமாவை மீளாத் துயரில் தவிக்கவிட்டு இப்படிப் போய் விட்டாளே. நான் ஏன் அவளை மறக்கக்கூடாது" - முகம் கடுக்கக் கோபமாய்க் கேட்டான்.

"இல்ல சத்யா. நீங்க நினைப்பது தவறு. அவள் உங்களை விரும்பித்தான் மணக்க சம்மதி..."

"வேண்டாம் நிலா. ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி இனி பேச வேண்டாம். எனக்கும் மனம் என்று ஒன்று இருக்கிறது. அதிலும் ஆசை, நேசம் எல்லாம் இருக்கிறது. இந்த நிமிஷம் நான் சந்தோஷமா இருக்கேன். ப்ளீஸ் ஆறிய ரணத்தைக் கிளறாதே!"

கப்பென வாயை மூடிக்கொண்டாள் வசந்தநிலா. "இவன் சொல்வதும் சரிதானே. போனவள் போய்விட்டாள். அதற்காக அவளைப் பற்றியே பேசி இவன் மனதை ஏன் காயப்படுத்த வேண்டும். அவனது நிம்மதியை சந்தோஷத்தை நாம் ஏன் கெடுக்க வேண்டும் என நினைத்தபோதும் மனம் ஆறவில்லை.

அதெப்படி? அந்தப் பெண் நிலா இவனை விரும்பியிருக்கிறாள். சந்தோஷமாக மணவாழ்க்கையை

தொடங்க நினைத்தவளைக் கொன்றிருக்கிறார்கள். இந்த உண்மை தெரிந்தும் அதை மறைத்தால் அவள் ஆத்மா சாந்தியடையுமா? அந்த வாசுவிற்கு தண்டனை தர வேண்டாமா?

பெரியவரிடம் சொல்ல முடியாது என்றுதானே இவனிடம் சொல்கிறேன். காது கொடுத்துக் கேட்கமாட்டானா? இவற்றையெல்லாம் சொல்லாவிட்டால் என் தலையே வெடித்துவிடுமே" - இரு விரல்களால் நெற்றியை அழுந்தப் பற்றிக்கொண்டாள் வசந்தநிலா.

"என்ன நிலா? தலை வலிக்கிறதா. பாட்டை நிறுத்திவிடவா?"

"இல்லை. வேண்டாம். ஏதோ நினைவு."

"இப்படிக் கண்டதையும் நினைத்து உன்னை வருத்திக் கொள்கிறாய் என்றுதானே வெளியில் அழைத்து வந்தேன். எதையும் நினைத்து மனசைக் குழப்பிக்காதே. வெளியே பார். நம் தோட்டம் வந்துவிட்டது."

'நம் தோட்டம்' என்ற வார்த்தை அவளை அசைத்தது. அந்த உரிமை தன் மனதிற்கு பிடித்தமானதாக இருக்க திடுக்கிட்டாள் வசந்தநிலா. இது என்ன விந்தை. சமீப நாட்களாகவே உடனிருந்து கவனித்துக் கொள்கிறான்தான். ஆனால் அதற்காக இந்த மனம் அவன் பேச்சை, சிரிப்பை அவனது நினைப்பையே பற்றிக்கொண்டு இவன் பின்னால் போகிறதே.

இது தப்பு. இவன் நிலா விரும்பிய மணந்து கொள்ள முடிவு செய்திருந்த மணமகன். இவனை நினைப்பது தவறு.



அன்று அத்தனை தெளிவாய்ச் சொன்னானே தேவையற்ற ஆசைகளை வளர்த்துக் கொள்ளாதே என்று. அதன் பிறகும் இவனை நினைப்பது எவ்வளவு அசிங்கம்.

மனதை அடக்கி ஒருமுகப்படுத்திக் கொண்டு பார்வையை வெளியே வீசினாள். வரிசையாய் பலாமரங்கள். நன்கு பருத்து காய்த்துத் தொங்கின. பாதையின் இருபுறமும் பழ மரங்கள் செழிப்பாய் காய்கனிகளுடன் தெரிந்தது. குட்டித் தக்காளிப் பழங்கள் போல் காய்த்துத் தொங்கிய மரத்தை வியப்பாய் பார்த்தாள்.

"இதுதான் பிளம்ஸ் மரம். இப்போ பிளம்ஸ் சீசன். அதான் இவ்வளவு பழம் காய்ச்சிருக்கு. நீ பிளம்ஸ் சாப்பிட்டிருக்கியா நிலா" - மென்மையாய் ஒலித்த அவனது குரலில் மனம் மீண்டும் குரங்காய் மாறியது.

"ம்... சின்ன வயசுல சாப்பிட்டிருக்கேன். அப்போ மதுரைக்கு போகும் போதெல்லாம் கண்டிப்பா வாங்கிட்டு வருவாங்க. நான் தூங்கிட்டாக்கூட எழுப்பி சாப்பிட வெச்சிடுவாங்க" - உற்சாகமாய்ச் சொன்னாள்.

"ஆமா! உங்க ஊர் எது?"

"அப்பா ஊர் தூத்துக்குடி. அப்பா இறந்தப்புறம்தான் அம்மா ஊரான அஞ்சுகிராமத்திற்கே போயிட்டோம்." - தாயின் நினைவில் கண்கள் கசிந்தன.

"நீ அதிர்ஷ்டசாலி நிலா"

"நானா?"

"ஆமா! இப்போ உனக்கு என்ன வயசு?"

"இருபத்தி ரெண்டு. ஏன்?"

"இத்தனை வருஷம் உன் அம்மாவோட வாழ்ந்திருக்க. ம்ப்ச். எனக்குத் தான் அந்தப் பாக்கியம் கிடைக்கல்ல" - என்றான் வருத்தமாய்.

அந்த வருத்தத்தில் மற்றதெல்லாம் மறந்த போய்விட, கனிவாய் அவனது முகம் நோக்கினாள். "நீங்களும் அதிர்ஷ்டசாலிதான் சத்யா. உங்க மாமா கிடைச்சது பெரிய வரவில்லையா. இப்பவே உங்க மேல இவ்ளோ அன்பா இருக்காரே. அப்போ நீங்க குழந்தையா இருக்கும்போது எப்படிப் பார்த்துப்பாங்க."

சத்யனின் முகமும் குரலும் நெகிழ்ந்தது. "உண்மைதான் நிலா. எனக்கு அம்மா அப்பா எல்லாமே என் மாமாதான். அவருக்காக என் உயிரைக் கூட சந்தோஷமா கொடுப்பேன்."

"உயிரைக் கொடுக்க வேண்டாம். அவருக்கு சந்தோஷத்தையும் நிம்மதியையும் கொடுங்க போதும்."

"என்ன?"

"ஆமா சத்யா! நேற்று யாரோ ஒரு பெரியவர் வந்திருந்தாரே."

"ம். மாமாவோட ப்ரெண்ட் பலராமன். அவருக்கென்ன?"

"அவர்கிட்ட உங்க மாமா ரொம்ப வருத்தப்பட்டுப் பேசியதைக் கேட்டேன் சத்யா. உங்க வாழ்க்கை



தன்னாலதான் பாலைவனமாய் போச்சுன்னு ரொம்ப ஃபீல் பண்றாங்க. உங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சாத்தான் நிம்மதியா மூச்சுவிட முடியும்னு சொன்னாங்க."

சத்யனிடம் பதிலின்றிப் போகவே தயக்கமாய் கேட்டாள்.

"ஏன் சத்யா? நீங்க ஏன் ஒரு கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?"

"ம். பண்ணிக்கலாம். பட் நான் பார்க்குற பெண்ணுக்கு என்னைப் பிடிக்க வேண்டாமா?"

"சேச்சே! உங்களைப் போய் யாராவது பிடிக்கலேன்னு சொல்வாங்களா?"

"இந்த வார்த்தையை நம்பி முடிவெடுக்கலாமா?"

"தாராளமா எடுக்கலாம். சத்யா மாதிரி மாப்பிள்ளை கிடைச்சா கண்ணை மூடிட்டு ஒத்துப்பா எந்தப் பொண்ணுமே."

"அப்ப சரி. ஒரு ரெண்டு மாசம் போகட்டும். மாமா கிட்ட பேசிடலாம்" சொல்லிக்கொண்டே காரை ஓரமாய் நிறுத்தினான்.

"அதென்ன ரெண்டு மாசம்?"

"இப்பத்தானே டெத் நடந்திருக்கு. கொஞ்சநாள் போகட்டுமே."

"ஓ! நிலாவோட டெத்தா. அதுவும் சரிதான். இந்த முடிவை உங்க மாமாகிட்ட சொல்லுங்க. ரொம்ப சந்தோஷப் படுவார்."

"ஏன்? நீ சந்தோஷப்படமாட்டியா?" - அவளை நேராய்ப் பார்த்துக் கேட்டான். லேசாய் தோன்றிய ஏமாற்றத்தை மறைத்துச் சிரித்தாள்.

"எனக்கும்தான். உங்களுக்கு ஒரு நல்லது நடந்தா சந்தோஷப்படற ரெண்டாவது ஆள் நான்தான்."

"முதல் ஆளு யாரு?"

"உங்க மாமா. வட்டப்பாறை ஜமீன்தார்" - என்றாள் தோரணையோடு.

சிரித்தவாறே காரைவிட்டு இறங்கினான் "சத்யா! இந்தப் பூ வாடிடுமே. இதை ரங்காவுக்கு சாவிம்மாகிட்டல்லாம் போய்க் காட்டணுமே."

"இந்த கிளைமேட்டுக்கு வாடாது. அதைக் கார்லயே வெச்சிட்டு வா. சால்வையை எடுத்துக்கோ. வாடைக்காற்று வீசுது" - என்றான். அவன் சொன்னதுபோலவே செய்துவிட்டு காரை விட்டு இறங்கும்போது தோட்டப் பணியாளர்கள் நான்கைந்து பேர் கூட்டமாக ஆவலாக ஓடிவந்து வரவேற்றனர்.

சத்யா அனைவரையும் அறிமுகம் செய்து வைக்க அவர்களைப் பார்த்து புன்னகையோடு கைகுவித்தாள் வசந்தநிலா.

"அம்மாடியோவ்! இளையராணி எங்களைக் கும்பிடுவதா? வேண்டாம்மா. வாங்க. வாங்க" - பெண்கள் இருவர் அவளை அழைத்தனர்.



"குருவா! லோடு ஏத்தியாச்சா. இருட்டிப்போச்சே" - சத்யா கேட்டுக் கொண்டே முன்னே நடக்க அவனுடன் நடக்கும்போது ஒருவித கிளர்ச்சியாகத்தான் இருந்தது. அமைதியாக நடந்தாள்.

"இளைய ராணியம்மா என்ன சாப்புடுவீக? பலாச்சுளையும் தேனும் கொண்டு வரட்டுமா?" - எனக் கேட்டார் ஒரு பெண்.

"மருதாயி! நீ பலாச்சுளையும் தேனும் கொடுத்தா இளைய ராணியம்மா உன்கூடவே இருந்திடுறேன்னு சொல்லிடுவாங்க. அப்புறம் நான் என்ன பண்றது?" - சத்யன் கேலியாய்க் கேட்க அந்தப் பெண்கள் கிளுக்கிச் சிரித்தனர்.

"வேண்டாம்யா! உங்க ராணியம்மா உங்களோடயே இருக்கட்டும். நான் போய் மலை வாழைப்பழம் கொண்டு வாரேன்" - என அவள் விலகி நடக்க, சத்யாவை நெருங்கி கிசுகிசுத்தாள் வசந்தநிலா.

"சத்யா! என்ன இது? இவங்க பேச்சே சரியில்லையே."

"என்ன சரியில்லை? தமிழில்தானே பேசினாங்க."

"என்ன ஜோக்கா? அது என்ன உங்க ராணி யம்மான்றாங்க."

"மாமா உன்னை அப்படித்தான் சொல்லி வெச்சிருக்காங்க. எங்கூட உன்னைப் பார்த்ததும் அவங்க மனசுல பட்டதைச் சொல்றாங்க" - அவன் சாதாரணமாகவே சொல்ல, அவள் கடுப்பானாள்.

"அப்படின்னா... இதுக்கு என்ன அர்த்தம்?"

"இப்ப மருதாயி வருவா. அவளையே கேளேன்" - அவன் சொல்லி முடிக்குமுன் மருதாயி வாழைமட்டைத் தட்டில் பெரிய வாழைப்பழங்களையும் சிவந்த பிளம்ஸ் பழங்களையும் கொண்டு வந்தாள்.

"இளைய ராணியம்மாவை எங்க கண்ல காட்டினதுக்கு ரொம்ப சந்தோஷம் சின்னய்யா. நாங்க எதிர்பார்த்திட்டே இருந்தோம். அம்மா ரொம்ப அழகு இல்ல காமாட்சி?" என அடுத்தவளையும் துணைக்கழைத்தாள் மருதாயி.

வசந்தநிலாவிற்கு முள்மேல் நிற்பதுபோல் இருந்தது. அவர்கள் சொல்வதை வெறுக்கவும் முடியவில்லை. முழுமனதோடு ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் திணறினாள்.

"நிலா! குளிருது பார். நல்லா போர்த்திக்கோ" - சத்யன் அக்கறையாய் போர்த்திவிட பெண்கள் தங்களுக்குள் கிசுகிசுத்து சிரித்தனர்.

"சின்னய்யா! பழமூட்டையெல்லாம் வண்டியில ஏத்தியாச்சு. ஐயா ஒரு முறை பார்த்துட்டா வண்டிய அனுப்பிடலாம்" - என குருவன் சொல்ல, நிலாவிடம் திரும்பினான் சத்யன்.

"நிலா! நீ இவர்களோடு இரு. ஒரு பைவ் மினிட்ஸ் வேலைதான். முடிச்சிட்டு வர்றேன்" - என அவன் குருவனோடு நடக்க, வசந்தநிலா அவஸ்தையாய் நெளிந்தாள்.

"யம்மோவ்! எங்க சின்னய்யாவோட முகத்தை பல வருஷமா பார்த்திட்டு இருக்கோம். இன்னிக்குத்



தான் இத்தனை பூரிப்போட மின்னுது. எங்க ஐயாவ இதே சந்தோஷத்தோட வெச்சுக்கங்கம்மா. உங்களுக்கு புண்ணியமாப் போகும்."

"நானா? நான்... நான் எப்படி?"

"பெரிய ஐயா எல்லாம் சொல்லிட்டாங்க. உங்க வருத்தமெல்லாம் குறையட்டும்னு காத்திருக்காகளாம். சின்னய்யாவை கட்டிக்கிட்டா உங்களைக் கண்ணுக்குள்ள வெச்சுப் பாத்துக்க மாட்டாகளா? உங்க வருத்தமெல்லாம் காத்துல மறஞ்சுடும்மா. சீக்கிரமா ஒத்துக்கங்கம்மா."

வசந்தநிலாவிற்கு தலையே சுற்றியது. என்ன நடக்கிறது இங்கே? இவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதா... இல்லை ஏதோ குத்து மதிப்பாகப் பேசுகிறார்களா? ஒருவேளை இதெல்லாம் பெரியவர் ஏற்பாடாய் இருக்குமோ?

அதற்காகத்தான் தன்னை கவனமாய் அலங்கரித்து அனுப்பினாரா? அவரது விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? சத்யன் இதற்குச் சம்மதிக்க வேண்டாமா? அவன் மனதில் நிலா இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் இருப்பேன் என்று என்ன நிச்சயம்?

பெற்றவளை இழந்தவள் அநாதையாய் நிற்கிறாள் என்ற பரிதாபத்தில் கூட நாலு வார்த்தை பேசி கவனித்து அன்பாய் இருப்பவனிடம் வேறு அர்த்தம் பண்ணிக் கொள்வது முட்டாள் தனமல்லவா?

அவள் கடைசியாய் நினைப்பதுதான் சரி என்பதுபோல் வந்தான் வாசு. வாசுவைக் கண்டதும் மற்றவர்கள் சற்று

மிரண்டு விலகிவிட அவளை ஏளனமாய் பார்த்தான் வாசு. அவளது ஆடை, அலங்காரங்களைப் பார்த்து முகத்தைச் சுளித்தான்.

"புதுப் புடவை நகையெல்லாம் கொடுத்த உடனே மனசை அலைபாய விட்டுடாதே. எங்க ஜமீன்ல பிச்சைக் காரங்க, அநாதைங்க, அகதிங்க இப்படி யார் வந்தாலும் இதெல்லாம் கொடுப்போம்."

சூடுபட்டாற்போல் துடித்து நிமிர்ந்தாள். "இனிமே இப்படி கார்ல வர்றதையெல்லாம் குறைச்சுக்க. அவன் ஆம்பிளை கூப்பிடுவான். உடனே சீவி சிங்காரிச்சிட்டு ஓடி வந்திடுவியா? இதெல்லாம் உனக்கே அசிங்கமாத் தெரியல்ல?"

"வாசு! மரியாதையாய் பேசு?"

"அடச்சீ! உனக்கென்னடி மரியாதை. இப்படி ஊர் பேர் தெரியாதவன் வீட்ல வந்து சட்டமா உட்கார்ந்துட்டு இருக்கியே. உனக்கு மரியாதை ஒரு கேடா. இதோ பார். மறுபடியும் சொல்றேன். உயிரோடு வாழ ஆசைப்பட்டா ஓடிப் போயிடு. இல்லே இங்கதான் இருப்பேன்னு சொன்னா உன் உடம்புல ஒரு பகுதிகூட முழுசா கிடைக்காது" - கண்களை உருட்டி மிரட்டினான்.

"எப்படி? நிலாவைக் கொன்னீங்களோ! அதே மாதிரியா?" - சற்றும் அசராமல் நின்று கேட்டாள் வசந்த நிலா.

"நினைச்சேன்டி. அன்னைக்கு போன்ல நீதான் ஒட்டுக்கேட்டியா? அதான் எங்கிட்டயே மிரட்டலாப் பேசினியா?"



"வாசு! அழியப் போறது நானில்லை. நீதான். உன் முடிவைப் பார்க்காம இந்த ஜமீனைவிட்டு நான் நகர மாட்டேன்."

"சத்யாவை மனசில வெச்சிட்டுத்தானே பேசுற. நான் நினைச்சா சத்யாவையே இல்லாமப் பண்ணிடுவேன் பார்க்கிறியா?"

திடுக்கென அதிர்ந்தாள் வசந்தநிலா.

"ஏதோ அநாதையா நிக்கிறியேன்னு பரிதாபப்பட்டு உங்கூட பேசுறான் அவன். நீ அதையே பிடிச்சிகிட்டு அவன்கூட வாழலாம்னு கனவு காணாதே. அப்படி எதுவும் நடந்தது அடுத்த சங்கு சத்யாவுக்குத்தான். அதை மனசுல வெச்சிகிட்டு விட்டு எட்டியே நில்லு."

"என்ன வாசு? இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கே" - என்ற குரலுடன் சத்யா வர சட்டென இயல்பாய் சிரித்தான் வாசு.

"சும்மா! தங்கச்சிகிட்ட பேசிட்டு இருந்தேன்."

சத்யா வசந்தநிலாவைப் பார்க்க அவள் முகம் இருண்டு போயிருந்தது.

# 17

ஒரு மடமாது உருகுகின்றாளே
உனக்கா புரியவில்லை - இது
சோதனையா நெஞ்சின் வேதனையா
உன் துணை ஏன் கிடைக்கவில்லை!

"நிலா! நான் என்ன பண்ணட்டும்? வாசுவைப் பற்றி சத்யனிடம் எதுவும் பேசவும் முடியவில்லை. உன் மரணத்தை அப்படியே விடவும் மனம் வரவில்லை. நான் என்ன செய்வேன். ஒவ்வொரு நொடியும் வாசு என்னைக் கண்காணிக்கின்றான். சத்யனை பார்க்கவே விடுவதில்லை. போகிற போக்கைப் பார்த்தால் நானும் உன்னைப்போல் இதே இடத்திற்கு வந்துவிடுவேன் போலிருக்கிறது" - கண்கள் கலங்க நிலாவின் சமாதியில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள் வசந்தநிலா.

தூரத்தில் வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்களின் சலசலப்பும் மாந்தோப்பில் கூவிக் கொண்டிருந்த குயிலின் ஒலியையும் தவிர வெகு அமைதி. வீசிய காற்றில் நிலாவின் புகைப்படத்திலிருந்த ரோஜா இதழ்கள் சில உதிர்ந்தன.

"நிலா! சத்யன் இன்றுதான் ஏற்காட்டிலிருந்து திரும்புகிறார். இன்று என்ன ஆனாலும் சரி. வாசுவைப் பற்றியும் உன் டைரியைப் பற்றியும் சொல்லியே தீருவேன். இதில் எந்த இடையூறும் தடங்கலும் ஏற்படாதவாறு நீதான் என்னை காத்தருள வேண்டும்.

உண்மையைச் சொன்னபிறகு எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை. உன் சத்யாவை நான்



நேசித்தது பெரிய தவறு. அந்தத் தவறுக்காக சத்யனையே கொன்றுவிடுவதாக மிரட்டுகிறான் வாசு. அவனிடமிருந்து சத்யனைக் காக்க எப்படியும் இன்று சொல்லிவிட வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை நீதான் ஏற்படுத்தித் தரவேண்டும்" - மனதார வேண்டிக்கொண்டிருந்தபோது அந்தக் குரல் கேட்டது.

"நிலா!" - சத்யனின் மென்குரல்.

சடக்கென திரும்பினாள். சத்யனைக் கண்டதும் ஆவலாய் எழுந்தாள். நான்கு நாட்களாய் அவனைக் காணாமல் ஏங்கிய கண்கள் ஆசைதீர பார்த்துக்கொண்டன. உதடுகள் நடுங்கின. உள்ளமும் உடலும் பரிதவித்தன.

"ச... சத்யா! வந்திட்டீங்களா? ரெண்டே நாளில் வந்துவிடுவதாகச் சொன்னீர்களே? ஏன் இத்தனை நாளாச்சு?"

"எஸ்டேட்டை ரிஜிஸ்ட்டர் பண்ணிட்டு வர தாமதமாச்சு இங்கு என்ன பண்ற நீ?"

"சும்மா! நிலாவோட பேசிட்டு இருந்தேன்."

"சரி. வா. உன்னோட கொஞ்சம் பேசணும்" - முகத்தில் எந்த உணர்வும் இன்றி அவன் சொன்னவிதம் கலக்கத்தை உண்டு பண்ணியது.

"என்ன? எ...ன்ன பேசணும்?"

"இங்கு வேண்டாம். வா என்னுடன்" - என்றவாறு அவன் நடக்க அவனது குரலோ முகமோ சரியில்லை என்பதை உணர்ந்து ஒரு பய உணர்வுடன் அவனைப் பின் தொடர்ந்தாள்.

தென்னந்தோப்பினுள் நுழைந்து ஒரு பருத்த தென்னை மரத்தில் சாய்ந்து நின்றுகொண்டான் சத்யன்.

"நிலா! இந்த இடம் உனக்கு நினைவிருக்கா?"

"ம்?" குழப்பமாய் விழித்தாள்.

'இதே இடத்தில் வைத்துதான் அன்று நீ ஒரு வார்த்தை சொன்னாய்?"

"என்ன சொன்னேன்?"

"உங்களைப் போல் உத்தமமான மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஓடிவரவில்லை. உங்களைப் போல் ஒருவரை மணக்க மறுக்கவும் மாட்டேன் என்று சொன்னாய் நினைவிருக்கிறதா?"

வசந்தநிலா துணுக்குற்றாள். "ஆ... ஆமாம். அதற்கு என்ன?"

"மாமா நம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிறார்!"

"என்ன?" - உண்மையில் இது பேரதிர்ச்சி. இன்பமான அதிர்ச்சியும் கூட.

"உன் வார்த்தையை நம்பி நானும் சம்மதித்துவிட்டேன். நீ என்ன சொல்கிறாய்?" - உணர்ச்சியற்ற குரலில் அவன் கேட்க நம்பமுடியாமல் நின்றாள் வசந்தநிலா.

"இப்படியே நின்னா எப்படி? உன் மனசில உள்ளதச் சொல்லு."

"நான்... நான் என்ன சொல்றது?" - திணறினாள்.



"ஏன்? என்னைப் பிடிக்கலையா?"

"ஐயோ! உங்களைக் கூட பிடிக்காமல் போகுமா" - நாணத்தோடு தலை கவிழ்ந்தாள்.

"அப்போ பிடிச்சிருக்கு?"

"ம்" - குனிந்த நிலையிலே தலையாட்டினாள்.

"அப்போ கல்யாணத்திற்கு நாள் குறிச்சிடலாமா?"

"ம்" - இப்போதும் நிமிராமலே பதிலளித்தாள். அவன் நகர்ந்து வெகு அருகே வந்து நின்றான். அதை உணர்ந்ததும் வெட்கம் பிடுங்கித் தின்ன முகத்தை கைகளால் மூடிக்கொண்டாள் வசந்தநிலா.

"அப்போ வாசு?" - எனக் கேட்டான். அவன் குரலில் இருந்த வித்தியாசம் உணர்ந்து கைகளை விலக்கி விட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"வாசுவா? அவருக்கு என்ன?"

"அவனை பைத்தியமாக்கிவிட்டு என்னை மணந்து கொள்வாயா? ஒருவேளை என் மாமா சொத்துக்களுக்கு வாசுதான் வாரிசு என அறிவித்துவிட்டால் என்ன செய்வாய்?" - குரோதமாய்க் கேட்டான் சத்யன். முகம் கல்லாய் இறுகியிருந்தது.

"ச... சத்யா! என்ன சொல்றீங்க" - வாய் உலர்ந்து போனது.

"ஏன்? உனக்கு காது கேட்காதா?"

"சத்யா ப்ளீஸ். எது பேசினாலும் புரியும்படி பேசுங்க. ஏன் இத்தனை கோபமா இருக்கீங்க?"

"போதும். இப்படி குழந்தை மாதிரி முகத்தை வெச்சிட்டு தான்டி என்னை ஏமாத்திட்டே. போயும் போயும் உன்னைப் போய் விரும்பித் தொலைத்தேனே! ச்சே" - சத்யன் வெறுப்பை உமிழ அதிர்ந்துபோனாள் வசந்தநிலா.

"என்ன? என்னைப் போலவே இவன் மனதிலும் விருப்பம் இருந்ததா? ஆனால் அதை ஏன் இத்தனை வெறுப்பாய் சொல்ல வேண்டும்" குழப்பமாய் அவனை ஏறிட்டாள்.

"சத்யா! ஏன் இப்படி கோபப்படுறீங்க?"

"பின்னே! உன்னைக் கட்டியணைச்சு கொஞ்சணுமா? சொத்தோடு வந்தால் கட்டியணைக்க சம்மதிக்காமல் இருப்பாயா?"

"சத்யா!" கோபமாய் கத்தினாள்.

"என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படி சொத்து சொத்து என்கிறீர்கள்?"

"சொத்துக்கு ஆசைப்படுபவளிடம் அதைப் பற்றித்தானே பேச முடியும்?"

"என்ன? நான் சொத்துக்கு ஆசைப்படுகிறேனா? என்ன உளர்றீங்க" - வெடித்தாள்.

"இந்த நடிப்பைக் கண்டு ஏமாற நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. வாசு எல்லாம் சொல்லிட்டான்."



"என்ன? என்ன சொன்னான்?"

"ம்? உங்கள் காதல் கதைகளை..."

"சத்யா! வாட் நான்சென்ஸ். என்ன பைத்தியக் காரத்தனம் இது!"

"வாயை மூடுடி. அது எப்படி அவனை மனசில வெச்சிக்கிட்டு என்னோட கல்யாணத்துக்கு சம்மதிச்ச. கேவலம் பணம்தானே காரணம். நாளைக்கு இது வாசுகிட்ட போயிட்டா என்னையும் மாத்திடுவ இல்ல."

"சத்யா" - ஆவேசமாய் அவனது சட்டையைக் கொத்தாய் பற்றினாள். ஆத்திரத்தில் கண்கள் முட்டியது.

"என்ன சொன்னீங்க? நானா? நானா வாசுவை நேசித்தேன். ச்சீ. அவனை நான் நேராய் நின்று பார்த்ததுகூட இல்லையே. என்னையா சந்தேகப்பட்டீங்க."

"இது சந்தேகமில்லை. அவனே சொன்ன உண்மை."

"ஒரு பொய்யன் சொல்வதை நம்புவீர்கள். ஆனால் உங்கள் நிழலாய் உங்களையே தொடர்ந்து வரும் என்னை நம்பமாட்டீர்கள் இல்லையா? இந்த நான்கு நாட்களாய் உங்களைக் காணாமல் நான் தவித்த தவிப்பை உங்கள் மனம் உணரவில்லையா? ஒவ்வொரு முறை உங்களைப் பார்க்கும்போதும் உங்களுடன் பேசும் போதும் என் மனதை உங்களுக்கு உணர்த்தவில்லையா? உங்களை நெருங்கவும் முடியாமல் விலகவும் முடியாமல் நான் படும்பாடு உங்களுக்குப் புரியவில்லையா?" - ஆவேசமாய் அவள் கேட்ட கேள்வியில் திணறிப் போனான் சத்யன்.

"சொத்து என்ன ஸார் பெரிய சொத்து? இந்த சொத்தும் அந்தஸ்தும் தான் என்னை உங்களிடம் நெருங்கவிடாமல் தடுத்தது. அதற்காகத்தான் உங்களை விட்டு விலகி நின்றேன். ஆனா என்னை விரட்டுவதற்கு நீங்கள் வேறு காரணம் சொல்லியிருக்கலாம். இப்படி என் பெண்மையை அவமதித்து இருக்கவேண்டாம்" - முகத்தை மூடிக்கொண்டு அழுதாள் வசந்தநிலா.

"நிலா! அது வந்து..." - எனத் தொடங்கியவனைப் பார்த்து இருகைகளையும் பட்டென அடித்து கும்பிட்டாள்.

"போதும் சாமி. நீங்க பேசினதே போதும். இதுக்குத்தான் மாமாவும் மருமகனும் என் வீடுதேடி வந்து என்னைக் கூட்டிட்டு வந்தீங்களா? நீங்களும் வேண்டாம். உங்கள் சொத்தும் வேண்டாம். என்னை விட்டுடுங்க. நான் போயிடுறேன்" - விடுவிடுவென நடந்தாள்.

"நில்லு நிலா" - அதட்டினான் சத்யன்.

"இந்த மிரட்டலையெல்லாம் உங்களிடம் வேலை பார்ப்பவர்களிடம் வைத்துக் கொள்ளுங்கள். என்னை மிரட்டும் அதிகாரம் உங்களுக்கில்லை. இனி எனக்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை."

"எங்கே? என்னைப் பார்த்துச் சொல்."

"பார்க்கமாட்டேன். பெண்களின் மனதை புரிந்து கொள்ளாத உங்களைப் பார்க்கவே நான் விரும்பவில்லை. இப்போது சொல்கிறேன் கேளுங்கள். நிலாவை வாசு கொல்லவில்லை. நீங்கள் தான் கொன்றுவிட்டீர்கள்.



என் மனதை சாகடித்தது போல் அவள் மனதையும் சாகடித்தீர்கள்" - கோபாவேசமாக பேசிக்கொண்டே போனவளை நான்கே எட்டில் கப்பென பற்றி நிறுத்தினான்.

தன்புறமாய் திருப்பி, "என்ன சொன்னாய்? இப்போது நீ என்ன சொன்னாய்?" - என்றான் கோபமாய். அவன் பிடியில் நடுங்கினாள். அவனது கண்களைப் பார்க்கவே அச்சமாக இருந்தது.

"உன்னைத்தான் கேட்கிறேன். என்ன சொன்னாய்?"

"உண்மையைத் தான் சொன்னேன்"- என்றாள் அழுத்தமாய்.

"என்ன உண்மை?"

"ஆமாம். நிலா உங்களை விரும்பியது உண்மை. என்னையே புரிந்துகொள்ள முடியாத நீங்களா அவளைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். உங்களுடைய ஒதுக்கம்தான் இடையில் புகுந்த வாசுவிற்கு வசதியாகப் போயிற்று. சொத்துக்களின் வாரிசைக் கொன்றுவிட்டு எப்போதடா சொத்து தன் கைக்கு வரும் என்று காத்து நிற்கிறான்."

"ஹேய்! என்ன உளறுகிறாய்?"

"ஆமாம். இடையில் வந்த நான் உங்களை மணந்தால் சொத்து கைமீறிப் போய்விடுமே என்று என்னையே கொலை செய்வதாக மிரட்டிப் பார்த்தான். நான் அசையவில்லை என்று தெரிந்ததும் உங்களைக் கொன்றுவிடுவதாக மிரட்டினான். இதையெல்லாம்

உங்களிடம் சொல்லக் காத்திருந்த என்னிடம் கொஞ்சமும் யோசிக்காமல் என்னவெல்லாம் பேசிவிட்டீர்கள்."

"போதும் நிறுத்து. ஒருவன் மீது எத்தனை பழியைத்தான் போடுவாய். உன்னை விரும்பியதைத் தவிர வேறென்ன பாவம் செய்தான் அவன்?" - கோபமாய்க் கேட்ட சத்யனை அதிர்ச்சியாய் பார்த்தாள் வசந்தநிலா. உதடுகள் நடுங்கக் கேட்டாள்.

"அப்போ... நான் சொன்ன எதையுமே நம்பலையா நீங்க?"

"எப்படி நம்புறது? நீ சொன்ன எல்லாத்தையும் அவனே எங்கிட்ட சொல்லிட்டான்" - அலட்சியமாகவே அவன் சொல்ல இன்னும் அதிர்ந்தாள்.

"என்ன?"

"நீ அவனை விரட்டியடித்துவிட்டு என்னை மணக்க இப்படியெல்லாம் பழி போடுவாய் என்று அவனே சொல்லி விட்டான்."

தலையில் அடித்துக்கொண்டாள். "ஐயோ! சத்யா. உங்களிடம் நான் எப்படிப் புரியவைப்பேன். ஒரு பொய்யனை நம்பும் நீங்கள் என் கூற்றில் துளியாவது உண்மை இருக்கும் என்று ஏன் நம்ப மறுக்கிறீர்கள்?"

"நான் நம்புறேம்மா" - என்றார் மகாதேவன்.

திடுக்கிட்டுத் திரும்பினர் இருவரும். "அப்பா! நீங்க... நீங்க எப்போ வந்தீங்க?" - பதட்டமாய்க் கேட்டாள் வசந்தநிலா.





"இந்தப் பயலைக் காணோமேன்னு தேடி வந்தேம்மா. வந்ததும் நல்லதாப் போச்சு. எனக்கும் கொஞ்சநாளா சில சந்தேகம் இருக்கும்மா."

"மாமா! என்ன சொல்றீங்க?"

"ஆமாம் சத்யா. நிலா இங்கே வந்ததே வாசுவுக்குப் பிடிக்கல்ல. அவளை விரட்டுவதிலேயே குறியா இருக்கான். அது தெரியுமா உனக்கு?"

வந்த முதல் நாளே வசந்தநிலாவைப் பற்றி தாறுமாறாய் சொன்னானே என்ற எண்ணம் தோன்ற அமைதியாய் தலையை மட்டும் ஆட்டினான்.

"அப்பத்தான் இந்த சந்தேகம் எனக்கு வந்தது சத்யா. அடிக்கடி யாருக்கோ போன் பண்றான். என்னைப் பார்த்ததும் கட் பண்றான். இன்னிக்கு என்ன பண்ணினான் தெரியுமா?"

"என்ன பண்ணினான்? சொல்லுங்கப்பா" - அவசரப்படுத்தினாள்.

"நீ இல்லாத நேரம் உன் அறைக்குள் போய் ரூமையே தலைகீழா புரட்டி எதையோ தேடிட்டு இருந்தாம்மா. நான் எதேச்சையா போனதும் உன்னைத் தேடி வந்ததாகச் சொன்னான். அப்பத்தான் என்னோட சந்தேகம் வலுத்தது."

"என் ரூம்ல... என்ன தேடினான். ஐயோ. அப்பா... நிலாவோட டைரி. அதைத்தான் தேடியிருப்பானோ?"

"என்னம்மா சொல்ற? நிலாம்மா டைரியா? உங்கிட்டயா இருக்கு?"

"ஆமாம்ப்பா. நான் அதைப் படிச்சபிறகுதான் நிலா தற்கொலை பண்ணலைன்னு தெரிஞ்சது. நிலா கொலை செய்யப்பட்டிருக்காப்பா."

மகாதேவன் நெஞ்சில் கைவைத்து அதிர்ந்தார். "என்னம்மா சொல்றே?"

"ஆமாப்பா! இது எனக்கு எப்பவோ தெரியும். நிலாவை இழந்த துக்கத்தில நீங்க ரொம்ப ஒடிஞ்சு போயிருந்தீங்க உங்ககிட்ட இதைப் பத்தி பேச வேண்டாம்னுதான் சத்யாகிட்ட சொன்னேன். ஆனா என்ன சொன்னாலும் இவர் நம்பவே இல்லை" - வருத்தமாய்ச் சொன்னாள் வசந்தநிலா.

"சத்யா! நிலா சொல்றதெல்லாம் உண்மையா?"

"மாமா! இவ ஒண்ணு சொல்றா. வாசு ஒண்ணு சொல்றான். யார் சொல்வதை நம்புவதுன்னு எனக்கு தலையே சுத்துது."

"என்னப்பா நீ! எந்தப் பொண்ணாவது இந்த விஷயத்துல பொய் பேசுவாளா?"

"மாமா! நிலா வாசுவுக்கு தங்கை. தங்கையை எவனாவது கொலை செய்வானா? இதை எப்படி நம்ப முடியும்?"

"பணம் ஸார். பணத்திற்காக யாரும் எதையும் செய்வார்கள். கேவலம் ரெண்டு லட்சம் ரூபாய்க்காக என் உடன் பிறந்த அண்ணனே என்னை விலை பேசவில்லையா? வாசு ஒன்றும் நிலாவின் சொந்த அண்ணனும் இல்லையே" - என்றாள் வசந்தநிலா.



"ஆனால்! என் பெண்ணை எதற்காக கொலை செய்ய வேண்டும்?" தடுமாற்றமாய்க் கேட்டார் மகாதேவன். பரிவாய் அவரது தோளைத் தொட்டாள்.

"அப்பா! நிலாவை சத்யனுக்கு கட்டிவைத்தால் நிலாவின் சொத்து சத்யனுக்குப் போய்விடுமே. வாரிசே இல்லாமல் போய்விட்டால் சொத்து முழுவதும் தங்களுக்கே வந்துவிடும் என்ற எண்ணம் அவர்களுக்கு" - என்றாள் கசப்பாய்.

"அவர்களுக்கா? அவர்கள் என்றால் யாரம்மா?" - தவிப்பாய் கேட்டவரைப் பார்க்கையில் வருத்தமாகத்தான் இருந்தது.

"மன்னிச்சிடுங்கப்பா. இதைச் சொல்ல எனக்கே கஷ்டமாத்தான் இருக்கு."

"சொல்லம்மா என் தங்கத்தை கோரமாய் சிதைத்த பாவிகள் யார்?"

"உங்க தம்பி சகாதேவனும் வாசுவும் தான்ப்பா."

"என்ன? என் தம்பியா? அவனுமா இதைச் செய்தான்" - தொப்பென தரையில் அமர்ந்தார்.

"அப்பா! பதறாதீங்கப்பா. மனசைத் தளர விடாதீங்கப்பா."

"எப்படிம்மா? எப்படி அந்தக் குழந்தையைக் கொல்ல மனம் வந்தது இந்தப் பாவிகளுக்கு? ஐயோ! என் குழந்தை ஒரு பாவமும் அறியாதவளாயிற்றே. எங்கள் குலத்தின் ஒரே பெண் குழந்தையை உருத்தெரியாமல் அழித்துவிட்டனரே. சத்யா! சத்யா... எம்பிள்ளை நீ வேண்டாம் என்று சாகவில்லையப்பா. அவளே அறியாமல் படுகொலை

செய்யப்பட்டிருக்கிறாள் சத்யா." - தடுமாறி எழுந்து சத்யனைப் பற்றிக் கொண்டார் மகாதேவன்.

கண்கள் சிவக்க, இறுகிப்போய் நின்றிருந்தான் சத்யன். அவனது தோளைப் பற்றி அசைத்தார்.

"சத்யா! அவர்களை விடக்கூடாது சத்யா. என் கையால் கொல்ல வேண்டும். வா சத்யா. நீ அதைக் கண்ணால் பார்க்க வேண்டாமா? வா என்னுடன்."

"மாமா. அவசரப்படாதீங்க. இவ சொல்றது உண்மைன்னா நீங்க சொன்ன அந்தக் காரியத்தை நானே செய்வேன். ஆனா... எந்த ஆதாரமும் இல்லாம வாசுவை எப்படி நாம் சந்தேகிக்க முடியும்?"

கோபமாய் நிமிர்ந்தாள் வசந்தநிலா "இப்ப என்ன? உங்களுக்கு ஆதாரம்தானே வேணும். நிலாவோட டைரி எங்கிட்டதான் இருக்கு. வீட்டுக்கு வாங்க... நான் காட்டுறேன். வாங்கப்பா" - என முன்னே நடந்தாள்.

பதறும் இதயத்தோடு மகாதேவனும் கலவரமான முகத்தோடு சத்யனும் அவளைப் பின்தொடர்ந்தனர்.

'இத்தனை உறுதியாய் சொல்கிறாளே. உண்மையாகத் தான் இருக்குமோ' என்ற எண்ணம் தோன்றும்போதே சத்யனுக்கு தன்மீதே கோபம் எழுந்தது. இன்று மட்டுமல்ல இதற்கு முன்பும் இதேபோல்தானே தன்னிடம் சொன்னாள். எதையும் முழுதாய் காதுகொடுத்து கேட்கவில்லையே நான்...

இந்த வாசுவும்தான் அப்படிச் செய்வானா? மனம் பொருமியது.



# 18

பூ விழியோரம் ஓர்துளி ஈரம்
நீ வடித்தால் மனம் தாங்காது
பொன்முகம் கொஞ்சம் வாடி
நின்றாலும் நான் துடிப்பேன்
வலி தாளாது என்னுயிரே!

தன் அறைக்குள் நுழைந்து டைரியை எடுத்துத் திறந்தவள் அதிர்ந்து போனாள். டைரியின் பக்கங்கள் முழுவதும் எழுதப்படாமலே இருந்தது. ஒரு பக்கத்தில் கூட ஒரு எழுத்து இல்லை. இடிந்துபோய் நின்றவளை நெருங்கினான் சத்யன்.

"என்னாச்சு? டைரியைக் கொடு" - என கை நீட்டினான். பேச்சற்றுப் போனவளாய் டைரியைக் கொடுத்தாள். பரபரவென பக்கங்களைப் புரட்டியவன் ஏமாற்றமாய் கோபமாய் நிமிர்ந்தான்.

"என்ன இது?"

"சத்யா. நான் பார்த்தப்போ எழுத்து இருந்தது." - தடுமாறினாள்.

"அப்போ இப்போ எங்கே போச்சு?" - கோபம் ஏற குரலை உயர்த்தினான். மகாதேவன் குறுக்கிட்டார்.

"சத்யா! நல்லாப் பாருப்பா. வாசு கிழிச்சிருப்பானோ."

"இல்ல மாமா. இது புது டயரி. ஒரு பக்கம் கூட கசங்கவும் இல்ல. கிழிக்கவும் இல்ல. இதுல இருந்து என்ன

தெரியுது? நம்ம நிலாவுக்கு டயரி எழுதுற பழக்கமே இல்ல மாமா?"

"அப்போ... நீ எப்படிம்மா பார்த்தே?" - வசந்தநிலாவிடம் மகாதேவன் கேட்க, பதறினாள் வசந்தநிலா.

"அப்பா ப்ளீஸ். நீங்களாவது என்னை நம்புங்க. நான் சத்யமா பார்த்தேன். நிலா எல்லாமே எழுதியிருந்தா. அவங்க எங்கேஜ்மெண்ட்ல சத்யா சபாரி செட் போட்டிருந்ததா கூட எழுதியிருந்தாளே!"

"எங்கேஜ்மெண்ட் ஆல்பம் பார்த்தியா?"

"இல்ல சத்யா. நான் சொல்றதை நம்புங்க. இன்னும் நிறைய எழுதியிருந்தா. உங்களுக்கு ரோஜா நிறம் பிடிக்கும். கார் ஓட்டும்போது பாட்டுக் கேட்பது பிடிக்கும்னு..."

"ஸ்டாப் இட். போதும். இதெல்லாம் இத்தனை நாள்ல நீயே தெரிஞ்சுக்கிட்டதுதானே. அதை வெச்சிக்கிட்டு சும்மா ஏன் ஸீன் போடுற. டயரிய பார்த்தேன் அது இதுன்னு கதைவிட்டு எங்களை முட்டாளாக்கிறியா?" - கோபமாய் சத்யன் வெடிக்க அதிர்ச்சியாய் அவனை ஏறிட்டாள் வசந்தநிலா.

"என்ன? நானா... நானா ஸீன் போடுறேன்?"

"பின்னே? இதெல்லாம் பார்க்கும்போது வாசு சொன்னதுதான் உண்மைன்னு தோணுது எனக்கு?"

"என்ன உண்மை? என்ன சொன்னான்?"



"நீ வந்த அன்றே சொன்னான். நீ ஏதோ திட்டத்தோடத்தான் இங்கே வந்திருக்கேன்னு. அப்போ நான் நம்பல்ல. ஆனா..."

மகாதேவன் பதறித் தடுத்தார். "சத்யா! வேண்டாம்ப்பா. இவ எம்மக. நான் அப்படித்தான் நினைச்சி வாழுறேன். ஏதாவது சொல்லி அவ மனசைக் காயப்படுத்திடாதே."

சட்டென கோபத்தைக் குறைத்து, "மாமா! இன்னிக்கு வாசு அண்ணிக்கு வளைகாப்புன்னு சொன்னீங்களே. நீங்க போகணுமில்ல. கிளம்புங்க" - என்றான்.

"இல்லப்பா! இந்த மனநிலையில என்னால அவ்வளவு தூரம் போக முடியாது."

"போகலன்னா அவ்வளவு நல்லா இருக்காது மாமா. வீடு தேடிவந்து கூப்பிட்டாங்களே. போயிட்டு வாங்க."

"அப்போ... நாம எல்லோரும் போவோமே!"

"இல்ல மாமா. எனக்குக் கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கு. நீங்க கிளம்புங்க. முடிஞ்சா நாளைக்கு வந்திடுறேன்."

"அப்போ நானும் நிலாவும் போயிட்டு வர்றோம்."

"வேண்டாம் மாமா! இப்போ நீங்க மட்டும் போயிட்டு வாங்க. இவளையும் கூட்டிட்டுப் போனா கேள்வி கேட்கிறவங்களுக்கு பதில் சொல்லி மாளாது."

"நிலா! நீ என்னம்மா சொல்ற?"

"நீங்க கிளம்புங்கப்பா. நான் எங்கேயும் வரல்ல" - குனிந்தவாறே சொன்னவளை நெருங்கி அவளது தலையை வருடினார் மகாதேவன்.

"அம்மாடி! கண்டதையும் நினைச்சுக் குழம்பாதேம்மா. நல்லா ஓய்வெடு. நான் போயிட்டு நாளைக்கு வந்திடுறேன். எதுவா இருந்தாலும் அப்புறமா பேசலாம்" - கனிவாகப் பேசியவரிடம் தலையை மட்டும் ஆட்டினாள்.

"சத்யா! ஏதோ தப்பு நடந்திருக்கு. ஆனா வாசு மேல எனக்கு இன்னும் சந்தேகம் இருக்கு. விசேஷம் முடியட்டும். நாம அவனை விசாரிப்போம். நீ அதுக்கு முன்னால நிலாவை எதுவும் கோபமாப் பேசிடாதப்பா"

"சரி மாமா"

"நிலாம்மா. வாசுகிட்ட எதுவும் பேசிடாதே. நானும் சத்யாவும் பேசிக்கிறோம். வாசு கோபக்காரன். உனக்கு ஏதாவது ஒன்னுன்னா... அப்புறம்..."

"மாமா. அதெப்படி விட்டுடுவோம். நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்க. அதான் நான் இருக்கேனில்ல."

"அந்த நம்பிக்கையிலதாம்ப்பா கிளம்புறேன். நிலாவை கவனிச்சுக்க."

"நான் பார்த்துக்கிறேன். நீங்க கிளம்புங்க மாமா. இப்பவே நேரமாச்சு. மணி!" - என குரல் கொடுத்ததும் மணிகண்டன் ஓடி வந்தான்.

"சின்னய்யா!"



"மணி! மாமாவை சின்ன மாமா வீட்டுக்குக் கூட்டிட்டுப்போ. அது மலைப்பகுதி. மெதுவாவே டிரைவ் பண்ணு" - என ஏதேதோ பேசிக்கொண்டே அவர்கள் வெளியேற வசந்தநிலா தலையைப் பற்றிக்கொண்டு கட்டிலில் அமர்ந்தாள்.

மனம் உலைகளமாகிப் போனது. எப்படி? எப்படி அந்த டயரி மாயமாகிப் போனது. நான் சொன்னது எல்லாமே பொய்யாகிப் போனதே. வாசு ஏன் என் அறைக்குள் வந்தான். அவனிடம் டயரியைப் பற்றி மூச்சுவிடவில்லையே. பிறகெப்படி மோப்பம் பிடித்தான்? பலவிதமான கேள்விகள் வண்டாய்க் குடைய அப்படியே அமர்ந்திருந்தவள் அறைக் கதவு தாளிடப்படும் ஓசையில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

சத்யன்தான் வந்து கொண்டிருந்தான். கண்களில் கோபக்கனல் தெறித்தது. வசந்தநிலாவை நெருங்கி ஆத்திரமாய் அவளை எழுப்பி நிற்க வைத்தான்.

"சொல். யார் நீ? என்ன திட்டத்தோடு இங்கு வந்தாய்?"

"சத்யா! என்ன கேட்கிறீங்க நீங்க?"

"ஏய்! ஏற்கனவே உன்கிட்ட சொல்லியிருக்கேன். இந்த மாதிரி எந்த எண்ணமும் உனக்கு வரவேண்டாம்ன்னு. உன்னை யார் இங்கே அனுப்பியது? என்னை வைத்து இந்த சொத்தை அடையலாம் என்று உனக்கு யார் சொன்னது?" - அவனது கேள்வி நீண்டுகொண்டே போக வெறுப்பானாள்.

இவன் யார் எனக்கு? அந்த நிலா யார்? அந்த வாசு என்ன என் ஜென்ம விரோதியா? யாரோ யாரையோ

கொன்றுவிட்டுப் போகட்டுமே. எனக்கு ஏன் அதைப் பற்றிய அக்கறை. நான் ஏன் அதைக் கிளறி ஆராய்ந்து என் மீதே சேற்றை வாரிப் பூசிக்கொள்ள வேண்டும்?

நிச்சயமாய் இவன் மனதில் தன்மீது வெறுப்பு மண்டிக் கிடக்கிறது. இவனிடம் அன்பை நேசத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். நான் இங்கு இருப்பதுதானே பிரச்சனை. இல்லையென்றால் வாசு ஏன் என்மேல் கோபப்படப் போகிறான். இவன் ஏன் இத்தனை கேள்விகேட்டு அவமதிக்க வேண்டும்.

பேசாமல் இந்த இடத்தைவிட்டே போய்விட்டால் என்ன? இங்கு இத்தனை போராட்டங்களில் அவமானப்பட்டு தலைகுனிவதைவிட எங்கேனும் போய் தன்மானத்தோடு ஒருவேளை சாப்பிட்டுக்கூட வாழ்ந்துவிடலாம். எனக்கு ஏன் இந்த சொத்து? இந்த சொத்தும் வேண்டாம் இந்த சுடும்மொழிகளும் வேண்டாம்.

துளியும் விருப்பம் இல்லாத இவனுக்காக நாம் ஏன் உடல் சிதறி இறக்க வேண்டும். அப்படி இறந்தா நாம் இவனுக்கு உண்மையை நிரூபிக்க வேண்டும். தேவையில்லை. யாருடைய பணமோ யாருக்கோ போகட்டும். நமக்கென்ன வந்தது."

"இப்படியே நின்னா என்ன அர்த்தம். நான் கேட்டது காதுல விழலையா..." – சத்யனின் கர்ஜனையில் கோபம் தொனித்தது.

"நான்... நான் போயிடுறேன்."



புரியாத பாஷையைக் கேட்டதுபோல் விழித்தான் சத்யன். "என்ன?"

"நான்... இந்த வீட்டைவிட்டுப் போயிடுறேன்..."

"ஏன்? எதற்காக?"

கோபமாய் நிமிர்ந்தாள். "இந்த கேள்வி உங்களுக்கே அபத்தமாய் படலை. நான் இங்கு வந்தது தப்பு. வந்த இடத்தில் மனம் தடுமாறியது பெரிய தப்பு. அந்தத் தப்புக்கு தண்டனையா உங்க குற்றச்சாட்டுகளை ஏத்துக்கிட்டு போறேன்."

"எங்கே போவாய்?" – சத்யனின் முகமும் குரலும் சற்றுத் தடுமாறியது.

"எங்கேயோ போகிறேன். அதைப்பற்றி உங்களுக் கென்ன அக்கறை?"

"அக்கறை இருக்கிறது. மாமா இல்லாத நேரம் நீ கிளம்பிப் போய்விட்டால்... அவரிடம் என்னவென்று சொல்வது?"

அவனது முகத்தை வெறித்தாள். இப்பக்கூட உனக்கு என் மேல் அக்கறை இல்லை. உன் மாமாவிடம் என்ன சொல்வது என்றுதான் பயம். ச்சே. போயும் போயும் உன்னையா நேசித்தேன். இந்தப் பாழும் மனம் உனக்காகவா ஏங்கித் தவித்தது. முகம் முழுக்க வெறுப்பு படர அவனைவிட்டு விலகி நடந்தாள் வசந்தநிலா.

அவளது தோள் பற்றி நிறுத்தினான் சத்யன். "ஒன்றுமே சொல்லாமல் போனால் எப்படி?"

அவனது கைகளைத் தட்டிவிட்டாள். "நான் ஒன்றும் இந்த வீட்டுப்பெண் இல்லையே. அகதியாய் வந்தேன். அநாதையாய் திரும்பிப் போகிறேன். என்னைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். அதற்கான அவசியமும் இல்லை. நான் போகிறேன். உங்கள் மாமாவிடம் சொல்லுங்கள் அவள் எங்கிருந்து வந்தாளோ அங்கேயே போகிறாள் என்று."

"அஞ்சுகிராமத்திற்கா போகிறாய்?"

"எனக்கு அங்கே யார் இருக்கிறார்கள்? இங்கு வந்து இந்தப்பாடு பட்டதற்கு அந்த குணாவையே கட்டிக்க சம்மதித்திருக்கலாம். என் அம்மாவையாவது இழக்காமல் இருந்திருப்பேன். ஆனால் இன்று... எல்லோரையும் இழந்து... உங்களிடம் அவமானமும் பட்டு.. ஒரு அநாதையாய்... திக்கற்று..." - அதற்கு மேல் பேச்சு வராமல் தொண்டை அடைத்தது.

அன்னையின் இழப்பு பூதாகாரமாய் மிரட்ட, யாருமற்ற நிலை நெஞ்சைப் பிழிய கண்ணீர் திரண்டு கன்னத்தில் வழிந்தது. இவன் முன்னால் அழக்கூடாது என திரும்பி அறைவாசலை நோக்கி ஓடியவளை நிறுத்தி தன்புறமாய்த் திருப்பி அணைத்துக்கொண்டான் சத்யன்.

பலமாக அவனை உதறித் தள்ளினாள். "எந்த உரிமையில் என்னைத் தொடுகிறீர்கள்? விடுங்கள் என்னை."

"எனக்கு உரிமை இருக்கிறது. கடைசி வரை உன்னோடு வாழப் போகிறவனுக்கு இல்லாத உரிமையா?"



"இந்த மாயப் பேச்சைக் கேட்டு ஏமாற நான் ஒன்றும் முட்டாளில்லை. உங்களைப் பார்க்கவோ பேசவோ எனக்குப் பிடிக்கவில்லை" - என அவனை விட்டு விலகி கதவைத் திறக்கையில் ரங்கநாயகி எதிரே வந்தாள்.

"அம்மா! நீங்க இன்னும் சாப்பிடலையே. என்ன கொண்டு வரட்டும்."

"ரங்கா! எனக்கு பசிக்கலை. எதுவும் வேண்டாம். இந்த ஊர்ல இருந்து போக இப்போ பஸ் இருக்கா?"

"மணி ஏழாகிப் போச்சே! இனிமே காலையில ஆறுமணிக்குத்தான் மொத பஸ் வரும். ஏம்மா? எங்கேணும் வெளியே போகணுமா?"

"ம்? ஆமா."

"கந்தசாமி அண்ணனைக் கூப்பிட்டு காரை எடுக்கச் சொல்லவா?"

"வேண்டாம் ரங்கா! நான் பஸ்லயே போய்க்கிறேன். நேரமும் கடந்து போச்சே."

"சரிங்கம்மா. பசிச்சா ஒரு குரல் கொடுங்க. நாங்க முன் அறையில தான் இருக்கோம்."

"நானும் வர்றேன் ரங்கா. எவ்வளவு நேரம்தான் ரூம்லயே அடைஞ்சிக் கிடக்கிறது உங்ககூட சேர்ந்து ஏதாவது வேலையாவது பார்க்கிறேன்."

"அம்மோவ்! பெரிய ஐயா வாசு ஐயா யாரும் வீட்ல இல்ல. அதனால இன்னிக்கு நிறைய வேலை இல்லை.

அதனால நாங்க எல்லாம் டி.வி.தான் பார்த்திட்டு இருக்கோம். வர்றீங்களா?" - ரங்கநாயகி உற்சாகமாய் அழைக்க வசந்தநிலா ஓரக்கண்ணால் அறைக்குள் பார்த்தாள்.

சத்யன் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருக்க, இவனிடம் இருந்து தப்பிக்க டி.வி.யாவது பார்க்கலாம் என்ற முடிவோடு,

"வா ரங்கா. எனக்கும் போரடிக்குது" - என அவளோடு சென்றாள்.

"நீங்க நாடகமெல்லாம் பார்ப்பீங்களாம்மா?"

"இதுவரை பார்க்கிறதில்லை. சீரியல்னாவே கொஞ்சம் அலர்ஜி"

"ஆமாம்மா! சில நேரம் ஒரே அழுகையாத்தான் இருக்கும். ஆனா பார்த்திட்டே இருந்தா அப்புறம் பார்க்காம இருக்க முடியாது"

"இன்று ஒருநாள் தானே" - என்ற எண்ணத்துடன் போய் அமர்ந்தவளுக்கு முழுதாய் அரைமணி நேரம்கூட அமர முடியவில்லை.

பாதிநேரம் விளம்பரம். மீதிநேரம் அழுகை. ஆண், பெண் என எந்தப் பாகுபாடுமின்றி அனைவருமே அழுதுகொண்டிருக்க எரிச்சலானாள் வசந்தநிலா.

ச்சே! இதைப் பார்ப்பதற்கு பேசாமல் படுத்துத் தூங்கலாமே. இருக்கிற தலைவலியில இது வேற? சலிப்போடு எழ முயற்சித்தபோது வேலையாட்களிடம் ஒரு ஆர்வம். பரபரப்பு.



"ஏய் வில்லன் வந்திட்டாம்பா. யாரும் பேசாதீங்க. பாவிப்பய இன்னிக்காவது மாட்டுறானா பார்ப்போம்." - என்றார் கணபதி.

அசுவாரசியமாய் டிவியின் திரையில் பார்வையை பதித்தாள் வசந்தநிலா. யாரோ ஒரு இளைஞன் கதாநாயகியை மிரட்டிக் கொண்டிருந்தான். தான் செய்த சூழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் ஒப்பித்துவிட்டு இதையெல்லாம் நான்தான் செய்தேன் என்று யாரிடம் வேண்டுமானாலும் சொல். உன் பேச்சை யாரும் நம்பமாட்டார்கள் என கொக்கரித்துக் கொண்டிருந்தான்.

வாசுவே எதிரில் நின்று பேசுவதைப் போல் இருந்தது வசந்தநிலாவிற்கு. கலங்கும் மனதுடன் சீரியலில் கவனத்தைத் திருப்ப 'தொடரும்...' எனப் போடப்பட்டது.

சாவித்திரி அலுத்துக்கொண்டாள். "இந்த ஜென்மத்தில இந்தக் கதையை முடிக்கமாட்டானுங்க போலிருக்கு. ச்சே!"

"நீ ஏங்க்கா இவ்வளவு சலிச்சுக்கிற. இதுதான் மெகா தொடர்..."

"சவ்வுமிட்டாய் தொடர். இதை ஆறுமாசம் முன்னாடியே முடிச்சிருக்கலாம். ரேவதிகிட்ட இவன் பேசுறதை ரேவதி புருஷன் கேட்டாலே போதும். இவன்தான் எல்லா வில்லங்கத்துக்கும் காரணம்னு தெரிஞ்சிருக்கும். அதை விட்டுட்டு எல்லாப் பழியையும் ரேவதி மேலயே போடுறானே படுபாவி."

"அக்கா! அவங்க காசு வாங்கிட்டு நடிக்கிறாங்க. நீ ஏன் இப்படித் தவிக்கிற?"

"பார்க்கிறது நாமதானே. பாவம் ரேவதி. புருஷனும் நம்பல, மாமியாளும் நம்பலை."

"சாவி! அடுத்த நாடகம் போட்டாச்சு. வாயை மூடு. பெரிய சீரியல் டைரக்டர் மாதிரி பேசிட்டு இருக்கே."

"ஆமாய்யா. நான் மட்டும் டைரக்டரா இருந்தா ரேவதிகிட்ட சொல்லி இந்த மூர்த்திப்பய பேசும்போது இவ புருஷனை ஒளிஞ்சிருந்து ஒட்டுக்கேட்டு வெச்சிருப்பேன். கதையே முடிஞ்சிடும்" - என சாவித்ரி சொல்ல பளிச்சென நிமிர்ந்தாள் வசந்த நிலா.

எதார்த்தமான பேச்சுதான். ஆனால் அதில் அருமையான ஐடியா கிடைத்திருக்கிறதே. வாசுவைப் பற்றி என்ன சொன்னாலும் யாரும் நம்பப் போவதில்லை. பேசாமல் வாசுவையே பேசச் சொன்னால்... அதை சத்யனை கேட்க வைத்தால்...

எப்படியும் வீட்டைவிட்டுப் போகிறோம். போகும் முன் அந்த மோசக்காரனின் முகத்திரையைக் கிழித்துவிட்டுப் போனால் என்ன? மகாதேவன் சாரின் அப்பாவி குணத்திற்காகவாவது இதைச் செய்துதான் ஆக வேண்டும்.

பாவம்! பெற்ற ஒரே மகளை அந்தக் கயவர்களால் பறிகொடுத்தவர். சொத்துக்காக வாசுவும் அவன் அப்பாவும் அவரைக் கொன்றாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.



இத்தனை நாள் இந்த வீட்டில் சாப்பிட்ட நன்றி உணர்வுக்கு இந்த வேலையை செய்துவிட்டுப் போகலாமே.

வாசுவின் சுயரூபம் தெரிந்துவிட்டால் மகாதேவனும் சத்யனும் எச்சரிக்கையாய் இருந்து கொள்வார்கள். தன் மீதுள்ள பழியையும் துடைத்துவிட்டுப் போய்விடலாம். ஏன் அவப் பெயரோடு போக வேண்டும்?

நாளைக் காலையில் பஸ். இந்த இரவுதான் நமக்கு இருக்கிறது. வாசுவும் இல்லை. சத்யன் தனியாய் இருக்கிறான். இது போதுமே. சட்டென எழுந்தாள்.

"சாவிம்மா. சாப்பிடக் கூப்பிட வேண்டாம். எடுத்து வெச்சிட்டுப் படுங்க. நாங்களே சாப்பிட்டுக்கிறோம்."

"சரிங்கம்மா" - என்றுவிட்டு சீரியலில் ஆழ்ந்துவிட வசந்தநிலா மெல்ல நடந்து சத்யனின் அறையை நோக்கிச் சென்றாள்.

கால்கள் பின்னிக்கொண்டன. இதயம் திடும்திடுமென அதிர்ந்தது. இந்த வீட்டிற்கு வந்தது முதல் இதுவரை சத்யனின் அறைக்குள் நுழைந்ததேயில்லை. பதறும் இதயத்தோடு வியர்த்துப் போன கையை கதவில் வைக்க, தாளிடாத கதவு உள்ளே போயிற்று.

நகர முடியாமல் நின்ற கால்களை பிரயாசைப்பட்டு நகர்த்தி உள்ளே நுழைந்தாள். அறை சற்று இருட்டாய் இருக்க, கட்டிலின் அருகே உள்ள மேசை விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்தது.

கண்களைக் கூர்மையாக்கித் தேடினாள். சத்யன் கட்டிலில் படுத்திருந்தான். அறைக்குள் மட்டுமே கேட்கும் தொனியில் பழைய பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான இசையைக் கேட்டுக் கொண்டு உறங்குவது அலாதி சுகம்தான். ஆனால்... என்னை வாட்டியெடுத்து விட்டு இவனுக்கு அப்படியென்ன தூக்கம்?

இருட்டில் துழாவினாள். ரேடியோ சிவப்பு நிற புள்ளி விளக்கோடு பாடிக் கொண்டிருக்க, இதை நிறுத்தி விட்டால் என்ன என எண்ணம் தோன்றியது. தூங்கியிருப்பானா? இவ்வளவு சீக்கிரமாகவா? தொட்டு எழுப்பவும் முடியவில்லை.

ஆனால் இவனிடம் பேசியே ஆகவேண்டுமே. பாட்டை நிறுத்தினால் நிச்சயம் விழித்துக் கொள்வான் என்ற முடிவுடன் ரேடியோவை நிறுத்தக் கையை நீட்டினாள். சத்யனைத் தாண்டி கைகள் நீளவில்லை. இன்னும் முயற்சித்தால் இவன் மீது உரசியாக வேண்டும். 'ச்சே...!' எனத் சத்தமாகவே முணுமுணுத்து விட்டாள்.

சட்டெனக் கண்களைத் திறந்தான் சத்யா. தனக்கு வெகு அருகே நின்ற உருவத்தைக் கண்டதும், "யாரது?" எனக் குரல் கொடுத்துக் கொண்டே கைநீட்டி அறையின் விளக்கைப் போட்டான்.

அறை முழுக்க வெளிச்சம் பரவியதும் வியந்து போனான் சத்யன். அவஸ்தையாய்க் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றவளைக் கண்டதும், அதுவரை மனதில் அழுத்திய பாரங்கள் விலகிவிட, புன்னகைத்தான்.



"நிலா! இங்கே என்ன பண்றே?"

"வந்து... உங்களைப் பார்க்கத்தான்...!"

"என்னையா? சொல்லு என்ன விஷயம்?" உற்சாகமாய் எழுந்தவன், முகம் வசந்தநிலாவின் கேள்வியில் கறுத்தது.

சிரிப்பைத் தொலைத்துக் கடினமாய் மாறியது.

## 19

நீ என்னைச் சேர்ந்திடும் வரையில்
இதயத்தில் சுவாசங்கள் இல்லை
நீ வந்து தங்கிய நெஞ்சில்
யாருக்கும் இடமே இல்லை!

சத்யனின் முகம் கடுத்ததைப் பற்றி துளியும் கவலைப்படாமல் மீண்டும் கேட்டாள் வசந்த நிலா.

"எனக்கு வாசுவோட போன் நம்பர் வேணுமே!"

"எதற்காக?" மரத்துப் போன குரலில் கேட்டான் சத்யன்.

"அவர்கிட்ட கொஞ்சம் பேசணும்."

"எதைப் பற்றி?"

"உங்ககிட்ட அவர் சொன்ன விஷயத்தைப் பற்றி...!"

"என்ன விஷயம்?"

"நீங்கள்தானே சொன்னீர்கள். நானும் வாசுவும் விரும்பியதாக...!"

கோபமாய் நிமிர்ந்தான். "அப்போ அதெல்லாம் உண்மையா?"

"அதைத் தெரிஞ்சுக்கத்தான் போன் நம்பர் கேட்டேன். அவரது விருப்பத்தை அவர் வாயாலே கேட்டால் நன்றாக இருக்குமே!"

சத்யனின் பற்கள் நறநறத்தன. "அவங்க வீட்ல செல்போன் பேச முடியாது."

"தெரியும். நான் வீட்டு நம்பர்தான் கேட்டேன்."

"அப்படியென்ன அவசரம்? இந்த ராத்திரியே போன் பண்ணியாகணுமா?" அவனது கோபம் வசந்தநிலாவைப் புன்னகைக்க வைத்தது.

"ஆமாம்! அவசரம்தான். நான் காலையில கிளம்பிடுவேன். அதிகாலையில போன் பண்ணி அவங்க உறக்கத்தைக் கெடுப்பதைவிட இப்போதே பேசி தெளிவுபடுத்திக்கலாமே...! விசேஷம்ன்றதால அவங்க வீட்ல கெஸ்ட் வந்திருப்பாங்களே... அதனால சீக்கிரமா தூங்கிட மாட்டாங்கல்ல... அதான் இப்ப பேசணும்னு கேட்டேன்."

"அங்கே வீடு ஃபுல்லா உறவுக்காரங்க வந்திருப்பாங்க. இந்த நேரம் என்ன பேச முடியும் உன்னால?"

"நீங்க ஏன் ஸார் டென்ஷனாறீங்க. நான் வாசுகிட்ட போன்லதான் பேசப் போறேன். ஸ்பீக்கர்ல இல்லை."



"மாமாவும் அங்கேதான் இருப்பாங்க."

"இருக்கட்டுமே... உங்களால நம்பர் தர முடியுமா? முடியாதா?"

"எனக்கென்ன வந்தது? இந்தா இதுதான் அவன் வீட்டு நம்பர்!" என தன் செல்போனில் அவனது எண்களை எடுத்துத் தந்தான்.

போனை வாங்கி அதில் ஒளிர்ந்த எண்களை மேஜை மீதிருந்த தொலைபேசியில் அழுத்தினாள்.

"சும்மா செல்லிலேயே பேசு. நான் ஒன்றும் ஒட்டுக் கேட்க மாட்டேன்!" என்றான் வீராப்பாய்.

"நீங்க கேட்கணும் ஸார். அதுக்காகத்தான் உங்க ரூம்ல வந்து பேசுறேன்!" என்றவாறு ஸ்பீக்கரை அழுத்தி விட்டுக் காத்திருந்தாள். சத்யனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"அடுத்தவர்களின் உரையாடலைக் கேட்பது அநாகரிகம். நான் அப்படிப்பட்டவனும் இல்லை."

"அவசியம் ஏற்பட்டால் கேட்கலாம் ஸார். தப்பில்லை!"

சத்யா போய் ஸார் வந்தது சத்யனுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. 'எத்தனை உரிமையாய் அழைப்பாள்? இப்போது ஏன் மரியாதை கொடுத்து என்னை விலக்கி தூரமாய் நிறுத்தி விட்டாள்.

நானும் அத்தனை கடுமையாய் நடந்திருக்கக் கூடாதோ! வாசு சொன்னதெல்லாம் கேட்ட நான் இவள்

சொன்னதில் பாதியாவது கேட்டிருக்கலாமோ?' - அவனது எண்ணத்தைக் கலைத்தது ஒரு பெண்ணின் குரல்.

"ஹலோ!" வாசுவின் அம்மாவாக இருக்க வேண்டும்.

சத்யனை ஒருமுறை பார்த்துவிட்டுப் போனில் பேசத் தொடங்கினாள் வசந்த நிலா.

"ஹலோ! வாசுதேவன் வீடுங்களா?"

"ஆமா! நீங்க யாரு?"

"நான் வாசுகிட்ட பேசணுமே?"

"நீ யாரும்மா?"

"வாசுவுக்குத் தெரியும். அவரைக் கூப்பிடுங்களேன்."

"வாசு! டேய் வாசு... உனக்குத்தான் போன்!" அந்தப் பெண்மணியின் எரிச்சலான குரலைத் தொடர்ந்து வாசுவின் கரகரப்பான குரல் கேட்டது.

"ஹலோ! யாரு பேசுறது?"

"நான்தான் வசந்தநிலா பேசுறேன்."

மறுமுனையில் ஆச்சரியமானான் வாசு. "ஹலோ! என்ன விஷயம்? இந்த நேரத்தில எனக்கு அழைப்பு வந்திருக்கு!" அவனது நக்கலான குரல் கேட்டு விலகிய சத்யனின் கைப்பற்றி கட்டிலில் அமர வைத்தாள் வசந்த நிலா.

"வாசு! சத்யன்கிட்ட ஏதோ சொன்னீங்களாமே...! அதைப் பற்றி பேசத்தான் போன் பண்ணினேன்."



"நம்பிட்டானா? எனக்குத் தெரியும். உன்னைக் காய்ச்சி எடுத்திருப்பானே!" வெற்றிச் சிரிப்போடு எதிர்முனையில் வாசு கேட்க, சத்யனின் முகம் மாறியது.

"ஏன் வாசு அப்படிச் சொன்னீங்க? நீங்க என்னை விரும்புறீங்களா? அதை என்கிட்ட சொல்லியிருக்கலாமே?"

"சீச்சி! நமக்கு இந்தப் பெண்ணாசையெல்லாம் கிடையாதும்மா. மண்ணாசையும் பொன்னாசையும் மட்டும்தான்."

"அப்புறம் ஏன் அப்படிப் பொய் சொன்னீங்க?"

"பின்னே! நீயும் அவனும் கல்யாணம் பண்ணிட்டுத் தேனிலவு கொண்டாட ஏற்பாடு பண்ணவா?"

"வாசு!" கோபமாய் அதட்டினாள் வசந்த நிலா.

"இந்தா சும்மா கத்தாதே! நான் உங்கிட்ட நல்லவிதமா சொல்லிப் பார்த்தேன். நீ கேட்கலை. சரி, உன் உயிருக்குத்தான் பயப்படலை. சத்யாவைக் கொன்னுடுவேன்னு மிரட்டினா ஒதுங்கிப் போயிடுவேன்னு நினைச்சா... நீ அதுக்கும் பயப்படலையே!"

சத்யன் அதிர்ந்து எழுந்தான். ஆத்திரமாய் வாயைத் திறக்க முயன்றவனை, தன் தளிர் விரல்களால் மூடினாள். "ப்ளீஸ்! கொஞ்சம் அமைதியாய் முழுவதையும் கேளுங்கள்!" எனச் சைகையால் வேண்டிக் கொள்ள, வெகு சிரமப்பட்டு அமைதியாய் நின்றான்.

"வாசு! நீங்க மிரட்டின பிறகு நான் சத்யாவைப் பார்க்கவே இல்லையே!"

"நீ பார்க்கலைன்னா சரியாப் போச்சா? என் பெரியப்பா உங்க கல்யாணத்துக்கு நாள் குறிச்சிட்டாரு தெரியுமா?"

"என்ன?" உண்மையில் அதிர்ந்தாள்.

"அந்தப் பயலும் போன்லேயே சம்மதம் சொல்லிட்டான். விடுவேனா நான்! அதான் அவன் வந்து இறங்கியதும் பிளேட்டை திருப்பிப் போட்டுட்டேன். அரண்டு போயிட்டான். அதே வேகத்தோட உன்னைத் தேடி வந்தானே! என்ன நடக்கும்னு பார்க்க ஆசைதான். அதுக்குள்ள இங்க வரவேண்டியதாப் போச்சு. ஆமா! இந்த நம்பர் உனக்கு ஏது? சத்யா எங்கே?"

"அது... சத்யா இப்பக் கொஞ்சம் முன்னாடிதான் அங்கே கிளம்பி வந்தார். புறப்படுவதற்கு முன் இந்த நம்பருக்குப் போன் பண்ணி அப்பாவோட பேசினார். அதான் அவர் போனதும் நான் ரீடயல் பண்ணினேன்."

"சரி, என்ன முடிவு பண்ணினே?"

"என்ன முடிவுன்னா?"

"இதோ பாரு நிலா. இப்பவும் சொல்றேன். நீ எங்க குடும்பத்துக்கு வாரிசாகணும்னு கனவு காணாதே! அதே மாதிரி சத்யனுக்கு மனைவியா வர ஆசைப்படாதே. ரெண்டுக்குமே நான் விடமாட்டேன்."

"இது என்ன அநியாயம் வாசு. சொத்துதானே உங்களுக்கு முக்கியம். சத்யனை ஏன் நான் மணந்து கொள்ளக்கூடாது?"



"கூடாதுன்னா கூடாது. சத்யனுக்கு எங்க குடும்பச் சொத்து போகக் கூடாதுன்னுதான் எங்கள் நிலாவையே நாங்கள் கொன்றோம்."

சரேலென திரும்பினான் சத்யன். கண்கள் கோவைப்பழமாய் சிவக்க, வசந்தநிலாவை ஏறிட்டான். அவள் கண்களால் கெஞ்சியவாறே பேச்சைத் தொடர்ந்தாள்.

"அதுதான் எனக்குத் தெரியுமே!"

"தெரிந்தும் உனக்கு உயிர் பயம் வரவில்லையே! எங்கள் பேச்சை ஒட்டுக் கேட்ட அன்றே உன்னைத் தொலைத்திருப்போம். உடனே அடுத்த சாவு விழுந்தால் சந்தேகம் வரும் என்றுதான் அந்த எண்ணத்தைக் கைவிட்டோம்."

"நீங்களே என்னைக் கொன்றிருக்கலாம் வாசு. சத்யா வார்த்தையால் என்னைக் கொல்கிறார்!" வசந்தநிலாவின் பேச்சில் உண்மையான வலி தெரிய, மனம் கசிந்தான் சத்யன்.

"பணக்கார வீட்டில் வாழ ஆசைப்பட்டாயே... அதுவும் சத்யாவுடன்...! அவனைப் பற்றி என்ன தெரியும் உனக்கு? ஒருவரை வெறுத்துவிட்டான் என்றால் ஆயுளுக்கும் பேசமாட்டான் தெரியுமா? அதுக்காகத்தான் அவனிடம் போட்டுக் கொடுத்தேன். இனி என்ன செய்யப் போகிறாய்?"

"வாசு! இது உங்கள் வீடு. உங்கள் சொத்து. இடையில் அநாதையாய் வந்த நான் அதை அடைய ஆசைப்படுவேனா?"

"சத்யனையும் சேர்த்துத்தானே சொல்கிறாய்?"

"ஆமாம். அவர் உங்கள் நிலாவிற்காக நிச்சயித்த மாப்பிள்ளை. அவர்மீது நான் எப்படி ஆசைப்பட முடியும்? அதனால... நான்... இந்த வீட்டை விட்டுப் போயிடுறேன் வாசு!" தொண்டையடைக்க அவள் பேச மறுப்பாய்த் தலையசைத்தான் சத்யன்.

மறுமுனையில் உற்சாகமானான் வாசு. "உண்மையாகத்தான் சொல்றியா? இல்லை ஏதாவது ரகசியமா திட்டம் போட்டு வெச்சிருக்கியா?"

"எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது வாசு. நான் போயிடுறேன். இனிமே சத்யாவுக்கோ மகாதேவன் ஸாருக்கோ எந்தப் பிரச்சனையும் கொடுக்காதீங்க!"

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே. நீ கிளம்பு. ஆமா திடீர்னு எப்படி இந்த முடிவுக்கு வந்தே? நானோ என் அப்பாவோ மிரட்டும்போது அசையாமல் இருந்தாயே!"

"நான் தோற்று விட்டேன் வாசு. என்னை... என் பேச்சை யாரும் நம்பவில்லை. இந்த அவமானத்தோடு சத்யனின் ஒதுக்கத்தோடு நான் இங்கு வாழ விரும்பவில்லை."

"எப்படி நம்புவாங்க? உன்கிட்ட எப்படியோ நிலாவோட டயரி மாட்டிக்கிச்சு. அதை நீ உடனே சத்யாகிட்ட காட்டியிருந்தா நான் மாட்டியிருப்பேன். நீ அதையும் செய்யலை. நான் விடுவேனா? இதுக்கெல்லாம் கிரிமினல் மைண்ட் வேணும்மா. நீ புள்ளப்பூச்சி!" நக்கலாகச் சிரித்தான் வாசு.



"சரி, வாசு! நான் போறேன். ஒருவேளை நீங்க என்னை விரும்பினா உங்களையாவது கட்டிட்டுக் குடும்பம் நடத்தலாம்னுதான் கடைசியா உங்களுக்குப் போன் பண்ணினேன். அதுவும் இல்லைன்னு ஆகிப் போச்சு. இனி என்ன இருக்கு எனக்கு? நான் போனை வெச்சுடுறேன்."

"ஏய்! இரு... இரு. ஆமா உனக்குன்னு இருந்த அம்மாவும் இப்ப இல்லை. அண்ணனும் உள்ளே இருக்கான். நீ எங்கே போவே?"

விரக்தியாய் சிரித்தாள் வசந்த நிலா. "எனக்குன்னு ஏதாவது ஒரு மடம் கிடைக்காமலா போகும்?"

"அப்படியெல்லாம் சொல்லாதே. நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்க. உனக்கு நான் ஏதாவது பண்ணணுமே!" சில கணங்கள் அவன் யோசிக்க, அதற்கு மேலும் பொறுமையின்றி வசந்த நிலாவை விலக்கி விட்டு வாய் திறந்தான் சத்யன்.

"வாசு! உனக்கு அரை மணிநேரம் டயம் தர்றேன். அதற்குள் நீயும் உன் அப்பனும் இங்கு வந்தாகணும். இல்லேன்னா நான் போலீஸோடு அங்கு வருவேன்!" சத்யனின் கோபக் குரலில் ரிஸீவரை நழுவவிட்டான் வாசு. மகனின் செய்கை கண்டு துணுக்குற்றவராய் வாசுவின் அருகில் வந்தார் சகாதேவன்.

ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தார். மறுமுனையில் சத்யனின் கர்ஜனை கேட்டது.

"இப்பவே அங்கே வந்து கண்டம்துண்டமா உங்க ரெண்டு பேரையும் வெட்டியெறிய முடியும். ஆனா! உன்

அண்ணி அதைப் பார்க்க வேண்டாம்னு நினைக்கிறேன். உடனே கிளம்பி வா!" எனப் போனை வைத்தான்.

அறையை விட்டு விலகி வெளியேற முனைந்தவளின் முன்னே சென்று நின்றான் சத்யன். என்ன பேசுவது என்று புரியவில்லை. மன்னிப்புக் கேட்கவும் நா எழவில்லை. மன்னிக்கும்படியாகவா பேசியிருக்கிறோம். ஒரு பெண்ணிடம் பேசக்கூடாததை, கேட்கக் கூடாத கேள்வியையெல்லாம் கேட்டு நோகடித்தேனே!

தன்னையே நொந்தவன் வசந்தநிலாவின் கைகளைப் பற்றி, தன் கண்களில் வைத்துக் கொண்டான். திகைத்துப் போனவளைப் பார்க்கவும் முடியாமல்,

"மன்னித்து விடு நிலா. எல்லாவற்றுக்கும் மன்னித்துவிடு. வீட்டுக்குள்ளேயே துரோகியை வைத்துக் கொண்டு உன்னை நான் ரொம்பவும் நோகடித்து விட்டேன். உன் பேச்சை நம்பியிருக்க வேண்டும். காது கொடுத்துக் கேட்டிருக்க வேண்டும். தப்பு. பெரிய தப்பு பண்ணிட்டேன். மன்னிச்சிடு!" என்றவனைப் பார்க்கையில் கண்கள் கசிந்தது.

கைகளை விலக்கியவாறே, "நிலாவின் ஆத்மா குளிரட்டும்!" என்றவாறு வாசலை நோக்கி நடந்தாள்.

"நிலா! என்னை விட்டுட்டுப் போயிடுவியா? என்னைப் பார்க்காம உன்னால இருக்க முடியுமா?" இயலாமையாய்க் கேட்டான்.

"பழகிக் கொள்கிறேன் ஸார்!"



"என்னால முடியாது நிலா. ஏற்கெனவே ஒருத்தியோட உதாசீனத்தால காயம்பட்டவன் நான். நீ அந்தக் காயத்தில நெருப்பை அள்ளிக் கொட்டாதே!"

துடித்து நிமிர்ந்தாள். "ஸார்! நிலா உங்களை விரும்பியவள்."

"நான் உன்னைத்தான் விரும்புகிறேன் நிலா!"

"என்ன?"

"ஆமாம். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் தடுமாறிய என் மனதை அடக்கி ஆள முடியாமல்தான் உன்னைக் கோபமாய்ப் பேசினேன். சத்தியமாய் நிலா! உன்னிடம் கோபப்படும்போது நான் எத்தனை துடிப்பேன் தெரியுமா? அன்று குறிஞ்சிப்பூ பறிக்கும்போதுதான் உன் மனதை நான் அறிந்து கொண்டேன். அன்றிலிருந்து உன்னை என் மனைவியாகவே ஏற்றுக் கொண்டு வாழ்கிறேன். என்னை விட்டுப் போய்விடாதே நிலா!"

கண்ணீரும் புன்னகையுமாய் அவனை நெருங்கியவள் ஏதோ உறுத்த சட்டென நின்றாள்.

"இல்லை... வேண்டாம்!" மறுப்பாய்த் தலை யசைத்தாள்.

"ஏன் நிலா?"

"நீங்கள் சொன்னது போல் வாசு சொன்னது போல் இந்தச் சொத்துக்காக நான் உங்களை மணப்பது போலாகிவிடுமே!"

"இல்லை நிலா! இந்தச் சொத்து எப்போதுமே நமக்கு வேண்டாம். என் அம்மாவின் பங்குச் சொத்தை நிர்வகிக்கவே எனக்கு நேரம் போதவில்லை. என் பெயரில் நான்கு ஏர்-பஸ் இருக்கிறது. டீ எஸ்டேட் இருக்கிறது. இது போதும் நமக்கு. வேறெதும் வேண்டாம். நீ மட்டும் போதும் நிலா!" சொல்லிக் கொண்டே அருகில் வந்தவனை இறுகக் கட்டிக் கொண்டாள் வசந்த நிலா.

"சத்யா! சத்யா! இது கனவில்லையே... நீங்கள் உண்மையிலேயே என்னை நேசித்தீர்களா? இது உண்மையா?"

"சத்தியம் நிலா! இதில் என்ன சந்தேகம் உனக்கு? மாமா வரட்டும். எல்லாம் பேசிக் கொள்ளலாம்."

சட்டென நிமிர்ந்தாள். "சத்யா! வாசுவை என்ன செய்யப் போகிறீர்கள்? போலீஸிடம் சொல்ல வேண்டாமா?"

"முதலில் அவர்கள் வரட்டும். பிறகு பார்க்கலாம்!" என்றான் கோபக் கனலாய். வசந்த நிலாவிற்குள் பயம் வேரிட்டது.



## 20

விழியில் என் விழியில் வந்து
விழுந்தாய் அந்த நொடியில்
என் எதிர்காலம் நீதான்
என்று உயிர் சொன்னதே!

உடல் முழுக்க வியர்த்துத் திகிலாய் நின்ற மகனை அசைத்தார் சகாதேவன்.

"டேய் வாசு! என்னடா பிரச்சனை? அந்த சத்யாப்பய வாய்க்கு வந்தபடி பேசுறான். என்னாச்சு?"

"அ... அப்பா!" பயமாய் எச்சில் விழுங்கினான் வாசு.

"என்னடா? ஏன் இப்படிப் பேயறைஞ்ச மாதிரி நிக்கிற?"

"அப்பா! ச... சத்யாவுக்கு... எல்லாமே தெரிஞ்சிடுச்சிப்பா."

திடுக்கிட்டார் சகாதேவன். அவசரமாய் சுற்றிலும் திரும்பிப் பார்த்து விட்டு மகனை நகர்த்திக் கொண்டு, தன் அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டினார்.

"என்னடா சொல்றே?"

"ஆமாம்ப்பா! அவளால... அந்தப் பிச்சைக்கார நாயாலதான் எல்லாம் தெரிஞ்சுப் போச்சு."

"என்னடா நடந்தது? முழுசா சொல்லு!" கோபமாய் தந்தை எகிறியதும், சற்று முன் நடந்தவைகளை ஒன்றுவிடாமல் ஒப்பித்தான் வாசு. கேட்டவரின் முகம் விகாரமானது. ஆத்திரமாய்ச் சீறினார்.

"முட்டாள்! முட்டாள். உன்னை மாதிரி ஒரு அடிமுட்டாள் எவனாவது இருப்பானா?"

"என்னை ஏம்ப்பா திட்டுறீங்க?"

"திட்டாம? ஏன்டா! அவளே ஒரு அமுக்கினி. நாம என்ன மிரட்டு மிரட்டியும் அசராதவ. அவகிட்ட போயி இப்படி வாயை விடுவியா? முட்டாள்!"

"நான் என்ன வேணும்னா சொன்னேன்? அவ ஊருக்குப் போயிடுறேன்னு சொன்னா! அந்தக் குஷியில கொஞ்சம் உளறிட்டேன். அப்பவும் சத்யா எங்கேன்னு கேட்டேனே... நம்ம வீட்டுக்குப் புறப்பட்டு வர்றதா சொன்னாள்."

"அவ சொன்னா உனக்கு எங்கேடா போச்சு புத்தி? ராத்திரி நேரத்தில நம்ம வீட்டு நம்பரைத் தேடி போன் பண்ணியிருக்கான்னா அதுல ஏதோ சதி இருக்குன்னு யோசிக்க வேண்டாம். குடிச்சு மூளை மழுங்கிப் போன உன்னால இதையெல்லாம் எப்படி யோசிக்க முடியும்?"

"அப்பா! சும்மா என்மேல கோபப்படாதீங்க. இனிமே என்ன செய்யலாம்னு சொல்லுங்க!" என்றான் சுள்ளென்று.

"என்னத்தைச் சொல்ல? சரி! வேற என்னெல்லாம் உளறின?"

"நிலாவைக் கொன்னதுல இருந்து எதையும் விடாம சொல்லிட்டேன்ப்பா!" என்ற வாசுவின் முதுகில் அறைந்தார்.

"முட்டாப் பயலே! கொஞ்சம் ஊத்திக்கிட்டா இப்படியா உளறிக் கொட்டுவ. ஐயோ! இப்ப என்ன பண்ணுவேன்?



சும்மாவே அந்தப் பய நம்மைக் கண்டா நாகம் மாதிரி சீறுவானே!"

"இப்ப என்னப்பா பண்றது?" வாசுவின் குரலில் பயம் தொனித்தது.

"ஒருவேளை நான் பேசினதை டேப் பண்ணி வெச்சிருப்பானோ? அதை போலீஸ்ல கொடுத்திடுவானோ? அப்பா! எனக்குப் பயம்மா இருக்கே?"

சகாதேவன் அறைக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாய் நடந்தார்.

"பதறாதேடா... யோசிப்போம்!"

"அப்பா! எதுவா இருந்தாலும் சீக்கிரமா செய்யுங்க. ஏன்னா அவன் அரைமணி நேரத்தில அங்கே இருக்கணும். இல்லைன்னா போலீஸோட இங்கே வந்திடுவேன்னு சொன்னான்."

"அப்படியா சொன்னான்? அப்போ ரொம்ப சீக்கிரமா முடிவெடுக்கணுமே! அவன்கிட்ட தடயம் இல்லாம இவ்வளவு உறுதியா சொல்ல மாட்டான்."

"இப்ப... இப்ப என்னப்பா பண்றது?"

சகாதேவன் குரலைத் தழைத்துக் கொண்டார். "வாசு! நாம இப்போ புறப்பட்டுப் போவோம். சத்யாகிட்ட பொறுமையா பேசிப் பார்ப்போம். அவன் சரி வந்தான்னா பார்ப்போம். இல்லைன்னா அவனுக்கும் முடிவு கட்டிடுவோம்."

அதிர்ந்து போனான் வாசு. "அப்பா! உங்களுக்கும் புத்தி மழுங்கிப் போச்சா?"

"ஏன்டா?"

"பின்னே! சத்யா என்ன சின்னக் குழந்தையா? இல்லை நிலா மாதிரி பூனைக் குட்டியா? அவன் ஒரு அடி அடிச்சா நாம எழுந்துக்க நாலு நாளாகும். அவனைப் போய் கொல்ல முடியுமா?"

"உனக்கு உடம்பு வளர்ந்த அளவுக்கு மூளை வளரலடா. நாம என்ன அவனை நேருக்கு நேராவா மோதப் போறோம்?"

"பின்னே?"

"நம்ம கார்ல ரெண்டு உருட்டுக்கட்டைகளை எடுத்துப் போடு. சும்மா போய்ப் பேசுவோம். அவன் ரொம்பக் குதிச்சான்னா அந்தக் கட்டையை எடுத்து தலையில ஒரே போடு. அவன்கூடவே இருக்காளே அவளுக்கும் ஒரு போடு. அப்புறம் ரெண்டு பேரையும் சத்யா கார்ல போட்டு நிலாவை அனுப்பி வைத்தோமே...! அதே மலையில இருந்து உருட்டி விடுவோம்!" சகாதேவன் தீவிரமாய்ச் சொல்லிக் கொண்டே போக அதிர்ச்சியில் வாயைப் பிளந்தான் வாசு.

"என்னப்பா? பயங்கரமான திட்டமா இருக்கே?"

"ஆமான்டா. அந்தச் சத்யாப்பய இருக்கிற வரைக்கும் நமக்குத் தலைவலிதான். அவனை முடிச்சாத்தான் நமக்கு நிம்மதி. சொத்தும் தானாகவே நம்ம கைக்கு வந்திடும்."



"ஆனா! பெரியப்பா கேட்டால் என்ன சொல்வது?"

"அந்தப் பொண்ணை கூட்டிட்டு ஓடிட்டான்னு சொல்ல வேண்டியதுதான். நிலாவுக்கு தயாரிச்ச மாதிரி இவனுக்கும் ஒரு லெட்டர் தயாரிச்சிட வேண்டியதுதான். ஒரு ரெண்டு நாள் அண்ணன் சோகமா இருப்பாரு. அந்த நேரம் நாம அவரை ரொம்ப அன்பா கவனிச்சுக்கணும்."

"ஏம்ப்பா?"

"அப்பத்தான்டா அண்ணன் மனசு மாறி சொத்தை உன்பேர்ல மாத்துவாரு. உன்னைத் தன் வாரிசா ஏத்துப்பாரு!"

"அப்பா! சூப்பர் ஐடியாப்பா. இதை ஏம்ப்பா இவ்வளவு நாள் யோசிக்கலை நீங்க."

"காரணம் இருக்குடா. இன்னிக்கு என் அண்ணனோட முகத்தைப் பார்த்தியா? இயல்பாவே இல்லை. எது பேசினாலும் ஒட்டுதல் இல்லாம சந்தேகமாகத்தான் பார்க்கிறார்."

"ஐயோ! பெரியப்பாவுக்கும் தெரிஞ்சிருக்குமா?"

"கத்தாதே! அவருக்குத் தெரிஞ்சா நம்மளை விட்டு வைப்பாரா? நம்ம வீட்ல வந்து விருந்து சாப்பிடுவாரா?"

"அப்போ ஏன் அப்படி இருக்கார் பெரியப்பா?"

"அங்கே ஏதோ புகைய ஆரம்பிச்சிருக்குடா. அந்தச் சதிகாரி ஏதோ போட்டுக் கொடுத்திட்டான்னு நினைக்கிறேன். அது தெளிவா புரிஞ்சி பத்தி எரியுறதுக்குள்ள நாம அவங்க கதையை முடிச்சாகணும்."

"அப்பா! அரை மணி நேரம் ஆகியிருக்குமே! சீக்கிரம் வாங்க. அவன் வந்துடப் போறான்!" பதறினான் வாசு.

"டேய்! முதல்ல பதறாம மெதுவா வெளியே போய் கார்ல ஏறு. மறக்காம ரெண்டு கட்டையை எடுத்து டிக்கியில போடு. நான் வீட்ல உள்ளவங்ககிட்ட ஏதாவது காரணம் சொல்லிட்டு வர்றேன். முதல்ல நீ போ!" எனக் கதவைத் திறந்து விட்டார்.

நடுக்கத்தை மறைத்தபடி மெதுவாக நடந்து வாசு வெளியேற, சற்று நேரம் கழித்து சகாதேவன் வெளியில் வந்து மனைவியிடம் சென்றார்.

"அசு! சம்பந்தி வீட்டுக்காரங்க பொள்ளந்துறையில வந்து நிற்கிறாங்களாம். நானும் வாசுவும் போய் கூட்டிட்டு வந்திடுறோம்."

"ஏங்க! இந்த ராத்திரியிலா போகணும்?"

"அதுக்காக விடியுற வரை அவங்களைக் காத்திருக்க சொல்ல முடியுமா?" கோபமாய்க் கேட்டதும் மிரண்டாள் அசுவதி.

"இல்லைங்க. மலைப் பாதையாச்சே. கார் ஓட்டுறது கஷ்டமேன்னுதான் சொன்னேன்."

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ வந்தவங்களைக் கவனி. நான் இப்ப வந்திடுறேன்!" என வெளியேறி வந்தவர் தனது காரைக் காணாமல் திணறினார்.

"ஏய்! நம்ம கார் எங்கேடி?"



"ஏங்க! நம்ம திவாகர்தான் எடுத்திட்டுப் போனான். பூ, மாலை, ஜடை ஆரம் எல்லாம் வாங்கிட்டு வரணுமில்ல!"

"இன்னுமா வரல்ல!"

"வர்ற நேரம்தான். பூ வாங்கப் போன இடத்தில லேட்டாயிடுச்சுன்னு போன் பண்ணினான்."

"அவன் கார் என்னாச்சு? சும்மாதானே நிக்குது. அதுல போக வேண்டியதுதானே!"

"தெரியலைங்க."

"சரி, அவன் கார்ச் சாவியை எடுத்திட்டு வா. சீக்கிரம்!" அவர் அவசரப்படுத்த கையில் சாவியோடு ஓடி வந்தாள். சாவியைப் பறித்துக் கொண்டு காரைத் திறந்து ஏறினார். வாசுவும் ஏறிக்கொள்ள கார் புறப்பட்டு வேகமெடுத்தது.

கார் புறப்பட்ட ஐந்து நிமிடத்தில் திவாகர் காரோடு வந்து நின்றான். கார் சத்தத்தில் வெளியே வந்த தாயைக் கண்டு, பதட்டமாய்க் கேட்டான்.

"அம்மா! இப்போ போறது என் கார்தானே!"

"ஆமாடா! அப்பாதான் எடுத்திட்டுப் போறாங்க."

"ஐயோ!" நெஞ்சில் கை வைத்து அவன் பதற, அசுவதி பயந்து போனாள்.

"என்னப்பா? ஏன் பதறுறே?"

"அம்மா! என் கார்ல ப்ரேக் வயர் கட்டாகிப் போச்சும்மா. அதான் அப்பா காரை எடுத்திட்டுப் போனேன். இப்பத்தான் புதுவயர் வாங்கிட்டு வந்தேன்."

திவாகர் சொல்லி முடிக்கும்போதே அசுவதி பெருங் குரலெடுத்து அழத் துவங்க, வளைகாப்பிற்கு வந்த உறவினர் கூட்டம் பதறியடித்துக் கொண்டு அவளைச் சூழ்ந்தது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசி பயத்தைக் கிளப்ப, மகாதேவன் திவாகரை நெருங்கினார்.

"திவா! நீ காரை எடு. எதற்கும் நாம் போய்ப் பார்த்திட்டு வருவோம்."

"சரி பெரியப்பா!" என அவசரமாய்க் காரை இயக்கினான் திவாகர். மகாதேவனும் ஏறிக்கொள்ள, திவாகரின் மனைவி வயிற்றுப் பிள்ளையோடு கணவனருகே வந்தாள்.

"ஏங்க! பார்த்து மெதுவா போங்க."

"நான் பார்த்துக்கிறேன். நீ உள்ளே போம்மா!" என்றவாறு காரைக் கிளப்பினான். பத்து நிமிடம் கூட தாண்டும் முன்னே அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ந்து பிரேக்கை மிதித்தான்.

மகாதேவனும் அதிர்ந்து நோக்க, முன்னே சென்று கொண்டிருந்த கார் தனது கட்டுப்பாட்டை இழந்து பாறையில் மோதி தாறுமாறாய் இடித்து தலைகீழாய் புரண்டு மலையிலிருந்து கீழ் நோக்கிச் சிதறியது.

திவாகரும் மகாதேவனும் திகிலோடு பார்க்கையிலே கார் தீப்பற்றிக் கொண்டு வெடித்துச் சிதறியது.



புகைப்படத்தில் புன்னகைத்துக் கொண்டிருந்த நிலாவின் முன் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான் சத்யன். விழிகளில் இலேசான ஈரம். இதமான புன்னகையோடு இருந்தாள் நிலா.

"ஸாரி நிலா. நான்கூட உன்னைத் தப்பாக நினைத்து விட்டேன். என்னை மன்னித்துவிடு. உன்னைச் சிதைத்த வர்களை நான் சூறையாடும் முன் நீயே சிதைத்து விட்டாய். இப்போது உன் ஆன்மா நிம்மதியடைந்திருக்கும்.

இறந்து போனவர்கள் தெய்வங்களாமே. அப்படி யென்றால் நீயும் தெய்வமாக இருந்து எங்களை ஆசிர்வதி நிலா. நீயே மறுஜென்மம் எடுத்து வந்திருப்பதாக மாமா நம்புகிறார். நானும் நம்புகிறேன்.

ஏனென்றால் வசந்தநிலா இங்கு வரவில்லை யென்றால் உனக்கு நேர்ந்த துன்பம் எங்கள் யாருக்குமே தெரியாமல் போயிருக்கும். நீதான் அவளை இங்கு அனுப்பினாய் என்றுதான் தோன்றுகிறது.

அவளை நான் மணக்க நீ சம்மதிக்க வேண்டும். உன் ஆசி வேண்டும்." – மனமுருகி வேண்டிக் கொண்டிருந்தான்.

"என் ஆசி உனக்கு எப்பவும் உண்டு. நல்லா இருடா ராஜாத்தி."

மாமாவின் குரல் கேட்டு கலைந்து திரும்பினான். காலில் விழுந்து வணங்கிய வசந்தநிலாவை ஆசிர்வதித்துக் கொண்டிருந்தார் மகாதேவன். அந்த வாழ்த்து தனக்காகவே சொல்லப்பட்டது போல் மகிழ்ந்துபோனான்.

"டேய் பையா. எவ்வளவு நேரம்தான் என் குழந்தையை காக்க வைப்பே. சீக்கிரம் வாடா."

"இதோ வந்திட்டேன் மாமா" - என நிலாவின் புகைப்படத்தை புன்னகையோடு பார்த்து விட்டுத் திரும்பியவன் வசந்தநிலாவைக் கண்டு பிரமித்துப் போனான்.

புத்தம் புதிய பட்டுடுத்தி தலைநிறைய பூச்சூடி தங்கமும் வைரமும் பூட்டி கோயில் சிலையென நின்றாள். விழிகளை நகர்த்த முடியாமல், மாமாவை அழைத்தான் சத்யன்.

"மாமா! என்ன இது?"

"எம் பொண்ணுடா. அவளுக்கு நான் என்ன வெல்லாம் செய்யனும்னு ஆசைப்பட்டேனோ அதை யெல்லாம் போட்டு அழகு பார்க்கிறேன்"

"அதுக்காக இப்படியா? இவளை இப்படியே நான் காரில் கூட்டிட்டுப் போனா என்ன ஆகும்?"

"என்ன ஆகும்?"

"ம்? கோயில் சிலையை திருடிட்டுப் போறேன்னு போலீஸ் பிடிச்சுக்கும்."

"டேய். நல்ல நேரத்தில என்னடா பேசுற?"

"பின்ன என்ன மாமா? இப்படியா கல்யாணப் பொண்ணு மாதிரி அலங்கரிப்பது. அதுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கே."



நாணத்தால் சிவந்திருந்த வசந்தநிலா நிமிர்ந்தாள். "நானும் எவ்வளவோ சொன்னேங்க. அப்பாதான் கேட்கலை."

"டேய்! முதமுறையா நீங்க வாழப்போற வீட்டுக்கு கூட்டிட்டுப் போகப் போற. இப்படி மகாலக்ஷ்மியாட்டம் கூட்டிட்டுப் போய் புதுவீட்ல வலது காலை வையுங்க. அமோகமா வாழுவீங்க."

"மாமா சொன்னா மறுப்பேது? கார்ல ஏறு நிலா. மாமா நீங்களும் வாங்களேன்" - என்றான் சத்யன்.

"டேய். என்னை என்ன இங்கிதம் தெரியாதவன்னு நினைச்சியா? போடா. பாத்து பத்திரமா போயிட்டு சீக்கிரம் வந்திடுங்க" - என வழியனுப்பினார்.

கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருக்க, சத்யன் காரோட்டும் அழகில் லயித்திருந்தாள் வசந்தநிலா. இருவரும் மௌனமாகவே வர சத்யன் பேச்சுக்கொடுத்தான்.

"நிலா! நீ வசந்தமாளிகை படம் பார்த்திருக்கியா?"

"ம்?"

"அதான் சிவாஜி ஸார் படம்."

"ம். பார்த்திருக்கேனே. நிறைய வாட்டி பார்த்திருக்கேன்."

"அதுல கதாநாயகிக்காக ஒரு மாளிகை கட்டுவாரே கதாநாயகன்."

"அதைப் பார்க்கும் போது உனக்கு என்ன தோணும்?"

"இதெல்லாம் சினிமாவுலதான் சாத்தியமுன்னு தோணும்..."

"ஏன்? ஏன்?"

"என்ன ஏன்? இப்போ ஏன் இந்தப் பேச்சு உங்களுக்கு?"

"காரணம் இருக்கு. நீ சொல்லு. ஏன் நிஜத்தில சாத்தியப்படாது?" - சத்யன் விடாமல் கேட்கவும் புன்னகைத்தாள்.

"இன்றைய இளைஞர்கள் விரும்புற பெண்ணோட கழுத்தில தாலிகூட கட்டுறதில்லை. இதுல எப்படி வசந்த மாளிகை கட்டுவாங்க?"

"ஏய்! என்னை அந்த வகையில சேர்க்காதே. நான் தாலியும் கட்டுவேன். என்னோட தேவதைக்காக வசந்தநிலா மாளிகையும் கட்டுவேன்" - என்றான் பெருமிதமாக.

அதற்குள் கார் அந்த பெரிய புத்தம் புதிய மெருகுடன் கம்பீரமாய் நின்ற மாளிகை முன் நின்றது.

வெளியே பார்வையை வீசிய வசந்தநிலா அசந்து போனாள்.

வீடா இது? அரண்மனை... அடடே எத்தனை அழகு.

விழிகளை விரித்து அவள் ரசித்ததை சத்யன் புன்னகையோடு ரசித்தான்.



காரை விட்டு இறங்கி அவளுக்கு கதவைத் திறந்து விட்டான்.

வியப்பு மாறாமலே இறங்கியவள் "இது யாரு வீடுங்க?" - என்றாள் பிரமிப்பாய்.

"உள்ளே போய்ப் பாரேன்" - இயல்பாய் அவன் சொல்ல தயக்கமாய் நடந்து உயரமான தலைவாசலை அடைந்தவள் இன்னும் பிரமித்துப் போனாள்.

"வசந்தநிலா பவனம்" - என பொன்நிற எழுத்துக்கள் அடங்கிய கல்வெட்டு.

திகைப்பாய் திரும்பியவள் அருகே நின்றவன் மீது மோதிக் கொண்டாள்.

சட்டென நிமிர்ந்து சற்று விலகி, "இ... இது?" - பேச்சு வராமல் கையை மட்டும் நீட்டினாள்.

மந்தகாசப் புன்னகையோடு, "பார்! இதுதான் என் இதய நிலாவிற்காக நான் கட்டிய வசந்தமாளிகை" - என்றான் சத்யன்.

"எனக்கா? எனக்காகவா?" - விழிகள் விரிந்தன.

"ஆமா நிலா. அன்னிக்கு உன் அம்மாவோட டெத்துக்கு உங்க வீட்டுக்கு வந்தோமே. எவ்வளவு சின்ன குடிசை அது. அப்பவே முடிவெடுத்தேன்.

என் நிலாவை இந்த மாதிரி ஒரு பங்களாவில தான் வாழ வைக்கணும்னு."

மூச்சுவிடவும் திணறினாள்.

"என்ன? அப்போ... நீங்க என்னை அப்பவே..."

தலையாட்டினான். "ம்... நீ என் நிலா. உன் வானம் நான். உன்னை எப்பவும் என்கூடவே வெச்சுப்பேன்" - என்றவனை கண்ணில் மின்னிய ஈரத்தோடும் நேசத்தோடும் கட்டிக்கொண்டாள் வசந்தநிலா.

இனி இந்த நிலாவின் வாழ்வில் வசந்தம் வசந்தம் மட்டுமே.